# ஒரு கோடை விடுமுறை



ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கோடை விடுமுறை

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்



அலை வெளியீடு
48, சுய உதவி வீடமைப்புத் திட்டம்,
குருநகர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலை வெளியீடு—5
ஐப்பசி 1981
சாதாரண பதிப்பு: ரூபா 20-00
விசேட பதிப்பு: ரூபா 25-00

# ORU KODAI VIDUMURAI

A SUMMER VACATION

a novel in tamil

by rajeswary balasubramaniam

copyrights reserved

published by alai veliyeedu
48, self-help housing scheme
gurunagar, jaffna
cover by go. kailasanathan
printed at chitra achchakam
310, clock tower road jaffna
first edition: october 1981
paper back: Rs. 20-00
hard cover: Rs. 25-00

## சமர்ப்பணம்

என் தந்தைக்கும், தாய்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாவல் நூலுருப் பெற
உற்சாகம் தந்து
அதன் தயாரிப்பிற்காக
உழைத்தவர்கள்

இ. பத்மநாபன்
அ. யேசுராசா
மு. நித்தியானந்தன்

முகமறியாமலே இம்
மூவரும் நல்கிய
அளப்பரிய உதவிக்கு

என் நன்றி

ராஜேஸ்

# பதிப்புரை

இது 'அலை வெளியீட்'டின் ஐந்தாவது நூலாகும். புனைகதை அல்லாதவற்றுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றபோதும், தரமான படைப்பிலக்கியங்களையும் 'சமாந்திரமாக' வெளிக்கொணர்தல் அவசியம் என்ற முடிவுக்கிணங்கவே இந்நூலை வெளியிடுகின்றோம்.

கூர்மையடைந்து வரும் தேசிய இனப்பிரச்சினை'யின் சில பரிமாணங்கள் இந்நாவலில் வெளிப்படுகின்றன: மாறுபாடான கருத்துகள் சிலவும், இருக்கக்கூடும். எனினும் கலை, இலக்கியப் படைப்புகளில் தேசிய இனப்பிரச்சினை இடம்பெறவேண்டியதன் அவசியம் பற்றி 1975 லிருந்து அலை அழுத்தி வந்த கருத்துக்கள், பரவலாக உணரப்பட்டு படைப்புமுயற்சிகள் நிகழ்ந்துகொண்டிருக்கும் சூழலில் அத்தகையன, அடுத்த கட்டமாக நூலுருப் பெறவும் வேண்டுமென்பதை வற்புறுத்துவது போலவும், இந்நூல் வருகின்றது.

இதனை எழுதிய **ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்** எழுபதுகளில் ஈழத்தில் தோன்றிய முக்கிய எழுத்தாளர்களில் ஒருவர். ஏராளமான சிறுகதைகளையும், நான்கு நாவல்களையும் இதுவரை எழுதியுள்ளார். சமூக அக்கறையும், கலைத்துவமும் இவரது படைப்புகளில் இணைந்து வெளிப்படுகின்றன: சமீபத்தைய படைப்புகளில் தேசிய இனப்பிரச்சினை முனைப்பாக்கம் பெறுகின்றது 'அலை வெளியீடாக'த் தனது படைப்பொன்றை வெளியிட இசைந்தமைக்கு, அவருக்கு எமது மகிழ்ச்சி கலந்த நன்றிகள்.

முகப்போவியம் வரைந்து தந்த திரு. **கோ. கைலாசநாதன்** அவர்களிற்கும், விரைவில் அச்சுவேலைகளை முடித்துத் தந்த சித்திரா அச்சகத்தினருக்கும் நாம் நன்றிக் கடன்பட்டவர்கள்,

குருநகர். அலை
*15-10-1981* **வெளியீட்டினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

என் எழுத்துக்கள் சாதாரண மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பற்றியன. சாதாரண மக்களின் வாழ்முறைக்கும், பிரச்சினைகளுக்கும், உணர்வுகளுக்கும் அப்பால் போய்நின்று உபதேசம் செய்யும் 'பெரிய மனிதத்தனம்' எழுத்தாளர்களுக்கு இருக்கவேண்டும் என்பதும் என்னால் நம்பமுடியாதது.

சிலவேளைகளில் உண்மைகளை அப்பட்டமாய் எழுதி விடுகிறேன். உண்மைகள் சிலவேளை தர்மசங்கடமாய் இருப்பதாகப்படுகிறது. ஆனால், அவை தவிர்க்கப்பட முடியாதவை; சொல்லப்படவேண்டியவை: என் நாவல்களிலும் சிறுகதைகளிலும் சொல்லப்பட்டு விடுகின்றன. ஆனால் பிரச்சினைகளுக்குப் பயந்து எங்களைச்சுற்றியிருக்கும், எங்களைப் பிணைத்திருக்கும் பிரச்சினைகளைச் சொல்லாது விடுவது கோழைத்தனம்.

இரண்டு வருடங்களுக்கு முன் இலங்கை வந்திருந்தபோது கண்ணில் பட்ட சில உண்மைகளும், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளும் இந்நாவலை எழுதத் தூண்டின.

பரமநாதன் நீண்ட காலம் இலங்கையை விட்டுவந்து லண்டன் வாழ்முறைக்குத் தன்னை முழுக்க முழுக்க அர்ப்பணித்து விட்டவன். வாழ்க்கையில் நாணல் புல் போன்று காற்றடித்த திசைக்காடும் இரண்டும் கெட்டான் மனிதன். அவனைப் பற்றியும் அவனைச் சுற்றியுள்ளவர்களையும் பற்றியதுதான் கதை.

எங்கள் ஒவ்வொருவரிலும் ஒவ்வொரு பரமநாதன் இருக்கிறான். எங்களை அறியாமல் வெளிப்பட்டு வருவதும் உண்டு. அவர்கள் இப்படித்தான் வாழவேண்டும் என்றில்லாமல் எப்படியும் வாழ்ந்து முடிக்கலாம் என்று நம்புபவர்கள். ஆனால், இப்படித்தான் வாழவேண்டும் என்ற தீர்க்கதரிசனம் இல்லாதவர்களின் தோல்வியைத்தான் பரமநாதன் வாழ்க்கை காட்டுகிறது.

பரமநாதன் போன்ற மனிதர்களைப் பற்றி ஏன் எழுதினேன் என்றால் எங்களிற் பலர் தங்கள் பலவீனங்களை கடவுள், பண்பு, சமயம், கற்பு, விதி, கலாசாரம், என்ற எங்களைப் பயப்படுத்தும் சொற்களுக்குள் அடைத்து வைத்திருக்கிறோம். சபேசன் போன்ற போராளிகள் இந்த பலவீனங்களைத் தூக்கி எறிந்து விட்டு வாழ்க்கையில் உண்மை என நினைக்கும் - சத்தியம் என நம்பும் போராட்டத்துக்குத் தங்களையே அர்ப்பணிக்கத் துடிக்கின்றனர்.

இவர்களின் தீரத்திற்கு முன்னால் பலவீனப்படும் பரமநாதனின் உபதேசங்களை நான் கிட்டத்தட்ட ஒவ்வொரு கிழமையும் லண்டனில் யாரோ ஒருத்தர் வாய் மூலம் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

கார்த்திகா போன்ற பெண்களை இந்திய, இலங்கை நாவல்கள் முழுக்கக் கண்டிருப்பீர்கள். அப்படிப் படைத்தது என் குற்றமல்ல; பெண்களை அப்படித்தான் வாழவேண்டும் என்று சமுதாயம் ஏதோ ஒரு விதத்தில் நிர்ப்பந்தம் செய்து விட்டது எங்கள் தமிழ் இலக்கியங்கள், கலைகள் முழுக்க தமிழ்ப் பெண்களின் விதியினை நிர்ணயிக்கின்றன; அவர்கள் (பெண்கள்) அல்ல. இலங்கை வாசகர்களுக்கு முழுக்க முழுக்க அந்நியமான பாத்திரமாக இருக்கப்போவது எலிஸபெத் பேக்கர் என நினைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் லண்டனில் இடறுப்பட்ட இடங்களில் எல்லாம் விமின் லிபரேஷன், கோஷம் போடும் பெண்கள் கூட்டம் தட்டுப்படும், அவர்கள் எங்கள் சமுதாயத்துக்கு என்ன கிழித்துவிடப் போகிறார்கள் என்று நீங்கள் கூச்சல் போடுவது கேட்கிறது. நம்பினாலும், சரி நம்பாவிட்டாலும் சரி அந்த விதமான விமின் லிபரேஷன், கூட்டத்துடன் முற்போக்கு மனப்பான்மையுள்ள இலங்கை மாணவர்கள் பழகுகிறார்கள். எதிர்காலச் சந்ததியினர் அவர்கள்.

ஆண்கள் இதுவரை பெண்களைக் கண்ணகியாகவோ, மாதவியாகவோ மட்டுந்தான் பார்த்தார்கள். இனி வரும் எழுத்தாளர்கள் (ஆண்கள்) பெண்களைப் 'பெண்களாய்'ப் படைக்கவும், எழுதவும், பார்க்கவும் பழகுவார்கள், துணிவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அன்புள்ள வாசகர்களே, எனது படைப்பு இதுதான். குறை, நிறைகளை எழுதுங்கள். அவை எனது அடுத்த நாவலுக்கு உதவியாய் இருக்கும்.

என்னைத் திட்ட வேண்டும் போல் இருந்தால் பரமநாதன் சிவேசன், சத்தியமூர்த்தி, கார்த்திகா, எலிஸபெத் பேக்கர் போன்ற மனிதர்களைத் திட்டுங்கள். அவர்கள் உங்களைச் சுற்றி நிறைய இருக்கிறார்கள்; இருக்கப்போகிறார்கள்.

**ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**

**9, Gean Walk,**
**Hatfield,**
**Herts.**
**U. K.**
***4-9-1981***

# முன்னுரை

**த**னது முதலாவது நாவலிலேயே திட்டவட்டமான அரசியற் சார்புடன் இலக்கியம் படைக்கும் முன்னோடியான ராஜேஸ்வரியின் நாவலுக்கு முன்னுரை எழுதுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ராஜேஸ்வரியும் நானும் நேரில் சந்தித்துக் கொண்டதில்லை. ஆனால் அவரின் நேர்மையும் பிரச்சினைகளில் ஈடுபடும் தீவிரமும் அவர் எழுத்துக்களிலிருந்து நான் உணர்ந்து கொண்டவை.

நாவலின் கலைத்துவரீதியான வெற்றி போன்ற விடயங்களை விட மேலோங்கி நிற்பது இந்நாவலின் அரசியற்சார்பினால் ஏற்பட்ட வரலாற்று முக்கியத்துவம். தமிழர் தேசிய ஒடுக்கல், விழிப்புணர்வு பற்றி இலக்கியம் படைத்தால் இனவாதம் பேசுகிறோம் என்று கூறி, சிங்களப் பெருந்தேசிய வாதத்துக்கு அடிமையாகிப்போன இலக்கிய விமர்சகர்களின் புண்ணியத்தில் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை வெளிக்கொணரும் ஓரிலக்கியம் வளராமல், முளையிலேயே நசித்து விட்டது. இன்று தேசிய அடக்குமுறை விசுவரூபம் எடுத்திருக்கும் ஒரு கட்டத்தில் தவிர்க்க முடியாதபடி அருளரின் **லங்கா ராணி**, ஞானசேகரனின் **குருதிமலை**, தற்பொழுது ராஜேஸ்வரியின் **ஒரு கோடை விடுமுறை** வெளிவந்துள்ளன. இவ்வகையில் இந்நாவல் ஒரு வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நாவல் என்று கூறுவதில் ஐயமில்லை.

இந்நாவலின் முக்கிய பாத்திரமான பரமநாதன் இலங்கைக்கு வெளியே வாழும் தமிழ்ப் புத்திஜீவிகளின் ஒரு சராசரி மாதிரி. தேசிய இன ஒடுக்கல் கூர்மைப்படுதலினாலும் தனிப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியாமையினாலும் உலகெங்கும் சிதறுண்டு போன பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழ் மக்களின் பிரதிநிதி அவன். தாய் நாட்டின் நினைவுகளை கஷ்டப்பட்டு மனதிலிருந்து தள்ளி விட்டும், அதே நேரத்தில் சுவீகரித்த நாட்டின் கலாசாரத்தில் ஊன்ற முடியாமல் தவித்தும் எங்கேயாவது ஒரு 'மரியாதை'யான வாழ்க்கையை வாழவேண்டுமென்ற இலட்சியத்தில் தோல்வி கண்டு தன்னந்தனியராய், அநாமதேயங்களாய் தம் இருப்புபற்றி ஒரு நிரந்தரமான இரண்டக நிலையில் சிக்கி அவதியுறும் பரமநாதன்கள் பலர்.

பரமநாதனும் ஒரு கோடை விடுமுறைக்கு வந்த அனுபவத்தில் இந்த இரண்டக நிலையில் நன்கு மாட்டிக்கொள்கிறான். ஆனால் தாய்நாட்டின் சுமைகளிலிருந்து தப்பிப்போக விழையும் பரமநாதன்கள் கூட தேசிய இன ஒடுக்கலின் கூர்மையினால் இழுத்துவரப்பட்டு அதற்கு முகங்கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். பரவலாகிப் போனதும் சாதாரணமாகி விட்டதுமான இன ரீதியான தாக்குதல்களினால் ஏதோ ஒரு விதமாகப் பாதிக்கப்படாத தமிழ்க் குடும்பமே இல்லையெனலாம். சர்வதேச முதலாளித்துவத்தின் 'மெட்ரோபோல்சு'களில் வாழும் தமிழர்கள் அவற்றின் சுற்றயல்களின் அந்தத்தில் உலகின் எங்கோ ஒரு மூலையில் நசுக்கப்பட்டு, இருள் மண்டியிருக்கும் அரசியல் நிலைமைகளில் சிறைப்பட்டிருக்கும் தம்மினத்தினரை சௌகரியமாக மறந்து விடுகின்றனர். அல்லது தம் ஆத்மசாந்திக்காக ஏதாவதொரு கைங்கரியங்களில் ஈடுபட்டுவிட்டு ஒட்டுமொத்தமாகப் பிரச்சினைகளுக்கு கை கழுவி விடுகிறார்கள். கோடை விடுமுறையில் வரும் பரமநாதன் இந்நிலையிலிருந்து உலுக்கப்படுகிறான். ஆனால் அவன் வரித்துக்கொண்ட இரண்டக நிலைமையே அவனுக்கு அழிவாய் முடிந்து விடுகிறது.

ராஜேஸ்வரி தன் லண்டன் வாழ்க்கையில் எத்தனையோ பரமநாதன்களைச் சந்தித்திருக்கக் கூடும். இதனாலேயே பரமநாதன் நாவலில் அதிகூடிய யதார்த்தமும் முழுமையும் பெற்ற பாத்திரமாக உருவெடுக்கிறான்.

அதே நேரத்தில் வெளிநாடுகளிலிருக்கும் தமிழர்கள் பலர் இலங்கையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அவநம்பிக்கையுடன் தான் பார்க்கிறார்களா என்பது ஒரு கேள்வி. சபேசன் போன்றோர் இருக்கத்தான் செய்கிறார்கள். பரமநாதனை விட இன ஒடுக்கலை அனுபவ வாயிலாக உணர்ந்திருந்தாலும் அதைப்பற்றி நேர்மையான கோபங்கொண்டு உரக்க அடித்துப் பேசினாலும், செயற்திறனற்ற ஒரு இளைஞர் கூட்டத்தை பிரதிநிதிப்படுத்துவது போல் அவனும் அதே தப்பியோடலையே மேற்கொள்கிறான். சபேசனை விட கொள்கைத் தெளிவும் நெஞ்சுரமும் அர்ப்பணிப்பும் உடைய விடுதலைப் போராளிகள் நம் மத்தியிலே உருவாகிக் கொண்டிருக்கின்றனர் என்பதில் ஐயமில்லை. ராஜேஸ்வரிக்கும் மற்றும் லண்டன் வாழ் தமிழர்களைப் போல் இப்போக்கை அவதானிக்க முடியாமல் போய்விட்டதா?

நம் பெண்களும் இன ஒடுக்கலின் ஒரு முக்கிய இலக்காகி விட்டிருந்தும் கார்த்திகா, பானுமதி போன்ற பெண்கள் அனுபவவாயிலாக இவற்றை அறிந்திருந்தும் கூட பரமநாதன், சபேசன் போன்றோர் வகுக்கும் தீர்வுச் சட்டகங்களுக்குள் அவர்கள் வாழ்க்கை அடங்கிப் போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் சுயமுனைப்பின் அடிப்படையில் இயங்குவதில்லை. ஈழத்து தமிழ்ப் பெண்களின் யதார்த்தமான மனப்பாங்கினைச் சரியாக இயக்கியிருக்கிறார் ராஜேஸ்வரி. இப்பெண்களின் மறுதுருவமாகவும் மாற்று மாதிரியாகவும் அமைகின்றது லிஸா பேக்கரின் பாத்திரம். தன் சுதந்திரம் பற்றி அரைகுறைப் பிரக்ஞையுடன் பொறுமையின்றி தன் பொறுப்புகளிலிருந்து விலகிச் செல்லும் மரியனிலிருந்தும் கூட வேறுபடுகிறாள் லிஸா. ஆனால் லிஸாவும் கொஞ்சம் ஒரு self - conscious ஆன விமின்ஸ் லிபரேஷனிஸ்டாக இருப்பது போல் தெரிகிறது. She is not as artless as most confirmed and sincere feminists are today. அப்படியாகுனாலும் கௌரி, பானுமதி, கார்த்திகா, மரியன் இவர்களெல்லாரும் இல்லாத ஒரு மனவளர்ச்சி நிலையில் இருக்கிறாள் லிஸா.

ராஜேஸ்வரி கதையை வளர்த்துக் கொண்டு போவதிலும் கதாபாத்திரங்களின் சந்திப்புகள் உரையாடல்கள் மூலம் தமிழரின் அரசியற் பிரச்சினையை தெளிவாக்குவதிலும் ஒரு தீவிரம் இருக்கின்றது. ஆனால் கதைப்பின்னலின் தீவிரத்திற்கு அப்பால் ஒரு வாழ்க்கையைத் தரிசிக்க முடியவில்லை. பாத்திரங்களுக்கும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஸ்தூலமான உளவியற் பாங்குகள் வளர்க்கப் படவில்லை. இருந்தும் நாவலின் வேகமும், வரட்டுப் பிரச்சாரமின்றி பாத்திரங்களின் தனிப்பட்ட வாழ்க்கையினூடாக அரசியற் பிரச்சினையை முன்வைத்தலும் நாவலின் சித்திக்குத் துணை நிற்கின்றன.

நி. நிர்மலா

330, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
15 - 10 - 1981

# 1

'நாளைக்கு விமானம் புறப்படப்போகிறது,' பரமநாதன் மனதுக்குள் சொல்லிக் கொள்கிறான்.

ஏதோ முன் பின் தெரியாதவர்களைக் காணப் போவது போன்ற உணர்ச்சி. தன் பெற்றோர்! தன் தாய் தகப்பன் தன் தங்கைகள்!

'யாரையோவா காணப் போகிறேன்?'

பரமநாதன் புரண்டு படுத்தான். அவனின் மனைவி மரியனின் பளிங்கு போன்ற தோள்கள் போர்வையைத் தாண்டி எட்டிப் பார்த்தன.

'பாவம் இன்றெல்லாம் பயணத்துக்கான பெட்டிகளை அடுக்கியும் சாமான்களைப் பார்சல் பண்ணியும் களைத்து விட்டாள்.' மரியனின் பொன்னிறத் தலைமயிர் தலையணையில் தவழ்ந்து கிடந்தது. மெல்லமாகக் கோதி விட்டான். அவள் மெல்லமாகப் புரண்டாள். ஆழ்ந்த நித்திரையிலிருந்து விழித்துக் கொள்ளக் கஷ்டப் படுவது தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளம் கபடமற்ற குழந்தையின் முகம்போல இருந்தது மரியனின் நித்திரை படர்ந்த முகம்.

கண்கள் மூடி, மொட்டான மூக்கு சீரான மூச்சுவிட அழகிய இதழ்கள் குவிந்து கிடந்த அந்த நித்திரைக் கோலம்!

மனைவியை விட்டு ஒரு மாதம் பிரிந்திருக்கப் போகிறான்! பரமநாதன் மெல்லக் குனிந்து மனைவியின் கண்களை முத்தமிட்டான்.

அவள் அரை குறையாகக் கண்களைத் திறந்தாள். கண்களின் நேரெதிரே அவன் கண்கள்.

படுக்கையறையின் மெல்லிய விளக்கொளியில் கணவனின் அன்புமுகம் தன்னில் பதிந்திருப்பது தெரிந்தது.

கண்களை இரண்டுதரம் வெட்டி முழித்து விட்டுக் கண்களைக் கசக்கிக்கொண்டு கணவனின் கழுத்தில் கைபோட்டு முகத்தோடு முகம் பதித்து.........

''வட் இஸ்த ரைம் டார்லிங்'' அவளின் குரல் அவன் காதுகளில் கிசுகிசுத்தது.

மறுமொழி சொல்லித் தெரியக் கூடாத நேரங்கள் சில வேளையுண்டு என்பது அவன் அபிப்பிராயம். மனைவியை இறுக அணைத்துக் கொண்டான் மறுமொழி சொல்லாமல்.

''மரியன்'' ...........அவன் மனைவியை இறுக அணைத்திருப்பதை விடாமல் மெல்ல அவளின் பெயரைச் சொன்னான்.

''ம்ம்'' அவள் தூக்கக் கலக்கத்தில் உம் கொட்டினாள். அவனின் குரலிலிருக்கும் கனிவில் அவளின் நித்திரை பறந்து கொண்டிருப்பது அவனுக்குத் தெரியும்.



''வில் யூ மிஸ் மீ?''

அவன் கேட்டான்.

அவனுக்குத் தெரியும் கேட்கக் கூடாத கேள்வி என்று. இணைந்த காதலர்கள், என்னை ஞாபகம் வைத்திருப்பாயா ஒரு மாத லீவில் நான் போகும்போது என்று கேட்பது நாகரிகமான கேள்வியாக அவனுக்குத் தெரியவில்லை. அவர்கள் காதலர்கள் இல்லை.

கணவன் மனைவிதான். வெறும் உறவின்—உடல் உறவின் அடிப்படையில் மட்டுமல்ல.

உள்ளத்தின் உணர்ச்சி வேகத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்க்கையின் மர்மமான, விளங்கிக் கொள்ளவும் விளங்க முடியாததுமான உறவுகளில் ஒன்றிப் போன உறவு அவர்களுடையது.

கடந்த எட்டு வருடத் திருமண வாழ்வில் இதுவரை ஒரு நிமிடமும் அவர்கள் ஒருத்தரின் அணைப்பை இன்னொருத்தர் வெறும் கடமைக்காக மட்டும் - உறவுக்காக என்று மட்டும் நினைக்காமல் அவர்கள் அணைக்கப்படவும் அன்பால் இணைக்கப் படவும் என்று வாழ்க்கையை நிர்ணயித்துக் கொண்டவர்கள். அவனின் கேள்வி அவளைத் துக்கப்படுத்தவில்லை.

சாதாரண கேள்வி தர்ம சங்கடமான நேரங்களில் தன்னையறியாமல் கேட்கப்பட்டால் அதையுணர்ந்து கொண்டவள் மன்னிக்காவிட்டால்......

அவள் மெல்ல எழுந்தாள்.

கொஞ்ச நேரம் கணவனையுற்றுப் பார்த்தாள். இருவர் கண்களும் ஒரு நிமிடம் ஒருத்தரின் இருதயத்தை இன்னொருத்தர் அளவெடுப்பதுபோல் பார்த்துக் கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கண்கள் கலங்கின.

"ஐ லவ் யூ டார்லிங். யூ நோ ஐ லவ் யூ." அவள் பிடியில் ஒரு வெறி. குரலில் ஒரு கலக்கம். அவன் அப்படிக் கேட்டது அவளை எப்படித் தாக்கியிருக்கிறது என்று தெரிந்தது.

அவளை அணைத்தான்.

மன்னித்து விடு என் கேள்விக்கு என்று மனம் விட்டுச் சொல்லாமல் இதழ் பதித்துச் சொன்னான். ஒரு மாதம் பிரிந்திருக்கப் போகிறோம் என்ற உணர்ச்சி ஏதோ ஒரு வருடம் பிரிந்திருக்கப் போகிறோம் என்ற உணர்ச்சியை உண்டாக்கியதோ தெரியாது. அது விடியாத இரவாக இருக்க வேண்டும், முடியாத அணைப்பாக இருக்க வேண்டும் போல் இருந்தது.

"மேக் லவ் டு மீ டார்லிங்" அவள் கணவனைத் தடவினாள்.

ஒருமாதம். ஒரே ஒரு மாதம். ஏன் இந்தத் துன்பம்? அவனுக்கு விளங்கவில்லை.

இனி நடக்கப் போகும் சம்பவங்களின் ஏதும் முன்னறிவிப்பு அவனுக்கு கனவில் என்றாலும் தெரிந்திருந்தால், அவள் அப்படி மனம் விட்டு நடப்பது இதுதான் கடைசித்தடவை என்று தெரிந்திருக்கும்.

அவள் மார்பகங்கள் உணர்ச்சியால் விறைத்து அவனில் உராய்ந்தன.

இன்றுதான் கல்யாணம் முடித்த—வாழ்வின் மர்மமான இனிமையை முதல் முதல் அனுபவிக்கப் போகும் வெறியின் தவிப்பு அவள் குரலில்.



"மரியன்" அவனுக்கு மனைவியின் பெயரைத் தவிர ஒன்றும் சொல்லத் தெரியவில்லை.

இயற்கையின் பரிணாம சிருஷ்டியின் இரு உயிர்த் துடிப்பின் உணர்ச்சியின் சங்கமம் அன்றிரவு தெள்ளிய நிலவோடு தென்றல் கலந்த இனிமையாக - மலரோடு வண்டிணைந்த வடிவத்தின் நிழலாக அவர்கள் காதல் கனிந்தது.

எயார்போட்டுக்குப் போவதாக நினைத்து எழும்புவதற்கு வைத்த அலாம் மணிக்கூடு விடிய ஐந்து மணிக்கு அடித்தது.

கணவனின் மார்பில் படுத்தபடி அவள் எட்டி மணிக்கூட்டின் 'அலாமை' ஒவ் பண்ணினாள். மணிக்கூடு போட்ட சத்தத்தில் பக்கத்து அறையில் படுத்திருந்த குழந்தை 'மம்மி' சொல்லி அழுவது கேட்டது.

தகப்பன் தான் எழ முதல் விட்டு விட்டுப் போய் விட்டாரோ என்ற பயம் குழந்தை மீராவின் குரலில் கேட்டது.

பரமநாதன் எழுந்துபோய் மகளைத் தூக்கிக் கொண்டான். தகப்பனின் முக அமைப்பு. ஆனால் தாயின் தலைமயிர், பொன்னிறத் தலை, பூனைக்கண்கள். மீரா தகப்பனை அணைத்துக் கொண்டு கேட்டாள். "வை கான்ட் ஐ கம் வித் யூ" தகப்பன் பதில் சொல்லாமல் குழந்தையுடன் கீழே வந்தான். மீரா இப்படிக் கேட்கத் தொடங்கி இரண்டு கிழமைகளாகத் தகப்பன் ஒரே மறுமொழியைச் சொல்லி அலுத்து விட்டது.

அவனுடைய தகப்பனுக்குச் சுகமில்லை என்று கடிதம் வந்திருக்கிறது. தகப்பனுக்குப் பிடிக்காமல் ஆங்கிலேயப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டவன் அவர் சுகமில்லாமல் இருக்கும் போது அவருக்குப் பிடிக்காத மருமகளுடன் போய் நிற்கத் தயாராயில்லை. தகப்பனுக்குச் சுகமில்லை என்று தெரிய முதலே அவன் விடுமுறைக்குப் போக ஒழுங்கு செய்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ சொல்லி வைத்தாற்போல் போன கிழமை கடிதம் வந்தது தங்கை பானுமதியிடமிருந்து தகப்பனுக்குச் சுகமில்லை என்று.

சொல்லாமல் கொள்ளாமல் போய்த் தகப்பனுக்கு முன்னால் நிற்க நினைத்தவன் இப்போது எப்போது எந்த விமானத்தில் வருகிறேன் என்று எழுதினான். தான் எப்போதோ டிக்கட் புக் பண்ணி இந்த மாதம் வரப் போகிறேன் என்று எழுதியிருந்தால் நம்பி இருப்பார்களா?

செத்த வீட்டுக்கு வர மட்டும் பாசம் வந்ததாக்கும் என்று ஊரார் சொல்வார்கள் என்று பயந்து அவன் தான் எப்போதோ வரப் பிளான் பண்ணியதாகச் சொல்வதாகச் சொல்ல மாட்டார்கள் என்று என்ன நிச்சயம்?

பானுமதியிடமிருந்து கடிதம் வரமுதலே தகப்பனுக்கு, தாய்க்கு, தமக்கை குடும்பம் தங்கைகளுக்கு என்று சாமான்கள் வாங்கிச் சேர்த்தாயிற்று. தகப்பனுக்குச் சுகமில்லை ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணியாச்சு என்று பானுமதியிடமிருந்து கடிதம் வந்ததும் மரியன் படபடவென்று எல்லாம் பார்சல் கட்டி விட்டாள்.

அடுத்த கிழமை போவதாக எடுத்த லீவை இந்தக் கிழமையிலிருந்து எடுப்பதாக ஆயத்தங்கள் செய்தாயிற்று.

பிளேன் டிக்கட்டை மாற்ற ஒரு கிழமை கஷ்டப்பட வேண்டியிருந்தது.

ஏரோபுளொட் - ரஷ்ய விமான சேவை நினைத்த அளவு சீராயில்லை என்பது அவனுக்கு உடனடியாகத் தெரியவில்லை.



காலை பதினொரு மணிக்குப் பிளேன் எடுக்க வேண்டும். மொஸ்கோவில் இறங்கி இன்னொரு பிளேன் மாறி கொழும்புக்கு நாளை பன்னிரண்டு மணிக்குப் போகலாம். தமக்கையும் மைத்துனரும் கொழும்பில் தான் இருக்கிறார்கள். தன்னுடைய பிரயாண விபரம் பற்றி எழுதியிருந்தான்.

காரில் சாமான்களை ஏற்றத் தொடங்கும் போதோ மனம் இரு விதத்தில் அடித்துக் கொண்டது.

ஒன்பது, பத்து வருடங்களாகப் பிரிந்திருந்த தன் இனிய குடும்பத்தைப் பார்க்கப் போகிறேன் என்ற படபடப்பு இனிமைகலந்த - பாசம் கலந்த படபடப்பு.

அடுத்தது பத்து வருடங்களாகத் தன்னுடன் உயிரும் உடலும் உணர்வும் காதலுமாக இணைந்திருந்த தன் அருமை மனைவி மரியனைப் பிரிகிற தவிப்பு.

அருமை, தன் ஆசை மகள் மீராவை ஒரு மாதமாகத் தூக்காமல் அவளுடன் சிரிக்காமல்......

அவர்களையும் கூட்டிக்கொண்டு போயிருக்கலாமே என்று தோன்றியது அவனுக்கு.

இவ்வளவு காலமும் தன்னுடன் தொடர்பு வைத்துக் கொள்ளாத தகப்பன் இனி அறுத்துக்கொள்ள என்ன இருக்கிறது?

மனைவியையும் மகளையும் ஆற்றாமையுடன் பார்த்தான்.

மரியனின் முகம் எந்த உணர்ச்சிகளையும் காட்டிக் கொள்ளவில்லை.

மகள் மீரா காருக்குப் பக்கத்தில் குவிந்து கிடக்கும் பனிக்கட்டிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். மாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதமாகிறது. வின்ரர் முடியப்போகிறது. ஆனால் இன்னும் ஸ்னோ கொட்டிக்கொண்டிருக்கிறது. ''இங்கிலிஸ்காரர்களுக்கும் அவர்களின் நாட்டு சுவாத்திய நிலைக்கும் பெரிய ஒற்றுமை இருக்கிறது'' இப்படி பரமநாதனின் சிநேகிதன் முத்துலிங்கம் அடிக்கடி சொல்வான்.

எப்போது குளிரும், எப்போது வெயிலடிக்கும் என்று நம்பி வெளியில் போகமுடியாது.

எப்போது சிரிப்பார்கள் எப்போது கழுத்தறுப்பார்கள் என்று வெள்ளைக்காரரை நம்பாத மாதிரித்தான் அவர்களின் சுவாத்தியமும்.

காலை ஆறுமணி. இன்னும் இருட்டாக இருக்கிறது. அவர்கள் இருக்கும் சென் அல்பேன்சிலிருந்து லண்டனுக்குள்ளாக ஊடறுத்து ஹீத்ரோ எயார்போட்டுக்குப் போக சாதாரண நாளிலேயே இரண்டு மணித்தியாலங்கள் எடுக்கும்.

இந்த ஸ்னோவில் எவ்வளவு நேரமெடுக்குமோ தெரியாது.

நகரமெல்லாம் இன்னும் உறங்கிக் கிடந்தது. ஒன்றிரண்டு கார்களின் வெளிச்சங்கள் பனியில் முனகிக்கொண்டு முக்கி முக்கி ஊர்ந்து கொண்டிருந்தன.

''எப்படிப் போய்ச் சேரப்போகிறோமோ தெரியாது'' வானத்தை அண்ணார்ந்தபடி சொன்னான் பரமநாதன். உலகத்தில் வெண்மை என்ற நிறத்தைத் தவிர ஒன்றுமே இல்லாததுபோல் இருந்தது.

செடி கொடிகள், மரங்கள், வீடுகள் எல்லாம் பனியில் மூழ்கிக் கிடந்தன.

கார் நகரத் தொடங்கியது.

நோர்த் லண்டனின் உயர்ந்த கட்டடங்கள் பனிமூடிய



சிகரங்களை ஞாபகமூட்டின. காரை ஸ்ராட் பண்ணவும் சேர்ச்சின் மணி டாண் டாண் என்று அடித்தது, மௌனமாக அருகில் இருக்கும் மனைவியைத் திரும்பிப்பார்த்தான்.

கணவன் தன்னைப் பார்ப்பது தெரிந்தும் பேசாமல் இருந்தாள் மரியன். வின்ரர் ஓவர் கோட்டுக்குள் அவளின் அழகிய உடம்பு மறைந்து விட்டதுபோல், வழிந்துகொண்டிருக்கும் பனியுடன் சேர்ந்து உணர்ச்சிகளும் மரத்து விட்டனவா? குழந்தை மீரா கார்க் கதவுக்குள்ளால் கொட்டும் ஸ்னோவின் அழகை ரசித்துக்கொண்டிருந்தாள். ''ஐ வில் போன் யூ சூன் அஸ் பொஸிபிள்'' அவன் சொன்னான்.

அவள் தலையாட்டினாள்.

''ஐ ஹோப் யுவர் பாதர் இஸ் நொட் தற் இல்'' விடிந்தபின் முதல் தரமாக கணவனை ஏறிட்டுப் பார்த்துச் சொன்னாள் அவள்.

நடுச்சாமத்தில் காதலின் வடிவமாகத் தெரிந்த மரியனும் இப்போது கணவனின் குடும்பத்தில் கவனத்துடன் கதைக்கும் மரியனும், இரு வேறு பெண்களாகத் தெரிந்தனர் அவனுக்கு.

கணவனின் முகத்தில் ஓடும் சிந்தனையின் நிழல்கள் அவளுக்கு பட்டும் படாமலும் தெரிந்தன. மெல்லிய இளநகை படர்ந்தது முகத்தில். குறும்புத்தனம் கண்களில் தவழ்ந்தது.

''வை ஆர் யு ஸ்மைலிங்?'' அவன் பார்வையில் பார்வையை ஓட்டியபடி கேட்டான்.

''ஹவ் டு யூ நோ தற் ஐயாம் ஸ்மைலிங்?''

அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐ நோ யு ரொப் ரு பொட்டம், இன்சைட் அவுட்" அவன் குறும்பாகச் சொன்னான். கொஞ்சநேரம் பேசாமல் இருந்துவிட்டு அவன் சொன்னான்: "கம் ஹோம் சூண். வீ லவ் யூ. வீ வில் மிஸ் யூ" கண் கலங்கினான் அவன்.

குழந்தை மீரா தாய் தகப்பன் சம்பாஷணையில் கலந்து கொள்ளாமல் காருக்குள்ளால் பார்த்துக்கொண்டிருந்தாள். இப்போதுதான் மீராவுக்கு ஐந்து வயதாகிறது.

தகப்பனின் பிரிவின் துன்பம் தெரியாத வயது. தானும் வரப்போகிறேன் என்று துள்ளிக் கொண்டிருந்தாள். தாத்தாவைப் பார்த்து விட்டு வரும்போது யானைக்குட்டி ஒன்று கொண்டு வருகிறேன் என்று தகப்பன் சொன்னதை உண்மை என்று நம்பிக் கொண்டிருக்கிறாள் குழந்தை.

கார் ஆமை வேகத்தில் லண்டன் தெருக்களில் தவழ்ந்து கொண்டிருந்தது.

கார்களின் வரிசை மைல்க் கணக்கில் நீண்டு தெரிந்தது. மக்கள் முகம் மட்டும் பனியில் விறைக்க உடம்பை கம்பளிக் கோட்டுகளுக்குள்ளால் மூடிக் கொண்டு தெரிந்தார்கள்.

வான் முட்டும் மாளிகைகள் மங்கிய நிலவொளியில் அரைகுறைப் பூதங்களாகத் தெரிந்தன.

கார்கள் நோர்த் சேக்குலர் ரோட்டில் திரும்பி ஹீத்ரோ விமான நிலையத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தன.

வழி நிறையப் பனிக்கட்டிகள். கார்ச் சில்லுகளில் நசிந்து நீராகிக் குழைந்து தெரிந்தது.

பனி பெய்யும் போது பார்க்க அழகுதான். உருகும் போது உருகிக் குப்பைகளுடன் கலந்து தெரியும் போது பார்க்க அவலட்சணமாக இருக்கும்.



அவர்கள் பயந்து வந்ததுபோல் விமானம் போய் விடவில்லை. பனியும் புகாரும் காரணமாக இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் லேட்.

பரமநாதனின் மனம் எங்கேயெல்லாமோ போய்க் கொண்டிருந்தது. ஒன்றையும் உருப்படியாகக் கதைக்கும் மனநிலையில் இல்லை.

கதைக்க வேண்டிய விடயங்கள் எல்லாம் கதைத்தாகி விட்டது.

சொல்ல வேண்டிய விடயமெல்லாம் சொல்லியாகி விட்டது. என்ன சொல்ல வேண்டும் அப்படி?

ஒரு மாதம் தான் வீட்டில் இல்லாமல் இருக்கும் போது என்னென்னெல்லாம் செய்ய வேண்டும்? மரியாளுக்குச் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை.

அவள் படித்தவள்.

தன்னையும் தன் குடும்பத்தையும் கவனிக்கத் தெரியும். அவர்கள் கதைத்ததெல்லாம் பரமநாதனின் விடயத்தைப் பற்றி. அவன் குடும்பத்தைப் பற்றி. அவனின் தங்கைகளின் எதிர்காலத்தைப் பற்றி. பரமநாதனின் தங்கை கௌரிக்கு வயது கிட்டத்தட்ட இருபத்தாறாகப் போகிறது.

நல்ல மாப்பிள்ளைக்கு விலை வைத்துக் கொண்டு தேடுகிறார்கள் என்று பெரியக்கா எழுதியிருந்தா.

கடைசித் தங்கை பானுமதிக்கு இருபத்தியொரு வயதாகிறது. எலிவால்ப் பின்னலுடன் எயார்போட்டுக்கு வந்த பானுமதி இப்ப இருபத்தொரு வயது இளம் பெட்டையாக எப்படி இருப்பாள் என்று மனம் எண்ணியது. எல்லாம் கனவு போல் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருக்குயிராய் நேசித்த குடும்பத்தைப் பார்க்காமல் இருந்தது பத்து வருடங்களாக என்பது நம்ப முடியாமல் இருக்கிறது.

குடும்பத்தை மட்டுமா?

நினைவில் கொண்டு வரமுடியாத — கொண்டுவர விரும்பாத ஒன்றிரண்டு சம்பவங்கள் தாய் நாட்டுக்குப் போகும் பிரயாணத்தின் கடைசிக் கட்டத்தில் கட்டை மீறிப்பாயும் வெள்ளம் போல் நினைவில் புரண்டன.

சில சம்பவங்களா?

நெருஞ்சி முள் குத்துவதுபோல் நெஞ்சை வலிக்கப் பண்ணும் உருக்கமான சில சம்பவங்களால் தான் அவன் வாழ்க்கை எதிர்பாராத முனையில் திரும்பி விட்டது.

சம்பவங்களுக்கு அடிப்படையான அவள். வெறும், அவளாகவா' அவள் பெயர் போய் விட்டது? மனம் இனிக்க வாய் இனிக்க, உணர்ச்சிகளின் உருவமாக அவள் பெயரைச் சொல்லிய காலங்கள் கற்பனையாகவா போய் விட்டது?

என் உடலில் உயிர் உள்ளவரை உன் பெயர் சொல்லிச் சிவிப்பேன் என்று எழுதிய அவன் கடிதத்தை யாரும் அவன் கையில் கொடுத்தாலும் நம்புவாரா தன்னுடையதென்று

அவளாக — வெறும் அவளாகவா போய்விட்டது அவள் நினைவு?

உலகத்தில் பல தரப்பட்ட மனிதர்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே நேரத்தில் போக வெளிக்கிட்ட மாதிரி இருந்தது எயார்போட்.

போவோர். வருவோர்.

போவோரை வழியனுப்ப வந்தோர்.



வருபவரை வரவேற்க வந்தோர்.

ஒரே சனக் கூட்டம்.

சேர்வுகளுக்கும் பிரிவுகளுக்கும் என்று தங்களைப் பிரித்துக் கொண்ட மனித வர்க்கம்.

மரியனும் மீராவும் கஸ்ரம் ஒவ்விசரைத் தாண்டிப் போகும் பரமநாதனைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். நினையாப் பிரகாரமாய் தனக்கும் தன்மனைவிக்கும் இடையில் ஒரு நீண்ட இடைவெளி உண்டாகிப் போனதான ஒரு பிரமை!

அவன் திரும்பிப் பார்த்தான். அவள் உருவம் மங்கலாகத் தெரிந்தது.

அவனின் கண்கள் கலங்கியிருக்க வேண்டும்.

அவளின் தோற்றம் வித்தியாசமாகத் தெரிந்தது.

அதிகாலையில் அவள் அணைத்துக் கொண்டதை நினைத்துப் பார்த்தான்.

அது கனவு போல் ஞாபகம் வந்தது.

மரியன் யாரோ போல் நடந்து கொண்டது போல் இருந்தது. நீண்ட பாதை தெரிந்தது.

அதன் முடிவில் திருப்பி நடந்தால் ரேர்மினல் 2ன் பகுதி வருகிறது.

திரும்பிப் பார்த்தான். மனைவியும் குழந்தையும் கை காட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

புகார் கொஞ்சம் மறைந்து வானம் பளிச்சென்றிருந்தது விமானம் புறப்படும் பொழுது.

விமானத்தில் அதிகம் இலங்கையர்கள் இல்லை. ஒரு சிங்களப் பெண் குழந்தையுடன் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தாள்.

அழும் குழந்தையை ஆசுவாசப் படுத்திக் கொண்டிருந்தாள். விமானம் புறப்பட்ட சத்தத்தில் குழந்தை வீரிட்டு அழுதது.

குழந்தைகளுடன் தனியாகப் பிரயாணம் செய்வதின் சிரமம் தெரியாமல் இருந்திருக்கலாம்.

பரமநாதனுக்கு அருகில் ஒரு இளம் ஜோடி.

விமானத்தில் யாரும் இருப்பதைக் கவனிக்காமல் கொஞ்சிக்கொண்டிருந்தார்கள்.



கவனிக்காத மாதிரி பேப்பர் ஏதாவது படிக்க யோசித்தான்.

விமானப் பெண்மணி இங்கிலிசில் உள்ள மொஸ்கோ செய்திப் பத்திரிகையைக் கொடுத்தாள்.

மொஸ்கோ செய்தியை விட அமெரிக்கா, இங்கிலாந்து செய்திகள் அதிகம்.

மேலை நாட்டுப் பத்திரிகைகள் ரஷ்யாவைத் திட்டி எழுதிக் கொண்டிருக்கின்றன. ரஷ்யப் பத்திரிகைகள் மேலை நாட்டைத் திட்டுகின்றன.

ஏட்டிக்குப் போட்டி!

எங்கு போய்முடியப் போகிறது இவர்களின் போராட்டம்? ''எக்ஸ்கியூஸ் மீ'' குரல் கேட்டுத் திரும்பினுன்.

அவள் மெல்லமாக புன்முறுவல் செய்தாள். ஒரு ஆங்கிலேயப் பெண்! கேள்விக் குறியுடன் அவன் அவளைப் பார்த்தான்.

மூக்குக் கண்ணாடியுடன் இருந்த ஆங்கிலேயப் பெண்

''இவ் யூ வோண்ட் எனி நியூஸ் பேப்பர் ஓ மகசீன்...'' என்று இழுத்தாள்.

''ஓ தாங்க் யு வெரிமச்'' அவன் நன்றியுடன் அவள் கொடுத்தவைகளைப் பின்னால் திருப்பி வாங்கிக் கொண்டான்.

கொஞ்ச நேரம் தட்டிப் பார்க்கத் தெரிந்தது அவை எப்படியான பத்திரிகைகள் என்று.

பெண்கள் உரிமைகள், உலகத்துப் பெண்களின் பிரச்சினை, வளர்ச்சியடையாத நாடுகளில் பெண்களின் வாழ்க்கைமுறை, மதமும் பெண்களும், கல்வியும் பெண்களும், பெண்களைப் பற்றியே எல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமநாதன் பின்னால் திரும்பி புன்முறுவலுடன் கேட்டான் ''வுமன் லிபரேஷனா? அல்லது பெமினிஷ்டா'' அவள் இன்னொருதரம் மூக்குக் கண்ணாடியைக் கழட்டிக் கொண்டு தோள்களை புலுக்கிக் கொண்டு சொன்னாள் ''நன் ஒவ் தெய'' அவன் கருத்துடன் சிரித்தான் அவள் சொன்னதைக் கேட்டு.

அவளைப் பிடித்திருந்தது. கதைக்கவேண்டும் போல் இருந்தது.

பின்னால் திரும்பித் திரும்பித் கதைக்கப் பக்கத்தில் கொஞ்சிக் கொண்டிருக்கும் ஜோடியில் இடிபட வேண்டிக் கிடந்தது.

எங்கு போகிறாள் இந்தப் புத்தகமெல்லாவற்றையும் அள்ளிக் கொண்டு என்று கேட்க, ஆசையாக இருந்தது.

ஏன் தனக்கு, வேணுமென்று இந்த புத்தகமெல்லாம் தந்தாள் என்று கேட்க வேண்டும் போல் இருந்தது. பக்கத்தில் தூங்கி வழிந்து கொண்டிருக்கும் கிழவனுக்குக் கொடுத்தால் என்ன நடந்திருக்கும்?

தனக்குத் தானே நினைத்துக் கொண்டான்.

விமானத்தில் சாப்பாடு வந்தது.

ருசியான ரஷ்யன் வைனும் விலையுயர்ந்த சாப்பாடான 'கவியாருடன்' சேர்ந்த உணவும்.

''இன்றுதான் முதல்த்தரம் கவியாரைச் சுவைக்கிறேன்'' அவள் அவன் காதுகளில் கிசு கிசுப்பது கேட்டது. அவளுக்கு மறுமொழி சொல்லத் திரும்பிப் பக்கத்து ஜோடியை இடிக்காமல் பார்த்துக் கொள்வது சிரமமாக இருந்தது.

லண்டனிலிருந்து மொஸ்கோ போகும் அந்த விமானத்



தில் உள்ள பணிப்பெண்கள் சுமாரான ஆங்கிலம் கதைத்தார்கள். விழுந்து விழுந்து உபசரித்தார்கள் பிரயாணிகளை. அந்த ஆரவாரத்திலிருந்து விடுபடமுதல் மொஸ்கோ வந்து விட்டது.

உயிரைச் சிலிர்க்க வைக்கும் குளிர். மைனஸ் இருபது சென்ரிக்கிரேடில் பனிபெய்து குளிரடிப்பதாக விமானத்தில் அறிவித்தது ஞாபகம் வந்தது.

'நல்ல காலம் வின்ரர் கோட்டுடன் வந்தது. இல்லை என்றால் மொஸ்கோக் குளிரில் விறைத்துச் செத்திருக்க வேண்டும்.'

கொழும்புக்கு இன்னும் இரண்டு மணித்தியாலத்தில் விமானம் புறப்படும்.

அவன் பிரயாண சேவை அறிவிப்புப் பலகையைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

''ஹலோ!'' குரல் கேட்டுத் திரும்பினான். மூக்குக் கண்ணாடியுடன், அவள் நின்று கொண்டிருந்தாள். அவளை 'முழுக்கக்' கண்டதும் இன்னும் அவனது ஆவல் அதிகமாக இருந்தது, ஏன் அந்தப் புத்தகங்களைத் தந்தாய் என்று கேட்க.

அவளை மேலும் கீழும் பார்த்தபடி ''ஹலோ'' என்றான்.

''எலிஸபெத்......'' அவள் முடிக்கவில்லை.

''எலிஸபெத் ரெய்லர்?......'' குறும்பாகக் கேட்டான்.

''எலிஸபெத் பேக்கர்'' அவள் சிரித்தபடி சொன்னாள். மொஸ்கோ விமான நிலையம் வெளிநாட்டாரால் நிரம்பிக் கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ரநஷனல் விமான நிலையம் போல் ஆரவாரம் இல்லை. ஒரு மூலையில் ரஷ்யர்கள் கூட்டமாக இருந்து குடித்துக் கும்மாளம் போட்டுக்கொண்டிருந்தார்கள்.

அதைப் பார்க்க இருவிதத்தில் ஆச்சரியமாக இருந்தது. ஒன்று, லண்டன் விமான நிலையத்தில் இப்படி ஒரு கூட்டத்தைக் காண முடியாது; குடிக்கும் கூட்டம். அடுத்து, கொம்யூனிஸ்ட் நாட்டின் கொடுமையான வாழ்க்கைமுறை பற்றி மேலைநாட்டுப் பத்திரிகைகள் முதலைக்கண்ணீர் வடிக்கின்றன. இங்கு பார்த்தால் சாதாரண சனங்கள் பகிரங்கமாக இவ்வளவு சந்தோஷமாக இருக்கிறார்கள்.

ஆனால், திரும்பிய இடங்கள் எல்லாம் யூனிபோம் போட்ட உத்தியோகத்தர்கள் நின்றார்கள், பெரும்பாலானவர்கள் துப்பாக்கியுடன் காட்சியளித்தார்கள். லண்டன் தெருக்களில் இதுவரையும் எந்த உத்தியோகத்தரையும் எந்த ஆயுதத்துடனும் காணாதபடியால் இவர்களைப் பிரயாணிகள் பலர் விநோதமாகப் பார்த்தார்கள்.

எலிஸபெத்தும் பரமநாதனும் மெல்லமாசப் போய் ஒரு பெஞ்சில் உட்கார்ந்தார்கள்.

தூரத்தில் அந்தப் பெண் சிங்களத்தில் தன் குழந்தைக்கு ஏதோ சொல்லித் தேற்றிக் கொண்டிருந்தாள்

''ஆர் யூ ஏ சிலனீஸ்?''

லிஸா கேட்டாள்.

''ஹவ் டூ யூ நோ தற் ஐயாம் ஏ சிலனீஸ்?'' அவன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

அவள் களுக்கென்று சிரித்தாள்.

''அறிவிப்புப் பலகையில் கொழும்பு விமான சேவையின் நேரத்தைப் பார்த்ததைக் கவனித்தேன்'' என்றாள்



''நீங்கள் எங்கே போகிறீர்கள்?'' பரமநாதன் அவளைப் பார்த்துக் கேட்டான்.

''இந்தியாவுக்கு. இந்தியப் பத்திரிகையாளரின் அழைப்பில் போகிறேன்.'' லிஸா அடக்கமாகச் சொன்னாள்.

''ரிப்போட்டரா?'' தனிப்பட்ட விடயங்களைக் கேட்பது ஆங்கிலேயருக்குப் பிடிக்காது. ஆனால் அவள் தன்னைப்பற்றிக் கேட்டதால் அவளைப்பற்றிக் கேட்பது பிழையில்லை என்று பட்டது.

''ரிப்போட்டர் இல்லை. எழுத்தாளி,'' என்றாள் சிரித்தபடி.

அப்போதுதான் ஞாபகம் வந்தது அவள் தந்த புத்தகங்களில், பேப்பரில் அடிக்கடி 'எலிஸபெத் பேக்கர்' என்ற பெயர் இருந்தது.

அவன் இன்னொருதரம் அவளை ஏறிட்டுப் பார்த்தான். ''என்ன பார்க்கிறீர்கள்?'' அவள் அவனின் நேரடிப் பார்வையில் தர்மசங்கடப்பட்டுக் கேட்டாள்.

''பெண் எழுத்தாளர்களை நேரில் கண்டதில்லை இதுவரைக்கும்.'' அவனின் குரலில் குத்தல் இருக்கவேண்டும், அவள் பட்டென்று சொன்னாள்.

''பெண் எழுத்தாளர்கள் என்றால் என்ன? கொம்பொன்றும் இல்லை.'' அவளின் குரலின் அழுத்தம் அவனுக்கு இன்னும் குறும்புத்தனத்தை உண்டாக்கியது. ''அதிலும் பெண் உரிமையைப பற்றி போர் புரியும் எழுத்தாளர்களை நினைத்தும் பார்க்கவில்லை.''

அவளுக்குப் பிடிக்காமல் இருந்திருக்க வேண்டும். மௌனமாக இருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்துக் கொஞ்ச நேரத்திற்குள் — முன் பின் அதிகம் தெரிந்துகொள்ளமுதல் அவளிடம் விளையாட்டுத்தனமாகக் கதைத்தது அநாகரிகமாகப் பட்டது அவனுக்கு.

கொஞ்ச நேரத்தின் பின் ''சொறி'' என்முன்.

அவள் ஏறிட்டுப்பார்க்காமல் ''தட்ஸ் ஒல்றைட்'' என்று விட்டுப் புத்தகம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

விமானம் புறப்படும்பொழுது மனைவியையும் குழந்தையையும் விட்டுப் பிரிவதாக இருந்த துக்கம் மறந்து, வீட்டு நினைவு போய், தாய்நாட்டுக்குப்போய்த் தகப்பனின் சுகவீனம் பார்க்கும் யோசனைகளும் மறந்து, லிஸாவுடன் குறும்புத்தனமாகக் கதைத்தது அவனுக்கே விநோதமாக இருந்தது. நினைவுகளில் நெளியும் சில துன்பமான யோசனைகளை மறக்கத் தன்னையறியாமல் செயற்கையாகப் பழகுவதாகப் பட்டது அவனுக்கு.

''பகல் நேரமாய் இருந்தால் 'றண்வே'யை என்றாலும் பார்க்கலாம்.''

லிஸா தானாகக் கதை தொடங்கினாள். கொஞ்ச நேரத்துக்கு முதல் எடுத்தெறிந்து கதைத்த தொனி குரலில் இல்லை.

தூரத்தில் சில கறுப்பர்கள் வருவது தெரிந்தது. வேறு விமானங்கள் வந்து இறங்கியிருக்கலாம். இலங்கையர்கள் கொழும்பு விமானம் எடுக்க இந்த நேரத்துக்கு வந்து கொண்டிருக்கலாம்.

''மொஸ்கோவைப் பார்க்க எனக்கு ஆசை '' லிஸா பரமநாதன் மறுமொழி சொல்லாததையும் பொருட்படுத்தாமல் சொன்னாள். ''நான் நினைக்கவில்லை கொம்யூனிஸ்ட் நாடுகளுக்கு உல்லாசப் பயணம் போவது அவ்வளவான சுகம் என்று. ''பரமநாதன் அவளைப் பார்க்காமல் சொன்னான்.



தேவையில்லாமல் அவளைக் கோபப்படப் பண்ணியதை நினைத்துத் தர்மசங்கடப்பட்டான்.

தூரத்தில் வந்தவர்கள் இவர்களைக் கடந்து சென்று போய்க் கதிரைகளில் உட்கார்ந்தார்கள்.

ஒன்றிரண்டு பேர் இவர்களை உற்றுப் பார்த்துவிட்டுப் போனார்கள். ''உங்கள் நாட்டாராக இருக்கலாம்.'' எலிஸபெத் முணுமுணுத்தாள்.

''கறுப்பர் எல்லாம் என் நாட்டாரா?'' என்று கேட்டவனின் பார்வையில், தூரத்தில் அந்தச் சிங்களப் பெண்மணி யாரிடமோ ஏதோ கேட்டது பட்டது.

ரஷ்யன் யாரும் ஆங்கிலம் தெரிந்திருப்பதாகத் தெரியவில்லை.

ஹீத்ரோ எயார்போட்டில் இங்கிலிஸ்காரருக்கு ரஷ்யமொழி தெரியுமா? அதுபோலத்தான். பரமநாதனும் எலிஸபெத்தும் என்னவும் தேவையா என்று கேட்டார்கள்.

குழந்தையின் நப்கின் மாற்ற இடம் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அந்தப் பெண்மணி சொன்னாள். எலிஸபெத் அந்தப் பெண்மணியைக் கூட்டிக்கொண்டு ரொய்லெற் இருக்கும் பக்கமாகப் போனாள்.

வந்திருந்த இலங்கையர்களில் பரமநாதனின் பார்வை பட்டது. அநேகமானோர் யாழ்ப்பாணத்தார்போல் பட்டது.

நாட்டில் இருக்கமுடியாத கொடுமையால் கடலோடிப் பிழைக்கும் எங்களின் நிலை அப்பட்டமாகத் தெரிந்தது.

லிஸா ஏதோ முணுமுணுத்துக்கொண்டு வருவது தெரிந்தது.

''என்ன மந்திரம் நடக்கிறது?'' பரமநாதன் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அமெரிக்காவுக்குப் போட்டியாக ஆயுதம் உண்டாக்கும் காசில் உருப்படியாக கொஞ்சம் ரொய்லெற் கட்டி வைக்கலாம் இவர்கள்."

லிஸா எரிச்சலுடன் சொன்னாள்.

"ரஷ்யருக்கெதிராக ரொக்கட் செய்யும் பணத்தில், அமெரிக்காவில் நீக்ரோக்களுக்கு வேலை கொடுக்கச் செலவளிக்கலாம்."

பரமநாதனின் குத்தலான மறுமொழி லிஸாவை நிமிர்ந்து பார்க்கப்பண்ணியது.

"சாதாரண மனிதர்களின், தன் நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கவனிக்காமல் அடுத்தநாட்டாருடன் ஆயுதப்போட்டி போடுவது யாராயிருந்தாலும் அது பிழை என்பதுதான், என் அபிப்பிராயம்." லிஸா விட்டுக் கொடுக்காமல் சொன்னாள்.

ஏன் இந்தப் பெண்ணுடன் தேவையில்லாமல் தர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்று யோசித்தான் பரமநாதன்.

விமானம் புறப்படும் நேரம் ஆவதின் அறிகுறி தெரிந்தது. லிஸா தன் புத்தக மூட்டைகளுடன் முன்னால் போவது தெரிந்தது.

லண்டனில் தொடங்கி மொஸ்கோ வரை இடைவிடாமல் கொஞ்சிக் கொண்டிருந்த இளம் ஜோடியைக் கண்டதும் தூக்கிவாரிப் போட்டது பரமநாதனுக்கு. நேரம் நடுச்சாமத்துக்குமேல். விடாமல் கொஞ்சப் போகிறார்கள், எல்லோரும் தூங்கிவழியப் போகிறார்கள். அவர்கள் பக்கத்தில் இருந்துதன்னில் தூங்கிவழியப் போவதை. அவன் நினைத்துத் திடுக்கிட்டான்.



அவர்கள் பக்கத்தில் வந்து இருக்காத வண்ணம் இருப்பதற்காக விரைவாக நடந்து லிஸாவின் இருப்பிடத்துக்கருகில் உட்கார்ந்து கொண்டான்.

மூன்று இருப்பிடங்களில் ஒன்று காலியாக இருந்தது. லிஸா தன் புத்தக மூடையை வைத்தாள்.

அவனைப் பார்த்துச் சிரித்தபடி சொன்னாள், "பயப்படாதீர்கள் பெண்கள் சமத்துவம் பற்றி நான் ஒன்றும் பிரசங்கம் வைக்கமாட்டேன்"

"நேற்றெல்லாம் நித்திரையில்லை. நீங்கள் பிரசங்கம் வைத்தாலும் பரவாயில்லை. அது தாலாட்டாக இருக்கும் நான் தூங்கிவிடப்போகிறேன்"

இருவரும் சிரித்தார்கள்.

விமானம் ஊர்ந்து, நகர்ந்து, உயர்ந்து புறப்பட்டுக் கொண்டிருந்தது.

ஜன்னலுக்கு வெளியே இருட்டாக இருந்தது.

"பக்கத்தில் இருந்து பார்க்கத்தான் கொடுத்து வைக்கவில்லை. பகலில் என்றாலும் மொஸ்கோவைப் பிளேனுக்குள்ளால் என்றாலும் பார்க்கக் கொடுத்துவைத்திருக்கிறதா?" லிஸா தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள்.

"ஏன் கிரெம்ளின் மாளிகையைப் பார்த்தே தீருவது என்று ஏதும் கங்கணமா?" அவன் கேட்க அவனைப் பார்த்துச் சொன்னாள், "தர்க்கம் போடுவது உங்கள் திட்டமானால் நான் எழும்பிப் போய்விடுகிறேன்."

"அப்படி ஒன்றும் இல்லை. நான் தூங்கப் போகிறேன்." அவன் கண்களை மூடிக்கொண்டான். லண்டனை விட்டுப் போகப் போக யாழ்ப்பாணத்தின் நினைவு மனதில் படம் போல் ஓடத்தொடங்குவது தெரிந்தது. அப்பாவுக்குச் சுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. என்ன சுகம் இல்லை என்று பானுமதி எழுதவில்லை. எப்போதிருந்தோ இரத்த அழுத்த நோயுடன் போராடுகிறார் தகப்பன்.

'அதனால் ஏதும் நடந்திருக்குமோ?'

நினைவு எங்கெல்லாமோ ஓடியது.

பத்துவருட இடைவெளி!

எப்படி இருப்பார்கள் ஊரில் உற்றாரும் உறவினரும்? பானுமதி படம் அனுப்பியிருந்தாள், நம்பமுடியாமல் வளர்ந்திருந்தாள். அம்மாவுக்கு கொஞ்ச நஞ்சமிருந்த கறுப்புத் தலைமயிரும் வெள்ளையடித்திருக்கும்.

அப்பாவுக்கு எப்போதோ பல் எல்லாம் போய்விட்டது. கண்கள் சரியாகத் தெரிவதில்லை என்று பானுமதி ஒருதரம் எழுதியிருந்தாள்.

தகப்பனுக்கும் அவனுக்கும் கடந்த எட்டுவருடமாக எந்தத் தொடர்பும் இல்லை.

மரியனின் சந்திப்பு — அதனால் அவளைக் கல்யாணம் முடிக்க வேண்டிய சந்தர்ப்பம் எல்லாம் வந்து மரியனைச் செய்யப் போகிறேன் என்று தகப்பனுக்கு எழுத......

'என் விருப்பத்துக்கு எதிராகச் செய்ய நினைத்தவன் நான் இறக்கும் வரை என் முகத்தில் முழிக்கத்தேவையில்லை. எந்த விதமான தொடர்பும் வைத்துக்கொள்ளத் தேவையில்லை. எனக்கு ஒரு மகன் இல்லை என்று நினைத்துக் கொள்கிறேன்.'

என்று எழுதியிருந்தார்.

அந்த வெறுப்பைச் சீரணிப்பது வெறும் சிரமமாக இருந்தது. மரியனை என்றில்லை இலங்கையில் இருந்திருந்தாலும்



தகப்பனுக்கும் மகனுக்கும் உள்ள உறவு இப்படித்தான் முடிந்திருக்கும்.

அவளுக்கும் தனக்கும் உள்ள தொடர்பு தெரிந்துதானே தந்திரமாகக் கப்பல் ஏற்றினார்.

அவள்!

'கார்த்திகா' எப்படியிருப்பாள்?

ஒருத்தரும் அவளைப் பற்றி எழுதவில்லை எட்டுவருடமாக. எப்படியிருப்பாள்?

கல்யாணமாகி இருக்குமா?

எத்தனை குழந்தைகள் இருக்கும்?

இப்போது முப்பத்திரண்டு வயது. முன்தலை நரைக்கத் தொடங்கியிருக்குமா?

என்னைக் கண்டால் எப்படி நடந்து கொள்வாள்? என்னுடன் ஒரு காலத்தில் யூனிவசிற்றியில் படித்தவர் என்று கணவனுக்கு அறிமுகம் செய்து வைப்பாளா? என் தகப்பனிடம் ரியூஷன் எடுத்தவர் என்று மட்டும் சொல்லித் தனக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இருக்கவில்லை என்பதைக் காட்டிக் கொள்வாளா?

கார்த்திகா;

மெல்லிய உடலும் மின்னலென ஆடும் பின்னலுமாக முதன் முதலில் சதாசிவம் மாஸ்டரின் வீட்டில் கண்ட அந்த உருவம்.

ஒரேயடியாக யூனிவசிற்றிக்குப் போய் ஊராருக்குத் தெரியாமல் ஒழிந்து மறைந்து ஒன்றாய்த் திரிந்த கார்த்திகா

எப்படி இருப்பாள் இப்போது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பாள்?

கனவிலும், உன்னைத் தவிர யாரையும் நினைக்க மாட்டேன் என்று தன்னைக் காதலித்தவன் லண்டனுக்கு வந்து ஒரு வருடத்துக்கிடையில் தன் பெயரை, நினைவை இழந்து போனான் என்று நினைத்து எவ்வளவு துடித்திருப்பாள்?

பத்து வருடங்களாக நிதானமாக யோசிக்காத, நிதானமாக இருந்து யோசிக்கப் பயந்த சில சம்பவங்கள் விமான ஓட்டத்தின் தூண்டலில் மனத்திரையில் படம் போட்டன.

விமானத்தில் எல்லோரும் நித்திரை, கிட்டத்தட்ட, சிங்களப் பெண்மணியின் சிறு குழந்தை இருந்திருந்து விட்டுச் சிணுங்கிக் காட்டியது.

மிஸ் எலிஸபெத் பேக்கர் புத்தகத்தை விரித்தபடி தூங்கி வழிந்து கொண்டிருந்தாள்.

பின்னால் சரிந்துப் படுக்கவைக்க வேண்டும் போல் இருந்தது, அவள் தூங்கி விழுவதைப் பார்க்க.

நித்திரையில் குழந்தைகளும் பெண்களும் வாடிய புஷ்பங்கள் போலவா இருப்பார்கள்?

மீராவின் குழந்தையழகை ஆசை தீர மணிக்கணக்காக ரசித்ததுண்டு.

'இப்போது லண்டனில் என்ன நேரமாக இருக்கும்? பின்னேரம் ஐந்து மணியாக இருக்கலாம்.'

'பனி படர்ந்த ரோட்டுக்களில் ஊர்ந்து, தவழ்ந்துதான் கார் போய் இருக்கும்.'

'இரண்டு மூன்று நாளாக மரியனுக்கு நல்ல நித்திரை இல்லை. கவனமாகக் காரை ஓட்டியிருப்பாளா?'



'காரிலும் ஏதோ பிழையிருப்பதாகச் சொன்னாள். விடுமுறையால் வந்தவுடன் என்னவென்று பார்க்க வேண்டும்.'

நினைவுகள், லிஸா தோளில் சடாரென்று விழுந்த வேகத்தில் சிதறின.

அவள் நித்திரை குலையாமல் அவன் தோளில் படுத்திருந்தாள். யாரோ தோளைத் தலையணையாக்கிய குற்றம் தெரியாமல் அவள் சுவாசம் நிதானமாக இருந்தது. விமானம் வெளிக்கிட்டவுடன் பெண்கள் உரிமையைப் பற்றிய புத்தகங்களைப் பின்னால் இருந்து கூப்பிட்டுத் தந்த லிஸாவும். இப்போது ஒரு ஆணின் தோளில் குழந்தை போல் தூங்கிவதையும் லிஸாவும் வேறு பெண்களாகப் பட்டார்கள்.

அவளின் கண்ணாடியற்ற முகம் களங்கமின்றி இருந்தது. நித்திரையில் பனிவியை ரசித்து முத்தமிட்டது ஞாபகம் வந்தது. நினைவு தொடரவில்லை. விமானம் ஒரு பயங்கரக் குலுக்கலுடன் கீழே போவது தெரிந்தது.

என்ன நடக்கிறது?

மொஸ்கோவிலிருந்து வெளிக்கிட்டு இரண்டு மணித்தியாலங்கள் கூட ஆகவில்லை இதற்குள் என்ன நடந்து விட்டது?

விமானக் குலுக்கலில் லிஸா திடுக்கிட்டு என்ன நடக்கிறது என்று கேட்டாள்?

''நான் என்ன பய்லெட்டா தெரிந்து கொள்ள? உன்னைப் போல பிரயாணி தானே! ஏனோ தெரியவில்லை, விமானம் கீழே இறங்குகிறது ''

அவன் எரிச்சலுடன் சொன்னான். என்ன நடக்கிறது என்று அறிவித்துத் தொலைத்தால் என்ன?

அவன் எரிச்சல் தெரிந்தோ என்னவோ கப்டனின் அறிவிப்புக் கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த விசரன் ரஷ்யன் பாஷையில் சொல்வது? இங்கிலிஸ் தான் உலகறிந்த மொழி என்று தலைக்கனத்துடன் நினைத்திருந்த பரமநாதன் போன்றவர்கள், பரபரவென்று பார்வையை மாற்றிக் கொண்டார்கள்.

சில தவிர்க்க முடியாத காரணங்களால் பிரயாணம் மேற்கொண்டு நடக்காதென்றும், மேலதிகமான தகவல்கள் கிடைக்கும் வரை பிரயாணிகள் இறங்கிக் கொண்டிருக்கும் விமானத்தளத்தில் தங்கியிருக்க வேண்டும் என்றும், அறிவிக்கப் பட்டதாம். அரைகுறையாகக் கேட்டது.

பரமநாதனுக்குச் சினம் வந்தது. ரஷ்யன் பிளேட் எடுத்த தன் முட்டாள்தனம் தலையில் பட்டது.

தகப்பன் மரணப் படுக்கையில் இருக்கிறார். இவன் மர்மமான பிரயாணம் செய்யவா வந்தான்?

பி. ஓ. ஏ. சி. யில் போய் இருக்கலாம்.

எயார் சிங்கப்பூரில் போய் இருக்கலாம்.

சாதாரண விடுமுறை என்றால் பரவாயில்லை. தகப்பனைப் பார்க்கப் போவது இப்படி, இந்த லட்சணத்தில்!

பிரயாணிகள் குழப்பத்துடன் ஒருவரை ஒருத்தர் பார்த்துக் கொண்டனர்.

லிஸா அரைகுறை நித்திரைக் குழப்பம் தெளிந்து புத்தக மூட்டையுடன் முணுமுணுத்தபடி வந்து கொண்டிருந்தாள். அரை குறை இருளான, பிரயாணிகள் தங்கும் மண்டபத்தில் எல்லோரும் போய்ச் சேர்ந்தனர்.

கொஞ்ச நேரத்தின் பின் விமானப் பணிப்பெண் வந்து சொன்னாள் சில காரணங்களால் ஈரான் நாட்டுக்கு மேலால் பறக்க முடியாதென்றும், வேறு நாடுகளிடம் பெர்மிஷன் எடுக்க முயற்சிப்பதாகவும் சொன்னாள்.



இரண்டு மூன்று நாட்களுக்கு முன் லண்டன் பேப்பர்களில் படித்தது ஞாபகம் வந்தது. டெஃரானிலிருந்து ரஷ்யத் தூதரக அதிகாரிகள் பலரைப் போகச் சொல்லி விட்டார்களாம், உளவு பார்த்த குற்றம் சாட்டி. அதன் பிரதிபலிப்பா இது?

''இவர்களின் உதை அரசியல் சண்டைக்குள் சாதாரண சனங்களா அகப்பட வேண்டும்?'' பரமநாதன் வெடித்தான்.

''ஏகாதிபத்திய பலப் பரீட்சையில் எத்தனையோ லட்சம் மக்கள் உயிரை இழக்கப் போகிறார்கள் அதைப் பற்றி எப்போதாவது இப்படி வெடித்துக் கோபித்தீர்களா?'' லிஸா நிதானமாகக் கேட்டாள்.

பெண்கள் உரிமை மட்டுமல்ல உலகப் பிரச்சினைகளில் எல்லாம் தலையைப் போட்டு உடைத்துக் கொள்வதைத் தவிர, இவளுக்கு வேலை ஒன்றும் இல்லையா?

கேள்விக் குறியுடன் பார்த்தான் அவளை.

அறிவும், திறமையும், உறுதியும் பதிந்த லிஸாவின் முகத்தைப் பார்க்கக் கிண்டலாகச் சொல்ல வெளிக்கிட்ட சில சொற்கள், தொண்டைக்குள் சிக்கிக் கொண்டன. நாளைக்கு தாய்நாட்டுக்குப் போய்ச் சேரப் போகிறோம் என்ற உற்சாகத்துடன் பட்ட முகங்கள், இப்போது உயிரற்றுக் கிடந்தன.

மொஸ்கோவில் வந்து சேர்ந்த தமிழர்களில் ஒன்றிரண்டு பேர் பரமநாதனுடன் வந்து கதைத்தனர்.

சிலர் நோர்வே, சுவீடன், ஆபிரிக்க நாடான ஸம்பியா போன்றவற்றிலிருந்து வந்தனர்.

ஸம்பியாவில் படிப்பிப்பதாகச் சொன்ன ஒரு தமிழ்ப் பெண்மணி அளவுக்கு மீறிச் சாமான்களுடன் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பெண்களின் குணம் எப்படி என்று அதிலிருந்து தெரிந்தது. எவ்விடத்திலிருந்தாலும், எங்குதான் போனாலும் என்ன வாங்கிச் சேர்க்கலாம், மற்றவர்களுக்குச் சொல்லிப் புழுக என்பதுதான் எங்கள் பெண்களின் குணத்தின் வரை விலக்கணமா?

எப்போது சொல்லப் போகிறார்கள் விமானம் புறப் படும் என்று லிஸா குட்டி போட்ட பூனைபோல் அங்கு மிங்கும் நடந்து கொண்டிருந்தாள் விபரங்கள் கேட்க. ஒவ் வீசில் இருந்த ஒன்றிரண்டு உத்தயோகத்தர்களுக்கும் ஒரு சொட்டு இங்கிலிசும் தெரியாது.

அந்த விமான நிலையம் உள் நாட்டு விமானத் தளம். வெளி நாட்டாருடன் தொடர்பு கொள்ளத் தக்கதான ஆங் கிலம் தெரிந்த உத்தியோகத்தர்கள் இல்லாமல் இருப்பது ஆச்சரியமாக இருக்கவில்லை.

சுற்றி வர மலைகள். நடுவில் அந்த விமான நிலையம். காலை யில் ஒரு பக்கத்தில் உதித்து மறு பக்கத்தில் மறையப்போகும் சூரியனைக் கண்டதும்தான் ஒரு முழுப் பகல் அந்த மண்ட பத்தில் முடிந்துவிட்டது என்று ஞாபகம் வந்தது.

நல்ல சாப்பாடும் இல்லை. முக்கியமான வசதிக் குறைவு ரொய்லெற் வசதியின்மை.

''என்னதான் நடந்தாலும் நான் ஒரு கொம்யூனிஸ்ட் நாட்டில் சீவிக்க மாட்டேன்.'' லிஸா முணுமுணுத்தாள்.

''நான் நினைக்கவில்லை. உம்மைப் போல பெண்களுக்கு வசிக்கும் உரிமை தருவார்கள் என்று.''

அவன் குறும்புத்தனமாகச் சொல்ல அவள் கோபத்து டன் அவனைப் பார்த்தாள்.

களைத்து, முகம் கறுத்துப் போய் இருந்தும் அவள் முகத்தின் குறு குறு என்ற சுபாவம் பார்க்க வசீகரமாக



இருந்தது. அவன் தன்னையுற்றுப் பார்ப்பதைக் கண்டதும் அவள் தர்மசங்கடத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண் டாள்.

'உனக்கு வெட்கப்படவும் தெரியுமா?' என்று கேட்க நினைத்தவன் பேசாமல் மௌனமாக இருந்தான், அவளைக் கோபப்பட வைக்க விரும்பாமல்.

கொஞ்ச நேரத்தில் விமான நிலையத்திலிருந்து அதிகாரி கள் வந்து விமானம் புறப்படப் போவதாகவும், ஆயத்தமாக இருக்கவும் என்று சொன்னார்கள்.

எல்லோரும் விழுந்தடித்து ஆயத்தம் செய்தனர்.

அவர்கள் நம்பிக்கையில் மண் விழுந்தது, அரை மணித் தியாலத்தின் பின் இன்னும் கொஞ்சம் அதிகாரிகள் வந்து விமானம் இன்று இரவு புறப்படாது, எல்லோரும் 'ருறிஸ்ட் ஹொட்டேல்'சுக்குப் போங்கள் என்று சொன்னபோது.

எந்த நாட்டுக்காவது ஆயுதம் இறக்குமதி செய்ய நாங்கள் வந்த விமானத்தைப் பாவிக்கிறார்கள் ஆக்கும் எனத் திட்டிக்கொண்டனர் சிலர்.

''எவ்வளவு காலம் எடுக்குமோ தெரியாது. ஒரு கிழமை உடுத்த உடுப்புடன் பைத்தியம் போலத் திரியத் தயாரில்லை. நான் ட்றெயின் எடுத்து மொஸ்கோ போய்ப் பிரிட்டிஷ் கவுண்சிலைப் பார்க்கப் போகிறேன்.'' லிஸா முழங்கினாள்.

''இங்கிருந்து ட்றெயின் எவ்வளவு நாள் எடுத்து மொஸ்கோ போகும் என்று தெரியுமா?'' பரமநாதன் எரிந்து விழுந்தான். மொஸ்கோவிலிருந்து ஆயிரம் மைல்களுக்கப் பாலாவது இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பனின் உடல் நிலையை நினைக்க அவன் பொறுமை எல்லாம் காற்றில் பறப்பதாகத் தெரிந்தது. அவர்களை, விமான நிலையத்திலிருந்து கிட்டத்தட்ட பத்து மைல்களுக் கப்பால் உள்ள பிரயாணிகள் விடுதியில் கொண்டுபோய் விட்டார்கள்.

சடாரென்று முன் அறிவிக்காமல் நூற்றுக்குக் கிட்டத் தட்ட பிரயாணிகளைக் கொண்டு வந்து இறக்கியதால் ஹொட்டேல் அதிகாரிகளும் சிப்பந்திகளும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தனர்.

வந்தவர்களில் பெரும்பாலோருக்கு ரஷ்யன் பாஷை தெரியாது. வரவேற்றவர்களில் ஒன்றிரண்டு பேர்தவிர மற்றவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. இந்தக் குழப்பத்தில் அவர்கள் கேட்ட கேள்வி என்ன என்று இவர்களுக்குத் தெரியாது; இவர்கள் ஆங்கிலத்தில் சொன்ன மறுமொழி என்ன என்று அவர்களுக்கு விளங்கவில்லை. லிப்டில் பதினெட்டாம் மாடிக்குப் போய் அறை இருபத்தேழுக்குப் போனபோது, லிஸாவும் சேர்ந்து வந்த பொழுதுதான் எல்லாக் குழப்பங்களும் தெரிந்தது. லிஸா கேள்விக்குறியுடன் இவனைப் பார்க்க இவன் அவளைப்பார்த்து,

''உமது அறை எது?'' என்று பரிதாபத்துடன் கேட்க, அவள் உங்கள் அறை நம்பரும் இருபத்தி ஏழா?'' என்று வியக்க அவனுக்குப் பைத்தியம் பிடிக்கும்போல் இருந்தது.

''என்ன இழவு?'' அவன் எரிச்சல் பட்டுக் கொண்டான்.

அவர்கள் இவர்களைத் தம்பதிகள் என்று நினைத்துக் கொண்டு டபிள் பெட்ரூம் கொடுத்ததை நினைத்து அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

''ஏன் டபிள் பெட்ரூம் தந்தார்கள்?'' அவன் எரிந்து விழுந்தான்.



அவள் குறும்புடன் இவனைப் பார்த்து ''ரு மேக் லவ்'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள். ஒரு ஸீரியசும் குரலில் இல்லாமல் அவள் இப்படிச் சொல்ல இவனுக்கு வெட்கமாக இருந்தது.

''எக்ஸ்கியூஸ் மீ'' அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். சிங்களப்பெண் குழந்தையுடன் நின்றிருந்தாள்.

''உங்களுக்கு ஆட்சேபனையில்லையென்றால் டபிள் பெட்ரூமை மிஸ் பேக்கருடன் நான் பாவிக்கிறேன். டபிள் ரூம் இரண்டு சிங்கிள் பெட்தானே! எனக்கும் குழந்தைக்கும் தந்த டபிள் ரூமை நீங்கள் பாவிக்கலாம்.'' தங்கள் சண்டையை அவள் கவனித்தது இருவருக்கும் தெரிந்தது வெட்கமாக இருந்தது அவனுக்கு.

''டபிள் ரூம் சிங்கிள் பெட்ஸ். இரவில் தனிமையில் ட்றெயினில் பெண்களுடன் பிரயாணம் செய்ததில்லையா?'' மிஸ் லிஸா பேக்கர் மூக்கை நெளித்து புருவத்தைச் சுழித்துக் கேட்டாள், அவன் தர்மசங்கடப் படுவதைப் பார்த்து.

''முன்பின் தெரியாதவர்கள் என்றால் பரவாயில்லை. ஆனால் இரவெல்லாம் நீங்கள் உலகத்துத் துன்பங்களைப் பற்றி ஒப்பாரிவைத்துக்கொண்டு இருப்பதைக் கேட்கும் அளவில் என் மனநிலையில்லை'' என்றான்.

இரு பெண்களும் சாமான்களை அறையில் கொண்டு வைக்க உதவி செய்தான். பாவம் மிஸிஸ் ஜெயசிங்க குழந்தையுடன் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். மிஸ் பேக்கர் அவளுக்கு உதவிசெய்வதை நன்றியுடன் ஏற்றுக் கொண்டாள்.

தங்கள் தங்கள் அறைகளில் சாமான்களை வைத்தபின் 'குட்நைட்' சொல்லிய லிஸாவைக் கூர்ந்து பார்த்தான். மெல்லிய வெளிச்சத்தில் அவள் இளமை அவனை என்னவோ செய்தது. டபிள் பெட்ரூமில் அவளுடன் இருந்திருக்கலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

எப்போது விமானம் புறப்படும்? இதைத்தவிர எந்தச் சிந்தனையும் அவனுக்கு இல்லை.

ரஷ்யச் சாப்பாடு எவ்வளவோ ருசியாய் இருந்தும் அவன் மனம் அதை ரசிக்காமல் பிரயாணத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தது.

முன் மேசையில் மிஸிஸ் ஜெயசிங்காவும் மிஸ் பேக்கரும் சினேகிதமாகப் பழகுவதைப் பார்க்க நிம்மதியாக இருந்தது. தான் இனி பேக்கரின் வேதாந்தத்திலிருந்து கொழும்பு போகும் வரை தப்பிப் பிழைத்தோம் என்றிருந்தது.

மிஸ் பேக்கர் இதுவரை அவன் சந்தித்த பெண்களை விட வித்தியாசமாக இருந்தது வேடிக்கையாகப் பழக வைத்தது.

அதிகமான பெண்கள் கதைக்க வெட்கப்படும் விட யங்களை — பயப்படும் சம்பாஷணைகளை அவள் மிகச் சாதார ணமாக நினைப்பது விநோதமாக இருந்தது.



''ஏன் எங்களை ஒரு அறையில் போட்டார்கள்?'' என்று அவன் வெடித்தபோது அவள் குறும்புத் தனமாக ''ரு மேக் லவ்'' என்று சொன்ன போது தான் எப்படித் தர்மசங்கடப் பட்டேன் என்பதை அவள் ரசித்தது ஞாப கம் வந்தது. அப்படிக் கோழையாக இருந்திருக்கக் கூடாது தான்!

ஆண்கள் பெண்களை மென்மையாக நினைக்கும் வரைதான் பெண்கள் வலிமையற்றவர்கள். பெண்கள் தாங்கள் மற்றவா கள் நினைப்பது போல் கோழைகளுமல்ல மென்மையானவர் களுமல்ல ஆண்களைப் போல் மனவலிமையுள்ளவர்கள் என் பதை நிருபிக்கும் போது, தனக்கு ஏற்பட்ட தர்ம சங்கடம் போல் எல்லா ஆண்களுக்கும் ஏற்படும் என்று யோசித்தான் பரமநாதன்.

'டைனிங் ரூம்' கிட்டத்தட்டக் காலியாகி விட்டிருது. எதிரில் லிஸா ஏதோ ரஷ்யன் மகஸீனைப் புரட்டிக் கொண் டிருந்தாள்.

ரஷ்ய நாட்டு டைனிங் ரூம் ஆங்கில நாட்டு டைனிங் ரூம்போல் இல்லாமல் ஏதோ வித்தியாசமாக இருந்தது.

திரும்பிய பக்கமெல்லாம் லெனினும் மற்றைய ரஷ்யத் தலைவர்களுமாகக் காட்சியளித்தார்கள்.

சாதாரண மக்கள், அவர்களின் அபிலாஷைகளைப் பிரதி பலிக்காமல் அரசியல் தலைவர்கள் - அவர்களின் கோட்பாடு களைப் பிரதிபலிக்கும் வசனங்களாக எல்லா இடங்களும் காட் சியளித்தன. உலகத்துத் தொழிலாளர்களின் உறுதியை நனவாக்கிய தலைவர்கள்.

உலகத்துப் பெண்களின் கொடுமையான வாழ்க் கைமுறையை ஆராய்ந்து அதற்கு எதிராய் எழுதும் மிஸ் லிஸா பேக்கரைப் பார்க்க விநோதமாக இருந்தது. இவ்வளவு நேரமும் — லண்டனிலிருந்து வெளிக்கிட்ட நேரத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் தத்துவங்களுக்கு எதிராய்க் குறும்புத்தனமாகக் கதைத்தது வீண் அலட்டல் என்று பட்டது.

புத்திக் கூர்மையான கண்கள் கண்ணாடிக்குள் மறைய, அவள் குனிந்திருந்து படித்த விதம் மரியாதையை உண்டாக்கியது.

போவதற்கு அவள் எழும்பும்போது, ''மிஸ் பேக்கர்'' என்று கூப்பிட்டான்.

''லிஸா என்று கூப்பிடலாம்.'' இனிமையாகச் சொன்னாள் அவள்.

என்ன சொல்ல — என்ன கேட்க நினைத்தான் என்று மறந்து விட்டது. தர்ம சங்கடத்துடன் பார்த்தான்.

''என்ன கூப்பிட்டீர்கள்?'' அவள் கேட்டாள்.

''நான் நினைக்கவில்லை நித்திரை வரும் என்று. ஏதும் புத்தகம் இருந்தால் கொடுங்கள்'' என்றான்.

உண்மையில் அவன் சொல்ல நினைத்தது உங்களுக்கு நித்திரை வராவிட்டால் பேசிக்கொண்டிருக்கலாமே என்று.

''ஓ, நிச்சயமாக. என்ன புத்தகம் தேவை?'' அவள் மகிழ்ச்சியுடன் கேட்டாள்.

என்ன புத்தகமா?

அவன் விழித்தான்.

ஏதாவது ஒரு புத்தகம் கேட்டால் என்ன புத்தகம் என்று லிஸ்ட் கேட்கிறாளே!

''ஹறோல்ட் றொபின்சன், சுக்கி கொலின் மாதிரியாட்களின் புத்தகம் ஒன்றும் இல்லை.'' அவள் வேடிக்கையாகச் சொன்னாள். எந்த எழுத்தாளர்களை அவமதிக்கிறாள் என்று தெரிந்தது.



''என்ன புத்தகம் என்றில்லை. நித்திரை வரவில்லை. ஏதாவது படிக்க வேண்டும் போல் இருந்தது.'' அவன் விட்டுக் கொடுக்காமல் சொன்னான்.

''வெறும் பொழுது போக்குக்கு வாசிக்கக் கூடிய சினிமா ரகமான பத்திரிகை ஒன்றும் என்னிடமில்லை, சொறி.''

அவள் போய் விட்டாள்.

எழுந்து போய்த் தன் அறையைத் திறக்கும்போது மிஸிஸ் ஜெயசிங்கர்வின் குழந்தை அழுவது கேட்டது.

பாவம் லிஸா. இன்றிரவும் நித்திரை கிடைக்கப் போவதில்லை அவளுக்கு என்று நினைத்துக் கொண்டான்.

நேற்றிரவு தன் தோளில் தவழ்ந்த அவளின் முகம் ஞாபகம் வந்தது. அந்த இரவுக்குமுதல் நித்திரையில் முத்தமிடப்பண்ணிய மனைவி மாியனின் இனிய முகம் ஞாபகம் வந்தது.

மிஸ் பேக்கருக்கு 'போய் பிறண்ட்' இருக்கிறானா என்று கேட்க வேண்டும் போல் இருந்தது.

மெல்லமாக கதவைச் சாத்தினான். மிஸிஸ் ஜெயசிங்காவின் குழந்தையை இன்னும் கூட அழப்பண்ணாமல் ஜன்னலைத் திறந்தான்.

பதினெட்டு மாடிகளுக்குக்கீழால் ஓடும் கார்கள் குழந்தை மீரா விளையாடும் விளையாட்டுக் கார்கள் போல் மின் மின் என்று சிறியதாகத் தெரிந்தன.

கொம்யூனிஸ்ற் நாடுகளில் சொந்த உடைமைகளுக்கு இடமிருக்காது என்று நினைத்தது பிழை எனத் தெரிந்தது.

ரஷ்யாவில் திரும்பிய இடமெல்லாம் துப்பாக்கி தூக்கிய சிப்பாய்கள் தெரிந்தாலும் மக்கள் அந்த வாழ்க்கைக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகிப்போய்விட்டார்களோ என்னவோ. அவர்கள் இந்தச் சிப்பாய்களைப் பொருட்படுத்தாமல் சந்தோஷமாய் இருப்பது தெரிந்தது. நடுச்சாமத்துக்கு மேலாகியும் இன்னும் நடமாட்டம் இருந்தது.

யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. ஹொட்டேல் பணியாளர்களாக இருக்கலாம்.

''கம் இன்.''

லிஸா வந்தாள்.

''மிஸிஸ் ஜெயசிங்காவிடம் உள்ள பேப்பர்கள் இவை நான் உங்களுக்குப் பிடிக்கும் என நம்புகிறேன்.''

ஹொலிவூட், வுமன் ஒன்லி...... இப்படியான சில பத்திரிகைகள்.

''தாங்க் யூ மிஸ் பேக்கர்......'' அவன் முடிக்கவில்லை.

''லிஸா என்று கூப்பிடலாம் என்று நினைக்கிறேன்.'' அவள் சிரித்த முகமும் இளமை வனப்புமாய், கவர்ச்சியாய்...... அந்தப் பெயரறியாத ஊரின் ஹொட்டேலில்.

''நான் ஏதும் பிடிக்காதவை சொன்னால் மன்னித்துக் கொள்ளுங்கள் மிஸ் பேக்கர். என் தகப்பனுக்குச் சுகமில்லை என்று இலங்கைக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். இப்படிப் பிரயாணத் தடங்கல் ஏற்பட்டதால் மனம் எரிச்சலாக இருக்கிறது. எதையும் யோசிக்கப் பொறுமை இல்லாமல் இருக்கிறது.''

அவன் குரல் சலிப்புடன் ஒலித்தது. அவள் கொண்டு வந்த புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்தான்.

அவள் மௌனமாகப் பெற்றுக் கொண்டாள்.



''ஐயாம் சொறி. ஐ ஹோப் யுவர் பாதர் இஸ் ஒகே.'' அவள் நம்பிக்கை குரலில் ஒலித்தது.

அவள் திரும்பிப் போனாள். இன்னொருதரம் 'குட்நைட்' சொல்லவில்லை.

அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். என்ன பார்க்கிறீர்கள் என்று கேட்டிருந்தால் நான் கல்யாணம் ஆகாதவனாய் இருந்திருந்தால், 'ஐ வில் ஆஸ்க் யூ டு ஸ்லீப் வித் மீ' என்று சொல்லியிருப்பேன் என்று நினைத்தான்.

அவள் கேட்கவில்லை; அவன் சொல்லவில்லை.

அன்றிரவு அரைகுறை நித்திரையுடன் முடிந்தது.

அடுத்தநாள் பிரயாணிகளின் பொறுமை எல்லை மீறி யாரும் விமான அதிகாரிகளைக் கண்டால் அடிபிடி ஏற்படுமென்னர், பின்னேரம் விமானம் புறப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அரை குறை உற்சாகத்துடன் சாமான்களை அடுக்கத் தொடங்கினார்கள். விமானப் பிரயாணக் களைப்பு மட்டுமல்ல, ஒரே உடுப்புடன் மூன்று நாட்களாகப் படுத்து எழும்புவது அவ்வளவு சுகாதாரமானதாகப் படவில்லை.

லிஸா அன்று முழுக்க மிஸிஸ் ஜெயசிங்காவின் குழந்தையுடன் 'பிஸி.' குழந்தை அழுது களைத்தோ என்னவோ மிக அமைதியாக இருந்தது.

லிஸா தாய்மையுடன் குழந்தையை அணைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்க நம்பமுடியாமல் இருந்தது. லிஸாவைப் போன்ற பெண்கள் வாழ்க்கை எல்லாம் உரிமை பற்றிய புரட்சிக் குரல் எழுப்பப் பிறந்தவர்கள் என்று தான் நினைப்பது பிழை எனப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனுடன் அதிகம் கதைக்கச் சந்தர்ப்பம் வரவில்லை. யாரோ ஒரு கனடியனுடன் 'டைனிங் ரூமி'ல் தர்க்கம் பண்ணுவது கேட்டது.

பின்னேரம் விமானம் புறப்படும் என்று சொன்னது இரவு எட்டுமணி என்று கடைசியாகத்தான் தெரிந்தது. ஒருபடியாக விமானம் புறப்பட்டு மேலே எழும்பிப் பறக்கும் வரை, ஒவ்வொருவரும் நிம்மதியின்றியிருந்தது முகத்தில் தெரிந்தது. நடுச்சாமத்தில் விமானம் குவைத் நாட்டில் ஒரு மணித்தியாலம் நின்று வெளிக்கிட்டது.

லிஸா இவனுக்கு முன்னால் ஜெயசிங்காவுடன் இருந்தாலும் அடிக்கடி திரும்பி, குவைத்தில் முஸ்லிம் அதிகாரிகள் பெண்களை நடத்திய விதத்தைப் பற்றிக், திட்டிக்கொண்டிருந்தாள்.

காலை எட்டு மணிக்கு கொழும்பை அடைந்தது விமானம்.

''ஸோ பியூட்டிபுல் ஏ கன்ட்றி!'' லிஸா கையை விரித்துக் குழந்தைபோல் மகிழ்ந்தாள், பச்சைப் பசேலென்ற பின்னணியில் விமானம் இறங்கும்போது.

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் நூற்றுக்கணக்கான விமானங்களைக் கண்ட லிஸா, பண்டாரநாயக்கா விமான நிலையத்தில் ஒரே ஒரு விமானத்தைக் கண்டு திடுக்கிட்டது முகத்தில் தெரிந்தது.

என்ன குபேர நாடென்று நினைத்துக் கொண்டாயா எங்கள் நாட்டைப்பற்றி என்று, கேட்க நினைத்தான்.

எங்கள் நாட்டுப் பெண்களின் வாழ்க்கை முறையை மட்டுமல்ல, எங்கள் நாட்டையும் பற்றி நீ எழுத நிறைய உண்டு என்று சொல்ல நினைத்தான்.



விமானம் இரண்டு மூன்று நாள் பிந்தி வந்ததால் அதிகமான ஆட்களை வரவேற்க யாரும் விமான நிலையத்தில் இல்லை.

வெள்ளவத்தைக்கு 'ரக்ஸி'யில் போக முடிவு கட்டினன். லிஸா 'ஹொட்டேல் இன்ரகொண்டினன்டலு'க்குப் போவதாகவும் தானும் ரக்ஸியில் வரலாமா என்றும் கேட்டாள். தனியாகப் போக நிறைய செலவு 250 ரூபா: £ 6க்கு மேல் என்று முணுமுணுத்தாள்.

50 பென்ஸில் அண்டர்கிரவுண்ட் ட்றெயினில் போகலாம் என்று நினைத்து வந்தாயா என்று கேட்க நினைத்தான்.

போகும் வழியில் இலங்கையின் காட்சிகளை விழுந்து விழுந்து பார்த்து பத்தாயிரம் கேள்விகள் கேட்டுக் கொண்டு வந்தாள். அவளின் குதூகலம் குழந்தை பிராயத்தை ஞாபகம் படுத்தியது.

இலங்கையில் மூன்று வாரம் தங்கி நின்றுவிட்டு இந்தியா போவதாகவும் அதற்கிடையில் நேரம் இருந்தால் தன்னைச் சந்திக்க முடிந்தால், சந்தோஷம் என்றும் சொன்னாள்.

நிச்சயமாக ஒரு பிளானும் இல்லை. தகப்பனின் சுகநிலையைப் பார்த்துத்தான் எல்லாம் முடிவுகட்ட வேண்டும் என்றான். வெள்ளவத்தை விலாசத்தைக் கொடுத்து, மீண்டும் ஒருதரம் சந்திக்கத் தானும் விரும்புவதாகச் சொன்னான். லண்டன் வீட்டு டெலிபோன் நம்பரும் கொடுத்தான்.

இலங்கையில் சந்திக்க முடியாவிட்டால் லண்டனில் ஒரு தரம் சந்திக்கலாம் என்று டெலிபோன் நம்பரை எழுதிக் கொண்டார்கள்.

அவள் இறங்கிக் கொண்டபோது கை குலுக்கிக் கொண்டாள். மென்மையாகவும் குளிர்ந்தும் இருந்தது அவளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை. கொஞ்ச நேரம் விடாமல் வைத்திருந்தான். அவனின் மனைவி மரியனுக்கு அவளின் கொள்கைகள் பிடிக்கலாம், லண்டனுக்குப் போனதும் கட்டாயம் போன்பண்ண வேண்டுமென்ருன்.

''கல்யாணம் முடித்ததாக நீங்கள் சொன்னதாக ஞாபகம் இல்லை'' என்ருள் குறும்பாக.

''கல்யாணம் முடிக்காதவன் மாதிரி நடக்கவும் இல்லை என்று நினைக்கிறேன்.'' அவனும் குறும்பாகச் சொன்ஞன் விட்டுக்கொடுக்காமல்.

இருவரும் என்ன கருத்தில் கதைக்கிருர்கள் என்று இருவருக்கும் தெரிந்தது. அவள் 'களுக்' கென்று சிரித்தாள். இலங்கையின் வெயிலில் இந்தக் காலைச் சூட்டிலேயே அவள் கன்னம் சிவந்திருந்தது.

''மீண்டும் சந்திப்போம்.'' அவள் இறங்கிப் போஞள்.

ரக்ஸி வெள்ளவத்தையை நோக்கிப் போனது.

அக்கா தகப்பனின் சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் போய் இருக்கலாம். வீட்டில் யாருமில்லாமல் இருக்கலாம்

ரக்ஸி காலி ரோட்டில் ஓடிக்கொண்டிருந்தது. பத்து வருட இடைவெளியில் இலங்கையில் என்னென்ன மாற்றங்கள் நடந்தது என்பதை அனுபவத்தால் அறியமுதல் திரும்பிய பக்கமெல்லாம் உல்லாசப் பயணிகளுக்கான விடுதிகள் தெரிந்தன

'எதையும்' வாங்கலாம் மேல்நாடுகளில்.

என்ன தேவை என்று இலங்கை போன்ற நாடுகளுக்கு வருகிருர்கள் மேல் நாட்டார்?



மேல்நாட்டில் கிடைக்கமுடியாத அமைதி தேடியா? மகரிஷிகள் இந்தியாவில்தானே கூட!

இலங்கையில் அப்படி என்ன?

உடல் வளர்ந்து உடை சிறுத்த நாரிமணிகளைக் கண்டபோது மேல்நாட்டு நாகரீகம் எப்படி எங்கள் மக்களைத் தாக்கியிருக்கிறது என்று தெரிந்தது.

பத்து வருடங்களுக்கு முன்னேயே இப்படி இருந்திருக்கலாம். நாளாந்த வாழ்க்கை ஓட்டத்தில் கண்களில் படாமல்போய் இருக்கலாம்.

அல்லது தாய் நாட்டை வேறு கண்ஞேட்டத்தில் பார்ப்பதால் வித்தியாசமாய்த் தெரியலாம்.

ரக்ஸி வெள்ளவத்தையை ஊடறுத்தது.

காசு கொடுத்துவிட்டுப் பெட்டிகளை எடுக்கும்போது ஜன்னல் திறந்த சத்தம் கேட்டது.

மெலிந்த அந்த முகத்துக்கு உரிமையானவள் என் அக்காவா? தமக்கையின் முகத்தில் ஒருகணம் நம்பமுடியாத பிரமை.

அடுத்தகணம் மைத்துனர் கதவைத் திறந்தார்.

''இரண்டு நாளாக எயார்போட்டில் கிடந்து அலுத்துப் போஞேம். விளக்கமாக யாரும் சொல்லேல்ல எப்ப பிளேன் வரும் எண்டு.''

மைத்துனர் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டார்.

''ஏரோபுளொட்டில் வந்து பட்ட கஷ்டம் போதும்'' பரமநாதன் அலுத்துக் கொண்டான்.

'மினி ஸ்கேர்ட்' போட்ட அந்தப் பெண்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து வயதாக இருந்த அக்கா மகள் கீதாவா?

''ஹலோ மாமா!'' கீதா குதூகலத்துடன் கூவினாள்.

மருமகன் சந்திரன் வெட்கத்துடன் நெளிந்தான்: போகும்போது அவன் கைக்குழந்தை

''மற்றவை இரண்டு பேரும் யாழ்ப்பாணத்தில்.'' அக்கா புட்டுக்கு மாக்குழைத்தபடி சொன்னாள்.

அரிசிமாப் புட்டும் இஞ்சிச் சம்பலும் மூக்கைத் துளைத்தன.

''ஐயாவுக்கு சீரியஸாம் போன்கோல் வந்தது. 'யாழ் தேவி'யில் போற யோசனை. நல்ல காலம் நீ வந்திட்டாய்.'' தமக்கை தம்பியைப் பார்த்துச் சொன்னாள். அப்பா சாகக் கிடக்கிறார் என்பதா மறைமுகக் கருத்து.

''உடம்பு அலுத்துப்போய்க் கிடக்கு. ஒரு குளிப்படிக்க நேரமிருக்கா?'' பரமநாதன் பரபரத்தான். அவனை வரவேற்பதில் மருமானும் மருமகனும் நெளிந்தனர்.

குளித்து முடியச் சாப்பாடு மேசையில் இருந்தது.

''நான் பானுமதியின் கடிதம் கிடைக்க முதலே இந்த மாதம் வருவதாக பிளேன் டிக்கற் 'புக்' பண்ணியிருந்தேன்.'' வாயில் சாப்பாட்டை வைத்துக்கொண்டு சொன்னான்.

''குடும்பத்தையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கலாமே?'' தமக்கை தம்பிக்கு இன்னும் சாப்பாடு போட்டுக்கொண்டு சொன்னாள்.

பரமநாதன் தமக்கையை நிமிர்ந்து பார்த்தான். ''அப்பாவுக்குப் பிடிச்சிருக்குமோ......'' அவன் இழுத்தான்.



''அவருக்கு வாதம் வந்து பேச்சில்லாமல்போய் இரண்டு மாதமாய் போயிட்டுது.''

தமக்கை சொல்லத் தம்பியின் தொண்டையடைத்தது வேதனையில்.

''துக்கப்பட்டு என்ன செய்யிறது? ஆர் சிரஞ்சீவியா இருக்க வந்தம்?'' மைத்துனர் புட்டுக்குச் சொதி விட்டுக் கொண்டார்.

சுடுகாட்டு வேதாந்தம்!

''அம்மா சொன்னா உனக்குத் தந்தியடிக்கச் சொல்லி. டொக்டர் சொன்னார் எத்தனை நாள் எடுக்குமோ தெரியாதெண்டு.''

தமக்கையின் குரல் தகப்பனின் இறுதிப் பிரயாணத்தைக் கதைக்கும்போது கரகரத்தது.

சாப்பாடு முடிய, யாழ்தேவியில் போகமுதல் இங்கிலாந்துக்குப் போன் பண்ண விரும்பினான். எவ்வளவு நேரம் எடுக்குமோ தெரியாதாம். உலகத்தில் எந்த மூலைக்கும் படுக்கையறையில் இருந்து நம்பர் சுழட்டியவன் முதன் முதலாகத் தாய்நாட்டின் முன்னேற்றத்தில் சலித்துக் கொண்டான்.

''தந்தியடிப்பது புத்திசாலித்தனம்'' மருமகள் யோசனை சொன்னாள்.

மூன்று நாள்தான். ஆனாலும் மனைவியின் குரலையும் மகளின் குரலையும் கேட்காமல் ஒரு மாதிரியா இருந்தது அவனுக்கு.

வந்த களைப்பு மாறமுதலே இன்னொருதரம் பெட்டி படுக்கையைத் தூக்கிக் கொண்டு ஏறவேண்டியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா வீட்டை அப்போதுதான் நோட்டம் விட்டான்.

உடைந்த தளபாடங்கள், எரிந்த ஒரு பக்க வீடு; கிட்டத்தட்ட வெறுமையான அறைகள்.

தம்பியின் கண்கள் போகும் இடங்களைப் பார்த்ததும் தமக்கை பெருமூச்சு விட்டாள்.

கண்கள் கலங்கின. ''நாங்கள்தான் மிஞ்சினம் எழுபத்தி ஏழாம் ஆண்டுக் கலவரத்தில்; உயிர் தப்பினால் போதும் எண்டு ஓடிப்போனம்.''

ஒரு கணம் ஒன்றும் பேசாமல் நின்றான் பரமநாதன். உண்மையாகத் 'தாய்' நாட்டுக்கா வந்திருக்கிறான்? தாய் தான் வளர்த்த பிள்ளையைக் குருடாக்க உதவி செய்யும் பண்பற்ற கலாசாரம் கொண்ட ஆட்சி முறையைக் காணவா, ஓடோடி வந்தான்?

பெருமூச்சுடன் மைத்துனரோடு வெளியேறினான். மனைவிக்குத் தான் சுகத்துடன் வந்து சேர்ந்ததைத் தந்தியில் தெரிவித்தான்.

யாழ்ப்பாணம் போனவுடன் கடிதம் எழுதுவதாகச் சேர்த்து எழுதினான் தந்தியில்.

குங்குமப்பொட்டும் பட்டுச் சேலையும் அணிந்த தமிழ்ப் பெண்களைக் கொண்ட வெள்ளவத்தை மார்க்கட், ஒரே சிங்கள மயமாக இருந்தது. தமிழ்ப் பெண்கள் போல தெரிந்தவர்களும் தாலியில்லாமலும் முகத்தில் குங்குமம் இல்லாமலும் இருந்தார்கள்.

''நாட்டின் வறுமையால் மக்கள் இனம்பார்த்துக் கொள்ளையடிக்கிறார்கள். தமிழ்ப் பெண்கள் உயிருக்கும் மானத்துக்கும் பயந்து தாலியைக் கழட்டிவிட்டுக் குங்குமம் வைத்துத் தங்களைக் காட்டிக் கொடுக்காமல், சீவிக்கிறார்கள்.'' மைத்துனர் முணுமுணுத்தார்.



பல நாட்டு நாகரீகமும் படர்ந்த லண்டன் தெருக்கள் ஞாபகம் வந்தன.

போன நாடுகளில் தமிழர் தமிழராகவே இருக்கப் பிறந்த நாட்டில் பிறத்தியாராக நடக்கவேண்டிவந்த தலை எழுத்தா தமிழருடையது?

பரமநாதன் தமக்கையைப் பார்த்தான்.

பட்டுக் குழைத்த கையுடன் கழுத்தில் தாலியும் முகத்தில் குங்குமமுமாய் இலட்சுமி போலத் தெரிந்த தமக்கை இப்போது ரக்ஸியில் ஏறும்போது,

வெறும் முகத்துடன் வெறும் கழுத்துடன்......

மனித உரிமை எங்கே இருக்கிறது?

இரண்டு வருடங்களுக்கு முன் லண்டன் டெலிவிசனும் பத்திரிகைகளும் இலங்கையில் நடந்த இனக் கலவரத்தை அரையும் குறையுமாக அறிவித்தபோது, யாரோ அன்னியன்போல் பார்த்திருந்ததற்கும், இப்போது அதன் பலன்களை நேருக்கு நேர் கண்டபோது மனம் துடிப்பதற்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தான்.

''வீடு எரியாமல் இருந்ததே பெரிய புண்ணியம். தமிழர்களின் வீட்டை எரித்தார்கள். எரிக்காத விடுகளில் புத்த பிக்குமார் சிங்களவரைக் கொண்டு போய்க் குடியேற்றினார்கள். அதற்கு மக்களால் மக்களுக்காக மக்களே தேர்ந்தெடுத்த அரசாங்கத்தின் 'ஆமி' உதவி செய்தது.''

மைத்துனர் வேதனையுடன் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டா லென்ன' என்ற மனப்பான்மை கொண்ட மைத்துனர் போன்ற ஆட்களே இப்படி மனம் உடைந்து கதைப்பதாய் இருந்தால் நடந்த கலவரம் எப்படிப் பயங்கரமானதாய் இருந்திருக்க வேண்டும்?

ஐம்பத்தி எட்டாம் ஆண்டுக் கலவரத்தில் அரைகுறை மூட்டைகளுடன் கப்பலில் யாழ்ப்பாணம் ஓடியது கனவு போல் இருக்கிறது.

பயங்கரம்! பயங்கரம்! இலங்கையில் தமிழனாய்ப் பிறந்ததே பயங்கரம். தன்னைப் பாதுகாக்கும் தலைவனே தடியெடுத்தடிக்க உதவி செய்வது.

''தமிழர்களுக்கு எவ்வளவு கொடுமையும் கேவலமும் கொலையும் செய்ய முடியுமோ அதெல்லாம் செய்தார்கள் தம்பி.''

ரக்ஸிக்காரன் சம்பாஷணையில் கலந்து கொண்டான். பேச்சிலிருந்து தெரிந்தது அவன் முஸ்லீம் என்று.

''என்னய்யா லண்டனிலிருந்தா வாறீங்க?'' ரக்ஸிக்காரன் திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

பரமநாதன் தலையாட்டினான்.

''என்ன பேசிக்கிறுங்க அங்க இருக்கிற தமிழர்கள்? காசு பணம் பெரிசுன்னு போன சனங்க தங்கடை தாய் சகோதரம் படுகிற கேவலம் கேள்விப்பட்டு, என்ன பண்ணுறுங்க?

பரமநாதன் உணர்ச்சி பொங்கும் அந்த ஏழை ரக்ஸிக்காரனின் பேச்சில் நிலைகுலைந்து போய் இருந்தான்.

லண்டனில், நியூயோர்க்கில், பரிசில் வாழ்பவர்கள் என்ன நினைக்கிறுர்கள்? எப்படி நடந்து கொள்கிறுர்கள்?



ஒரு வசனத்தில் மறுமொழி சொல்லக்கூடிய விடயங்களாகத் தெரியவில்லை அவை?

அவன் நேரில் கலந்து கொள்ளாவிட்டாலும் நடக்கும் பலவிடயங்களைப் பற்றிச் சினேகிதர் மூலம் கேள்விப்பட்டிருக்கிறுன்.

தாய் நாட்டில் நடக்கும் கோர நிகழ்ச்சிகளின் எதிரொலியால் எதையாவது செய்ய வேண்டும் என்ற உந்தலில், எதையெதைப் பேசிக்கொண்டிருக்கிறுர்கள் என்று தெரியாமல் இல்லை.

பண ஆசையால் சொந்த நாட்டை விட்டு ஓடிய தங்களைப் போன்றவர்கள், தாய்நாட்டில் தமிழர்படும் பிரச்சினைகளுக்கு வழிசொல்ல எந்தத் தகுதியும் கொண்டவர்களல்ல என்பது, அவனது மறைமுகமான அபிப்பிராயம்.

கோட்டைப் புகையிரத நிலையத்தில் கார் வந்து நின்றது. தன்னுடன் விமானத்தில் வந்த வெள்ளையரில் சிலர் கண்டிக்குப் போவதற்காகப் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டான்.

எலிஸபெத் பேக்கரின் ஞாபகம் வந்தது. பிரிட்டிஷ் ஹைகொமிஷனில் வேலைசெய்யும் சினேகிதியுடன் இலங்கையைச் சுற்றிப் பார்த்துவிட்டு; மூன்று கிழமைகளுக்குப் பின் இந்தியா செல்வது பற்றிச் சொன்னது ஞாபகம் வந்தது.

குறு குறுவென்ற அவளது குழந்தைத்தனம், கள்ளம் கபடமற்ற வார்த்தைகள் எப்படிச் சிக்கல்களைக் கொண்டு வரும் என்று யோசித்துப் பார்த்தான்.

அவளின் இலங்கையைப் பற்றிய அபிப்பிராயத்தை இன்னெருதரம் சந்திக்க நேர்ந்தால், கேட்கும்போது எவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவு சுவாரசியமாய் இருக்கும் என்று நினைத்துப் பார்த் தான். நாகரிகத்தின் தலைநகரிலேயே பத்து வருடம் சீவித்த அவனே அவளின் கபடமற்றதனத்தாலும் கவர்ச்சியான பாவத்தாலும் சலனப்பட்ட போது இங்கிருக்கும் வாலிபர் கள் எப்படி யோசிக்கப் போகிறார்கள் அவளின் அழகைக் கண்டதும்? பழகும் விதத்தைப் பார்த்ததும்?

இரண்டு மூன்று நாளாக இருந்த களைப்பும் நித்திரை யின்மையும் இலங்கையில் கால்வைத்ததுமே மறைந்துவிட்ட உணர்ச்சி.

நித்திரையிலிருந்து விழித்த உணர்ச்சி. திரும்பிய இட மெல்லாம் ஏழ்மையும் இல்லாமையும் என்றாலும் இது என் தாய்நாடு என்ற மகிழ்ச்சி. லண்டன் தெருக்களில் திரும் பிய இடமெல்லாம் செல்வத்தின் பூரிப்பு. அதன் எதிர்மா றான காட்சிகள் இங்கு.

இருப்பதைக் கொண்டு திருப்திப்பட்ட அந்த முகங்க ளைப் பார்க்க, இனமறியாத சாந்தி கிடைத்தது.

'மரியனைக் கூட்டி வந்திருக்க வேண்டும். மீரா எவ்வ ளவு சந்தோஷப் பட்டிருப்பாள்?'

பெரியக்கா சொன்னாள் தான் குடும்பத்தைக் கூட்டி வருவேன் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்ததாக. நினைக்க வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருக்கிறது. "சாதி மதமற்று ஆங்கிலேயப் பெண்ணைச் செய்துகொண் டதால் உன்னிடமுள்ள எல்லாத் தொடர்புகளையும் அறுத் துக் கொள்கிறேன் என்று தகப்பன் எழுதும்போது, பெரி யக்கா, மைத்துனர் என்ன சொல்லியிருப்பார்கள்?'

தகப்பனுக்குப் பயந்து எட்டு வருடம் எழுதாமல் இருந் தவர்கள்.



விநோதம் என்னவென்றால் தகப்பனின் கோபமான கடிதம் கிடைத்தது பற்றி எந்தக் கவலையும் காட்டிக் கொள் ளாமல் வழக்கம்போல் வீட்டுச்குப் பணம் அனுப்பியபோது, பணம் திரும்பி வரவில்லை லண்டனுக்கு.

தமிழர்களுக்கு மகன் இருப்பது இன்சூரன்ஸ் பொலிஸி இருப்பதற்குச் சமமா?

ட்றெயின் ஓடிக்கொண்டிருந்தது. பார்வை பாய்ந்து மறையும் காட்சிகளில் படிந்திருந்தது.

உலகத்தின் ஒரு கோடியிலிருந்து அடுத்த கோடி: பதி மூலு மணித்தியால இடைவெளிப் பிரயாண தூரத்தில் எத்தனை மர்மமான இயற்கையின் மாற்றங்கள்?

பனிகொட்டி சேறு வழியும் லண்டன் தெருக்கள். தூங்கி வழியும் உயர்ந்த கட்டடங்கள். இப்போது பார்க்கும் கொத்தான குலைகள் தொங்கும் தென்னை மரங்களையும் பச்சைப் பசேலென வயல் வெளிகளையும் பார்க்க விசித் திரமாக யோசிக்கப்பண்ணியது.

பெரியக்கா தம்பியை அடிக்கடி திரும்பிப் பார்த்தா. அவனின் நினைவு மைல்களுக்கப்பால் ஓடிக்கொண்டிருக்கிறது என்று தெரிந்தது.

ஜன்னலுக்கருகில் இடம் பிடிக்கக் கஷ்டப்பட்டவர்க ளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. வாழ்க்கையில் ஒரு அற்பமான காரியத்துக்கு எப்படி அடிபடுகிறார்கள்? சிங்கள வர்களுக்குத் தமிழர் பெயரைச் சொல்லித் தமிழர்களுக்குச் சிங்களவர்களின் பெயரைச் சொல்லி நடக்கும் பித்தலாட் டங்களையுணராமல் ஆட்டுக் கூட்டம்போல் அள்ளுப்பட்டுப் போய்க்கொண்டிருப்பவர்கள், ஒரு சில மணித்தியாலம் சொகு சாக இருப்பதற்காக எவ்வளவு நாகரிகமற்ற முறையில் நடந்துகொள்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"லண்டனில் இப்போதென்ன ஸ்னோ பெய்யுமா?" மருமகள் கேட்டாள், சிந்தனையிலிருந்து விடுபட்டு மருமகளைப் பார்த்தான். மத்தியான வெயில் ஜன்னலால் வந்து முகத்தில் விழ சீதா கண்களைக் குறுக்கிக்கொண்டு மாமாவைப் பார்த்தாள்.

குண்டு மல்லிகைகளை ஞாபகப் படுத்தின அவள் கண்கள். பதினைந்து வருட இளமை முகத்தில் தெரிந்தது.

மாமா தன்னை உற்றுப் பார்ப்பதைப் பார்க்க அவளுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. சின்னக் குழந்தையாக இருக்கும்போது இவளுக்குச் சாப்பாடு பிடிக்காது. பெரியக்கா கண்ணீர் வராத குறையாக அழுது கத்திச் சாப்பாடு கொடுப்பா. அப்படிப் படாதபாடு படுத்திய வாலா இப்படி வாலைக்குமரியாக இருக்கிறாள்?

ட்றெயின் பொல்காவலையில் நின்றது. ஜன்னலால் எட்டிப் பார்த்தான். விழுந்தடித்து ஓடிவந்து ஏறிக்கொண்டிருந்தார்கள்.

பக்கத்துப் பெட்டியில் தாவி ஏறிய இளைஞன் ஒருவன் ஏறும்போது இந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தான். யாரோ தெரிந்த முகம்போல் இருந்தது.

தாடியும் மீசையுமாக இருந்ததால் யாரென்று உடனடியாக இவனால் அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது. யாராயிருக்கலாம் என்று மண்டையைப் போட்டு உருட்டிக் கொண்டான்.

# 4

யாழ்தேவி வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது.

ட்றெயின் ஓட்டத்தில் தூங்கிப்போய்விட்டான் பரமநாதன். தமக்கை தட்டி எழுப்பும்வரை அவன் நினைவின்றித் தூங்கிவிட்டான் கிட்டத்தட்ட இருளப்போகிற நேரம் கண்ணைக் கசக்கிக்கொண்டு எழுந்தான். கனவும் நினைவுமான குழப்பம்.

யாப்பாணத்துக் காற்று முகத்தில் பட்டு நிதானத்துக்கு வந்தது புத்தி. எங்கே மரியன் எங்கே மகள் மீரா என்று கனவுலகில் மனம் பிதற்றுவது போல் இருந்தது. அடையாளமில்லாத நிழலாய் எலிஸபெத்தின் முகம் தடுமாறியது நினைவில்.

நான் லண்டனில் இல்லை! மொஸ்கோவில் இல்லை! யாழ்ப்பாணத்தில் நிற்கிறேன். தனக்குத் தானே சொல்லிக் கொள்ள வேண்டும்போல் இருந்தது.

மூட்டை முடிச்சுக்களுடன் வெளியே மக்கள் போய்க் கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹலோ!" குரல் கேட்டுத் திரும்பினான் பரமநாதன். பொல்காவலையில் தாடியுடன் கண்ட இளைஞன் முன்னால் நின்றான்.

முகத்தில் அறிவுக்களையும், தீட்சண்யமும். அவன் இன்னும் மாறவில்லை; தாடிமீசையைத் தவிர.

சத்தியமூர்த்தி!

பரமநாதனுக்கு வாய் வரவில்லை.

சத்தியமூர்த்தி பரமநாதனைப் பார்த்துச் சிரித்தான்.

நீ மறந்தாலும், மறந்ததாகப் பாவனை செய்தாலும் நான் மறக்கவில்லை என்ற சிரிப்பு.

"யாரோ தெரிந்த முகம் என்று யோசித்தேன்." சத்தியமூர்த்தி பரமநாதன் சொன்னதைக் கேட்டுத் தலையாட்டினான்.

பரமநாதன் தமிழ் கதைப்பதைப் பார்த்து ஆச்சரியத்துடன் கண்களை விரித்தான் சத்தியமூர்த்தி.

"நீர் டமில்தான் கதைப்பீர் என்று நினைத்தேன்!" சத்தியமூர்த்தியின் நையாண்டிக் குரல் அப்படியே இருந்தது.

பெரியக்கா சாமான்களைக் காரில் வைத்துவிட்டுத் தம்பியிடம் வந்தாள். மறையும் வெளிச்சத்தில் சத்தியமூர்த்தியின் முகத்தைக் கண்டதும் "அடே சத்தியன்!" என்றாள் பரமநாதன் லண்டனுக்குப் போனதால் சத்தியமூர்த்தியைக் காணவில்லை. அக்கா கல்யாணம் முடித்து, குடித்தனம் பேணபின் அதிகம் அவனைக் காணவில்லை.

ஒரு காலத்தில் ஒன்றாய் விளையாடியவர்கள். வெள்ளவத்தைக் கடற்கரையில் நண்டு பொறுக்கி விளையாடியது இறந்தகால நிகழ்ச்சியாய்ப் போய்விட்டது.



"இப்பதான் வாறீர் போல கிடக்கு?" சத்தியமூர்த்தி சொன்னான்; பரமநாதன் தலையாட்டினான்.

"அப்பாவுக்குச் சுகமில்லை. கொஞ்சம் சீரியஸ்......" அக்கா இழுத்தாள்.

"ஓ ஐயாம் சொறி" சத்தியமூர்த்தியின் முகபாவம் மாறியது.

"ஆஸ்பத்திரியில் இப்ப விடுவினமோ தெரியல்ல." அக்கா மணிக்கூட்டைத் திருப்பிப் பார்த்தபடி சொன்னா.

"கொழும்பில்தானே நிற்பீர்?" சத்தியமூர்த்தி பெட்டியைத் தூக்கிக் கொண்டு கேட்டான்.

"அப்பாவின் உடம்பு நிலையைப் பொறுத்தது." பரமநாதன் சொன்னான்.

குழந்தைகள் காருக்குள் இருந்து பொறுமையின்றித் தவிப்பது முகத்தில் தெரிந்தது.

"நான் இரண்டு மூன்று கிழமை யாழ்ப்பாணத்தில் நிற்பன், வந்து பார்க்கிறன்."

சத்தியமூர்த்தி கை காட்டிவிட்டு நடந்தான். நடந்த போதுதான் தெரிந்தது காலை நொண்டி நடப்பது.

"எழிய சிங்களவன்கள் சத்தியமூர்த்தியின்ர குடும்பத்தை உயிரோடு எரிச்சுப் போட்டான்கள்." அக்கா பெருமூச்சுடன் சொல்லிவிட்டு காரில் ஏறி உட்கார்ந்தா.

ரக்ஸி ஆஸ்பத்திரியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. யாழ்ப்பாணம் சனநெருக்கத்தால் பொங்கி வழிந்தது. கார்களும் சைக்கிள்களுமாக ஊர்ந்துகொண்டிருந்தன; நடக்க வழியில்லாமல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒவ்வொருச்சாக் கொழும்பில் அடிவிழேக்கையும் ஓடி வருவினம் இனிப் போகமாட்டம் என்று சொல்லிக்கொண்டு. எல்லாம் ஆறுமாதம் ஒரு வருஷத்துக்குத்தான். கொழும்பு ருசிதேடித் திரும்பிப் போவினம்." அக்கா முணுமுணுத்துக்கொண்டு வந்தா.

ரக்ஸி ஆஸ்பத்திரி வாசலில் நுழைந்தது. பார்வையாளர் நேரம் முடியும் வேளை. காவற்காரன் தான்தான் ஆஸ்பத்திரி அதிகாரி மாதிரி அட்காசமாய்க் கத்தினன்.

மனதுக்குள் என்ன நினைக்கிறார்களோ தெரியாது. ஆனல் பணிவாகவும் மரியாதையாகவும் நடக்கும் லண்டன் ஹொஸ்பிட்டல் சிப்பந்திகளின் நடத்தையை நினைத்துக் கொண்டான், பரமநாதன்.

காவல்காரனின் அட்டகாசத்திற்கு ஒரு மாதிரிச் சரிக் கட்டிவிட்டு உள்ளே போனல், நேர்ஸ்மார் அடுத்தபடி. கேட்ட கேள்விக்கு மறுமொழி சொல்லாமல் முகத்தை நெளித்துவிட்டு எத்தனையோ நேர்ஸ் போவதைப் பார்த்துப் பொறுமையிழந்தான் பரமநாதன். வலிமையும், சுசமும் இல்லாத நோயாளிகளைப் பார்க்கும் நேர்ஸஸே கொஞ்சமும் இரக்கம் இன்றித் தலைக்கனத்துடன் நடந்தால், சாதாரண காவற்காரர்கள் இப்படி நடக்கிறார்களே என்பதில் என்ன புதினம் என்று, அக்காவைக் கேட்க நினைத்தான்.

யாழ்ப்பாண வீதிகளில் சுகமான மக்களின் நெருக்கம். ஆஸ்பத்திரியிலோ சுகமற்ற மனிதர்களின் நெருக்கம். நோய் பிணி, புண், நாற்றம். வயிற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது.

இந்த இடத்தில் நோய் மாறுகிறதா நோய் தொற்றுகிறதா? என்று வேறுபடுத்த முடியாத நாற்றம். லண்டன் மாநகரையும் அதன் பளிங்குபோன்ற ஆஸ்பத்திரிக் கட்டடங்களையும் நினைத்துப் பார்த்து வேதனைப்படவில்லை. ஆனல் வருத்தம் வந்தபோதும் வசதியான இடத்தில் படுக்க வசதியற்ற ஏழைகளைக் கண்டபோது அவனுக்குக் கண்ணீர் வருமாற்போல் இருந்தது.



தகப்பன் 'மெடிக்கல் வார்ட்' ஒன்றில் எலும்பும் தோலுமாகப் படுத்திருப்பார் என்று நினைத்துப் பார்த்துக்கொண்டுதான் வந்தான்.

நேர்ஸிடம் கெஞ்சிக் கொஞ்சநேரம் அனுமதி எடுத்துக்கொண்டு வார்ட்டில் நுழைய அவன் முகத்தில் முதற்பட்டது அம்மாதான்.

பத்து வருடங்கள்! அம்மாவின் நரைத்த தலை, குழி விழுந்த கண்கள்!

இவனைக் கண்டதும் அம்மாவின் கண்களிலிருந்து பொல பொலவென்று நீர் கொட்டியது.

பத்துவருடங்களாகப் பேசவேண்டி, சொல்ல வேண்டி, கேட்க வேண்டிய எத்தனையோ நினைவுகள் அவள் நினைவில் குவிந்திருக்கலாம்.

இவனைக் கண்டதும் கைகளைத் தடவினள். அவள் உதடுகள் நடுங்கின. தாய்மையின் பாசம் தடவலிற் தெரிந்தது.

எப்படியடா எங்களைப் பிரிந்து இருந்துவிட்டாய் என்று கேட்க நினைத்திருக்கலாம்.

முந்தானையால் முகத்தைத் துடைத்துவிட்டு மகனைத் தகப்பனின் கட்டிலுக்கு கொண்டு சென்றள்.

"ஸ்ரோக் வந்ததெண்டு சொல்லுகினம்." பெரியக்கா தகப்பனின் நெற்றியில் முத்தாக வழியும் வேர்வையைத் துடைத்தாள்.

தகப்பனின் விழிகள் உணர்ச்சி ஒன்றுமின்றி வெறுமையாகக் குத்திட்டு நின்றன. வாய் ஒரு பக்கம் சரிந்து எச்சில் வழிந்துகொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் திறந்தால் வீட்டை நடுங்கவைத்த தகப்பனா இவர்? ''அப்பா!'' என்றான்.

அவருக்குக் கேட்டதோ?

கேட்குமோ?

அவனுக்குத் தெரியாது. ஆங்கில நாட்டு நாகரிகம், உணர்ச்சிகள் எதையும் அநாவசியமாகக் காட்டிக்கொள்ளாது. அவன் தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டான். அவனது குரலில் அவற்றை எல்லாம் கடந்த பாசம் தொனித்திருக்க வேண்டும்.

இரண்டாம் மூன்றும் முறை இவன் குனிந்து 'அப்பா' என்று சொல்ல, நிலைகுத்தி நின்ற விழிகள் ஒருதரம் மூடி விழித்தன.

'என் குரலை அடையாளம் கண்டுகொண்டு விட்டாரா?'

அவன் குனிந்து சில்லிட்டுப்போய் இருந்த கைகளைப் பிடித்தான்; முகத்தைத் தடவி விட்டான்.

ஒவ்வொரு நிமிடமும் அவரின் இறப்பு நெருங்கிவந்து கொண்டிருப்பது தெரிந்தது.

''உனக்காகத்தான்ரா காத்திருந்தார்.''

தாய் குலுங்கியழுதாள்.

தமக்கை கரண்டியில் தண்ணி ஒருசொட்டைத் தம்பியிடம் கொடுத்துத், தகப்பனின் வாயில் விடச் சொன்னாள்.

வேதனையில் அவன் கைகள் நடுங்கின. ''வீட்டை கொண்டு போனால் என்ன?'' மைத்துனர் கேட்டார்.

எல்லோருக்கும் தெரிந்தது டொக்டர்களால் இனி ஏதும் செய்யமுடியாதென்று.



பரமநாதன் ஸ்ராவ் நேர்ஸ், அல்லது ஸிஸ்டர் யாரிடமாவது கேட்டு வருகிறேன் என்று சொல்லிப் போனான்.

இப்போதுதான் பாஸ்பண்ணி வந்தவராக இருக்கவேண்டும், டியூட்டியில் இருந்த டொக்டர்.

புது ஸ்ரெதஸ்கோப்பை ஸ்ரைலாகச் சுழட்டிக்கொண்டு தெரியாத வருத்தங்களின் பெயரெல்லாவற்றையும் இங்கிலாந்தால் வந்தவனுக்குச் சொல்லப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தார்,

அரை மணித்தியாலம் அவர் புழுகுகளைக் கேட்டபின் அமைதியாகச் சொன்னான்.

''ஹி இஸ் டையிங். வீ லைக் டு ரேக் ஹிம் ஹோம்.''

தேவையான பத்திரங்களில் கையெழுத்து வைத்து விட்டுத் தகப்பனைக் கொண்டுவர நடுச்சாமமாகி விட்டது.

மெல்லிய வெளிச்சத்தில் படலையைத் திறந்த உருவத்தை அடையாளம் தெரியாமல் கூர்ந்து பார்த்தான் பரமநாதன்.

'பானுமதியா இது?'

தகப்பனின் நிலையைக் கண்டதும் பானுமதியும், கௌரியும் ஒவென்று அலறினார்கள்.

முன் அறையில் தகப்பனைப் படுக்க வைத்து எல்லோரும் சூழ்ந்து கொண்டார்கள்.

மூன்று மகள்களும் மகனும் பேரப்பிள்ளைகளும் சுற்றியிருக்க, தாய் அழுதுகொண்டேயிருந்தாள்.

இரவு நடுச்சாமமாகியும் இன்னும் புழுக்கமாய் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனை விட்டு மூன்று இரவுகள் கடந்தும் நல்ல நித்திரை இல்லாதபடியால் பரமநாதனுக்குத் தலை சுற்றிக் கொண்டு வந்தது.

மாமரத்தின் கீழ் பாயைப் போட்டுக்கொண்டு நிமிர்ந்து படுத்தான்.

மெல்லிய காற்று. மாமர இடுக்குகளில், எட்டிப்பார்க்கும் நிலா. முன்னறையில் முனுகியழும் தாய்.

பரிதாபமான இரவாக இருந்தது.

கடந்த மூன்று இரவுகளும் கனவுபோல நினைவில் பட்டது.

லண்டனில் தன் அழகிய வீடு, அருமையான மனைவி, இனிய குழந்தை.

எல்லாமே நம்பமுடியாதவைகளாகவும் தற்போது தன்னைச் சுற்றியிருக்கும் தன் குடும்பம், தாய் தகப்பன், மாமரம், யாழ்ப்பாணத்து நிலா மட்டுந்தான் சாசுவதமானதாகவும் தெரிந்தன.

''சாப்பிட ஏதும் வேணுமா?'' குரலுக்குரியவனை நிமிர்ந்து பார்த்தான்.

பானுமதி; அவனின் கடைசித் தங்கை; எல்லோரையும் தன் பொல்லாத வாயால் ஆட்டிப்படைத்த வால்.

அவன் பேசாமல் தங்கையைப் பார்த்தான். அழுது முகம் வீங்கியிருந்தது அவளுக்கு.

''இப்படி இரு'' என்று கைகாட்டினான்.

அவள் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

'அப்பா என்னைப்பற்றி என்னவெல்லாம் சொன்னார் என்று கேட்க நினைத்தான்.



இனி என்ன பிரயோசனம்?

அவர் கேட்கவா போகிறார் இவனின் மறுமொழிகளை?

''அப்பா பாவம்.'' அவள் கேவிக் கேவியழுதாள்.

பெரியக்கா கொழும்பில் இருக்கிறாள் குடும்பத்துடன்.

கௌரி படிப்பிக்கிறாள் தெல்லிப்பளையில்.

பானுமதிதான் ஒரு வேலையுமில்லாமல் தாய் தகப்பனைப் பார்ப்பவள்.

அவரின் பிரிவு அவளை வாட்டுவது இயற்கை.

''அவருக்கு ஸ்ரோக்; வாதம். இனிக் கை கால் வழங்காது.'' அவன் தேற்றுவதற்காகச் சொன்னான். அவள் விம்மினாள்.

அவனுக்கு என்ன சொல்லித் தேற்றுவது என்று தெரியவில்லை. அவர்கள் விருப்பத்தைக் கேட்டா மரணம் எட்டிப் பார்க்கிறது?

தாயின் அலறல் இருவரையும் திடுக்கிடப் பண்ணியது. எழுந்து ஓடினார்கள்.

கண்கள் நிலைகுத்த, வாய் திறந்திருக்க... தகப்பன் போய் விட்டார்! பரமநாதனின் மனம் நெகிழ்ந்தது.

''உனக்காகத்தான்ரா பார்த்திருந்தார்.'' ஆச்சி ஒருத்தி பரமநாதனைப் பார்த்து ஓலம் வைத்தாள்.

தன்னை வெறுத்து விட்டார் என்று நினைத்த தகப்பனா தான் வரும்வரை காத்திருந்தார்?

மூன்று நாள் அலைச்சலில் தான் வரவா அவர் மரணம் வாசலில் இருந்தது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களால் விளக்க முடியாத — விளங்கிக்கொள்ள முடியாத எத்தனையோ வித்தைகளில் இதுவுமொன்ரு?

உயிரற்ற தகப்பனின் கைகளைப் பிடித்துக் கொண்டான். ஏனே தெரியவில்லை அவன் அழவில்லை.

இறப்பை எதிர்பார்த்தது ஒரு காரணமாக இருக்கலாம். இனி நானும் அழுதால் என் குடும்பத்தைப் பார்ப்பது யார் என்று அடிமனம் சொல்லியிருக்கலாம். கிழவிகள் செத்த மனிதரின் கண்களை மூடி, வாயை மூடிஞர்கள். யாரோ போல் பார்த்துக்கொண்டு நின்ருன்.

தங்கைகள் புரண்டு அழுதார்கள்.

தாய் மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டா. நாற்பது வருட கல்யாண சீவியம். யாரோபோல் பிரிந்து விட்டார் தகப்பன். தாய் ஓலமிட்டு அழுதாள்.

செத்த வீட்டுக்கு வந்தவர்கள் இவனுடன் கதைக்க இவனுக்குப் பதில் சொல்லி அலுத்துவிட்டது. பின்னேரம் ஐந்து மணிக்குப் பிணத்தை எரித்துவிட்டு வந்தார்கள்.

❉ ❉ ❉ ❉

இனி என்ன செய்வது?

இரு தங்கைகளின் எதிர்காலமும் அவன் கையிலா? இனி இரண்டு மூன்று நாட்கள் இப்படித்தான் இருக்கப் போகிறது.

அக்காவும் தாயும் அழுது வடிந்து முடியவிட்டு குடும்பத்தைப் பார்க்கத் தொடங்கி விட்டார்கள் மூன்ரும் நாள் முடிய மைத்துனர் கொழும்புக்குப் போய்விட்டார். தாய்



பொது விடயமாகக் கதைத்தாளே தவிர குடும்பத்து விடயங்களைப்பற்றிக் கதைக்கவில்லை.

அவன் அனுப்பிய பணத்தில் இரண்டு வீடுகள் கட்டியிருக்கிருர்கள். தங்கைகளுக்குத் தேவையான நகைகள் உண்டு. இனி ஏற்ற விலைக்கு மாப்பிள்ளை பார்ப்பதுதான் வேலை முடியுமான கெதியில் ஒழுங்குகள் செய்ய வேண்டும்.

''எப்போது திரும்பிப் போகிருய்? அம்மா இடியப்பம் எடுத்து வைக்கும்போது கேட்டா.''

''ஒரு மாத லீவு, தேவையாஞல் இரண்டு கிழமை கூட்டலாம்'' என்ருன்.

''கௌரிக்கு எழுதிய பெடியனை ஒருதரம் பார்த்துப் போட்டுப் போ.''

பரமநாதனுக்கு எதிர்பாராத விடயமாக இருந்தது கௌரிக்குக் கல்யாணம் எழுதியது. தாயைக் கேள்விக் குறியுடன் நிமிர்ந்து பார்த்தான்.

''இரண்டு கிழமைக்கு முன் நடந்திச்சு. தனக்கு ஏதும் நடக்கும் எண்டுதானே என்னவோ கொப்பர் அவசர அவசரமாக எழுதிப் போட்டார்.''

தாய் சாதாரணமாகச் சொன்னது அவனுக்கு ஆத்திரத்தை மட்டுமல்ல அவமானத்தையும் தந்தது. வீட்டுக்கு மூத்த மகன் என்று விழுந்து விழுந்து உபசரிக்கிருர்கள்.

தன் தந்தைக்கு தான் அனுப்பிய காசில் மாப்பிள்ளை வாங்கும்போது தன்னிடம் ஒரு கதையும் கேட்கவில்லை. எப்படியான இடமாய்ப் பேசியிருப்பார்கள்? ஒரு பேச்சுக்கு என்ருலும் ஒரு வார்த்தையில்லை. ஆத்திரத்தில் வார்த்தைகள் வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனிந்த தலை நிமிராமல் இடியப்பத்தைக் குழைத்துக் கொண்டிருந்தான்.

உடனே பிளேன் எடுத்துத் தன்வீட்டில் குதிக்கவேண் டும்போல் இருந்தது.

யார் வீட்டிலோ இருந்து யாருடைய திருமணத்தையோ கதைப்பதுபோல் தன் தங்கையின் திருமணத்தைக் கதைத் துக் கொண்டிருக்க அவன் தயாராய் இல்லை.

''ஏன் பேசாமல் இருக்கிறாய்?'' தாயின் குரல் பரிதா பமாக ஒலித்தது.

''பேச என்ன இருக்கிறது? நீங்கள்தான் நான் ஒரு பொருட்டும் இல்லையென்று செய்துவிட்டு இருக்கிறீர்களே?''

''தம்பி நாதன், உலகம் தெரியாமல் கதைக்காதை. கௌரிக்குச் செவ்வாய்தோஷம். எத்தனையோ பேச்சுக்கால் வந்தும் சாதகம் சரியில்லாமல் குழம்பிப் போச்சு. இந்தப் பொடியனின் சாதகப் சரிவந்தது. அதோட லண்டனிலிருந்து லீவில் வந்து நிற்கிறபோது விசயத்தை முடிக்கச் சொல்லிக் கேட்டினம்.'' தாய் விளக்கிக் கொண்டிருந்தாள்.

லண்டன் மாப்பிள்ளை!

கௌரி கேட்டாளா லண்டன் மாப்பிள்ளை தேவை என்று?

லண்டனில் உள்ள மாப்பிளையைப் பற்றி தன்னிடம் ஒரு விசாரிப்பு இல்லை.

''பொடியனைப் பற்றி நல்லாத் தெரியுமா?''

அவனின் கேள்வி தாயைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்தி யிருக்க வேண்டும்.



''என்ன விசாரிக்கக் கிடக்கு? நல்ல குடும்பம், தாய் தகப்பனை உனது மச்சானுக்கு நல்லாத் தெரியும். பெடியன் நல்ல வேலையில் இருக்கிறதென்று கேள்வி.''

தாய் விட்டுக்கொடுக்காமல் பேசியது அவனுக்கு இன் னும் எரிச்சலைத் தூண்டியது.

''ஏன் எனக்குச் சொல்லவில்லை?'' குரலில் எரிச்சலைக் காட்டாமல் அவனால் இந்தக் கேள்வியைக் கேட்க முடிய வில்லை.

''பெரியக்கா சொல்லியிருப்பா, பானுமதி எழுதியிருப் பாள் என்று நினைச்சன்.'' தாய் கையைப் பிசைந்து கொண் டாள்; மகனின் கோபம் நியாயம் என்று பட்டிருக்க வேண் டும்.

பெரியக்காவைக் கேட்டால் பானுமதி சொல்லவில்லையா என்று ஆச்சரியப்படலாம்.

இனி என்ன?

தகப்பன் இறந்துவிட்டார். ஒரு தங்கைக்குக் கல்யாண மும் சட்டப்படி முடிந்துவிட்டது.

லண்டனுக்குத் திரும்பிப் போகலாம்.

பானுமதி சம்பல் கொண்டுவந்தாள். தமையனுடன் இன்னும் மனம் விட்டுப் பழகவில்லை. ஆனாலும் தன் செல் லத் தங்கச்சியைச் சீண்டிக்கொண்டிருந்தான் பரமநாதன், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம்.

''உனக்கின்னும் கல்யாணம் எழுதப்படவில்லையா? அல் லது நீயாகப் பார்த்து எழுதிவிட்டாயா? அப்படி என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் எனக்குச் சந்தோசமாக இருக்கும். என்ன விலை கொடுத்தாய் மாப்பிள்ளைக்கு?''

அம்மாவுக்குக் கோபம் வந்திருக்க வேண்டும். சாப்பாட்டு மேசையைவிட்டுப் போய்விட்டாள். பானுமதி சம்பலைப் போட்டபடி தமையனைப் பார்த்தாள். முகத்தில் தமையன் கேட்ட கேள்விக்குக் குறும்பாகப் பதில் சொல்லும் தோற்றம் இல்லை. ஏதோ யோசிப்பது தெரிந்தது.

''என்ன யோசிக்கிறாய்?''

பரமநாதன் சாதாரணமாகக் கேட்பதுபோல் கேட்டான்.

''யாரையும் பார்த்தால் செய்து வைப்பீர்களா?''

அவனுக்குத் துணுக்கென்றது, அவள் கேட்ட விதம். யாழ்ப்பாணத்துப் பெட்டைகள் பொடியன் பார்ப்பதைப் பகிரங்கமாகக் கதைப்பார்கள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

தங்கையை ஆராயும் கண்களுடன் நோட்டம் விட்டான். 'பகிடி விடுகிறாளா என்னிடம்?'

பெரியக்காவும் குழந்தைகளும் பப்பாசி மரத்துடன் சண்டைபிடித்துப் பழம் பிடுங்கிக் கொண்டிருந்தார்கள். பெரிய கூச்சலாக இருந்தது. அம்மா கிணற்றடிக்குப் போய்க் கொண்டிருந்தா. நடையில் தெரிந்தது மகனில் உள்ள கோபம்.

கௌரி ஆட்டுக்குக் குழை போட்டுக்கொண்டிருந்தாள். இனி என்ன கவலை, லண்டனுக்குப் போகிறாள்!

சாப்பாட்டு மேசையில் பரமநாதனையும் பானுமதியையும் தவிர யாரும் இல்லை.



''என்ன பகிடி விடுறியா?'' பரமநாதன் தன் ஆச்சரியத்தைக் காட்டிக்கொள்ளாமல் கேட்டான்.

''இந்த விஷயங்களில் எல்லாம் எங்கட பொம்புளைகள் பகிடி விடுவினமா?'' பானுமதி தமையனுக்கு முன்னால் உட்கார்ந்தாள் கேள்வி கேட்டபடி.

காலைச் சூரியனின் மெல்லிய ஒளியில் முகம் கவர்ச்சியாய்த் தெரிந்தது. தங்கச்சி பகிடி சொல்லவில்லை என்று புரிந்தது. தன்னிடம் உதவிக்கு வருகிறாள் என்று நேரடியாகத் தெரிந்தது. பானுமதிக்குக் காதலிக்கவும் தெரிந்துவிட்டது. தான் வராவிட்டால் என்ன செய்திருப்பாள்? ஓடியிருப்பாளா, காதலித்தவனுடன்? வீட்டில் எவ்வளவு தெரியும்?

''யார் அந்த அபாக்கியசாலி?'' தமையன் குரலில் குறும்பு. அவள் செய்த சம்பலை ருசித்தபடி கேட்டான்.

அவள் கைகளைப் பிசைந்து கொண்டாள்.

''கண்ணகி பரம்பரை, பெயர் சொல்ல மாட்டாயாக்கும், மாதவியிடம் பறிகொடுக்கப் போகிறாய்!'' தங்கையை ஆழம் விட்டான் தமையன்.

''உங்களுக்குத் தெரிந்த ஆள்தான்.'' பானுமதி மெல்லமாக, தலைநிமிராமல் சொன்னாள்.

''என்ன பானுமதி எனக்குத் தெரிந்த ஆள் என்கிறாய்! பத்து வருஷத்தில் பார்த்த முகங்களை மறந்து விட்டன. லண்டனில் பக்கத்து வீட்டுக்காரனையே தெரியாது.'' அவள் சிரிப்பாள் என்று நினைத்தான். அவள் தலை நிமிரக்கூட இல்லை.

''சொல்லும் ஆள் ஆரெண்டு.'' அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது, தங்கையிடம இந்த விடயத்தை இவ்வளவு சாதாரணமாகக் கதைப்பது. கடந்த பத்து வருடமாக இலங்கையில் இருந்திருந்தால் ஒருவேளை கதைக்க முடியாமல் விட்டிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவள் சொன்ன பெயர் அவன் தொண்டையில் இடியப்பத்தை அடைக்கப் பண்ணியது. அவனுடைய பெயர் என்ன என்று தமையன் திருப்பிக் கேட்க அவள்,

''உங்கள் கார்த்திகாவின் தம்பி சபேசன்'' என்றாள். இருவிதத் தாக்கல்.

ஒன்று, கார்த்திகாவின் தம்பி என்பதால்.

மற்றது, உங்கள் கார்த்திகாவின் தம்பி என்று சொன்ன படியால்.

தமையன் வாய் திறக்கவில்லை. மனம் என்னவோ செய்து கொண்டிருந்தது.

'எனது கார்த்திகா!'

''இப்படி எத்தனையோ பேர் நினைத்துக்கொண்டிருக்கிறார்களா இன்னும்?''

'நடக்கக்கூடிய காரியமா பானுமதி நினைப்பது? சபேசன் என்ன சாதி என்று இவளுக்குத் தெரியுமா?'

''பானுமதி!''

தமையன் ஏதோ சொல்லப்போகிறான் என்று சாடையாக அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

அவளை அப்படிப் பார்க்கத் தர்மசங்கடமாக இருந்தது. அவளின் கண்களை நேருக்குப் பார்க்க ஏனோ முடியாத காரியமாக இருந்தது.

வெளியில் முட்டை போட்ட கோழி கத்திக்கொண்டிருந்தது.

''அவன் என்ன சாதி தெரியுமா?'' மெல்லக் கேட்டான் பரமநாதன்.



''அதுதான் கார்த்திகாவை நடுத்தெருவில் விட்டீர்களாக்கும்!''

பானுமதியால் இப்படிப் பேசமுடியும் என்று அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை, எல்லாம் சபேசனாலா வளர்ந்திருக்கிறது.

''பானுமதி குழந்தைத்தனமாகப் பேசாதே. என் தனிப்பட்ட விடயங்களை உணர்ந்துகொள்ள முடியாதவர்களுக்கு நான் விளங்கப்படுத்திக் கொண்டிருக்கப் போவதில்லை.''

அக்காவின் குழந்தைகள் பப்பாசிப் பழத்துடன் வந்து சேர்ந்தார்கள். அம்மா தேத்தண்ணி போட்டுக்கொண்டு வந்தாள். பரமநாதனின் முகம் இன்னும் கோபத்துடன் இருக்கும் என்று எதிர்பார்த்து வந்தவள் அவனின் மௌனத்துக்குக் காரணம் தெரியாமல் திகைத்தாள். 'கோபத்தில் இருந்தவனுக்கு என்ன வந்துவிட்டது?'

விடிந்து பத்து மணிக்கிடையில் உச்சி கொதிக்கும் வெயில். அவன் வெளிக்கிட்டான் மௌனமாய்.

யாழ்ப்பாணம் பெரியகடைக்கு வெளிக்கிட்டான் பரமநாதன். வீட்டார் ஒருவரை ஒருவர் பார்த்தனர் விளங்காமல். யாழ்ப்பாணத்தில் அவனுக்குத் தெரிந்த நண்பர்கள் அதிகமில்லை. ஓரளவு நண்பர்களாக இருந்தவர்கள் ஒதுங்கிப் பழகினார்கள். 'வாடா பரமன்' என்று பழகியவர்கள், 'எப்படி இருக்கிறீர்கள்?' என்று பன்மையில் கதைத்தார்கள்.

நெருக்கமாக மனம்விட்டுக் கதைக்க யாரும் இல்லாதது போல் இருந்தது. யாழ்தேவியில் கண்ட சத்தியமூர்த்தியின் ஞாபகம் வந்தது.

'திருநெல்வேலியில் இருப்பானா அல்லது திரும்பிப்போய் இருப்பானா? கொழும்புக்குப்போய் இருப்பான்.' கச்சேரியடியிலிருந்து யாழ்ப்பாணம் போய்ச் சேர்வதற்கிடையில் களைத்து விட்டான், பஸ்ஸில் இடிபட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன் முழுக்கக்காரோடிப் பழகி பஸ்ஸுக்குக் காத்து நிற்கவே, பொறுமையின்றித் தவித்தான் பரமநாதன்.

பெரியகடை பொங்கி வழிந்தது நெருக்கமான கட்டடங்களாலும் மக்களாலும். நன்றாகத் திட்டமிட்டுக் கட்டப்படாததால், நகரம் நாறிக்கொண்டிருந்தது சாக்கடைகளால்.

திரும்பிய பக்கமெல்லாம் தியேட்டர்கள்; கண்ணீர் வடிக்கும் கதாநாயகன்கள்; காதலில் பாடும் காதலியர். திரும்பிய இடமெல்லாம் 'போஸ்டர்ஸ்.'

லண்டனுக்குப் போய் ஒரு தமிழ்ப் படமும் பாக்கவில்லை. இதுவரையும். டெலிவிஷனில் சத்தியஜித்ரேயின் ஒன்றிரண்டு படங்கள் பார்த்ததுண்டு.

எப்படி இருக்கிறது தமிழ்ப்பட உலகம் என்று பார்க்க வேண்டும்போல் இருந்தது. ஒரு காலத்தில் சறத்துடன் 'செக்கண்ட் ஷோ' வுக்குப் போய்ச் சினேகிதர்களுடன் 'கலரி' யில் இருந்து படம் பார்த்தது ஞாபகம் வந்தது.

அந்த நண்பர்கள் எல்லாம் வெளிநாட்டுக்கு ஓடிப்போய் விடவில்லையே! யாழ்ப்பாணக் குடாநாட்டில்தான், எங்கெல்லாமோ இருப்பார்கள். நேரம் கிடைத்தால் போகவேண்டும். பூபாலசிங்கம் புத்தக நிலையத்தில் கொஞ்சப் புத்தகங்கள் வாங்கிக் கொண்டு நிமிர்ந்தவன் மோதாத குறையாக முட்டிக்கொண்டு நிமிர்ந்தான்.

சத்தியமூர்த்தி நின்றான் சிரித்தபடி!

# 5

வழக்கமான சிரிப்பு. வழக்கமான தாடி. 'தேடிய தெய்வம் வழியில் வந்தது.' அப்படித்தான் நினைத்தான் பரமநாதன்.

''என்ன இலக்கிய வேட்டையோ நடக்கிறது?''

சத்தியமூர்த்தியின் கண்களையும் முகத்தையும் போல் அவன் வார்த்தைகளும் எப்போதும் மலர்ந்திருக்கும்.

''ஏதும் சிபாரிசு செய்யும் நல்ல தமிழ் நாவலாக.'' பரமநாதன் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தான்.

''நல்ல தமிழ் நாவல்!'' கண்களை வியப்புக்குறியுடன் உயர்த்திக்கொண்டு யோசனை செய்யுமாப்போல் வாயில் கை வைத்தான் சத்தியமூர்த்தி.

''என்ன காணும் இலங்கையை விட்டு ஒரு நிமிடம் பிரியாமல் இருக்கிறீர். தற்காலத் தமிழ் இலக்கியப்புலி போல ஆட்களான உங்களுக்குத் தெரியாவிட்டால், யாரிடம் கேட்பது?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பனின் பெரிய கேள்வியால் அவன் ஒன்றும் அசந்து விடவில்லை.

''என்ன இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் இன்ரறஸ்ற்? காண்டேகர்களும் கல்கிகளும் பிறந்திருப்பார்கள் என்று நினைக்கிறாய் பத்து வருடங்களில்?''

சத்தியமூர்த்தி திருப்பித் தாக்கினான். எப்போதும் இருவரும் இலக்கியத்தில் ஈடுபாடு உள்ளவர்கள். முன்பு எத்தனையோ இரவுகள் நேரம் போவது தெரியாமல் இலக்கியச் சர்ச்சைகள் செய்திருக்கிறார்கள்.

மத்தியானச் சூடு மண்டையை உடைத்தது. இருவரும் 'சுபாஸ் கபே'க்குள் போனார்கள். பரமநாதனுக்குப் பழைய, பொக்கட்டைத் தடவிய காலம் ஞாபகம் வந்தது.

இப்போது நூறுரூபா நோட்டுகளுக்குச் சில்லறையில்லை.

ஒரு அக்கறையுமில்லாமல் நூறுரூபா நோட்டுக்களை மேசையில் போட்டுச் சில்லறை தேடும் நண்பனை வியப்பைக் காட்டிக் கொள்ளாமல் பார்த்தான், சத்தியனின் பார்வையின் கருத்து பரமநாதனை உலுக்கியிருக்க வேண்டும்.

''நாங்கள் ஒன்றும் லண்டனில் பணத்தில் விழுந்து எழும்பவில்லை. இங்கே நூறு ரூபா எங்களுக்கு இரண்டரைப் பவுண்ஸ்; இரண்டரை ரூபா மாதிரி. அதனால் ஒரு நிமிடத்தில் நூறுரூபா போவது பெரிய காசாகத் தெரியவில்லை. ஏனென்றால் லண்டனில் ஒரு கோழி வாங்க உதவும் காசு இரண்டரைப் பவுண்ஸ்.''

நண்பனின் விளக்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்து பெருமூச்சு விட்டான் சத்தியமூர்த்தி.

''என்ன காணும் பெருமூச்சு விடுகிறீர்?'' 'பாஷன் புறுட் ஜூஸ்' பத்துவருடத்துக்கு முன் இருந்த ருசியாக இல்லை.



''கோழிக்கறிக்கு ஆசைப்பட்டுத் தமிழர்கள் ஓடுவதாற்தான், யாழ்ப்பாணத்தில் ஆண்களின் தொகையே குறைந்து விட்டது.''

வேடிக்கையாகச் சொன்னான் சத்தியன். அவன் உள்ளம் வேலையற்ற ஆயிரக்கணக்கான தமிழர்களின் துடிப்பையுணர்ந்தது.

யூனிவேர்சிற்றியால் வெளிக்கிட்டபின் உருப்படியான வேலை கிடைத்திருந்தால் பரமநாதன் போயிருப்பானா?

''எப்படி இருக்கிறீர்?'' பரமநாதன் கேட்டான்.

''எப்படி என்றால்......?'' சத்தியன் கேள்விக்குறியுடன் நண்பனைப் பார்த்தான்.

''எப்படி என்றால்...... குடும்பம்...... குழந்தைகள்?''

பரமநாதனை விரக்தியுடன் பார்த்தான் சத்தியன்.

''வாழ்க்கை ஒரு கொண்டாட்டம் வசதி படைத்தவர்களுக்கு. வாழ்க்கை ஒரு திண்டாட்டம் எங்களைப் போன்ற தமிழர்களுக்கு. கல்யாணம் ஒரு 'லக்ஸறி' வசதி படைக்காதவனுக்கு. கல்யாணம் இல்லை என்றால் வாழ்வு இல்லை என்று ஏன் யோசிக்கிறாய்?''

சத்தியனின் கேள்விகள் உடனடியாகப் பதில் சொல்லக் கூடியவைகளாக இருப்பதில்லை சில வேளைகளில்.

கொழும்பில் இந்துக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். இருபது வருடங்களுக்கு முன்னால் இருக்குமா? கொழும்பு இனக்கலவரத்துடன் பரமநாதன் குடும்பம் யாழ்ப்பாணத்தோடு நிலைக்க, சத்தியன் ஆட்கள் திரும்பவும் கொழும்புக்குப் போய்......

'அக்கா சொன்னாள் எழுபத்தி ஏழாம் ஆண்டுக் கலவரத்தில் சத்தியன் குடும்பம் பலத்த சேதமடைந்ததாக.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியன் எங்கே வேலை செய்கிறான், என்ன வேலை செய்கிறான், எப்படிச் சீவிக்கிறான்? அவர்களின் மற்றச் சினேகிதர்களுக்கெல்லாம் என்ன நடந்தது என்றெல்லாம் ஆயிரம் கேள்விகள், பரமநாதனின் மனத்தில் ஓடின.

பரமநாதனின் யூனிவேர்சிற்றி நண்பர்களை அவனுக்கு அதிகம் தெரியாது. ஆனாலும் கொழும்பில் அரசியல் விடயங்களில் ஒன்றாய்த் திரிந்தவர்களைத் தெரியும். வியட்நாம் யுத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்திய கூட்டத்தில், சத்தியன் தலைமை தாங்கினான்.

அந்த அரசியல் வேட்கை எங்கே இப்போது?

''எங்கே வேலை செய்கிறீர்?'' பரமநாதன் கேட்டான்.

''கொழும்பிற்தான்.'' சத்தியமூர்த்தி சொன்னான்.

''அம்மா, அப்பா......'' பரமநாதன் முடிக்கவில்லை.

''பரலோகம் போய் விட்டார்கள் தமிழனாய்ப் பிறந்த குற்றத்தால். வீட்டோடு எரித்தார்கள் தெகிவளையில். நான் எப்படி முறிந்தகாலுடன் தப்பினேனோ தெரியாது!''

மேலே கேட்க ஒன்றுமில்லை. கேட்கவும் தயாராயில்லை.

தாய் நாடு, தமிழர் நிலை, நினைக்க முடியாத பயங்கர வாழ்வுக்கு ஆளாகிப் பரிதவிக்கும் தமிழர்களுக்கு எப்போது விடிவு கிடைக்கும்?

''எல்லாம் எங்கள் தலைவர்களின் பிழை. சத்தியாக்கிரகம் பண்ணி தமிழ் இனத்தையே அழியப்பண்ணி விட்டார்கள்.'' பரமநாதன் இப்படிச் சொல்ல, சத்தியன் அக்கம் பக்கம் பார்த்தான். எங்கே யார் இருந்து என்ன கேட்டு வைக்கிறார்கள் என்பதில் சத்தியனுக்குக் கவனம்.

''கவனமாகக் கதையும்'' சத்தியன் முணுமுணுத்தான்.



''வெளிநாட்டில் சொகுசாக இருந்து கொண்டு ஒரு மாத விடுமுறையில் வந்து எதையும் சொல்லி விட்டுப் போய்விடுவீர்கள். அதனால் தாக்கப்படுவது தமிழ் இனம்; சாதாரண சனங்கள் தாக்கப்படுகிறார்கள்.

இரவில்லை பகல் இல்லை எந்த நேரமும் வீட்டை உடைக்கிறார்கள். உத்தியோக உடுப்பில்லை, வெறும் ஆயுதங்களுடன் வந்து மனித வேட்டை - தமிழர் வேட்டை ஆடுகிறார்கள். ''ஆளும் கட்சியின் ஆர்மிகள்.'' சத்தியனின் குரலில் ஆவேசம் தெரிந்தது. ஆனாலும் அடங்கிப் பேசினான்.

எரிந்து மறைந்து திரும்பக் கட்டிய யாழ்ப்பாணப் பெரிய கடை, முன்னால் தெரிந்தது.

''தன் சொந்தப் பூமியில் தன் தலைநகரை எரிக்கப் பார்த்துக் கொண்டிருந்த தமிழன், என்னத்தைத்தான் இழக்க மாட்டான்?'' பரமநாதன் வெறியுடன் சொன்னான்.

''விசர்க்கதை கதையாதேயும். தமிழன் என்று மட்டுமில்லை. தன்னை எதிர்க்கும் எந்தச் சக்தியையும் தகர்த்து எறிய, எந்த அரசாங்கமும் தயங்கியதில்லை. 71ம் ஆண்டில் எத்தனை ஆயிரம் சிங்கள இளைஞர்கள் இறந்தார்கள்! எதிர்ப்பு என்ன விதத்தில் வந்தாலும் அதை அழித்து ஒழிப்பதுதான் ஆளும்கட்சியின் வேட்டைநாய்களின் வேலை.

ஒரு காலம் வரும், சாதாரண மக்களுடன் அரசாங்கத்தைப் பாதுகாத்த காவல் படையே சேரும். அந்தக் காலத்தை விரைவில் வரப்பண்ணுவதுதான் எங்கள் வேலையாக இருக்க வேணும்.''

சத்தியமூர்த்தியின் பிரசங்கத்தால் வாயடைத்துப் போய் இருந்தான் பரமநாதன்.

தனக்கும் தன் குடும்பத்துக்கும் நேர்ந்த அவலநிலையால் தமிழ் வெறியூறியிருக்கும் என்று நினைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியன் அப்படியே இருந்தான்.

எத்தனை துன்பங்கள் வந்தும் தன் இலட்சியத்தை மாற்ருத முற்போக்குச் சோசலிசக் கொள்கைகளையுடையவனுக இருந்தான்.

ஆனுல் நடப்பது?

பரமநாதன் சத்தியமூர்த்தியின் அரசியல் வேதாந்தத்தில் எரிச்சல்பட்டுச் சொன்னுன்.

''உமது இடதுசாரி உபதேசம் எனக்கு வேண்டாம். நான் பிற்போக்குவாதியுமில்லை முற்போக்குவாதியுமில்லை. சாதாரண நடைமுறையில் ஒரு இனம் நசுக்கப்படுவது என்ன ஜனநாயகம்?

அதிகாரம் இருப்பதற்காக ஒரு இனத்தை அழிக்க இன்னெரு இனத்தைத் தூண்டி விடுகிருர்கள். இதை எதிர்ப்பதை விட்டுவிட்டு இன்றும் சாதாரண சிங்கள மக்களுடன் சேர்ந்து தமிழர் விடுதலைக்குப் பாடுபடவேண்டும் என்று விசர்க்கதை கதைக்கிறீர்.'' பரமநாதன் படபடத்தான். சத்தியன் நண்பனைக் கூர்ந்து பார்த்தான்.

''லண்டன் பகட்டுச் சீவியத்தில் இலங்கையின் பிரச்சினையின் உண்மைச் சொருபங்கள் உமக்கு வேறு விதமாகத் தெரிகிறது. சாதாரண சிங்கள மக்கள் தங்களில் பாய்வார்கள் தங்கள் முதலாளித்துவத்தைப் புரிந்துகொண்டு என்ற பயத்திற்தான், அவர்கள் கவனத்தையும் கஷ்டத்தையும் தமிழரில் காரணம் காட்டித் திருப்பிவிடுகிருர்கள். இதை எதிர்ப்பதைத்தான் இன்றைய முற்போக்குச் சக்திகள் செய்யவேண்டும்.'' சத்தியமூர்த்தி அமைதியாகச் சொல்ல, பரமநாதன் ஆத்திரத்துடன் எழுந்தான்.

''ஆமாம் கலாநிதி பெரேரா, விக்கிரமசிங்கா, பீட்டர் கெனமன் செய்ய முடியாமல்தான் முந்தானையைப் பிடித்துக் கொண்டு திரிந்தார்கள்!''



பரமநாதன் பெரியகடையில் இறங்கி நடந்தான். காலையில் எழுந்தது தொடக்கம் தங்கை பானுமதி முதல் ஒவ்வொரு நிகழ்ச்சியும், தலையிடி தருவதாகப் பட்டது.

கஸ்தூரியார் ரோட்டில் நடந்துகொண்டிருந்தனர்.

''வீட்ட வாரும் மத்தியானம் சாப்பிடுவம்.'' சத்தியன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு நடந்தான். யாழ்நகர் எங்கும் பொலிஸ், ராணுவம் நடமாட்டம் தெரிந்தது.

''பார்க்க உனக்குத் தெரியவில்லையா இவர்கள் நடந்து கொள்ளும் விதம்? ஒரு சொந்த இனம், சொந்த நாட்டின் ஒரு பகுதியாகவா யாழ்பாணம் நடத்தப்படுகிறது? ஏதோ கைப்பற்றிய அந்நியபூமியை அந்நியநாட்டாரை நடத்துவது போல் இல்லையா இந்த ராணுவத்தினரின் நடமாட்டம்?''

பரமநாதனை வழக்கம் போல் சிரித்தபடி பார்த்தான் சத்தியன்.

''எழுபத்தி ஏழாம் ஆண்டும் இப்படித்தான் சிங்களக் கிராமங்கள் ராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்குள்ளாகின. எதிர்ப்பது யாராயிருந்தாலும் அழிப்பதுதான் அவர்கள் கட்டளை.''

'எதிர்ப்பது யாராய் இருந்தாலும்......'

'பானுமதியை வீட்டில் எல்லோரும் எதிர்க்கப்போகிருர்கள். என்ன செய்யப்போகிருள்?'

''உனக்குக் கல்யாணம் ஆகாதது ஒரு விதத்தில் நல்லது.'' பரமநாதன் முன்னுக்குப் பின் முரணுக சம்பாஷணை தொடங்க, ஆச்சரியத்துடன் பார்த்தான் சத்தியன்.

''ஏன் என்ருல் கல்யாணம் என்பது எவ்வளவு சிக்கலானது என்பது தெரியாமல் இருக்கலாம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் சிரித்தார்கள். சத்தியமூர்த்தி நண்பனிடம் கேட்டான்.

''உமது இங்கிலிஸ் பெண்டாட்டியைப் பற்றிச் சொல்ல வில்லையே நீர்?''

பரமநாதன் சிரித்தான்.

''என்ன சிரிக்கிறீர்?'' சத்தியன் கேட்டான்.

''பெண்டாட்டிகளும் கல்யாணங்களும் கடைசியில் ஒரே ரகமும் ஒரே ருசியுமென்றுதான் நினைக்கிறேன். நிறங்களும் பாஷைகளுந்தான் வித்தியாசம்; அவர்கள் நினைவுகளும் பிரச்சனைகளும் ஒரே மாதிரி.''

இருவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

பரமநாதனின் யூனிவேர்சிற்றிக் காதலைப் பற்றிச் சாடையாகக் கேள்விப் பட்டிருந்தான் சத்தியன். தற்போது அது ஞாபகம் வந்தாலும் மௌனமாக நடந்தான், கேட்காமல். ''எப்போது திரும்புவீர்?'' சத்தியன் கேட்டான்.

''தங்கைச்சிகளின் பிரச்சனைகள் கிட்டத் தட்ட முடிந்த மாதிரி. ஒருமாத லீவு முடியப் போக நினைக்கிறேன்''

''என்ன தகப்பனுரின் செத்தவீடு முடிய முதல் தங்கைகளுக்குக் கல்யாணமா?'' ஆச்சரியத்துடன் கேட்டான் சத்தியன். தனக்குச் சொல்லாமல் கொள்ளாமல் கௌரிக்குக் கல்யாண எழுத்து முடிந்ததைச் சொல்லி ஓலம் வைக்காத குறையாக முறையிட்டான் பரமநாதன்.

''பானுமதி?'' கேட்டான் சத்தியன்.

ஒரு கணம் தயங்கி விட்டுச் சொன்னுன் பரமநாதன்.



''தனக்குத் தானே பெடியன் பார்த்து வைத்திருக்குத் தங்கைச்சி.'' பரமநாதனுக்குத் தெரியும் பெண் உரிமையை விரும்புவன் சத்தியன் என்று.

''கெட்டிக்காரி. காதலிப்பது கெட்டித்தனம் இல்லை. அது எல்லோராலும் முடிந்த விசயம். கல்யாணத்தைப் பண்ணிக் கொள்ளச் சொல்.'' சத்தியன் நகைச்சுவையுடன் சொல்ல, பரமநாதன் சொன்னுன், ''அதுதான் பிரச்சினையாக வரப் போகிறது.''

என்ன என்பது போல் நண்பனைப் பார்த்தான் சத்தியன்.

''பெடியன்...... பெடியன் தாழ்த்தப்பட்ட சாதி.'' பரமநாதன் எங்கோ பார்த்தபடி சொன்னுன்.

அறுபத்தி எட்டாம் ஆண்டு கோயில்களில் தாழ்த்தப் பட்டவர்களை அனுமதிக்க வேண்டும் என்ற போராட்டத்தில் தகப்பன்களின் வேட்டியைக் கட்டிக்கொண்டு கலந்து கொண்டது ஞாபகம் வந்தது.

''நீர் என்ன சொல்கிறீர்?'' சத்தியன் கூர்மையாகக் கேட்டான், லண்டன் பிற்போக்குக் கருத்துக்களையுண்டாக்கியிருக்குமா?

சத்தியனுக்குத் தெரியாது கார்த்திகாவின் தப்பி என்று.

''நான் என்ன சொல்வது? நானு சபேசனைச் செய்யப் போகிறேன். அவளின் விருப்பம், செய்யட்டும்.''

''சபேசனு?'' ஆச்சரியத்துடன் கூவினுன் சத்தியன்.

''ஏன் உமக்குத் தெரியுமா ஆளை?'' பரமநாதன் கேட்டான் சத்தியன் சுத்தியவிதத்திலிருந்து.

சத்தியன் நண்பனை ஏறிட்டுப் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன காணும் அளந்து பார்க்கிறீர், சேட் தைக்கப் போகிறீரா?'' பரமநாதன் எரிச்சலுடன் கேட்டான்.

''நீர் தமிழர் உரிமைகளைப் பற்றிக் கதைத்த விதத்தில் நான் உணர்ந்திருக்க வேண்டும் நீர் யார் கூட்டமென்று.'' சத்தியமூர்த்தி புழுதியடித்த பஸ்ஸுக்கு விலகிக்கொண்டு சென்றான்.

பரமநாதன் விளங்காமல் திண்டாடினான். என்ன புலம் புகிறான் இவன்? நான் கூட்டணிக்காரனா?

''என்ன சத்தியன் புலம்புகிறீர்?''

சத்தியன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு நண்பன் அருகில் வந்து மெல்லச் சொன்னான்.

''உமது தங்கைச்சியின் காதலன் ஒரு விடுதலை வீரர்; சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பவர்; ஒரு எழுத்தாளர்; பொலிஸாரிடம் அகப்பட்டு எலும்பெல்லாம் உடைந்தவர். எந்த நிமிடமும் அவர்கள் இவரை, மூளையைப் பிய்த்து நாய்க்குப் போட்டு விட்டு மூலையில் கிடக்கும் கேணிகளில் எறிந்து விடலாம்.''

பரமநாதன் திடுக்கிட்டான் நண்பன் சொல்வதைக் கேட்டு. சத்தியன் சொல்லச் சொல்ல ஒவ்வொரு எலும்பும் ஆடுவதுபோல் இருந்தது; இரத்தம் உறைவதுபோல் இருந்தது.

''உமக்கு என்ன தெரியும் இருவரும் ஒரே சபேசனாக இருக்கும் என்று?'' பரமநாதன் குரல் பதறியது.

''சதாசிவம் வாத்தியாரின் மகன் உமது தங்கைகள் படித்த 'ரியூட்டரி'யிற் படித்தது ஞாபகம். சபேசனையோ பானுமதியையோ எனக்குத் தெரியாது. உமது அக்கா சொன்னா கடைசித் தங்கை படித்த ரியூட்டரியைப் பற்றி ஒருதரம்.'' சத்தியன் சொன்னான்.



சதாசிவம் மாஸ்ரரின் மகன் சபேசன்.

'கொம்யூனிஸ்ற் சதாசிவம் மாஸ்ரரின் மகன் சபேசன்? சத்தியமூர்த்தி, பரமநாதன் போன்றவர்களுக்கு மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், மாவோ போன்ற கொம்யூனிஸ்ற்றுகளின் தத்துவத்தைப் படிப்பித்த சதாசிவம் வாத்தியாரின் மகன் ஒரு இனவாதி! ஈழவிடுதலைக்காரன்! பரமநாதன் மௌனமாக நடந்தான்.

''இளைஞர்கள் இப்படி ஆவேசமாகப் போவதில் ஆச்சரியம் இல்லை. சபேசனின் தம்பி ஒருவனைப் பொலிஸார் கொலை செய்து விட்டு கேணி ஒன்றில் போட்டிருந்தார்கள். அத்துடன் அவர்கள் குடும்பத்திற்கும்......'' மேலே சொல்ல முடியாமல் நடந்தான் சத்தியன்.

''அவர்கள் குடும்பத்திற்கு என்ன......?'' பரமநாதன் பதறினான். கார்த்திகாவும் செத்திருப்பாளா?

''சபேசன் சம்பந்தியாக வரப்போகிறான், கேட்டுக்கொள்.'' கேட்டைத் திறந்துகொண்டு மாமர நிழலில் சைக்கிளைச் சாத்தினான் சத்தியன். எத்தனை மைல் நடந்திருப்பார்கள்? இவனுக்கும் கால் உளைந்தது.

சத்தியன் வீட்டில் அருமையான மரக்கறிச் சாப்பாடு. இவன் எதிர்பாராத விருந்தாளி என்றாலும் இருந்த சாப்பாடு எல்லோருக்கும் போதுமானதாக இருந்தது. மனம் நிறைந்த சிநேகிதம், வாய் ருசிக்கும் சாப்பாடு, இவற்றை விட வேறு என்ன வேண்டும் என்றிருந்தது பரமநாதனுக்கு. சத்தியனின் தமக்கையின் உழுந்து வடையைச் சாப்பிட்ட போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு தரம் மாமரத்தின் கீழ் இருந்து இலக்கிய, அரசியல் வாதம் செய்துவிட்டு வரப், பின்னேரம் ஆகி விட்டது.

❊ ❊ ❊ ❊

வீட்டில் பானுமதியுடன் தனிமையில் கதைக்க வேண்டும் போல் இருந்தது. சபேசனைப் பற்றிக் கேட்க வேண்டும், சபேசனைப் பற்றி நிறைய அறியவேண்டும் போல் இருந்தது. சபேசன் எழுத்தாளனும்.

அவன் என்ன எழுதுகிறான் என்று கேட்க வேண்டும் போல் இருந்தது. இலங்கையில் எழுத்தாளர்கள் மலிந்து விட்டார்கள்!

பானுமதியின் விடயம் எவ்வளவு தூரம் வீட்டில் தெரியும் என்பது மர்மமாக இருந்தது. ஆனால் பானுமதியுடன் தனியாகக் கதைப்பது முடிந்த காரியமாகத் தெரியவில்லை.

அந்த வார விடுமுறைக்குப்பின் கொழும்பு போவதாக முடிவு கட்டியிருந்தான்.

அக்காவும் குழந்தைகளும் மாமியார் வீட்டுக்குப் போய் விட்டார்கள்.

கௌரி வழக்கம் போல் ஆட்டுடனும் கோழிகளுடனும் மாரடித்துக் கொண்டிருந்தாள். அவனும் வார விடுமுறையின் பின் பாடசாலைக்குப் போகத் தொடங்கலாம். அதன் பின் பானுமதி வீட்டில் தனியாக இருக்கும் சந்தர்ப்பங்களை விடாமல், கேட்க வேண்டியவற்றைக் கேட்க நினைத்தான்.

மனைவி மரியனின் 'எக்ஸ்பிரஸ் லெற்றர்' வந்திருந்தது. அவன் பிரிவை அவள் விபரித்த விதம், மனத்தை நெகிழப் பண்ணியது. பிரிவில்தான் அன்பின் வலிமை தெரிகிறது.



ஏரோபுளொட்டில் போனது பிழை என்று எழுதியிருந்தாள். சரி என்பதுபோல் தலையாட்டினான் கடிதம் வாசிக்கும் போது.

குழந்தை மீரா தன் பிஞ்சுக் கைகளால் படம்போட்டு அனுப்பியிருந்தாள் யானையும் கொண்டு வரட்டாம்!

அதிகம் பிரச்சினை தராத அன்பான தன் சின்னக்குடும்பத்திடம் அந்தக் கணமே போகவேண்டும்போல் இருந்தது அவனுக்கு.

'என் குடும்பம் என்பதின் முழுக் கருத்தும் நிறைவும், பிரிவின் துடிப்பில்தான் முழுக்க முழுக்க உணரப்படுகிறதாக யோசித்தான் அவன்.

பின்னேரம் தாய் வளவு மூலையில் வேலை. கௌரி ஏதோ தைத்துக் கொண்டிருந்தாள். யாரோ சொந்தக்காரர் புழுக் கொடியலும் வடையும் கொண்டு கொடுத்ததாக பானுமதி கொண்டு வந்தாள்.

இருபத்தொரு வயது. இதற்கிடையில் தனக்கென்று ஒருவனைத் தேர்ந்தெடுத்து விட்டு அவனைத்தான் செய்வேன் என்று சண்டைக்கு நிற்கிறாள். ஜான்ஸிராணி போதனையோ! வீரமாக இருக்கிறாள்!

''சபேசன் எப்படிப் பட்டவன் என்று தெரியுமா?'' புழுக் கொடியலைக் கடித்தபடி கேட்டான் பரமநாதன். பானுமதி அவன் கேள்வி விளங்காத மாதிரி புருவத்தை உயர்த்தினாள். எப்படியானவன் என்றால் என்னவாம்?''

''சபேசன் பொலிஸாருடன் தகராறுப் பட்டவனும்.'' அவன் வடையைக் கையில் எடுத்தபடி சொன்னான்.

''உண்மையான தமிழன் எவனையும் பொலிஸ்காரனுக்குப் பிடிக்காதுதான்.'' தமையன் தன்னுடையவனைத் தாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகிறாளா? பானுமதி படபடத்தாள். விட்டுக் கொடுக்காத குரல்.

"பானுமதி, சபேசன் நடக்க முடியாத காரியங்களை உத்தேசித்து தன்னை அழித்துக் கொள்கிறான் என்று உனக்குப் புரியவில்லையா?" 'எப்படி விளங்கப் படுத்துவது இவளுக்கு...?' தமையனின் கேள்வி விசித்திரமாக இருந்திருக்க வேண்டும். சதிரையை இழுத்துப் போட்டு உட்கார்ந்தாள்.

"அண்ணா, மற்றவர்களால் செய்யமுடியாதென்று நினைப்பவற்றைச் செய்யத்துணிபவர்கள் செய்யமுடியாதவர்கள் கண்களுக்கு, கோழையாகத்தான் படுவார்கள். இந்தியச் சுதந்திரப் போராட்டம் தொடங்கும்போது புத்தி கெட்ட இந்தியன் எப்படி, இந்த வலிமை படைத்த வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வெல்ல முடியும் என்றுதான், கதைத்தார்களாம்! வியட்நாம் யுத்தத்தில் யார் வென்றார்கள்? அமெரிக்கனா, அவர்களால் அழிக்க முடியும் என்று நினைத்த சாதாரண வியட்நாம் மக்களா?"

பரமநாதன் வாய் திறவாமல் தங்கையைப் பார்த்தான். "ரியூட்டரிக்குப் போவதாகச் சொல்லிக்கொண்டு சபேசனிடம் அரசியல் படிக்கப் போனாயா?" என்று கேட்டான்.

"யாருக்கு யாரும் அரசியல் படிப்பிக்கத் தேவையில்லை. எங்களுக்கென்று அனுபவம் வரும்போதுதான் எங்கள் இரத்தம் துடிக்கும். தமிழர்கள் எதை எதை எல்லாம் இழக்கிறார்களோ அதெல்லாம் ஒரு காலத்தில், இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை என்று சிங்கள அரசாங்கத்தால் அழிபடப் போகும்போது, இருப்பதைப் பாதுகாக்க நாட்டை விட்டு ஓடாத சபேசன்கள் பாடுபடத்தான் போகிறார்கள்"

இவள் என்ன எலிஸபெத்தின் மறு அவதாரமா? அவள் பெண் விடுதலை கதைக்க இவள் இன விடுதலை கதைக்கிறாள்.

"உன்னைச் சபேசன் நன்றாகக் கதைக்கப் பழக்கி இருக்கிறான்." தமையனின் குரலில் நையாண்டி இருந்திருக்க வேண்டும். அவள் கண்களில் நீர் நிரம்பியிருந்தது.



"அண்ணா எழுபத்தி ஏழாம் ஆண்டுக் கலவரத்தில் அவர் குடும்பத்துக்கு என்ன நடந்ததென்று உங்களுக்குத் தெரியாது."

சொல்லி முடிக்க முதல் அவள் நா தழுதழுத்தது. எதுவும் யாருக்கோ நடக்கும் போது கதையாகவும் செய்தியாகவும் தான் இருக்கும்.

தனக்கென்று நடக்கும் போது......?

வாழ்கையின் திருப்பு முனைகள் தான் அந்த அனுபவங்கள் என்பது தெரியாதவனல்ல அவன்.

தங்கையை நிமிர்ந்து பார்த்தான்.

'எவ்வளவு தூரம் குடும்பத்துக்குத் தெரியும் இவளின் காதலைப் பற்றி?'

"வீட்டில் தெரியுமா?" தமையன் தங்கையின் முகத்தைப் பாராமல் கேட்டான். அவள் மௌனமாக இருந்தாள் கொஞ்ச நேரம்.

"அப்பாவுக்குச் சொன்னேன். அம்மாவுக்கும் மற்றவர்களுக்கும் தெரியும் என்று நான் நினைக்கல்ல. அப்பாவுக்கு அன்றிரவுதான் வருத்தம் வந்தது."

பானுமதி சொல்லிமுடிக்கமுதல் தாய் வருவது தெரிந்தது; அவள் போய் விட்டாள். போக முதல், தமையனின் முகத்தில் ஏற்பட்ட மாறுதல் ஏன் இப்படித் திகிலாக இருக்கிறது என்பதின் உண்மையைத் தெரிந்திருந்தால் துடித்திருப்பாள் என்று தெரியும், அவனுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஸ்ரோக்' என்ற வாதத்துக்கு ஒரு காரணம் மூளையில் ஏற்படும் திடீர் அதிர்ச்சியும் என்பது இலக்கியமும் தையல் வேலையும் படித்த பானுமதிக்கு, எங்கே தெரிந்திருக்கப் போகிறது?

கடவுளே என்ன கொடுமை என்று கத்தியழுதிருப்பாள், அவன் சொல்லியிருந்தால். அதை அவளுக்கு விளங்கப் படுத்தியோ சொல்லியோ என்ன காணப்போகிறான்? அந்த அதிர்ச்சி அம்மாவுக்கும் ஏற்படாமல் எப்படிப்பார்ப்பது?

தகப்பன் இறந்த வேதனையிலிருந்து மீளவே இன்னும் எத்தனையோ மாதம் எடுக்கலாம். அதற்கிடையில் கௌரியின் கல்யாண விடயங்களில் கவனம் இருக்கும். இந்த நிலையில், கோவியனைக் காதலிக்கிறாள் பானுமதி என்று சொன்னால் எப்படி இருக்கும் தாய்க்கு? அவன் பெருமூச்செறிந்தான்.

# 6

அம்மா, கொழும்புக்குப் போய் கௌரிக்குப் பேசிய பையனைப் பார்க்கச் சொல்லி நச்சரித்துக் கொண்டிருந்தாள்.

பெரியக்கா, குழந்தைப் பட்டாளங்களுடன் யாழ்தேவியில் ஏறினான் பரமநாதன். சபேசன் கொழும்பில் நிற்பதாக பானுமதி சொன்னாள். போய்க்காணுவதாகச் சொன்னான். யாருடன் நிற்கிறான் என்று அவன் கேட்கவில்லை. தமக்கை தெகிவளையில் இருப்பதாக அவள் சொன்னாள்.

லண்டனிலிருந்து கொழும்புக்கு வந்து யாழ்ப்பாணம் போகும்போது இருந்த உணர்ச்சிகளையும், இப்போது ஒரு கிழமைக்குப் பின் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் போகும்போது இருக்கும் உணர்ச்சிகளையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாமல் இருந்தது. எல்லாம் யாருக்கோ நடப்பது போல் இருந்தது. கார்த்திகா எங்கே இருக்கிறாள் என்று கூடத் தெரியாமல் இலங்கையில் கால் வைத்தவன் இப்போது அவளைத் தேடிப் போகும் நிலவரத்தை யோசித்தான். இப்படியா அவர்கள் தொடர்பு இருக்குமென்று யோசித்தான்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்த் திருவிழா. அந்தச்சாட்டில் இளம் பெண்களை வட்டமிடும் வாலிபர்கள். அவன் நினைவு விரிந்தது. வெறும் நிழலாய் அவள் பூங்காவனத் திருநாளன்று கோயில் அருகில் அநேகம் பெண்களுடன் திரிந்தாள். யாரோ ஒரு பெண்ணை அவன் பார்வையில் பட்டாள்.

திரும்பி இன்னொருதரம் பார்க்கவேண்டும் போன்ற இளமையான அழகு.

திரும்பிப் பார்த்தான்.

'அண்ணனும் நோக்கினான், அவளும் நோக்கினாள்' என்று சிரித்தான் நரேந்திரன், நண்பன் பரமநாதனைப் பார்த்து.

அடுத்த நாள் விழுந்தடித்துக்கொண்டு நல்லூருக்குப் போனான் அவள் கண்களில் தட்டுப்படுகிறாளா, என்று பார்க்க.

அதன் பிறகு எத்தனையோ வெள்ளிக் கிழமைகள். ஏதும் விரதம் பிடிக்க மாட்டாளா? அதன் சாட்டில் கோயிலுக்கு வரமாட்டாளா என்ற நப்பாசை. சைக்கிள் பல தரம் உருண்டது நல்லூரில். யூனிவேர்சிற்றி என்றன்ஸ் படிப்பு வேறு. அப்பா வீட்டில் நச்சரித்துக் கொண்டிருந்தார், இப்படிப் படிக்காமல் திரிந்தால் என்னென்று எடுபடப் போகிறாய் யூனிவேர்சிற்றிக்கு என்று.

நண்பர்கள் சொன்னார்கள் நல்ல ரியூஷன் மத்ஸ், பிஸிக்ஸ் கெமிஸ்ட்ரி சதாசிவம் மாஸ்ரரிடமிருந்து என்று.

அவனுக்குத் தெரியவில்லை, எதிர்காலம் விரிகிறது என்று. மாஸ்ரர் இருக்கிறாரா என்று தேடிப்போக அவள் வந்து 'கேட்டைத்' திறப்பாள் என்று. அவன் படித்தது, யூனிவேர்சிற்றிக்குப் போனதென்பது எல்லாம் எப்படி உண்மையானது என்று அவனுக்கே ஆச்சரியமான காரியங்கள்.



இளமையின் உணர்ச்சிகளின் கொந்தளிப்புகளுக்கு ஒரு பெண் இவ்வளவு காரணமாய் இருக்கலாம் என்ற உண்மை நம்பமுடியாமல் இருந்தது. எண்ணமெல்லாம் எழுத்தாகி அவை பல வடிவங்களாகி - கவிதையாய்...... கடிதங்களாய் ......

சபேசனுக்கு ஞாபகம் இல்லாமல் போகாது அக்காவுக்கு கதைப் புத்தகம் கொடுத்தனுப்பியதெல்லாம். 'என்ன நினைப்பான் இப்போது?'

தன் தமக்கையை ஏமாற்றியவன் தங்கைக்காக என்னிடம் வருகிறான் என்று நினைக்க மாட்டானா? அவன் பிழையா இப்படி எல்லாம் நடந்தது? பரமநாதன் - கார்த்திகா இருவரும் யூனிவேர்சிற்றிக்குப் போகப் பிளான் பண்ணியா நடந்தார்கள். அவைகள் சந்தர்ப்பவசத்தால் நடைபெறும் காரியங்களா?

கொழும்புப் பல்கலைக்கழகம், மாணவர் விடுதிகள், விக்டோரியாப் பூங்கா.

மவுண்ட்லவேனியாக் கடற்கரை.

வெறும் இயற்கையின் மாற்றங்களாக இருக்கலாம் இரவும் பகலும், அதன் மகிமையை உணராதவர்களுக்கு.

ஆனால் உலகமே பூஞ்சோலையாய்த் தாங்கள் அந்தப் பூங்காவின் இளம் சிட்டுக்களாய்......

யாழ்தேவி ஒட்டத்தில் அவன் பெருமூச்செறிந்தான். என்ன நடந்தது எனக்கு லண்டனில்?

போய் ஒவ்வொரு கிழமையும் கடிதம் எழுதினேன் அவளுக்கு. என்னவென்று மாற்றியது லண்டன் என்னை?

ஒவ்வொரு நாளும் எழுதி - ஒரு கிழமையாகி - பின்... பின்...... ஒவ்வொரு விதமான உறவுகளிலும் உலகம் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்த அளவு புனிதமில்லை, பவுத்திரமில்லை என்ற போலி வரட்டு வேதாந்தத்தால்......

அவளை அவ்வளவு கெதியில் - இரண்டு வருட இடைவெளியில் எப்படி அவனால் மறக்க முடிந்தது? மரியனின் சந்திப்பு - அவளின் உறவு - உதவிகள் கடைசியாக அவள் குழந்தைக்குத் தாயாகப் போகிறாள் என்ற திடீர் அதிர்ச்சி...

'சார்த்திகா எப்படி நான் உன் முகத்தில் விழிக்கப் போகிறேன்? என்னை எத்தனையோ சொல்லித் திட்டலாம் நீர். எதற்கும் மறுமொழி சொல்ல எனக்குத் தெரியாது. எப்படி உங்களால் இப்படி நடக்க முடிந்தது என்று எத்தனை கோடி தரம் சொன்னாலும் என்னால் எந்த மறுமொழியும் சொல்ல முடியாது.

லண்டன் எப்படி எங்கள் போன்ற பலவீனமானவர்களை உருக்குலைக்கும், என்பதை எப்படி நான் விளங்கப்படுத்துவேன்.

அவன் வாய்விட்டுச் சொல்ல வேண்டும் போல் துடித்தான்.

ஆரம்ப காலத்தில் மனச்சாட்சி என்றொரு 'சாமான்' அவன் நிம்மதியை எப்படி எல்லாமோ குழப்பியதுண்டு. காலப்போக்கில் நான் என்ன அப்படிச் செய்துவிட்டேன் என்று தன்னைத்தான் சமாதானப் படுத்தியதுண்டு. 'அவளுக்கு இன்னொருத்தன் கிடைக்காமலா போய் விடுவான்' என்று தன்னைத் தானே ஏமாற்றி பத்து வருடங்களின் பின்..... ?

அவன் நிம்மதி எங்கேயோ போய் விட்டது. கொழும்புக்கு வந்ததும் உடனடியாகச் சபேசனைப் பார்க்க வேண்டும் என்ற துணிவு போய்விட்டது. அதற்கு முதல் சத்தியமூர்த்தியைப் போய் ரத்மலானையில் பார்க்க நினைத்தான்.



சத்தியமூர்த்தியின் வீடு பார்க்கப் பயங்கரமாய் இருந்தது. தமிழர்கள் உரிமை எப்படிச் சாம்பலாக இருக்கிறது என்பதற்குச் சாட்சியாக, அரைகுறையாக எரிந்து சாம்பலான அந்த வீடு நின்றது. கருணை தரும்பும் சத்தியமூர்த்தியின் தாய்; கடவுளும் கலைகளும் பெரிது எனப் புகழும் தகப்பன், சாம்பலாகி விட்டார்களாம்!

அவர்களை உயிரோடு எரித்தார்களாம் சண்டாளர்கள்.

அந்த வீட்டுக்குள் போக முதல் பெருமூச்சுடன் ஒரு நிமிடம் நின்றான்.

லண்டனில் பி. பி. சி. செய்தியில் சொல்லும்போது கேட்டதை நினைத்துப் பார்த்தான்.

'தன் இனிய நண்பனின் தாய், தகப்பன் எரிவதை வெறும் செய்தியாகக் கேட்குமளவுக்கா, எங்கள் இனம் தாழ்ந்து விட்டது?'

இவன் வந்து நின்றதை சத்தியமூர்த்தி கண்டிருக்க வேண்டும். இவனின் முகபாவத்தில் தெரிந்திருக்க வேண்டும், என்ன யோசிக்கிறான் என்று.

''என்ன வேதாந்தம் யோசிக்கிறாய்?'' வழக்கப்படி சிரித்துக்கொண்டு வந்தான். வேதனைகளை மறைத்த சிரிப்பு. இனிக் கவலைப்பட்டு என்ன செய்து விடப்போகிறோம் என்ற வரட்டுச் சிரிப்பு.

''சபேசன் போன்ற ஆட்கள் நினைப்பதில் தவறென்ன என்று யோசிக்கிறாயா?''

சத்தியமூர்த்தி கேட்டான்.

வினை விதைத்தவர் வினையைத்தான் பெறுவார் என்று சொன்ன தகப்பனுக்கா இந்தக் கதி என்று கேட்க நினைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியமூர்த்தி அரசியல் விவாதத்தில் இறங்கி விடுவான் என்று தெரியும். பானுமதியையும் சபேசனையும் பற்றிக் கதைக்க வேண்டி வந்தவன் மற்றவர்களின் பிரச்சினையை எழுப்ப விரும்பவில்லை.

சத்தியமூர்த்தி குடும்பத்தை 'மற்றவர்களாக நினைக்கும்' தன் மனோபாவத்தை நொந்து கொண்டான். சபேசனைப் பார்க்கப் போவதாகவும் தன்னுடன் வர முடியுமா என்றும் கேட்டான்.

சத்தியமூர்த்தி நண்பனை மேலும் கீழும் பார்த்தான்.

"என்ன அப்படி ஆட்டையோ மாட்டையோ பார்ப்பது போல பார்க்கிறாய்?" பரமநாதன் எரிச்சலுடன் கேட்டான்.

"கோபிப்பதுக்கு இதில் ஒன்றுமில்லை. இது உம்முடைய குடும்ப விசயம். நான் வருவதை நீர் விரும்பினாலும் சபேசன் விரும்புவான் என்றில்லை."

பரமநாதனுக்குச் சரி என்று பட்டது அவன் சொல்வது. கார்த்திகா வீட்டில் சபேசனைக் காண்பது அவனால் கற்பனை செய்ய முடியாத காரியமாக இருந்தது. இத்தனைக்கும் கார்த்திகா தான் பரமநாதனுடன் 'வாசிற்றியில் திரிந்த பெட்டை' என்று சத்தியமூர்த்திக்குத் தெரியாது.

சதாசிவம் மாஸ்ரரிடம் ஒன்றிரண்டு தரம் பரமநாதனுடன் போய் இருக்கிறான். சதாசிவம் மாஸ்ரரின் மகளைத் தான் நண்பன் 'சுழட்டுகிறான்' என்று சத்தியமூர்த்திக்குத் தெரியாது. சத்தியமூர்த்தியுடன் நெருங்கிய சிநேகிதராய் இருந்த காலத்தில் கார்த்திகாவின் உறவு பெரிதாக இருக்கவும் இல்லை.

அப்படி வளரத் தொடங்கிய காலத்தில் சத்தியமூர்த்தி 'கிளாக்' வேலையாக வவுனியாவுக்குப் போய்விட்டான்.



சத்தியமூர்த்தி துணைக்கு வராதது மனதை அரித்தாலும் வேறு வழியில்லாமல் கார்த்திகா வீட்டுக்குப் போக யோசித்தான்.

அக்காவிடமோ மைத்துனரிடமோ மூச்சுக்காட்டாமல் இருப்பது தர்ம சங்கடமாக இருந்தது. நல்ல காலம் சத்தியமூர்த்தி கொழும்பில் வேலை செய்வது. அல்லது ஒவ்வொரு தரமும் ஒவ்வொரு சாட்டுச் சொல்ல வேண்டி ஏற்படலாம்.

அக்காவும் மைத்துனரும் கௌரியின் வருங்கால மாப்பிள்ளையைப் பார்க்கக் கொள்ளுப்பிட்டிக்குப் போனார்கள். கௌரிக்குப் பார்த்த மாப்பிள்ளை மகாதேவன் பரவாயில்லை பார்ப்பதற்கு. லண்டனில் பரமநாதன் இருப்பது தெரியும் என்று சொன்னான் மகாதேவன். ஆனால் இலங்கைக்கு வருவான் என்ற நம்பிக்கை கௌரி வீட்டில் இல்லாததால், தகப்பன் சொன்னவுடன் கல்யாண எழுத்து நடந்தது என்று மகாதேவன் சொன்னான்.

வீட்டில் தனக்குச் சொல்லத் தயங்கியது ஏன் என்று இப்பொழுது விளங்கியது. 'பத்து வருடம் வராதவன் இப்போது மட்டும் என்ன வந்து சேரப் போகிறான் என்று யோசிக்கலாம். சடுதியாக வந்து இறங்கியபோது மூத்த மகனுக்குத் தெரியாமல் கல்யாண எழுத்து எழுதியது குற்ற மனப்பான்மையை உண்டாக்கியிருக்கலாம்.'

'என்ன இருந்தாலும் என்ன?' இனி பரமநாதனால் என்ன செய்ய முடியும்? —

மகாதேவனைப் பற்றி நன்றாகத் தெரிந்ததாக அம்மா சொன்னா. எங்கள் தமிழர் லண்டனில் ஒருவிதமாகவும், கொழும்பில் ஒருவிதமாகவும் பழகுகிறார்கள் என்று தெரிந்திருக்குமா?

லண்டனில் எங்களவர் எப்படி வாழ்கிறார்கள் என்று இலங்கையில் இருக்கும் யாருக்கு என்ன தெரியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரியை லண்டனுக்கு கூப்பிடத் தேவையான விபரங்களைக் கதைத்தார்கள் மகாதேவன் குடும்பத்தினர். தகப்பனின் முப்பத்தி ஓராம் நாள் சடங்கு முடியும் வரை வீட்டிலிருந்து கௌரி அதிகம் போக மாட்டாள் என்று அக்கா சொன்னா.

அடுத்த கிழமை மகாதேவன் லண்டன் போவதாக இருக்கிறான். அதற்கிடையில் கௌரி கொழும்புக்கு வந்தால் லண்டனுக்குப் போகிற விடயங்களைக் கவனிக்கலாம் என்று பேசி முடிவுகட்டினார்கள். வெள்ளவத்தைக்கு வரும்போது பரமநாதன் மௌனமாக இருந்தான். தமக்கை ''ஏன் மௌனமாய் இருக்கிறாய்'' என்று கேட்டாள். 'தகப்பனின் செத்த வீட்டுக்கு இவர்கள் ஏன் வரவில்லை' என்று கேட்டான்.

முதல் நாள் தான் வந்து போனார்கள். கதிர்காமம் போக வேண்டி இருந்ததால் போய் விட்டார்கள் என்றாள் அக்கா

''கௌரிக்குப் பிடித்ததா மாப்பிள்ளை?'' பரமநாதன் கேட்டான்.

அக்காவுக்குப் பிடிக்கவில்லை அவனின் கேள்வி என்று முகத்தில் தெரிந்தது.

''தாய் தகப்பன் பார்த்தது தகுதியானது என்றுதான் நாங்கள் யோசிக்கப் பழகியிருக்கிறம்'' தமக்கை சொன்னாள். பழக்கியிருக்கிறார்கள் என்று திருத்த நினைத்தான்.

ஒரு மாத விடுதலையில் ஏன் கருத்துவேறுபாடான விவாதங்கள் என்று, பேசாமல் விட்டு விட்டான்.

பானுமதியைப் பற்றிக் கதைக்க வேண்டும் போல் இருந்தது. அக்கா விளங்கிக் கொள்ள மாட்டாள் என்று நன்றாக தெரிந்தது. தான் உதவி செய்வதாகத் தெரிந்தால் முகத்தில் அடித்தால் போல் ''நீ வராமலே இருந்திருக்கலாம்'' என்று சொல்லத் தயங்க மாட்டாள். என்ன வழி?



பானுமதி சொன்னாள் இங்கிருந்தால் என்றோ ஒரு நாள் பொலிசாரிடம் போய் முடியப் போகிறார். தயவு செய்து ஏதும் படிக்கிற சாட்டொன்று செய்தாலும் லண்டனுக்குக் கூப்பிடச் சொன்னாள். தமிழ் இனம், ஈழ விடுதலை என்று கூப்பாடு போடும் சபேசன், லண்டனுக்கு வராமல் மாட்டேன் என்று சொன்னால் என்ன செய்வது?

பானுமதிக்காக லண்டனுக்கு வருவானா? தன் கொள்கைகளுக்காக மடிந்து போவானா?

என்னவென்று பேச்சை ஆரம்பிப்பது? பானுமதி உம்மைப் பார்த்துப் பேசச் சொன்னாள் என்று சொல்வதா?

வீட்டுக்குப் போகும்போது மரியனின் கடிதம் வந்திருந்தது.

இலங்கை, கொழும்பு, யாழ்ப்பாணம், தங்கைகள் எல்லாம் மறந்து தன் குடும்பத்தைப் பற்றி யோசித்தான். இனிமையான மனோபாவனை எல்லாப் பிரச்சினைகளையும் மறந்து போகச் செய்தது. கொளுத்தும் வெயிலில் மரியன் லண்டனில் பனி கொட்டுவதை எழுதியிருந்ததைப் படிக்கும்போது, உடம்பு சிலிர்த்தது.

பங்குனி மாத ஆரம்பத்தில் கடைசிப் பனித்துளி கொட்டுவதாகச் சொல்வார்கள். அதாக இருக்கலாம் என்று வேடிக்கையாக எழுத நினைத்தான். தகப்பனின் மறைவுக்குத் துக்கம் சொல்லி எழுதியிருந்தாள் மரியன். அருமை மகள் மீரா தன் தாத்தாவின் மரணத்தைப் பெரிதாக எடுக்காமல், எவ்வளவு பெரிய யானை கொண்டு வருவீர்கள் என்று கேட்டிருந்தாள். மரியனுக்குப் பானுமதியைப் பற்றி எழுத முடிவு கட்டினான்.

கௌரியின் கல்யாண வீட்டைப் பற்றி எழுதினான். லண்டனில் மண்டபம் ஒழுங்கு செய்வதில் இருந்து எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியனின் பொறுப்பாக இருக்கும் என்று எழுதி விட்டுத் தானே சிரித்தான்.

கல்யாண வீட்டுக்கு எப்படித் தன் ஆங்கிலேய மனைவி கத்தரிக்காய்க் குழம்பு வைப்பாள் என்று யோசிக்க சிரிப்பு வந்தது.

கையில் மனைவியின் கடிதம் கண்ட அடுத்த வினாடி பதில் எழுதிய பின் மனம் நிம்மதியாக இருந்தது.

ஒருமாத விடுமுறையில் தான் பிறந்த மண்ணில் என்ன தான் நடந்தாலும் தன் குழந்தையையும் மனைவியையும் பார்த்தவுடன், எல்லாத் துன்பமும் தீர்ந்து விடும் என்று நினைக்கும் போது சந்தோசமாக இருந்தது.

மரியன் - மேரி ஆன் ஸிம்ஸன்.

பரமநாதன் லண்டனுக்குப் போனவுடன் முதலில் கண்ட ஒரே பெண் இல்லை.

கொழும்பு வாசமும் சர்வகலாசாலைப் படிப்பும் - படிப்பு முடிந்த பின் கிடைத்த வேலையால் உண்டான சினேகிதங்களும் - வாழ்க்கையில் மத்தியதர வர்க்க உணர்ச்சியை உண்டாக்கி விட்டிருந்தது அவனுக்கு.

இலங்கையில் அரசியல் பிரச்சினை எப்படி இருந்தாலும் வசதி படைத்த தமிழர்கள் ஒரு கஷ்டமும் படாதது போல் அல்லது கஷ்டங்களைச் சமாளிப்பதுபோல், தகப்பன் மகனுக்கு யாரோ பெரிய மனிதர்கள் - காசுக்கு வேலை செய்யும் சில எம். பிக்கள் உதவியுடன் பெரிய வேலை எடுக்க ஓடியிருந்தார். தகப்பனின் கரைச்சல் தாங்காமல் அவனும் தன் சோசலிசக் கொள்கைகளை (அவன் அப்படித்தான் நினைத்திருந்தான்) விட்டுக் கொடுத்து பிரமுகர் வீடுகளுக்கு நல்ல லஞ்சம் கொடுக்கவும் தயாராக இருந்தான் ஒரு நல்ல வேலைக்கு.



கிடைத்தது ஒரு அயல் நாட்டுக் கொம்பனியில் ஒரு அரை குறைவேலை. தகப்பன் இதை விட்டு விட்டு லண்டனுக்குப் போய் மேல் படிப்பு படிக்கச் சொன்னார், நினைத்த படி பெரிய வேலை கிடைக்காததால்.

சர்வகலாசாலையில் படிப்பிக்கப் பட்ட கடன் - பெரிய தமக்கைக்குக் கல்யாணத்துக்குப் பட்டகடன் - கலவரத்துடன் யாழ்ப்பாணம் ஓடிப்போய் காணி வாங்க பட்ட கடன் எல்லாம் தலைக்கு மேல் ஏறியிருந்தது. அத்துடன் அவனுக்குத் தெரியும் கார்த்திகா விடயமும் சாடையாக அவருக்குத் தெரியும் என்று. சுற்றி வளைத்துக் கேட்டார் தகப்பன் 'சதாசிவம் மாஸ்ரரின் வீட்டில் என்ன அடிக்கடி வேலை' என்று.

ரியூஷன் முடிந்த பின்பும் சதாசிவம் மாஸ்ரருடன் அரசியல் கதைக்க அவன் போவதாகப் பாவனை செய்து கொண்டதை, அவர் நம்பத் தயாரில்லை.

அவரும் ஒரு காலத்தில் இருபது வயதுப் பெடியனாக இருந்தார். எத்தனையோ 'பெட்டைகளைப்' படலைக்குள்ளால் பார்த்திருப்பார். இவன் மனதில் ஓடும் உணர்ச்சிகளின் விசித்திரம் அவரும் ஒரு காலத்தில் அடைந்திருப்பார்.

நாகரிகமாகக் கேட்ட தகப்பனுக்கு நாகரிகமாகப் பதில் சொன்னான்; தான் ஒன்றும் வீட்டுப் பிரச்சினை தெரியாமல் சுயநலமாகத் திரியவில்லை என்று.

உண்மையில் அவனின் திட்டம், தகப்பன் சொற்படி லண்டனுக்கு வந்து உழைத்துப் படித்து தங்கைகள் வீட்டுச் செலவெல்லாம் பார்த்த பின், கார்த்திகாவைக் கூப்பிடுவது என்று.

7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படித்தான் அவளுக்கும் சொன்னான். அவள், அவன் லண்டன் போவதாகச் சொன்னவுடன் திடுக்கிட்டு அழுத போது அவன் தேற்றினான், வார்த்தைகளால்.

'எத்தனை சுலபமாகத் திட்டமிடுகிறோம். எதிர் காலத்தைப் பற்றி......? எப்படித் தன்பாட்டுக்குச் சுற்றி வளைத்துப் பிடிக்கிறது சந்தர்ப்பங்கள்!'

தனக்குத் தானே வலிமையில்லாதவர்கள் தான் சந்தர்ப்பங்களையும் சூழ்நிலைகளையும் சாட்டுச் சொல்லித், தங்கள் சுயநல தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள் என்று சத்திய மூர்த்தி சொன்னான் எப்போதோ ஒரு நாள். 'தனக்குத் தானே வலிமையற்றவர்கள்... ..?'

தான் அப்படித் தானோ என்று சில நேரம் நினைப்பதுண்டு அவன்.

சர்வகலாசாலை நாட்களில் சாதியை எதிர்த்துப்போராட்டம் தொடங்கிய போது நண்பர்களுடன் சேர்ந்து கோயில்களுக்கெல்லாம் போய், தீண்டாதவர்கள் என்று சொல்லப்பட்டவர்களுக்காகப் போராடினான்.

கொள்கைகளுக்காகவா? அப்படி ஒன்று இருந்ததா? எங்கள் சமுதாயத்தில் படிப்பும் பட்டமும் வசதியான உழைப்பும் என்று வந்தவுடன் மனிதர்கள் ஏன் காற்றோடு சேர்ந்தாடும் நாணலைப்போல் இருக்கிறார்கள்?

அவனுக்கு விளங்க முடியாத தத்துவங்களில் ஒன்று.

லண்டன்! லண்டன் மேற்கு நாகரிகத்தின் சொர்க்க பூமி, கட்டுப்பாடற்ற ஒழுக்கம். கண் மண் தெரியாத பழக்க வழக்கம். கை நிறையும் பணம். கருத்துக்குத் தெவிட்டாத கன்னிகள்!

வந்த புதிதில் எல்லாரையும் போல் இதெல்லாம் விநோதமாகவும் வேடிக்கையாகவும் இருந்தன.



இருபால் உறவு எங்கள் சமுதாயத்தில் சாத்திரம் கோத்திரம் - சமுதாய ஒழுங்குகளுக்குள் கட்டுப்பட்டது என்பது இல்லாமல் லண்டனில், ஒருத்தரில் ஒருத்தர் உள்ள அன்பைக் காட்டப் பயன்படும் ஒரு செய்கையாக் கணிக்கப்பட்டது, நம்ப முடியாமல் இருந்தது உண்மை என்பது இப்போது நினைக்க அவனுக்குச் சிரிப்பாக இருக்கிறது.

கொழும்பில் பம்பலப்பிட்டிக் கடற்கரையில் கல் குன்றுகளுக்கு மேலமர்ந்து கையோடு கைபிணைத்து கார்த்திகாவை மார்பிலணைத்த போது உண்டான உணர்வு தான் சொர்க்கத்தின் உச்சம் என்று கருதியவன், லண்டனுக்கு புரட்டாசி மாதம் வந்து மார்கழி மாத கிறிஸ்மஸ் பார்ட்டியில் வொட்கா வெறியில் தன்னை மறந்து........ அடுத்த நாள் எழும்பி அரைகுறை நிர்வாணத்தில் தன்னுடன் படுத்திருக்கும் பெண்ணின் பெயர் என்ன என்று கூறத் தெரியாமல் வீட்டுக்குப் போனபோது, கார்த்திகாவின் நினைவு முள்ளாகத் தைத்தது நினைவில். வெறும் சதை உறவுகள் குலைந்து உருப்படியாக ஒரு சினேகிதத்தின் அடிப்படையில் மேரி ஆன் ஸிம்சன் அறிமுகமாகியபோது, அவனுக்குத் தெரியும் கார்த்திகாவின் நினைவு அவன் மனதிலிருந்து தன்னையறியாமல் மறைகிறது என்று.

உண்மையை உணரப் பயந்து தன்னை அந்த மயக்கத்திலிருந்து விடுபடுத்த முடியாமல் மேரி ஆன் ஸிம்ஸனின் உறவில் அமிழ்ந்திருந்த தன் பலன், மரியன் (மேரி ஆன்) குழந்தைக்குத் தாயாகப் போகிறாள் என்ற போது தான் திடுக்கிடப்பண்ணியது.

அவள் அலட்டிக் கொள்ளவில்லை, பெரும்பாலான மேல் நாட்டுப் பெண்களைப் போல் ''அபோர்ஷன்'' செய்யப்போகிறேன் என்ற போது அவன் துடித்து விட்டான். பாவ புண்ணியம் - மனச்சாட்சி என்ற சொல்லெல்லாம் இரவில் தனிமையில் உருவம் எடுத்து அவனை உலுப்பி எடுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத்திலும் துன்பத்திலும், ஏழ்மையிலும் செல்வத்திலும், இறக்கும் வரை இவளைப் பராமரிப்பேன் என்று சொல்லிக் கையெழுத்து வைத்து மரியனுடன் போனபோது, கார்த்திகாவின் உருவம் மறைந்திருந்து பெருமூச்சு விடுவதாக உணர்வு.

அந்த உணர்வு கூட எப்படி அவனுக்கு மறந்து விட்டது?

# 7

நினைவுகள் படர அவன் மனம் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டது.

கார்த்திகாவைக் காணவேண்டும் என்று கனவிலும் நினைத்து வரவில்லை.

மறைமுகமாக அவன் வேண்டிக் கொண்டான், யாரும் தெரிந்தவர்கள் அவளின் பேச்சை எடுக்காமல் இருக்க வேண்டும் என்று.

ஆனால் என்ன நடக்கிறது?

விரும்பியோ விரும்பாமலோ அவன் போகத்தான் வேண்டும். போய் என்ன கேட்பது? என்ன சொல்வது?

எங்களுக்குள் ஒரு நாளும் ஒரு தொடர்பும் இருந்ததில்லை என்ற மாதிரி முகத்தை எப்படி வைத்துக் கொள்வது என்பதை, அவனால் யோசித்துப் பார்க்க முடியவில்லை.

சபேசன் எப்படி நடந்து கொள்ளப் போகிறான்? அவனால் யோசித்து மூளையைக் குழப்ப விருப்பமில்லை. சத்தியமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் கோபம் வந்தது. தன்னுடன் வந்திருக்கலாம் என்று பட்டது.

திரும்பத் திரும்ப யோசித்து விட்டு அன்று பின்னேரம் வெளிக்கிட்டான். நல்ல சகுனம் பார்த்தா இலங்கைக்கு வந்தான்? வெள்ளிக்கிழமை. பெரியக்கா கோயில் போகத் துடக்கு அதனால் போகவில்லை. குழந்தைகளுடன் மைத்துனரின் சொந்த வீட்டுக்குப் போய் விட்டார்கள்.

நல்ல காலம் இல்லை என்றால் எங்கு கொழும்பில் சுத்தித் திரிகிறாய் என்று, அக்கா கேட்டாலும் கேட்பாள்.

பானுமதி எழுதித் தரவில்லை. சொன்ன விலாசம் மனதில் பதிந்திருந்தது.

வெள்ளவத்தை - தெகிவளை எல்லையில் வீடு இருந்தது. தமிழர்களின் வீடாக இருக்க வேண்டும்; பக்குவமாக துளசி மரம் நட்டு பாதுகாக்கப்பட்டிருந்தது ஒரு மூலையில்.

மாலை வெயில் குறைந்து வந்து கொண்டிருந்தது. தூரத்தில் மேற்கு அடிவானத்தில் சூரியனின் சிவப்பு முகம் கோபத்தால் சிவந்து கவர்ந்தது.

மெல்லக் கதவு மணியை அடித்தான். கொஞ்ச நேரம் யாரும் வரவில்லை.

பானுமதி சொன்ன விதத்தில் இருந்து சபேசன் எடுத்தெறிந்து பேசுபவன், முன்கோபி, யாருக்கும் விட்டுக் கொடுக்காதவன்......

கதவைத் திறக்கப் போகிறான் என்று எதிர்பார்த்தபடி நின்றான்.

யாரும் வரவில்லை.

இன்னொருதரம் அழுத்தியடித்தான். மெல்லிய காலடிகள் கேட்டது.



மனம் ஏதோ செய்தது. அடிமனத்தில் யாரோ சுத்தியல் தட்டுவதுபோல் இருந்தது.

கதவு திறந்தது.

தலை முழுகிக் கலைய விட்டு, பளிச்சென்ற முகத்துடன் அவள் திரிந்தாள்.

அவன் அப்படியே நின்றான்.

அவர்கள் அப்படியே சிலைகளாய் நின்றார்கள். நா வரண்டு வாயுலர்ந்து - மனம் தவிக்க நிலை குலைந்து அவன் நின்றான்.

பேயடைந்த முகத்தில் பிரமை சுழித்தோட, படபடக்கும் கண்களில் நீர்த் திவலை முத்தாட அவள் நின்றாள். அவனுடைய 'அவளாக' ஒரு காலத்தில் இருந்தவள்!

யார் என்ன கதைப்பது? ஏதும் இருக்கிறதா கதைக்க? என்ன உண்டு உறவு?

அவன் தடுமாறினான் ''சபேசன்..... .. சபேசன்........'' வார்த்தைகள் வரவில்லை.

அவள் கைகள் கதவைப் பிடித்த பிடிப்பில் தெரிந்தது உணர்ச்சிகளை எப்படிக் கட்டுப்படுத்தத், துடிக்கிறாள் என்று.

கார்த்திகா என்னை மன்னித்து விடு என்று கதற வேண்டும் போல் இருந்தது.

'பானுமதி சொன்னாள் என்று சொல்லவா? சபேசனைப் பற்றி என்னென்று பேச்செடுப்பது?

''சபேசன் இல்லை'' அவள் குரல் மென்மையாய், சோகமாய் உலர்ந்த பூக்களாய் கொட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடன் ஓடிவர எனக்குக் கொடுத்து வைக்கவில்லை என்று, அவன் தோள்களில் புரண்டு அழுத அவளின் கடைசிக் குரல், பத்து வருடங்களைத் தாண்டி இப்போது ஒலித்தது. அதெல்லாம் வெறும் கதைகள், நான் யாரோ இப்போது என்று எப்படி நடப்பது?

அவன் அதற்கு மேல் ஒன்றும் கேட்கவில்லை.

நிற்க தலை சுற்றிக் கொண்டு வந்தது. திரும்ப நடந்தான்.

எதிரிக்கும் என் நிலை வரவேண்டாம். காதலித்துக் கைவிடுவது பிரச்சினையில்லை. அவள் கண்களின் சோகத்தை அவனால் தாங்க முடியாது தான் - அவனால் பொறுக்க முடியாத வேதனையாக இருந்தது.

'கேற்' றடியில் வந்ததும் திரும்பிப் பார்த்தான். நீர்த்திவலை முத்தாட நொந்துருகும் வேதனையில் நிழல் போல நின்றவளின் தோற்றம், கதவடியில் இல்லை.

கதவு மணியடிக்கும் போது காது கேட்காத சொறி நாயொன்று 'கேற்' சாத்தும் சத்தத்தில் அலறி மர நிழலில் படுத்து லொள் லொள் என்றது.

மெயின் றோட்டுக்குத் திரும்பி வந்து பஸ் எடுக்க வேண்டும் என்ற நினைவு இன்றி எதிர்ப்பக்கம் நடந்தான்.

கடல் அலைகள் நிம்மதியாகக் கரையைத் தொட்டு முத்தமிட்டு ஓடி விளையாடின. குழந்தைகள் அலைகளுடன் ஓடிப்பிடித்துக் குதூகலித்தார்கள். வெளி நாட்டார் ஒன்றிரண்டு பேர் கடந்து போனார்கள்.

மணலில் கால் புதைய, மனதில் நினைவலைய அவன் நடந்தான். ஒரு செல்லாத மனிதனைப் போல் இருந்தது அவன் சிந்தனை.



என்னதான் நாகரிகம் என்று வாழ்ந்தாலும், எம்மை நாமே ஏமாற்றி எமக்கு நாங்களே சமாதானம் செய்து கொள்வது, எவ்வளவு அநாகரிகம் என்று பட்டது.

வாய் விட்டுத் தன்னைத் தானே திட்டிக் கொள்ளவேண்டும் போல் இருந்தது. மனைவியின் கடிதம் கண்டதும் என் மனைவி, என் குழந்தை, எனது வீடு, எனது சிறிய உலகம் என்று பெருமைப் பட்டது வெறும் பொய்மையாகவும், என்னுடையவை என்று இறுமாந்தவை அவன் ஏமாற்றின் சாட்சியங்களாகவும் தோன்றின.

ஆயிரம் சமாதானங்கள் கடந்த பத்து வருடமாக அவன் மனதில் வந்துபோயின. ஒரு காலத்தில் கார்த்திகாவைக் கண்டால் சொல்லிச் சமாளிக்க, அவை எதற்கும் எந்த வலிமையும் இருக்கப் போவதில்லை, துயர்படிந்த அவள் விழிகளின் கூர்மைக்கு முன்னால் என்பது உண்மை.

அவள் முகத்தில் குங்குமம் இல்லை. கழுத்தில் தாலி இல்லை. அவளுக்கு இன்னும் கல்யாணமாகவில்லை. பானுமதி துணிச்சலுடன் வாய் விட்டுக் கார்த்திகாவின் பெயரைச் சொன்ன போதும், அவன் மனம் விட்டுக் கார்த்திகாவுக்கு என்ன நடந்தது என்று கேட்கவில்லை.

கோழைகள், கோழைகள், என்னை விடப் பெரியவன் இல்லை, எனக்கு இருக்கும் வலிமை யாருக்கும் இல்லை என்ற பொய்புணர்வில் கோட்டை கட்டி, மெய்மையற்ற வாழ்வு காணும் சிறு புத்தியுள்ளவர்கள் கோழைகள். உண்மையைத் தாங்க முடியாத, அனுபவிக்கத் தெரியாத கோழைகள்.

எதிரே வருவோர் போவோர் வெறும் சதைப் பிண்டங்களாய், இயக்கிவிட்ட பொம்மைகளாய்த் தெரிந்தன.

கால் போன போக்கில் அவன் நடந்தான்.

''ஹலோ - '' யாருடைய தயக்கமான குரல் அது? அவன் திரும்பிப் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கை தந்த அதிர்ச்சி நீங்க முதல், தம்பி நின்றிருந்தான்.

எவனைத் தேடி என்னவெல்லாமோ கதைக்கக் காத்திருந்தவன் அவன் முன்னால் நின்றதும், ஒரு கணம் திகைத்து விட்டான். பத்து வருடத்துக்கு முன் பையனைக் கண்டவன் தனக்கும் பெரியவனாய் நிற்பது ஒருகணம் தடுமாற்றமாய் இருந்தது.

''ஹலோ'' சொன்னான் பரமநாதன், உன்னைத் தான் தேடிப்போய் நிலை குலைந்து வந்திருக்கிறேன் என்று சொல்லலாமா?

''நீங்கள் வந்திருப்பதாகக் கேள்வி'' சபேசன் தொடங்கினான். ஒரு கணம் விளங்கிக் கொள்ளவில்லை என்ன கருத்தில் சொல்கிறான் என்று.

''சொறி உங்கள் தகப்பன்......'' சபேசன் இழுத்தான்.

அதற்குத் துக்கப் பட்டு என்ன பிரயோசனம் என்பது போல் இவன் தலையாட்டினான். நீயும் என் தங்கையும் தான் முதல் காரணம் என்று மனம் சொல்லியது.

தூரத்தில் சில கற்பாறைகள் தெரிந்தன, இருவரும் போய் உட்கார்ந்தார்கள்.

''எழுதுவதாகக் கேள்வி'' என்றான் பரமநாதன். சாதாரணமாகக் கதைக்க முடிந்தது சந்தோசமாக இருந்தது.

சபேசன் நிமிர்ந்து பார்த்தான்.

''என்ன எழுதுவீர்?'' இவன் கேட்க அவனுடைய சாதாரண பார்வை கூர்மையடைவது போலத் தெரிந்தது.

''எதை எழுத வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?'' சபேசன் குரலில் நையாண்டி இருப்பதாகப் பட்டது.



''நீர் எழுதுவது எப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க யார் நான்?'' பரமநாதன் விட்டுக் கொடுக்காமல் சொன்னான்.

''தமிழ் எழுத்தாளர்கள் என்ன எழுதுவது என்று தெரியாமல் திண்டாடுகிறார்கள். இலக்கியம் படைக்க எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன என்பதைத் தெரியாத எழுத்தாளர்களால் தான், இன்றைய தமிழ் எழுத்துலகம் பிரச்சினைக்குரியதாக இருக்கிறது'' சபேசன் சொல்ல பரமநாதன் தர்ம சங்கடத்துடன் தலையாட்டினான். பத்து வருடங்களாகக் கிட்டத் தட்ட எந்த தமிழ் நாவலும் எந்தத் தமிழ்ப் புத்தகங்களும் படிக்கவில்லை என்று சொல்ல நினைத்தான்.

''எதை எழுத வேண்டும் என்பது பிரச்சினை என்று நான் நினைக்கவில்லை. எழுத வேண்டிய பொருளை மக்களுக்குத் தேவையான விதத்தில் படைப்பது தான், ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு எழுத்தாளனின் பங்காக இருக்க வேண்டும் என்பது என் கருத்து''

சபேசனுடன் இலக்கிய தர்க்கம் செய்யவா லண்டனிலிருந்து ஒரு மாத லீவில் வந்தான்?

இலக்கியம் இலக்கியம் என்று இலட்சியம் பேசும் கலைஞர்கள் என்னதான் படைத்து விட்டார்கள் என்று அவனுக்குத் தெரியவில்லை. இலங்கை எழுத்தாளர்கள் எத்தனைபேர் வெகுஜனமக்களின் பிரச்சினைகளை எழுதுகிறார்கள்? தற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் புரிந்து கொள்ள முடியாததால் - நீண்ட காலமாய் ஒன்றும் உருப்படியாய்த் தெரிந்து கொள்ளாததால், பரமநாதன் மௌனமாய் இருந்தான்.

''நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' சபேசன் சாதாரணமாகக் கேட்டான். முதற்தரம் பரமநாதன் சபேசனை முழுக்க முழுக்க எடை போட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டு வளர்ந்த தோற்றம். தீட்சண்யம் பொருந்திய கண்கள்; அளவாக எடுத்து ஒட்டியதுபோல மூக்கும் வாயும்.

பானுமதி பைத்தியமாக இருப்பதில் ஆச்சரியமில்லை. அவன் இப்படி எடை போட்டுப் பார்த்தது சபேசனுக்குப் பிடிக்காமலோ தர்ம சங்கட மாகவோ இருந்திருக்கவேண்டும்; மறுபக்கத் திரும்பிக் கொண்டான் அவன்.

மெல்லிருளில் நெஞ்சம் புதையக் கொஞ்சும் காதலி போல் நீளலைகள் நீண்ட அடிவானத்தின் மார்பில் அமை தியாகக் கிடந்தன.

''பானுமதி உம்மைப் பற்றிச் சொன்னாள்'' நேரடியாக விடயத்துக்கு வருவதைத் தவிர, வேறு வழி தெரியவில்லை பரமநாதனுக்கு. அது பிழையாகவும் தெரியவில்லை.

''ஓ'' அவன் ஸ்டைலாகத் தலையையசைத்து விட்டுப் பரமநாதனைப் பார்த்தான். என்ன சொன்னாள் என்று கேட்டிருந்தால் 'நீ பைத்தியம் பிடித்து தமிழர் விடுதலை பேசிக் கொண்டு திரிகிறாய்' என்று நேரடியாகச் சொல்ல விரும்பினான்.

''குடும்பப் பொறுப்புள்ளவர்கள் மற்றவர்களுக்குப் பச்சாதாபப்படுவதைக், கொஞ்சம் ஒதுக்கி வைத்தால் நல்லது என்பது என் அபிப்பிராயம்'' பரமநாதனுக்கு மனதுக்குள் திருப்தி.

சண்டையும் தர்க்கமும் உண்டாகாத விதத்தில் சம்பாஷணை தொடக்கி விட்ட நிம்மதி. அது நீண்ட நேரம் நிலைக்கவில்லை, சபேசனின் அடுத்த கேள்வியின் பின்.

''அப்படித்தான் நினைத்து உங்களை நம்பிய கார்த்திகாவை மறந்தீர்களா?

பரமநாதனுக்கு இது, எதிர்பாராத கேள்வியல்ல. யாரோ ஒருநாள் நேரடியாகக் கேட்பார்கள் என்று மனம் உறுத்திக் கொண்டுதான் இருந்தது.



''சபேசன், நடந்த போன காரியங்களுக்கு நான் விளக்கம் சொல்ல அவசியமில்லை. தனிப்பட்ட விடயங்களைக் கதைக்க நான் வரவில்லை.''

பரமநாதன் சொன்னது சபேசனுக்கு வினோதமாக இருந்திருக்க வேண்டும்.

''எனது தமக்கையின் வாழ்க்கைப் பிரச்சனை என் தனிப்பட்ட பிரச்சினையுடன் சம்பந்தமில்லை என்றால், என்னென்று உங்கள் தங்கச்சியின் பிரச்சினை, உங்கள் தனிப்பட்ட பிரச்சினையாக இருக்கும்?''

பரமநாதனுக்கு அவன் கேள்வி எரிச்சலையுண்டாக்கியது. காரணம் தனக்கு மறுமொழி முடியாதது என்று நினைத்தான்.

அவன் தர்ம சங்கடம் நிலைக்குமுதல் மெல்லிருளின் அமைதியைக் கலைத்துக் கொண்டு ''ஹலோ'' என்ற இனிமையான குரல் கேட்டது.

பார்க்காமலே அடையாளம் காணலாம். தன்னைக் கடந்து போன ஆங்கிலேயர் நடுவில் அவள் நின்றாள்.

எலிஸபெத் பேக்கர்!

நீண்ட பாவாடை, பட்டிக் பிளவுஸ், தலை உச்சிக் கொண்டை; கை நிறையக் காப்புகள்.

'ஹிப்பி' போலத் தெரிந்தாள் மங்கிய நிலவொளியில். அவள் ''ஹலோ'' என்று சொல்லி விட்டு எழுந்தான். அவளுடன் வந்தவர்கள் ''சீ யூ லிஸா'' சொல்லி விட்டுப் போய் விட்டார்கள்.

சபேசனுக்கு லிஸாவை அறிமுகப்படுத்தினான். சபேசன் போக யோசிப்பான் என்று லிஸா நினைத்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிஸா போய் விடுவாள் என்று சபேசன் நினைத்திருந்தால் அவனும் பிழை.

இருவரும் தர்ம சங்கடத்துடன் பேச்சை ஆரம்பிக்க யோசிப்பது தெரிந்தது.

''உண்மைப் போலத்தான் லிஸா பேக்கரும் ஒரு எழுத்தாளி'' என்றான் பரமநாதன். அவர்கள் இருவருக்குமுள்ள ஒற்றுமையை வெளிப்படுத்த அவன் முயற்சி செய்தான்.

லிஸாவின் முகம் நிலவொளியில் பளிச்சிட்டது.

''என்ன எழுதுகிறீர்கள்?'' என்றாள் ஆர்வத்துடன். சபேசன் அவளை மேலும் கீழும் பார்ப்பது தெரிந்தது.

''தற்போது தமிழரின் பிரச்சினையை, இலக்கியம் என்பது எழுத்தாளன் தான் வாழும் காலத்தின் பிரச்சினைகளைத் தான் காணும் மனிதர்களின் பிரச்சினையை வெளிப்படுத்த எழுதப் படவேண்டும் என்பது என் அபிப்பிராயம். அப்படி எழுதப் படாமல் வெறும் பெயருக்கும், புகழுக்கும் எழுதுவது இலக்கியத் திறமையை விபச்சாரம் செய்வது போல் என்பது என் அபிப்பிராயம். நடைமுறை வலிமையற்ற இலக்கியத்துக்கு எந்த மதிப்பும் இருக்காது என்பதும் என் அபிப்பிராயம்''

சபேசனின் நீண்ட விளக்கம் அவளுக்கு சந்தோஷம் கொடுத்திருக்க வேண்டும்.

''எக்ஸாக்ட்லி! எக்ஸாக்ட்லி!'' என்று கூவினாள்.

தன் பெண்ணுரிமைப் பிரசங்கத்தை அவள் தொடங்காமல் இருக்க வேண்டும் என்று மனத்துக்குள் வேண்டிக் கொண்டான் பரமநாதன்.

''எழுத்தாளரின் பணி சரித்திர ஆசிரியனின் பணியை விட முக்கியமானது என்பது என் கருத்து. ஆயிரம் ஆயிரம்



ஆண்டுகளாகச் சரித்திர ஆசிரியர்கள் எப்போதும் தனிப்பட்ட மக்களுக்குப் பிரபல்யம் கொடுத்து ஒருதலைப்பட்ட சரித்திரம் தான் படைத்திருக்கிறார்கள். ஒரு சமுதாய, ஒரு இனத்தின் பிரச்சினை எங்கே தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது?''

சபேசன் குரலில் வேகம். பரமநாதனுக்குத் தெரியும் அவன் இலங்கைப் பிரச்சினையைத் தொடங்குகிறான் என்று. எலிஸபெத்துக்கு முன்னால் சபேசனுடன் வாக்கு வாதப்பட விரும்பவில்லை.

சபேசன் போய் விட்டால் போதுமென்றிருந்தது.

''நீங்கள் என்ன விடயங்களில் அக்கறை எடுத்து எழுதுகிறீர்கள்?'' என்று எலிஸபெத்தைச் சபேசன் கேட்டான்.

''பெரும்பாலும் பெண்களின் பிரச்சினைகள். சாதி, மத கலாச்சார ஆண் வர்க்கத்தின் அடிமை கொள்ளும் மனப்பான்மைகளால் பெண்களை அடக்கி சில இடங்களில் அடிமை போலும் வைத்திருக்கிறார்கள். அது ஆண்களின் பிழை மட்டுமல்ல. பெண்கள் தங்களின் உரிமையும், சமுதாயத்தில் உள்ள நிலைமையும் இவ்வளவு தான் என்று நம்பிக்கொண்டிருப்பதும் தான், வேதனையான விடயம். இவைகளை ஆராய்ந்து எழுதுகிறேன்''

எலிஸபெத் சொன்ன விளக்கம் சபேசனுக்குச் சந்தோஷமளித்ததோ இல்லையோ, பரமநாதனுக்குத் திருப்தியாக இருந்தது.

''ஆனால், சபேசன் தனிப்பட்ட இனவாதத்தைத் தூக்கிப் பிடித்து எழுதுகிறார். இலக்கியம் இனவெறியைத் தூண்டுவதாக இருக்கக்கூடாது. கலைஞர்கள், சிற்பிகள், வெறும் மண்ணிலும் கல்லிலும் சிலையமைப்பவர்கள். அதைக் கலைக் கண்ணோடு, ஆக்க உணர்வோடு படைக்க வேண்டும். அழிவுகளின் அடிப்படையைத் தூண்டத் தக்கதாக எழுதி இளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையினரை வழிதிருப்பக் கூடாது. எங்கே வெற்றி கிடைக்கும் எங்கே வேரோடு கொள்கைகள் பிடுங்குப்படும் என்ற தெளிவான சண்ணோட்டம் இருக்க வேண்டும்.''

பரமநாதன் பொதுப்படையாகச் சொன்னான். அவன் எதைத் தாக்கிப் பேசுகிறான் என்று சபேசனுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

''உலகத்தில் எந்த மூலையிலும் நான், என் உரிமை, எங்கள் கடமை என்று ஒவ்வொரு இன மக்களும் தங்கள் உரிமைகளுக்குப் போராடுகிறார்கள். எந்த முற்போக்குவாதியும் அடக்கப்பட்ட மக்கள் அடங்கியிருப்பது தான் சரி என எழுத மாட்டான். அப்படி யாரும் எழுதினால் அவர்கள் இலக்கியத்தைச் சந்தர்ப்பங்களுக்கு விற்றுப் பிழைக்கும் விபச்சாரிகள். எனது இனம் இலங்கையில் திட்டம் போட்டு நசுக்குப்பட்டு, இனரீதியாக, மொழி ரீதியாக, மனிதத் தன்மையற்று அழிக்கப்படும் போது, முற்போக்கு என்ற பெயரில் நான் மூன்றாம் பேர்வழியின் பிரச்சினையை என் எழுத்தில், வடிக்கப் போவதில்லை. மொஸ்கோவில் மழை பெய்தால் பெரிய கடையில் குடை பிடிக்கும் கலைஞர்கள், சீனாவின் துக்கத்துக்குச் சினம் காட்டும் சிற்பிகள், வெறும் வசனப் போர்வையில் வெறும் சதை இலக்கியம் படைக்கும் விண்ணர்கள் என்னைப் பார்த்து - என்போன்றவர்களைப் பார்த்து இன வாதத்தைத் தூண்டும் இலக்கியம் படைக்கிறார்கள் என்று சொல்ல, என்ன உரிமையும் இருப்பதாகத் தெரியவில்லை''

சபேசன் குரலில் நெருப்பு வெடித்தது. தெகிவளைக் கடற்கரையில் அலை தவழ்ந்த கடல் அவன் ஆவேசத்தில் நிலையற்று நின்றதுபோல இருந்தது. மெல்லிய நிலவொளி மூச்சற்று ஒழிந்தது ஒரு முகிலில். பரமநாதன் மௌனமாக இருந்தான்.

சபேசன் போன்ற தமிழ் இளைஞர்களின் உணர்ச்சி இப்படி வெடித்துக் கிளம்புவது ஆச்சரியமாகத் தோன்றவில்லை ஒரு விதத்தில்.



சத்தியமூர்த்தியின் எரிந்த வீடு, சத்தியமூர்த்தியின் முறிந்த கால் என்பவற்றைப் பார்த்து தனக்கு வந்த வேதனைகளை ஒப்பிட்டுப் பார்த்தான். இலங்கையில் இருந்து தானும் இந்த வேதனைகளை அனுபவித்தால் தானுமொரு சபேசனாக இருக்க மாட்டேனா என்று, அவன் யோசித்தான்.

ஆனால் ஒரு சில தமிழ் இளைஞர்கள் உணர்ச்சி வேகத்தில் செய்யும் - செய்ய நினைக்கும் சில காரியங்கள் ஒரு இனத்தையே புதை குழிக்கு இட்டுச் செல்லலாமே?

பரமநாதன் சபேசனின் உணர்ச்சிவசமான பேச்சால், தன் மனத்தில் எந்தவிதமான சலனமும் உண்டாகவில்லை என்று காட்ட நினைத்தான்.

குரலைச் சாதாரணமாக வைத்துக் கொண்டான்.

''சபேசன், அரசியலில் இருப்பவர்கள் எந்த நாட்டிலும் இப்படி எத்தனையோ பித்தலாட்டங்கள் செய்து விட்டு, எல்லாவற்றையும் காலப் போக்கில் மறைத்து விடுகிறார்கள். ஆனால் தனிப்பட்ட ஒரு சில இளைஞர்களின் குழுக்களோ, அவர்களின் உணர்ச்சிகளின் வேகமோ ஒரு இனத்தை அழிவுப் பாதையில் இட்டுச் செல்வது ஒரு சமுதாயத்துக்குச் செய்யும் நன்மையாக முடியாமற் போவது தெரியவில்லையா?''

பரமநாதன் யாரோ போல் பேசுவதாகப் பட்டது அவனுக்கு. சபேசன் நிமிர்ந்து பார்த்தான். எலிஸபெத் இவர்கள் தர்க்கத்தில் இடையில் குறுக்கிடாமல் மௌனமாக இருந்தாள்.

''தனிப்பட்ட சில குழுக்கள்; அவர்களின் உணர்ச்சிகள்!'' ஏதோ தலையங்கத்தை வாசிப்பது போல் இருந்தது, சபேசனின் குரல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்களைப் போல் சுயநல வாதிகளுக்கு என்ன உரிமை இருக்கிறது, இலங்கையில் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று, தீர்மானிக்க'' சபேசன் கத்தினான். சபேசன் குரல் ஆவேசத்துடன் ஒலித்தது.

''இலங்கையில் இருக்கா விட்டாலும் நான் தமிழன் என்பதை மறக்கவில்லை'' பரமநாதனுக்கு எரிச்சலாக இருந்தது. எலிஸபெத்துக்கு முன்னால், அவன் இப்படித் தாக்குவது.

''தமிழர்கள்! தமிழர்கள்!'' சபேசன் வாய் விட்டுச் சிரித்தான். பைத்தியமோ இவனுக்கு என்று கோபம் வந்தது பரமநாதனுக்கு.

''தமிழன் மட்டும் என்றில்லை. எந்த ஒரு ஜீவனும் தன் குடும்பம், ஒரு ஏகாதிபத்திய அரசின் கையில் நிலை குலைந்து போவதை வெறும் கண்களோடு பார்த்துக் கொண்டிருப்பான் என்பது, நம்ப முடியாமல் இருக்கிறது. மிஸ்டர் பரமநாதன், உமது தத்துவம் எனது கொள்கைகளுடன் ஒரு நாளும் ஒத்துப் போகாது. உமது தம்பியை உமது கண்கள் முன்னால் உடுப்புப்போட்ட உத்தியோகத்தர்கள் சித்திரவதை செய்யவில்லை. பின்னர் உருத்தெரியாமல் ஆக்கி விட்டுப் பிணத்தை பண்ணை றோட்டில் போட்டதை நீர் பார்த்திருக்க மாட்டீர். எந்தத் தமிழ்ப் பெண், தன் உயிரிலும் மேலாகத் தன் கற்பைப் பெரிது என்று நினைக்கிறாளோ, அதை இனவெறியர்கள் பாழ்படுத்த நீர் பார்த்து மௌனமாக இருப்பீர் என்று என்னால் நம்ப முடியாமல் இருக்கிறது. எனது தம்பியின் உடல் பண்ணைக் கடற்கரையில் கிடந்த நேரம், நான் சாத்விகம் பேசவில்லை என்று உம்மைப் போன்ற முட்டாள்கள் நினைக்கலாம். வயிற்றுப் பிழைப்புக்காக இனத்தின் வேதனையை மறந்து லண்டனில் ஒளித்துக் கிடப்பவர்கள், எங்களுக்கு உபதேசிகளாக இருக்க வேண்டாம். என் தமக்கை கற்பழிக்கப்பட்டபோது நான் கண்ணகிக்குக் கற்



சிலை எழுப்புவது பற்றி கலாசாரப் பிரசங்கம் எழுதவில்லை என்று தான், உம்மைப்போல் சந்தர்ப்பவாதிகள் நினைப்பார்கள்.

உமது தம்பி இறக்கவில்லை அநியாயமாக. உமது தமக்கை கற்பழிக்கப்படவில்லை காடைச் சிங்களவர்களால். உமக்கு எங்கே இருக்கப் போகிறது உணர்ச்சி? இதெல்லாம் யாருக்கோ நடக்கிறது. உம்போன்றவர்கள் என்னைப்போன்ற ஏழைகளாய் இல்லாததால் தப்பி விட்டீர்கள்''

சபேசன் போய்க் கொண்டிருக்கிறான் என்ற உணர்ச்சி கூடத் தெரியாமல் கல்லாய்ச் சமைந்திருந்தான் பரமநாதன்.

''என் தம்பி உருக்குலைந்து.. என் தமக்கை கற்பிழந்து'' கரை தவழும் கடல் அலைகள் பயங்கரமாகச் சொல்லிச் சத்தம் போடுவதுபோல் இருந்தது. ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன் பார்த்த கார்த்திகாவின் முகம் ஞாபகம் வந்தது.

'கார்த்திகா'

கார்த்திகா எதை ஒரு தமிழ்ப் பெண் தன் உயிரிலும் மேலாக நினைத்தாளோ, அதையிழந்து நீயிருக்க...... தான் இருந்த கற்பாறையுடன் அவன் சங்கமமாகி விடவேண்டும் போல் இருந்தது.

என் உயிரினும் மேலாக ஒரு காலத்தில் இருந்தவள் உணர்ச்சி வெறிகொண்ட இனவாதிகள் கையில்...... என் தோள்களில் மாலையெனப் புரண்ட அவள் கொடியுடல், இந்தக் கொடுமையாளர்கள் பிடியில்...... எனக்காக எவ்வளவு காலமும் காத்திருப்பதாகச் சொன்ன அவள் உயிர், உணர்வு, அவளின் பெண்மை......

''ஓ!, நோ......, ஓ! நோ......'' அவன் வாய் விட்டுச் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையைப் பிடித்துக் கொண்டு பைத்தியம் போல் சொன்னான். மெல்லமாகத் தோள்களில் கை வைத்தாள் எலிஸபெத்.

''உங்கள் நண்பர் உங்களை ''அப்செட்'' பண்ணி விட்டார் போல் இருக்கிறது'' அவளின் பரிவு இன்னும் அவன் வேதனையைத் தூண்டி விட்டது. 'கடல் எழுந்து விழுங்காதோ' எனப் பைத்தியக்காரன் போல் நினைத்தான்.

கார்த்திகா என்று பெயர் சொல்லிக் கத்தியிருப்பான் எலிஸபெத் இல்லாவிட்டால். 'கார்த்திகா'

நீர் துவண்ட அவள் விழிகள் அவன் நினைவில் வந்தன. என்ன கொடுமை.

என்ன கொடுமை.

இப்படி எத்தனை கார்த்திகாக்கள் பறிபோய் இருப்பார்கள் இந்தப் பண்பு கெட்ட அரசாங்கத்தால்.

கொடுமையிலும் கொடுமை தன்னைப் பாதுகாக்க வேண்டிய தாயே, தன் குழந்தைக்கு நஞ்சு கொடுப்பது; தன் ஆத்மாவைக் கொலை செய்வது. தன் பெண்மையைப் பறி கொடுத்த கார்த்திகா போன்ற பெண்களின் கற்புக்கு, வலிமை இல்லையா?

அநியாயம் நிலைப்பதில்லை என்பார்களே, இப்படிக் கொடுமை செய்து அரசோச்சும் அரசு ஏன் இன்னும் எரிந்தொழியாமல் இருக்கிறது? அவன் நினைவுகள் பொரிந்தன.

லண்டனில் இருந்தால் இதெல்லாம் தெரியுமா?

''நான் போகட்டுமா'' எலிஸபெத் கேட்டாள். அவனை நிமிர்ந்து பார்த்தான்.

ரஷ்யன் ஹொட்டேல் ஒன்றில் அவன் கருத்தைக் குழப்பிய அழகாகத் தெரியவில்லை, அவள் முகம்.



பரிவாக - தாய்மையுடன்......

''ஓ! எலிஸபெத்'' அவன் அவள் கைகளில் தன் கைகளைப் பிணைத்துக் கொண்டான்.

சொல்லலாமா என்னை முத்தமிடத் தயங்கிய என் காதலியை, எப்படிச் சிங்கள முரடர்கள் கற்பழித்தார்கள் என்று. என் அருமைக்கார்த்திகா கற்பிழந்தாள் தமிழ்ப் பெண் என்ற குற்றத்தால்,

இவளுக்கு விளங்குமா காதலைப் பற்றி?

''எப்போதாவது காதலில் மாட்டுப் பட்டிருக்கிறாயா?'' அவனின் கேள்வி அவளுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கி இருக்க வேண்டும்.

சபேசன் அரசியலைப் பற்றிப் பேசி விட்டுப் போனபின், இவன் ஏன் காதலைப் பற்றிப் புலம்புகிறான் என்று தெரியவில்லை அவளுக்கு.

''என்ன விதமான காதல்'' அவள் கேட்டாள். 'என்ன விசர்க் கேள்வி இது?

''கணவர் தரும் காதலா, காதலர் தரும் காதலா, சினேகிதரிடமிருந்து பெறும் காதலா?''

அவளும் விசரியா?

ஏன் எல்லோரும் விளங்காத விதத்தில் கதைத்து அவன் மனத்தை புண்படுத்துகிறார்கள்?.

''எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.'' அவன் தலையாட்டினான்.

''What kind of love do you want to talk about? The love you get from your husband or wife? The other kind is

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the one you get from your lover? They are very different, One, is just sex; the other is real love, based on friendship with no sex but... but...'' அவள் சொல்ல முதல் அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

''Good Lord'' அவன் சிரித்தான். வேதனை கலந்த சிரிப்பு.

''என்ன சிரிக்கிறீர்கள்'' அவள் கேட்டது குழந்தைத் தனமாக இருக்க வேண்டும்.

''உம்மைச் சொல்லிப் பிரயோசனமில்லை.'' அவன் முனகிக் கொண்டான்.

கார்த்திகாவைப் பற்றி எப்படித் திடீரென்று தன் உணர்ச்சிகளைச் சாகடிப்பது என்று தெரியவில்லை. இல்லா விட்டால், பைத்தியம் பிடிக்கும் போல் இருந்தது.

''நான் லண்டனில் இல்லையே என்று துக்கப்படுகிறேன்'' அவன் பெருமூச்சு விட்டான்.

அவள் ஏன் என்று பார்த்தாள். ''குடிக்க வேண்டும் போல் இருக்கிறது'' ''I just want Vodka'' அவன் பல்லைக் கடித்துக் கொண்டான்.

''வொட்காவா?'' அவள் அவனை வியப்புடன் பார்த்தாள். ரஷ்யாவில் ஒரு துளி வொட்காவைத் தொடாதவன் தெகிவ ளைக் கடற்கரையில் கேட்டால் யார் நினைக்க மாட்டார்கள் விசரன் இல்லை என்று?

''என் அறைக்கு வந்தால் பார்க்கலாம்.'' அவள் சொன் னாள். இருவரும் காலி ரோட்டில் ரக்ஸி எடுத்தார்கள்.

அவளின் அறைக்குப் போகவில்லை. மவுண்ட்லெவனியா வில் ஒரு ஹொட்டேலுக்குப் போனார்கள். ''இங்கு வொட்கா கிடைக்குமா'' என்றான்.



அவள் சொன்னாள் ''நேற்றுத்தான் குடித்தோம். இந்த ஹொட்டேலில் இன்று முடிந்திருக்காது''

வெயிட்டர் வந்தான். வொட்காவில் ''பிளடிமேரி'' செய்து தரச் சொல்லிக் கேட்டான் பரமநாதன். இரு பங்கு வொட்கா, ஒரு பங்கு தக்காளி ரசம், கொஞ்சம் எலுமிச் சம் பழம், நிறைய ஐஸ்......

எலிஸபெத் வேடிக்கையாகப் பார்த்தாள் பரமநாதனை. அவன் ''பிளடிமேரி'' கேட்ட விதம்: வெயிட்டர் முழுசிய விதம்; கொண்டு வந்து கொடுத்தபோது குடித்த விதம்!

ரஷ்யாவில் கண்ட பரமநாதனைத் தெரியவில்லை அவளுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

எதையோ கண்டு பயந்தோடும் குழந்தைபோல் இருந்தது அவன் தோற்றமும் செய்கைகளும்.

ஏலுமான செதியில் குடித்து இருக்கும் கொஞ்ச நஞ்சு சுய உணர்வையும் மழுங்கடிக்க முயற்சிப்பது தெரிந்தது வொட்கா குடித்த விதத்திலிருந்து.

'கேட்கலாமா என்ன துக்கம் என்று?'

இவளைப்பார்த்து ''என்ன பார்க்கிறாய் உமக்கு வேண்டாமா வொட்கா? Why don't you join me? I nead some one to join me''

அவன் உளறுவதுபோல் பட்டது. காசைக் கொடுத்து விட்டு வெளியில் கூட்டிக் கொண்டு வந்தாள்.

மௌண்ட்லவேனியாக் கடற்கரை அமைதியாக இருந்தது.



''வீட்டுக்குப் போகப்போகிறீர்களா?'' அவள் கேட்டாள். கடல் அலைகள் மெல்ல புரண்டு கொண்டிருந்தன இனிமையான இளம் காதலர்கள் போல்.

''லிஸா May I kiss you?'' அவன் தள்ளாடியபடி நடந்தபடி - இவளையணைத்தபடி கேட்டான்.

அவள் பதில் சொல்லாமல் உலுக்கிக் கொண்டாள் தோள்களை. அவன் சுய நினைவில் அப்படிக் கேட்க மாட்டான் என்று எதிர்பார்த்திருக்க வேண்டும்.

அவள் மறுமொழி சொல்லாமல் நடந்தாள்.

ஒன்றிரண்டு உல்லாசப் பிரயாணிகளும் தங்கள் காதலிகளின் அணைப்புடன் எழுந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

''லிஸா; எனக்கு ஒரு காதலியிருந்தாள். உன் அதிகாரப்படி செக்ஸ் ஒன்றும் இருக்கவில்லை, இளமையின் துடிப்பை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள. மனைவியிருக்கிறாள் என் குழந்தையை, உடமையை,என் உடம்பைப்பகிர்ந்துகொள்ள. இப்போது யாரும் இல்லை அருகில் என் வேதனைகளைப் புரிந்து கொள்ள, என் வேதனைகளைப் பகிர்ந்துகொள்ள Will you be my friend?'' அவன் பரிதாபமாகக் கேட்பது போல் இருந்தது அவளுக்கு. அவன், பிறந்த நாட்டு மண்ணில் அன்னியன் போல் நடப்பதாகப் பட்டது. அவன் தள்ளாடிக் கொண்டேயிருந்தான். கையில் அவன் குடித்து முடிக்காத வொட்காப் போத்தல் இருந்தது.

''இலங்கைக்கு வந்தது வொட்கா குடித்து சந்தோசப்படவா?'' அவள் கேட்டாள். இருவரும் வெறும் மணலில் உட்கார்ந்தார்கள். இந்த நேரத்தில் இருளில் இந்தப் பக்கக் கடற்கரைகளில் இருப்பது அபாயம் என்று அவளுக்குச் சொல்லியிருக்கிறார்கள். திரும்பிப் பார்த்தாள். தூரத்தில் ஹொட்டேல் வெளிச்சமும் அதன் வெளிச்சத்தில் இன்னும் மனிதரின் ஆரவாரமும் கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உமக்கு இலங்கை பிடித்திருக்கிறதா?'' அவன் வாய் தடுமாறுவதாகப் பட்டது.

''பிடிக்கிறதோ இல்லையோ என்று தெரிய முதல் போக வேண்டி வந்து விட்டது'' அவள் குரலில் துக்கம் தொனிப் பதை உணரும் நிலையில் இல்லை.

''ஏன் போக வேண்டும்? இந்தியாவுக்கு இன்னும் ஒரு கிழமையிற்தான் போக வேண்டும் என்று சொன்னாய்.'' குரல் இழுபட்டு சொற்கள் நொண்டின வெறியில்.

அவள் அவனின் கேள்விகளுக்கு மறுமொழி சொல்லா மல் மணலைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

தென்னங் கீற்று இடுக்குகளால் இளம்பிறை எட்டிப் பார்த்தது நாணத்துடன்.

''என் சகோதரி இறக்கும் தறுவாயில் இருக்கிறாள் நியூ யொர்க்கில். தந்தி வந்தது. நாளைக்குப் பிளேனில் வெளிக் கிடுகிறேன்.''

அவள் குரல் கலங்க அவன் பரிதாபத்துடன் அணைத் துக் கொண்டான். அவனை யாரும் பார்த்தால் என்ன? அவள் அவனின் சினேகிதி. யாருக்கு யார் ஆறுதல் சொல்வது?

''அவளின் திருமண வாழ்க்கை சரியில்லை. எத்தனையோ தரம் தற்கொலை செய்ய முயன்றாள். இப்போது தான் சரி வந்தது போலும் ''வேதனைகளும் வெறுப்புக்களும் உலகத் தில் எந்த மூலையிலுமா?

அவள் வேதனையுடன் தனக்குத் தானே முனகிக் கொண் டாள்.

''ஓ... லிஸா நான் உம்மிடம் ஆதரவு கேட்க வர நீர் யாரிடம் போவதென்று நிற்கிறாய்''



இருவரும் ஒருவர் அணைப்பில் ஒருவர் இருந்தார்கள். வெறும் சினேகித பூர்வமானது.

ஒரு கொஞ்ச நேரத்துக்கு முதல் உன்னை முத்தமிடலாமா என்று கேட்டது, இப்போது அவனுக்கு எரிச்சலான நினைவை உண்டாக்கியது.

''உங்களுடன் நண்பர் இருந்ததைக் குழப்பி இருக்கக் கூடாது.'' அவள் மன்னிப்புக் கேட்கும் குரலில் சொன்னது அவனுக்குப் பிடிக்கவில்லை.

''அவன் என் நண்பன் இல்லை. என் தங்கையின் காத லன். ஒரு காலத்தில் என் காதலியாய் இருந்தவளின் தம்பி''

மிச்ச சொச்ச வொட்காவும் வாயில் போய்க் கொண் டிருந்தது. ''ஏன் உங்களுடன் சண்டை போட்டார்?,, லிஸா குழப்பத்துடன் கேட்டாள்.

''அவன் சண்டை பிடிக்கவில்லை. சில உண்மைகளைச் சொன்னான். சொன்ன விதம் உணர்ச்சிகரமாக இருந்தது'' பரமநாதனின் குரல் கரகரத்தது.

''சொறி'' என்றாள் அவள்.

''யாரும் சொறி சொல்லிப் பிரயோசனமில்லாத சில காரியங்களைச் சொல்லி விட்டுப் போனான்.''

அவன் பெருமூச்சு விட்டான். அவன் கண் கலங்குவது தெரிந்தது. அவள் பதறி விட்டாள். இப்படித் துயரான நிலையில் எந்த ஆண்களையும் அவள் காணவில்லை இதுவரைக் கும். ''என்ன நடந்தது? எனக்குச் சொல்லி ஆறுதல் கிடைக் குமென்றால் சொல்லுங்கள்'' அவள் பதறிப் போய் அவனைக் கேட்டாள். மெல்லிய நிலவொளியில் அவள் முகம் கருணை பொதிந்து இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கை சாகக் கிடக்கிறாள் என்று தந்தி வந்து, போக முதல் சொல்லி விட்டுப் போக வந்தவளிடம் தன் வேதனைகளைச் சொல்லியழுவதா? யாரிடமாவது சொல்லி அழக்கூடிய வேதனையா அது? கஷ்டப்பட்டுத் தன் துன்பத்தை அடக்க அவன் படும்பாடு, அவளால் சகிக்க முடியாததாக இருந்தது.

''இலங்கை அரசியல், அதனால் எங்கள் இனம் படும் துன்பங்களைப் பற்றிச் சபேசன் கதைத்தது ஞாபகமா?'' அவனின் கேள்விக்கு அவள் தலையாட்டினாள்.

''அதில் சொன்னானே சில விடயங்கள். அவைகளைத் தாங்க முடியாமல் இருக்கிறது........ உதாரணமாக அவன் தமக்கை.........''

அவன் குலுங்கிக் குலுங்கியழுதான்.

'அவன் தமக்கை ...... ஒரு காலத்தில் இவன் காதலி!'

''உமக்குத் தெரியாது தமிழ்ப் பெண்கள் ஒழுக்கத்தை எப்படிப் பாதுகாக்கிறார்கள் என்று. வெறும் புத்தகம் படித்து உணர முடியாது அவர்கள் உணர்ச்சிகளை. இப்படியான இரவுகளில் எத்தனையோ தரம் சேர்ந்திருந்தோம் யூனிவசிட்டியில் படிக்கும் போது. இளமை, தனிமை, காதல் உணர்ச்சி எல்லாவற்றுக்கும் மேலாகப் போற்றிக் காத்த அவள் பெண்மை......''

அவன் குலுங்கி அழுதான்.

''ஐயாம் சொறி'' அவளுக்கு அவனை எப்படித் தேற்றுவது என்று தெரியவில்லை. அவளுக்கு விளங்கியது அவன் ஆத்திரமும் படும் வேதனையும். எந்த இலட்சியங்களுக்காக அவள் எழுதுகிறாளோ, உலகம் சுற்றி அனுபவப்படவேண்டும் என்று வந்திருக்கிறாளோ, அந்தக் கொடுமையை அவன் வாய் விட்டழுதபோது மனம் அதிரக் கேட்டிருந்தாள்.



அவனுக்கு உணர்ச்சிகள் மரத்துப் போவது போல் இருந்தது. நீண்ட நாட்களுக்குப் பின் குடித்ததால் வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது.

''என்னைக் காதலித்தவளுக்கு, எந்தச் சூழ்நிலையில் கல்யாணம் செய்தேன் என்று சொல்ல முடியாமல் இருக்கிறேன். கல்யாணம் செய்தவளுக்குக், காதலித்தவளை நினைத்து வேதனைப்படுவதை மறைத்து வைத்துத் துடிக்கிறேன். நீ யார்? நேற்றுப் பறந்த பிளேனில் கண்ட பிரயாணி, உனக்கேன் பிதற்ற வேண்டும்?'' அவன் அலட்டினான்.

வாயாடியான எலிஸபெத் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் உளறுவதெல்லாம் அரை குறையுணர்வில் என்று தெரிந்தது.

''உமக்குத் தெரியாது, கார்த்திகா இன்றாலும் என் மனைவியை விவாகரத்து செய்து விட்டுத் தன்னிடம் வரச் சொன்னால், லண்டனுக்குப் போகாமல் நின்று விடுவேன்.''

அவன் பிதற்ற ஆரம்பிக்க அவள் பயந்தாள். எழும்பி ஓடி விட்டால் அவன் என்ன செய்வான்?

இனி அவனை எப்போது காணுவாள்? இன்று நடந்தவைகள் அவனுக்கு ஞாபகம் இருக்கப போவதில்லை. எப்போதாவது காணுவாளா?

இந்தியப் பிரயாணம் போய் விட்டது. எண்ணி வந்த திட்டங்கள் எல்லாம் பறிபோய் விட்டன. தமக்கை உயிரோடு இருப்பாளா இத்தனைக்கும் நியூயோர்க்கில? எப்போது லண்டனுக்குத் திருப்புவாள்? இவனை லண்டனில் காணுவாளா?

நாளைக்கு பத்து மணிக்கு விமானம். இன்று தான் தந்தி வந்தது. என்னென்ன எடுத்துப் பெட்டியில் வைத்திருக்கிறாள் என்று தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மெல்லமாகத் தலைசாய்வதிலிருந்து தெரிந்தது நித்திரையாகப் போகிறான் என்று.

❊ ❊ ❊

அவன் எழும்பும்போது எத்தனை மணி நேரம் என்று தெரியாது. மத்தியான வெயிலின் புழுக்கம் ஜன்னலால் வந்த காற்றை மீறிக்கொண்டு அவனைக் குளிப்பாட்டியது.

தலை விண் விண் என்று வலித்தது. வயிற்றைக் குமட்டியது. வொட்கா உண்மையாக இப்படி எல்லாம் செய்யாது அடுத்த நாள்.

என்ன கலந்து வைத்தார்களோ?

எப்படி வீடு வந்து சேர்ந்தேன்? என்ன நடந்தது? யாரைக் கேட்பது? ''மாமா எப்படி இருக்கிறது?'' கீதா எட்டிப்பார்த்துக் கேட்டாள். அவனுக்கு அவமானமாக இருந்தது அவளைப் பார்க்க. தள்ளாடித் தள்ளாடி காலி ரோட்டில் வந்திருப்பேனா? பாட்டும் பாடியிருப்பேனா பார்த்தவர்கள் சிரிக்க! எலிஸபெத் கொண்டு வந்து விட்டாளா? தமக்கை என்ன நினைத்திருப்பாள் வெள்ளைக்காரியுடன் திரிவதைப் பார்த்து!

தகப்பன் செத்து இரண்டு கிழமை கூட ஆகவில்லை இப்படித் திரிகிறான் என்று நினைக்க மாட்டாளா? மனைவியை விட்டு ஒரு கிழமையும் இருக்காமல் என்ன ஆட்டம் இன்னொருத்தியுடன் என்று, நினைக்க மாட்டாளா?

என்னென்று அக்காவின் முகத்தில் முழிப்பது? அவன் தயக்கம் தீரமுதல் மைத்துனரின் முகம் எட்டிப் பார்த்தது.

''எப்படிப் பார்ட்டி?'' மைத்துனர் கேட்டார். அவன் திணறினான் என்ன சொல்வது என்று தெரியாமல்.



''ரச்லிக்காரன் சொன்னான் உம்முடைய சினேகிதன் ஏற்றி விட்டதாக''

ரச்லிக்காரன்? பார்ட்டி? எலிஸபெத்தின் நினைவு வந்தது.

'எலிஸபெத்! எலிஸபெத்!' நீ கெட்டிக்காரி.

இங்கிலிஸ் பெண்ணானாலும் எங்களவர் நடுச் சாமத்தில் ஒரு ஆணையும் பெண்ணையும் கண்டால் பிள்ளை பெற வைத்துப் பெயரும் சூட்டி விடுவார்கள் என்பது உனக்கு எப்படித் தெரியும்?

''கௌரி நாளைக்கு வருகிறாள்.'' மைத்துனர் கதையைத் தொடங்கினார். மாப்பிள்ளை வீட்டார் மகாதேவன் போக முதல் தேவையான ஒழுங்குகளைச் செய்யுறன் எண்டு ஒத்தைக்காலில் நிற்கினம். பெடியன் ஒரு மாதத்தில் போகிறாராம்'' மைத்துனர் முணுமுணுத்தார்.

அவருக்கு பிடிக்கவில்லை மாமனாரின் முப்பத்தொன்று முடிய முதல் கௌரி லண்டனுக்குப் போவது இந்த நேரத்தில் பானுமதியைப் பற்றிக் கேள்விப் பட்டால் என்ன நடக்கும் வீட்டில்? ஏன் வந்தோம் இலங்கைக்கு என்றிருந்தது பரமநாதனுக்கு. நேற்று கார்த்திகாவைக் கண்டது முதல் யாரோ போல் இருந்தான். அவளைக் கண்டது மட்டுமல்ல அதன் பிறகு கேள்விப்பட்ட ஒவ்வொன்றும்........

அவன் பெருமூச்சு விட்டான்.

ஏரோப்ளொட் ரிக்கற், போகும் நாள் என்பனவற்றைத் திங்கட்கிழமை 'கொன்போம்' பண்ணி விட்டு யாழ்ப்பாணம் போக நினைத்தான். லண்டனுக்குப் போகும் நாள் நாளைக்கு வராதா என்று ஏங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு காலமும் ஆமைபோல் ஓட்டுக்குள் ஒழிந்து கொண்டிருந்தது போலவும் இப்போது தான் வெளிச்சத்தில் தடுமாறுவது போலவும் இருந்தது.

தான் செய்த ஒவ்வொன்றிக்கும் தன்னைத்தான் தேற்றிக் கொள்ள சொல்லிக் கொண்ட உண்மைகள் பூதாகர உரு வெடுத்துத் தன்னைப்படாத பாடு படுத்துவதாகத் தெரிந்தது.

இதெல்லாம் சகஜம், இதுதான் வாழ்க்கை என்று ஏற்றுக் கொண்டவை இன்று இருதயத்தை அழுத்துவது போன்ற பயம்.

அவன் வெள்ளவத்தைக் கடற்கரைக்கும் போகவில்லை. அன்றெல்லாம் சுருண்டு படுத்திருந்தான். இருந்தாற்போல் எலிஸபெத்தின் ஞாபகம் வந்தது. இப்போது மேற்கு நோக் கிப் பறந்து கொண்டிருப்பாள்.

'இரவு எப்படி நடந்தேன்? என்ன நினைத்திருப்பாள் என்னைப் பற்றி?

தன்னில் தனக்கு மட்டுமல்ல யாருக்குமே ஒரு மதிப்பும் இல்லாத மாதிரிப் பட்டது அவனுக்கு.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை. சத்தியமூர்த்தி தேடி வந்தான். சோர்ந்துபோய் இருந்த நண்பனைப் பாாத்து "ஏன் ஒரு மாதிரியிருககிறாய்?" என்றான். பரமநாதனுக்குச் சத்தி யமூர்த்தியில கோபம் வந்தது. சபேசனைக் காணும் போது அவன் இருந்திருக்கலாம் என்று நினைத்தான். சபேசனைப் பற்றிச் சொல்ல நினைத்தான். தான் பெரிய எழுத்தாளன் என்ற நினைவு அவனுக்கு, என்று திட்ட நினைத்தான். அக்காவுக்கு முன்னால் சபேசனைப் பற்றிக் கதைப்பது சரி யாகத் தெரியவில்லை. இருவரும் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு மிருகக் காட்சிச் சாலைக்குப் போகும் சாட்டில் போனார்கள். குழந்தைகள் மாமாவின் தாராளத்தில் மெய்



மறந்து ஐஸ்கிறீமும் இனிப்புமாக விழுங்கித் தொலைத்தார் கள்.

மாமாவின் வாழ்க்கை இருண்டு கிடப்பதை அறியாத குழந்தை மனங்கள். பெருமூச்சுடன், குதித்து விளையாடும் அந்தச் செல்வங்களைப் பார்த்தான்.

"சபேசன் முரட்டுப் பிடிவாதத்துடன் இருக்கிறான்" கீதா சின்னப் பெட்டையில்லை; பதினாலு வயது. தூரத்தில் இருந்தாள், தற்செயலாய்க் கேட்டாலும் என்று ஆங்கிலத் தில் சொன்னான்.

"என்ன செய்ய வேண்டும் என்று சொல்ல யோசித் தாய்?" வழக்கம் போல் தன் தாடியைத் தடவிக்கொண்டு நண்பனைப் பார்த்தான்.

"என்ன செய்வது என்று நான் எப்படிச் சொல்வது? உணர்ச்சி வசப்பட்டு முன்பின் நடப்பதை யோசிக்காமல், இலட்சிய வெறியில் பொலிசார் கையில் சாக வேண்டாம் என்று சொல்லப் பார்த்தேன்." பரமநாதன் வெறுப்புடன் சொன்னான்.

"இதுவரை காலமும் எங்களுக்குத் தலைவர்களாய் இருந் தவர்கள் விட்ட பிழையால் இன்றைய இளைஞர்கள் அவர் களை நம்பத்தயாராய் இல்லை. இத்தனை வருடமும் தமிழ்த் தலைவர்கள் என்ன செய்து விட்டார்கள்? இரண்டு இனக் கலவரத்தையும் சொல்ல முடியாத இன்னல்களையும்தான் காண வைத்தார்கள். பிழைக்க வழியில்லாத இளைஞர்கள் பிறநாடுகளுக்குப் போகிறார்கள். எத்தனை காலம் இப்படிப் போக முடியும்? சோசலிசம்தான் இதற்கெல்லாம் சரியான வழி என்று நம்ப மறுக்கிறார்கள். சிங்கள ஏழை மக்கள் எங்கள் தலைவர்கள் போன்ற பல சுயநலவாதிகளால் திசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பப்பட்டு இருக்கிறார்கள் என்பதை, எங்கள் இளைஞர்கள் உணரவேண்டும், நம்ப வேண்டும். வெறும் உணர்ச்சி வசப்படாமல் விடயங்களை ஆராயப் பழகவேண்டும்''

சத்தியமூர்த்தியின் பிரசங்கம் பரமநாதனின் காதில் ஏற வில்லை. ஏற்ற முயற்சிக்கவுமில்லை. பானுமதி தன்னை நம்பு கிறாள். தமையன் என்ற உரிமையில் அவனுக்குத் தெரிய வில்லை, அவளுக்கு எப்படி உதவுவது என்று.

சபேசனை லண்டனுக்குப் போய்ப் படிக்கப் பண்ணலாம் என்பதுதான் அவன் யோசனை. அந்தப் பேச்சை எடுக்க முதலே அவன் எரிந்து விழுந்து விட்டான்.

இனி அவனுடன் தான் கதைக்க முடியுமா? 'உனக்கும் எனக்கும் கதையில்லை. உமது தங்கச்சிக்கு ஏதும் கதையிருந் தால் அவள் என்னுடன் வைத்துக் கொள்ளலாம்' என்று தூக்கி எறிந்தால் என்ன செய்வது?

பரமநாதன் பரிதாபமாக முறையிட்டான் நண்பனிடம்.

''உண்மையில் பானுமதியில் அன்புள்ளவனாய் இருந்தால் பானுமதிக்காக எதையும் செய்யத் தயாராய் இருக்க வேண் டும்.'' பரமநாதன் ஆத்திரத்துடன் சொன்னான்.

குழந்தைகள் யானை நடனமாடுவதைப் பார்த்து ரசித் துக் கொண்டிருந்தார்கள்.

''பானுமதியை லண்டனுக்குக் கூட்டிக் கொண்டு போனால் என்ன?''

சத்தியமூர்த்தி விளையாட்டுக்குச் சொல்கிறானா என்று தெரியவில்லை. பரமநாதன் நண்பனையுற்றுப் பார்த்தான். ''என்ன சொல்கிறாய் அம்மா இப்போதுதான் அப்பாவை யிழந்து போய் இருக்கிறா. கௌரி கெதியில் லண்டனுக்குப் போகப் போகிறாள். இந்த நேரத்தில் பானுமதியும்......'' அவன் நம்பாமல் கத்தினான்.



''பரமநாதன், நடக்கப்போவதை யோசித்துப்பார். சபே சனுக்கும் பானுமதிக்கும் இடையில் சாதி மட்டுமல்ல அவன் ஒரு சண்டைக்காரன் என்பதும் பிரச்சினையாக இருக்கப் போகிறது. உன் குடும்பம் கடைசிவரைக்கும் பானுமதியின் திருமணத்தை ஆதரிக்கப் போவதில்லை. அவள் கிணத்திலோ குளத்திலோ விழுந்து நாடகமாடுவதை விட நீர் கொண்டு போவது புத்திசாலித்தனமில்லையா? சபேசனை மட்டும் லண் டனுக்குக் கூட்டிக் கொண்டுபோய்ப் படித்து ஆளாக்கி இலங் கைககுத் திருப்பி அனுப்பி விட்டால் எலலாம தனபாட்டுக் குச் சரியாக வரும் என்று நினைக்காதே.''

சத்தியமூர்த்தி சொல்வது சரியாகப் பட்டது.

அடுத்த நாள் கௌரி வந்தாள். லண்டன் போக பாஸ் போர்ட், விசா எடுக்கும் விடயமாக அவளுடனும் மகா தேவனுடனும் அலைய வேண்டியிருந்தது. வழியில் ஒருநாள் சபேசனைக் கண்டாள். தெகிவளைக் கடற்கரையில் நடந்ததை அப்படியே மறந்ததுபோல சிரித்துக் கதைத்தான் சபேசன்.

''அரசியலைத் தனிப்பட்ட விடயங்களில் கலக்கக் கூடாது'' என்றான் அவன். பரமநாதன் தன்னையே நம்ப முடியாமல் சபேசனைப் பார்த்தான். கலைஞர்கள் விளங்க முடியாத உணர்ச்சிக் குவியல்களா?

தெகிவளைக் கடற்கரையும், அவன் சொல்லிய விடயங் களும் ஞாபகத்தில் வந்தன. கௌரிக்கு முன்னால் அவனுடன் கதைக்க விரும்பவில்லை. ''உம்மை ஒருதரம் காணமுடி யுமா?'' என்றான் பரமநாதன். சபேசனுக்குப் பரமநாதன் கேட்டது ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும்.

''வெள்ளிக்கிழமை பின்னேரம் வீட்டில் இருப்பேன்.'' என்றான். சந்திப்பதாகச் சொல்லிவிட்டு கௌரியிடம் வந் தான். கார்த்திகா வீட்டுக்கு இன்னொருதரம் போவது அவ னுக்கு என்னவோ போல் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து விட்ட சில நிகழ்ச்சிகள் எதிர்காலத்தைச் சின்னு பின்னப் படுத்துவதை அவன் ஏற்றுக்கொள்ளத் தயாரா யில்லை.

தான் அனுபவிக்கும் துன்பங்கள் தங்கை பானுமதிக்கும் கிடைக்கக் கூடாது. மாறி வரும் சமுதாயத்தில் மனித உணர்ச்சிகள் மதிப்பற்றுப் போவதை அவனால் அனுமதிக்க முடியாமல் இருந்தது. இன்னொரு தரம் கார்த்திகாவை காணுமல் பானுமதிக்காக எதையும் செய்ய முடியாது என் ஞல். பானுமதிக்காகக் கார்த்திகாவிடம் எந்தத் திருட்டை யும், குற்றச் சாட்டுக்களையும் வாங்கிக் கொள்ளத் தயார்.

# 9

போன வெள்ளிக்கிழமை போனமாதிரி ஒரு குற்றமனப் பான்மையுடன் இன்று போகவில்லை.

கார்த்திகா கேட்டால் - கேட்கச் சந்தர்ப்பம் இருந்தால் என்னென்ன மறுமொழிகள் சொல்லவேண்டும் என்று நினைத்து வைத்திருந்தான்.

தெகிவளையில் ஒரு பெரிய வீட்டின் ஒரு பகுதியது. இரண்டறையும் ஒரு குசினியும், ஒருசிறு ஹோலும். எத் தனை ரூபா கொடுத்து அந்த வீட்டில் இருப்பார்கள் என்று தெரியாது.

கார்த்திகா ஒரு ஆசிரியை, சபேசன் ஒரு கிளார்க். இவர்களின் சம்பளம் எப்படி இந்தக் குடும்ப சீவியத்தைச் சமாளித்துச் சபேசனின் அடுத்த மூன்று தங்கச்சிக்கும் சீத னம் தேட உதவும்?

கதவு மணியை அடிக்க அன்றுபோல் இன்றும், அவள் தான் கதவு திறந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றுபோல தலை முழுகி விரித்துவிட்டு சாந்துப் பொட்டு வைத்துப் பளிச்சென்று இருந்தாள். ஆனால் அன்று போல் பிரமையுடன், நம்பிக்கையின்மையுடன் இவனைப் பார்க்கவில்லை. பேயடித்தாற்போல் பிரமை பிடித்து நிற்க வில்லை.

''உள்ளே வாருங்கள்'' என்றாள்.

யாருடைய வீட்டில் யாரோ நுழைவதுபோல் இருந்தது அவனுக்கு.

பக்கத்து அறையில் குழந்தைகளின் சத்தம் கேட்டது. தமிழர்கள் வீடுபோலும். ஒரு மேசையும் இரண்டொரு கதிரைகளும் கிடந்த அந்த குறுகிய ஹோலைக் காட்டினாள் இருக்கச் சொல்லி. சுவரில் ஒரு பக்கத்தில் சரஸ்வதியும் பிள்ளையாரும் இருக்க, அடுத்த பக்கத்தில் ஈழ விடுதலையைப் பற்றி ஒன்றிரண்டு சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன. பக்கத்து வீட்டு றேடியோவில் தமிழ்ப்பாட்டுக் கேட்டது.

இன்னும் சபேசனைக் காணவில்லை.

இவள், உள்ளே போனவளையும் காணவில்லை.

தர்ம சங்கடத்துடன் உட்கார்ந்திருந்தான். சபேசனிடம் எங்கோ கடற்கரையிலோ, பார்க்கிலோ சந்திப்பதாகச் சொல்லியிருக்கலாம் என்று பட்டது. அவன் நிலை கொள்ளாமற் தவிப்பது அவளுக்குத் தெரிந்ததுபோல், தேனீருடன் வந்து சேர்ந்தாள். வைத்து விட்டு ஓடப் போகிறாள் என்பது தெரியும்.

''கார்த்திகா'' என்றான் மென்மையாக.

அவள் ஓடவில்லை. என்ன என்பதுபோல் ஏறிட்டுப் பார்த்தாள். அவளை நிமிர்ந்து பார்த்தான்,



'இந்தப் புது மலரையா புழுதியில் எறிந்தார்கள் கயவர்கள்? அவனுக்குக் கண்ணீர் முட்டிக் கொண்டு வரும்போல் இருந்தது. ''Sorry கார்த்திகா'' என்றான். அவன் பெரு மூச்சு விடுவதை அவள் மௌனமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவன் ஏதும் கதைக்க முதல் அவள் சொன்னாள்.

''தயவுசெய்து ஒன்றும் சொல்லி விளங்கப் படுத்த வேண்டாம். என் தலைவிதி அவ்வளவுதான்.''

அவள் திட்டியிருந்தால் - பேசியிருந்தால் அவன் சந்தோஷப்பட்டிருப்பான் போல் இருந்தது. அவள் அப்படிச் சொன்னதை, அவனால் தாங்க முடியாமல் இருந்தது.

ஓ ..என்று அலற வேண்டும் போல் இருந்தது. 'அவள் என்னவென்று இதெல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு இப்படிச் சொல்ல முடியும்?'

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் எதெல்லாம் நடக்கக் கூடாதோ அதெல்லாம் நடக்கிறது - நடந்து விட்டது. எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு என்னவென்று இப்படிப் பேசமுடியும்.

''சபேசன் யாழ்ப்பாணம் போய் விட்டான்'' என்றாள். 'ஏன் வழியில் வைத்துச் சொல்லி என்னைத் திருப்பி அனுப்பவில்லை?' அவனுக்கு அவளை விளங்கவில்லை.

என்னால் ஏமாற்றப்பட்ட பெண் எதுவும் நடக்காதது போல் என் முன்னால் இருக்கிறாள்.

''கார்த்திகா'' என்றான் ஆச்சரியத்தைக் காட்டிக் கொள்ளாமல்.

''உங்களுடன் கொஞ்சம் கதைக்க வேண்டும்.'' அவன் ஏறிட்டுப் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்களைப் பற்றியல்ல - எங்களைப் பற்றிக் கதைக்க எதுவும் இருப்பதாக தெரியவில்லை''

அவள் குரலில் என்ன பதிந்து கிடக்கிறது என்று தெரியவில்லை.

''சபேசனையும் பானுமதியையும் பற்றி சபேசன் தன்ர கொள்கையில் பைத்தியமாக இருக்குமளவுக்குப் பானுமதியில் பைத்தியமாக இருக்கிறுனே என்று தெரியாது. ஆனுல் தற்போதைய சூழ்நிலையில் அவன்ர கொள்கைகளால் என்ன பிரயோசனமும் கிடைக்காது. சந்தர்ப்பம் பார்த்துத் தமிழர்களைத் தாக்கவிருக்கும் பொலிஸார், சபேசன் தரவழிகளில் எந்த நேரமும், ஒரு கண் வைத்திருக்கிறுர்கள். அவன் கொள்கையால் ஒரு தம்பியைப் பறிகொடுத்து விட்டு இருக்கிறோம்.''

''உங்கள் தங்கைக்காக மட்டுமல்ல, எனது தங்கைகளுக்காக - பைத்தியமாக இருக்கும் என்னுடைய தாய்க்காக அவனை லண்டனுக்குக் கூப்பிடுங்கள்.'' அவள் குரல் தழுதழுத்தது. அவளை அழவிடாமல் அணைத்துக் கொள்ள வேண்டும் என்று பட்டது.

தம்பியையிழந்து, தாயைப் பைத்தியமாக்கி...... கார்த்திகாவை......என்ன அரசு இலங்கையில் நடக்கிறது?

சபேசனை லண்டனுக்கு வா என்று சொல்ல, சபேசன் விழுந்தடித்துக் கொண்டு வருவான் என்று தெரியவில்லை.

எத்தனையோ பேர் யார் காலில் விழுந்தென்ருலும் இங்கிலாந்துக்கு வரப் பார்க்கிறுர்கள். இவன் என்னவென்ருல்.........

பரமநாதனுக்கு என்ன வழியில் சபேசனுக்குப் புத்தி சொல்வது என்று தெரியவில்லை.



''இன்றும் ஒரு கூட்டத்துக்குத்தான் போனுன். உங்களுக்குச் சொல்ல முடியவில்லை என்று சொன்னுன். ஞாயிற்றுக்கிழமை வருவான்.'' அவள் சொல்லிக் கொண்டு சாப்பாடு கொண்டு வைத்தாள் மேசையில்.

எனக்காகவுமா சமைத்தாள்?

நான் வருவேன் என்று நினைத்தாள்.

மரக்கறிச் சாப்பாடு.

''சாப்பிடுங்கள்'' என்ருள் சர்வ சாதாரணமாக. கடந்த பத்து வருடங்களாக ஒரேயடியாகக் குடும்பம் நடத்தும் மனைவிபோல்.

அவன் கைகளைக் கழுவிக் கொண்டு வந்தான்.

அவள் சாப்பாடு போட்டாள்.

மட்டக்களப்பு வழக்கத்தில் கன்னிப்பெண் ஒரு வாலிபனுக்கு கல்யாணம் அன்றுதான் சாப்பாடு போடுவாள்.

சோறு கொடுப்பது - சோறு போடுவது ஒரு திருமணச் சடங்கு. யாரோ சொன்னது ஞாபகம் வந்தது.

சொல்ல நினைத்துவிட்டு மௌனமாக இருந்தான்.

அவனுல் நம்ப முடியவில்லை அவள் சோறு போட அவன் சாப்பிடுவது.

தன்னை அவள் முன்னுல் இருந்து உற்றுப்பார்ப்பது போல் இருந்தது. நிமிர்ந்து பார்த்தான்.

அவள் கண்கள் நீர் வழிய........

அவனுல் அதற்கு மேல் சாப்பிட முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கார்த்திகா'' என்றான். குரல் அடைத்துக் கொண்டது.

''நான் எப்போதோ கற்பனை செய்து பார்த்த நிகழ்ச்சி. இப்படி ஒரு உறவுக்கும் அருகதையில்லாத நேரத்தில்......'' அவள் குனிந்திருந்து அழுதாள்.

அவன் மெல்ல அவர் கைகளைப் பற்றிக் கொண்டான். அவள் திமிறவில்லை.

''கார்த்திகா என்னை மன்னித்து விடு.'' அவன் பின்னால் போய் அவள் தலையைத் தன் மார்பில் அணைத்துக் கொண்டான்.

அவள் அப்படியே கதிரையில் இருந்தாள்.

எழும்பவில்லை. ஓடவில்லை.

படுபாவி என்று பேசவில்லை.

அவனையணைத்த இரு கைகளையும் இறுகப் பற்றிக் கொண்டாள். ''எனக்குச் சொந்தமாக இருக்க வேண்டியவை.'' தன் கண்ணீரில் நனைத்தெடுத்தாள் அவன் கைகளை. குரல் விம்மியது.

அவன் துடித்து விட்டான்.

''கார்த்திகா நான் உன்னை வேணுமென்று ஏமாற்றவில்லை.''

அவன் தன் கதை சொல்லித் தீரவேண்டும் என்ற நினைப்பில் படபடத்தான்.

அவள் மேசையில் தலைபதித்து அழுதாள்.

''என் தலைவிதி என் தலைவிதி'' அவள் விம்மி விம்மி அழுதாள்.



''என்னுடன் திரிந்த பெண்ணுக்கு - லண்டனில் இளைஞர்கள் கல்யாணமாக முதல் எத்தனை பெண்களுடனும் திரிவார்கள். மரியன் என்னுடன் திரிந்தபோது அவளின் வயிற்றில் குழந்தை......... என்றால் ஒரு பெண்ணைக் கைவிடத் துணிந்த அளவு ஒரு குழந்தையைக் கை விடத் துணிவிருக்கவில்லை கார்த்திகா.'' அவன் வார்த்தைகள் உண்மையின் தெறிப்புக்கள்.

அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

ஒவ்வொருதரம் என் மனைவியுடன் இருக்கும் போதும் எத்தனையோ தரம் உன் நினைவில் துடித்திருக்கிறேன் என்று அவன் சொல்ல நம்புவாளா?

பக்கத்து வீட்டார் வர மாட்டார்களா?

எங்குதான் வாழ்ந்தாலும் தமிழர் தமிழர்கள் தான். இந்த நிலையில் இருவரையும் கண்டால்.........

அவன் இன்னும் இரண்டு கிழமைகளில் லண்டனுக்குப் போகப் போகிறவன்.

அவள்? அவளைப்பற்றி.........

அவன் அவசர அவசரமாக வெளிக்கிட்டான்.

அவள் மேசையில் இன்னும் குனிந்திருந்து அழுதாள்.

பானுமதியை வரச் சொல்லி எழுதி அவள் வந்திருந்தால் கொழும்புக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் ஒரு ஜீவன்கூட மிச்சமில்லாமல் திடுக்கிட்டனர். பானுமதியை லண்டனுக்கு கூட்டிக் கொண்டு போவதாக அவன் சொன்னபோது.

தாய் வாயடைத்து விட்டாள் அவன் சொன்னபோது. கௌரி லண்டனுக்குப் போகிறாள். பானுமதியும் அம்மாவும் யாழ்ப்பாணத்திலிருந்து என்ன செய்வது? பானுமதி கொஞ்ச நாள் லண்டனுக்கு வரட்டும். அம்மா பெரியக்காவுடன் கொழும்பில் இருக்கட்டும்.

அவன் மற்றவர்கள் சம்மதத்தைக் கேட்கக் கூட இல்லை. பானுமதியை இழுத்துக் கொண்டு விசா, பாஸ்போட் என்று திரிந்தான்.

பானுமதியைக் கொண்டு போனால் சபேசனை எப்படியும் லண்டனுக்கும் கூப்பிடலாம் என்று தெரியும்.

சபேசன் இலட்சியவாதி, முன்கோபி, முரட்டுக் குணம் படைத்தவன், எல்லாவற்றுக்கு மேலாக நேர்மையானவன். ஒரு பெண்ணை எந்த இலட்சியத்துக்காகவும் கை விடமாட்டான். காலம் எடுக்கலாம், ஆனால் அவன் கட்டாயம் பானுமதியிடம் வருவான் என்று தெரியும்.

பானுமதிக்கு எல்லாம் விளங்கப் படுத்திச் சொன்னான். சபேசனைக் கேட்காமல் செய்வதா என்று சண்டை பிடித்தாள்.

''நீயும் சேர்ந்து அழிந்து போவதென்றால் - சபேசனின் குடும்பத்தையும் அழிப்பதென்றால் என் சொல் கேளாமல் நட'' என்று கத்தினான்.

அண்ணா சிரித்த முகத்துடன் லண்டனிலிருந்து வந்தவர் ஏன் எல்லாரிடமும் சீறி விழுகிறார் என்று தெரியாமல் தவித்தாள். அண்ணா இழுத்த இடமெல்லாம் முணுமுணுத்துக் கொண்டு திரிந்தாள். பரமநாதன் ஒன்றையும் பற்றி அக்கறைப் படவில்லை.



இவ்வளவு காலமும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் யாருக்காகவோ தன் வலிமைகளை விட்டுக் கொடுத்து விட்டது போலவும், இப்போதுதான் சுய உணர்வு வந்து தன் மன உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்து நடப்பது போலவும் பட்டது.

இதெல்லாம் கார்த்திகாவுக்காக, கார்த்திகாவின் குடும்பத்துக்காக என்று நினைத்தபோது நினைவே இனிமையாக இருந்தது. தன் இனிய காதலிக்கு இவ்வளவென்றாலும் செய்ய முடிந்ததே என்று நினைத்தபோது அலையறியாமல் ஒரு நிம்மதி அவன் மனதில் பட்டது.

பிளேன் ரிக்கற் புக் பண்ணிவிட்டு வரும்போது சபேசனையும் கார்த்திகாவையும் கண்டான்.

சபேசன் சந்தோசத்துடன் இவளைப் பார்த்தான்.

கார்த்திகா இருக்கிறாள் என்பதைக் கூடக் கவனிக்காமல் ''பானுமதி என்னுடன் வரப் போகிறாள் என்று உமக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்'' என்றான் பரமநாதன்.

சபேசன் தன் உணர்ச்சிகளைக் காட்டவில்லை.

பஸ் ஸ்ரொப்புக்கு நடந்து கொண்டிருந்தார்கள்,

''சபேசன், கொள்கைகளையும் இலட்சியங்களையும் சரியான சந்தர்ப்பத்தில் உபயோகிக்காவிட்டால் எதை இலட்சியம் என்று பாடுபட்டோமோ அதே இழிவான அழிவான பாதைகளுக்கு அழைத்துக்கொண்டு போகும்.''

பரமநாதன் எதை மறைமுகமாகச் சொல்கிறான் என்று தெரிந்தது.

சபேசன் சுற்றும் முற்றும் பார்த்தான். ஒரே சனக் கூட்டம். உல்லாசப் பிரயாணிகள், தமிழர்கள், சிங்களவர்கள், தமிழர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை வருடங்களுக்குத் 'தமிழர்'களாகப் பெயரளவில் என்றாலும் இருக்கப் போகிறோம் என்று நினைத்தான்.

அவன் பெருமூச்சு விட்டான்.

சுயநலங்களுக்காக இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் ஓடிப் போனவர்களுக்கு இலங்கையில் தமிழர் எப்படி நடத்தப் படுகிறார்கள் என்று தெரியுமா?

ஒரு கோடை விடுமுறையில் அனுபவித்து முடியுமா ஒரு இனம் படும் வேதனையை?

பரமநாதனுக்குச் சபேசனுடன் கதைத்து நிலைமைகளை விளங்கப் படுத்த வேண்டும் போல் இருந்தது.

''எங்கு போகிறீர் இன்று பின்னேரம்'' என்றான்.

''அக்கா படம் பார்க்க வேண்டும் என்றாள்'' என்றான் சபேசன்.

''நானும் வரலாமா?'' பரமநாதனுக்குத் தெரியும் ஒரு துளி எண்ணமும் இல்லை தமிழ்ப் படம் பார்க்க.

ஆனால் இன்னும் ஒரு கிழமைக்கிடையில் எவ்வளவு தூரம் கார்த்திகாவின் அருகில் இருக்க முடியுமோ அவ்வளவும் இருக்க யோசித்தான்.

அது பிழையாகவோ - மனச்சாட்சிக்கு விரோதமாகவோ தெரியவில்லை.

ஆயிரம் வார்த்தைகளால் சொல்லி - விளக்கி அவளிடம் மன்னிப்புக் கேட்க நினைத்ததெல்லாவற்றையும் ஒரு வார்த்தையையும் எதிர்பார்க்காமல் அவள் மன்னித்த விதம்!

இவளையா இன்னொருத்தனுடன் காணலாம் என்று கற்பனை செய்தேன்?



அவனும் சேர்ந்து வருவது அவளுக்குத் தர்ம சங்கடத்தையுண்டாக்கியிருக்க வேண்டும்.

வெறும் மௌனச் சிலையாக இருந்தாள்.

தனக்காக பரமநாதன் இவ்வளவு அக்கறை எடுப்பான் என்று அவள் எதிர்பார்த்திருக்கவில்லை.

தம்பி ஒருத்தனின் சடுதியான கோர மரணம், தன் வாழ்வு இப்படிப் போனது - சபேசன் இப்படி இலட்சியம், ஈழநாடு என்று திரிவதெல்லாம் தாயை எவ்வளவு தூரம் மனவருத்தப்படுத்தி அவளைப் பைத்தியமாக்கி விட்டது என்று தெரியும்.

தன் வாழ்க்கை இப்படி போனது தன் தலைவிதி என்று தேற்றிக் கொண்டவள், தன் தங்கைகள், ஒரே ஒரு தம்பி சபேசனின் வாழ்க்கை நாசமாவதைக் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

பானுமதியின் - சபேசனின் கதை தெரிந்தபோது இன்னொரு தோல்விக் கதையாக முடியப்போகிறது என்றுதான் நினைத்தாள்.

பரமநாதன் வந்திருந்ததும் பானுமதிக்கு உதவி செய்வதாக ஒப்புக் கொண்டதும் தனக்குச் செய்த பாவத்துக்குக் கைம்மாறு என்று அவள் நினைக்கவில்லை. ஒவ்வொரு கிழமையின் பின்னும் அவனின் இனிய கடிதங்களை எதிர்பார்த்து மாதமொன்றாய்க் குறைந்து வெறும் கிறிஸ்மஸ் கார்ட்டுடன் நின்று, யாரோ ஒருத்தியின் சொந்தமாகி விட்டான் என்று தெரிந்தபோது துடித்த துடிப்பு.........

கார்த்திகா, பெருமூச்சுடன் தலைவிதியை நொந்து கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் சாதாரண தமிழ்ப் படமொன்று. காதலன், காதலி, வில்லன்......... வழமையான பழம் சரக்கு.

இப்படிப் படங்களை என்னவென்று தமிழ்ச் சனங்கள் பார்க்கிறார்கள் என்று பரமநாதனுக்கு விளங்கவில்லை.

அதிலும் முற்போக்கான இளைஞர்களான சபேசன் போன்றவர்கள் என்னவென்று பார்க்கிறார்கள் என யோசித்தான்.

சத்தியமூர்த்தி சொன்னது ஞாபகம் வந்தது.

''தமிழ் ஏழைகளுக்கு உள்ள ஒரே ஒரு பொழுது போக்கு இப்படி தரம் கெட்ட தமிழ்ப்படங்களேதான். இல்லாத் தமிழரின் இரசனையைத் தங்கள் இலாபத்துக்கு மூலதனமாக்கி விட்டார்கள் பட முதலாளிகள். அந்த முதலாளிகளை மீறி யாரும் முற்போக்கான படங்களை எடுத்து வெற்றியடையலாம் என்று நினைப்பது முட்டாள்த்தனம்.''

படம் பார்க்கப் பார்க்க பரமநாதனுக்கு எரிச்சலாக வந்தது. போதாக்குறைக்கு கார்த்திகா - காதலியின் தோல்வியைக்கண்டு கைக்குட்டையால் கண்களைத் துடைத்த போது வெளிக்கிட்டுப் போக யோசித்தான்.

ஏதோ எல்லாம் நடந்து காதலர்கள் சேர்ந்து படம் சுபம் என்று முடிந்தது.

''உமக்கு வேறுவேலை இல்லையா இந்தப்படங்கள் பார்க்க நேரம் செலவளிப்பதை விட?'' பரமநாதன் பாயாத குறையாகக் கேட்டான்.

''நான் எனக்காக வந்தேன் என்று யார் சொன்னது! அக்காவுக்காக வந்தேன்'' என்றான் சபேசன்.

கார்த்திகாவைச் சொல்லி என்ன பிரயோசனம்? தரம் கெட்ட படத்தியேட்டர்கள், திருவிழாக்கள் கோயில்களைக்



சாட்டி என்றில்லாமல் என்ன இருக்கிறது இலங்கையில் ஒரு தமிழ்ப் பெண் வெளிக்கிட்டுப் போக?

பஸ்ஸில் வரும்போது சபேசன் ஏதோ வேலையாக இடையில் இறங்கி விட்டான்.

கார்த்திகா மௌனமாக இருந்தாள். அவன் அவள் பக்கத்தில் வந்து இருந்தான்.

அவள் காலி ரோட்டுச் சந்தடியையும் சனத்தையும் ஜன்னலால் பார்த்துக் கொண்டிருந்தாள். ''என்ன கற்பனையில் இருக்கிறீர்?'' அவன் குரலைச் சாதாரணமாக வைத்துக் கொண்டு கேட்டான்.

அவள் ஒன்றும் பதில் சொல்லாமல் தோள்களையுலுக்கி விட்டு ஜன்னலால் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''கார்த்திகா!'' அவன் மெல்லமாகக் கூப்பிட்டான். ''தயவு செய்து கதைக்காதீர்கள் தேவையில்லாமல், யாரும் தெரிந்தவர்கள் இருப்பார்கள்.'' அவள் மெல்லச் சொன்னாள்.

அவன் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தான்.

''கார்த்திகா, சபேசன் என்ன சொன்னான் பானுமதி லண்டனுக்கு வருவதைப் பற்றி?''

பரமநாதன் பேச்சை மாற்றிக் கேட்டான்.

''என்ன சொல்ல இருக்கிறது. உங்கள் தங்கை, அது அவளின் பிரச்சனை. தன் கொள்கைகளுடன் மோதாமல் விட்டால் சரி என்றான்'' என்று சொன்னாள் கார்த்திகா.

மாலைச் சூரியன் மறைந்து கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் ஜன்னலால் எட்டிப் பார்த்த சூரியனின் மஞ்சள் கதிர்களில் அவள் முகம் பளபளத்தது.

அழுதிருக்க வேண்டும் படம் பார்த்து முகம் வீங்கி, கண்கள் சிவந்திருந்தன.

எவ்வளவு வருடம் இப்படி அழுதுகொண்டிருக்கப் போகிருள்?

தன் தலைவிதி என்ற பெருமூச்சுகளுக்குப் பின்ஞல் என்ன எரிமலை இருக்கிறது வெடிக்க?

''கார்த்திகா உம்முடன் கொஞ்சம் கதைக்க வேண்டும்.'' அவன் சொல்ல, அவள் என்ன இருக்கிறது கதைப்பதற்கு என்பதுபோல் திரும்பிப் பார்த்தாள்.

''எங்காவது ஒரு தனியிடம் போக முடியுமா?''

அவன் அவசரப் பட்டான்.

அவளுக்குச் சொல்ல வேண்டும் இப்படி வாழ்க்கை முழுக்க அழுது கொண்டிருக்க முடியாது - அழுது கொண்டிருக்கக் கூடாது என்று.

தூரத்தே பம்பலப்பிட்டிக் கடற்கரை தெரிந்தது. ஞாபகமிருக்குமா இவளுக்கு நாங்கள் கைகோர்த்துத் திரிந்த காலம்?

அவள் கேட்காதவாறு உட்கார்ந்திருந்தாள்.

''கார்த்திகா அடுத்த ஸ்ரொப்பில் இறங்க முடியுமா?'' அவனின் குரலில் இருந்த உத்தரவை அவள் திழிம்பிப் பார்த்தாள்.

அவள் இறங்காவிடில் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடுவான் போல இருந்தது.



அவள் வாழ்கையில் எத்தனையோ நடந்து விட்டன அவள் விரும்பாத காரியங்கள்.

ஒருதரம் - ஒரே ஒருதரம் அவளின் இனியவஞக இருந்த அவனின் விருப்பத்தை நிறைவேற்றக் கூடாதா? அவள் எழுந்தாள்.

அவன் பின்தொடர்ந்தான்.

இப்படி அவர்கள் ஒரு காலத்தில் ஒருவரை ஒருவர் பின் தொடர்ந்தது இறந்தகால நிகழ்ச்சியாகப் போய் விட்டது. இது மட்டுமென்ன? இந்த நிமிடம் மட்டுமென்ன நிலைத்து நின்றுவிடப் போகிறதா?

இருவரும் உட்கார்ந்தார்கள் பாறையில்.

''என்ன சொல்லப் போகிறீர்கள்?''

அவள் வழக்கறிஞர் போலக் கேள்வி கேட்டாள்.

அவள் முகத்தைத் திருப்பி, குரலை உயர்த்திக் கேட்ட விதம் அவனுக்குச் சிரிப்பாக இருந்தது.

''என்ன குறுக்கு விசாரணை?'' அவன் கேட்டான்.

''நான் யார் உங்களைக் குறுக்கு விசாரணை செய்ய?'' அவள் எடுத்தெறிந்து பேசிஞள்.

''கார்த்திகா, பானுமதி, சபேசன் விடயத்தில் இவ்வளவு அக்கறை எடுப்பது அவர்களுக்காக மட்டும் என்று நினைக்கிருய்?''

அவள் பேசாமல் இருந்தாள்.

''கார்த்திகா, உமக்காக, உமது குடும்பத்துக்காக. நான் உமக்காக இவ்வளவு செய்கிறேன், எனக்காக ஒன்று மட்டும் செய்வீரா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் படர்ந்த நேரத்தில் அவள் கண்களில் என்ன உணர்ச்சிகள் இருக்கின்றன என்று தெரியவில்லை அவனுக்கு.

"என்ன செய்ய வேணும்? கிட்டத்தட்ட செத்துக் கொண்டிருக்கும் மனத்தையும் உடம்பையும் ஒரேயடியாக அழித்துவிடச் சொல்கிறீர்களா?"

அவள் குரல் தழுதழுத்தது.

"கார்த்திகா நடந்ததை யோசித்து என்ன பயன்? அப்படி நீர்தான் சொன்னீர். இப்போது வேறு விதமாகக் கதைக்கிறீர்."

அவன் சலித்துக் கொண்டான்.

"என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" அவள் கேட்டாள். உங்களுக்காக வாழ்ந்து, உங்களுக்காக அழுது கொண்டிருக்கிறேன் என்பது போல் இருந்தது அவள் குரல்.

"நீர் என்னை உண்மையாக மன்னிக்கவில்லை." அவன் குற்றம் சாட்டினான்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

"அந்த இழவுப் படத்தைப் பார்த்து ஒப்பாரி வைத்தது போல், உன்னைப் போன்ற பெண்களைக் கணவனுடன் காணும் போதெல்லாம் என்னை நீர் மனதில் திட்டவில்லை என்று, என்ன நிச்சயம்?"

அவன் எரிந்து விழுந்தான்.

அவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"கார்த்திகா, அழுது என்ன பிரயோசனம்?"

அவன் அவளை அணைத்துக் கொண்டான்.



அவள் விலகியுட்கார்ந்தாள்.

"கார்த்திகா, நீர் இப்படிக் கலங்குவதால் என்னுடைய வாழ்க்கையையும் நாசப்படுத்தப் போகிறீர் என்பது உமக்குத் தெரிந்திருக்க வேண்டும். இதுவரை எப்படி லண்டனில் இருந்தேனோ தெரியாது. ஆனால் இனி உமது நினைவு என்னை என்ன செய்யப்போகிறதோ தெரியாது." அவன் வெடித்தான்.

"என்ன செய்ய வேண்டும்?"

அவள் எடுத்தெறிந்து கேட்டாள்.

"நீர் திருமணம் செய்யும் வரை எங்கள் இருவரின் வாழ்வும் நாசம்." அவன் நிதானமாகச் சொன்னான்.

"என்ன, என்ன சொன்னீர்கள்?"

அவள் தன் நிலை மறந்து கத்தினாள்.

அந்தக் காரிருள் நேரத்திலும், கடந்து போனவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

"ஒருவனால் ஏமாற்றப்பட்டுப் பலரால் கற்பழிக்கப்பட்ட பெண்ணுக்குக் கல்யாணமா?"

அவள் வெறி வந்தவள்போல் கத்தினாள்.

அவன் தாவி ஓடிப்போய் அவள் வாயைப் பொத்தினான். எந்த நிகழ்ச்சியுடன் அவளை ஒப்பிட்டு நினைத்துப் பார்க்க அவன் வெறுத்தானோ அந்த நிகழ்ச்சியை அவள் வாய் விட்டுச் சொல்வதை அவன் வெறுத்தான்.

"சட் அப்." பரமநாதன் உலகமறியக் கத்தினான்.

அவன் குரல் நடுங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கார்த்திகா, நீர் நம்பாவிட்டாலும் நம்பினாலும் நான் சொல்வதைக் கேள். எனக்கொரு மகள் இருக்கிறாள். அவள் பெயர் மீரா. அந்த அழகிய செல்வத்தால்தான் உன்னைக் கைவிட்டேன். அவளுக்காகத்தான் லண்டனுக்குப் போகிறேன். அவளுக்காகத்தான் மரியனைக் கல்யாணம் செய்தேன். மரியனை நான் ஒரு நாளும் ஏமாற்றியதில்லை. ஏமாற்றப் போவதுமில்லை.. ஆனால் உம்மையும் நான் ஏமாற்றவில்லை, சந்தர்ப்பத்தால் இப்படியாகி விட்டது என்பதை நிரூபிக்க, நீர் என் மனைவியை விவாகரத்துச் செய்யச் சொல்லிச் சொன்னால் நான் செய்வேன். ஆனால் என் மகள் மீராவுக்காக நீர் என்னைச் சயவன் என்று நினைப்பதையே நான் விரும்புகிறேன்.''

பரமநாதன் வெறிவந்தவன் போலப் பேசுவது அவளால் பொறுக்கவில்லை.

''தயவு செய்து அப்படிப் பேசாதீர்கள். நீங்கள் சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதுதான் என் பிரார்த்தனை. நான் எப்படி இருக்கிறேன், இருக்கப் போகிறேன் என்பதை யோசித்து உங்கள் குடும்பத்தை நாசமாக்காதீர்கள்.''

அவள் கேவிக் கேவியழுதாள்.

மெல்லிய இருட்டின், மௌனத்தின் பின்னணியில் கடலலையின் தாலாட்டில் அவள் கண்ணீர் விட்டுக் கத்துவதைக் கையாலாகத்தனத்துடன், பார்த்துக் கொண்டிருந்தான் பரமநாதன்.

❉ ❉ ❉ ❉

ஒரு மாதம் இவ்வளவு கெதியில் ஓடிவிடும் என்று தெரியவில்லை.



தகப்பனின் அந்திரட்டி முடிந்து விட்டது. உறவினர், சினேகிதர்களிடமிருந்து லண்டனுக்குப் போக விடைபெற்று விட்டாயிற்று.

தாய், தந்தையர், தங்கைகள், தமக்கை ஏன் எல்லா உறவுமே ஒரு சாதாரண பிரயாணத்தின் ஒவ்வொரு கட்டத்தில் ஏற்படும் உறவா?

வாழ்க்கையே ஒரு பிரயாணம்.

இனிப்பும் கசப்புமான பண்டங்களைக் கடையில் வாங்கித் தின்று பசி தீருவதுபோல் இனிப்பும் கசப்புமான உணர்வுகளால் வாழ்க்கையை நிரப்பி.........

யாழ்ப்பாணம் பெரியகடை தன்பாட்டிற்கு சினிமாப் பாட்டின் தாலாட்டில் இயங்கிக் கொண்டிருந்தது.

லண்டனுக்குக் கொண்டுபோக மரியனுக்கும் மீராவுக்கும் தேவையான சாமான்கள் வாங்கிக் கொண்டான்.

கொழும்பில் மீராவுக்குப் பெரிதாக ஒரு யானை வந்தவுடனேயே வாங்கி வைத்துக் கொண்டான்.

விமானம் வரும்போது விட்ட சேட்டைகள் ஒன்றுமின்றி வந்து சேர வேண்டும் என்று மரியன் சொன்னாள். கொழும்பில் நின்றபோது இரண்டு மூன்று தரம் அவளுக்குப் போன் பண்ணினான்.

லண்டனில், 'நியூக்கிளியர்' போரை எதிர்த்து ஊர்வலம் நடத்தியபோது தானும் கலந்து கொண்டதாகப் பெரிய சந்தோசத்துடன் சொன்னாள்.

உமது மைத்துனி பானுமதியையும் சேர்த்துக் கொள் அடுத்த ஊர்வலத்துக்கு என்றான்.

டெலிபோனில் பேசும்போது அவன் குரல் வித்தியாசமாக இருப்பதாகச் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் மட்டுமல்ல தானே வித்தியாசமாக இருப்பதாகச் சொல்ல வேண்டும் போல் இருந்தது.

தன்னில் ஏற்பட்டிருக்கும் மன உணர்ச்சியின் மாறுதல்களால் தன் நடவடிக்கையில் எரிந்து விழுதல், சலிப்பு என்பன தாராளமாகக் கலந்து விட்டது அவனுக்குத் தெரிந்தது. அதைப் பானுமதியும் சுட்டிக் காட்டினாள்.

சபேசன், பானுமதி லண்டனுக்குப் போவதை மறுத்து ஏதும் கத்துவான் என்று எதிர்பார்த்தது பிழையாகத் தெரிந்தது.

ஒரு வருட பிரயாணம் தானே என்று நினைத்திருப்பான் சபேசன் என்று மனத்தில் யோசித்துச் சிரித்தான் பரமநாதன். முடியுமானவரையில் சத்தியமூர்த்தியை சபேசனுடன் கதைத்துப் பார்க்கச் சொன்னான்.

சத்தியமூர்த்தியும் சபேசனும் கொள்கைகளில் எதிரும் புதிருமானவர்கள் ஒன்றாகப் பழகச் சொன்னது வேடிக்கையாக இருக்கும் என்றாள் பானுமதி.

மகாதேவன் லண்டனுக்குப் போகும் பொழுது கௌரியைக் கூட்டிக் கொண்டு போக முடியவில்லை. இரண்டொரு மாதம் எடுக்கும் கௌரியின் விசா விடயம் பார்க்க என்பதாலும் மகாதேவனின் லீவு முடிந்து விட்டதாலும் தனியாகப் போக வேண்டி இருந்தது.

இப்படியான கல்யாணங்கள் பரமநாதனுக்கு விசித்திரமாக இருந்தன.

என்னவென்று முன்பின் தெரியாத இன்னொரு ஜீவனுடன் திடீரென்று வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்து இன்னும் ஐம்பதோ அறுபதோ ஆண்டுகள் கொண்டு செல்ல முடியும் என்று அவனால் நம்ப முடியாமல் இருந்தது.



ஆயிரக்கணக்கான வருடங்களாக எங்கள் சமுதாயத்தை இப்படித்தான் வாழ வேண்டும் இப்படித்தான் நடக்க வேண்டும், இப்படித்தான் யோசிக்க வேண்டும் என்று Brain wash பண்ணி வைத்திருக்கிறார்கள். அதை மீறி யோசிப்பதோ, நடப்பதோ புண்ணியமாகவும் 'மரியாதையாகவும்' கருதப்பட மாட்டாது.

பரமநாதன் யாரையோ செய்தது புண்ணியமான-மரியாதையான காரியமாகவும் கருதப்படவில்லை வீட்டில் என்பது தெரியும்.

தாய் தகப்பனுக்கு விருப்பமில்லாமல் செய்தது ''புண்ணியமான'' காரியமில்லை.

இங்கிலாந்தில் 'எப்படியும்' வாழ்ந்து விட்டு இலங்கைக்கு வந்து தங்களை லட்சக்கணக்கில் விலைபேசி விற்றுப் போட்டுப் போகும் பட்டதாரிகளுக்கு, வெள்ளைக்காரிகளைச் செய்வது மரியாதையான காரியம் இல்லை.

மகாதேவனோடு வாழப் போவது கௌரி. அவள் படித்துத் தேறட்டும் எதிர்காலத்தை.

லண்டனுக்குப் போக இரண்டொரு நாட்களுக்கு முன் கொழும்புக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு துப்பாக்கிச் சூடு காரணமாகச் சந்தேகப்பட்ட இளைஞர்களை எல்லாம் கைது செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டான்.

மனம் பதறியது.

சபேசன் யாழ்ப்பாணத்தில் இருக்கக் கூடாது என்று மனம் வேண்டிக் கொண்டது.

இளைஞர்களின் துடிப்பையும் ஆவேசத்தையும் சில தனிப்பட்ட பயங்கரவாதக் கூட்டத்தினர் தங்கள் சுய தேவைக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்குப் பாவிப்பதைப் பற்றி, சத்தியமூர்த்தி சொல்லியிருந்தான்.

கடந்த ஆண்டுகளில் தமிழ் இளைஞர் பேரில் நடந்த வங்கிக் கொள்ளைகள், கொலைகள் சில இளைஞர்களில் பழியாகப் போடப்பட்டன என்றான் சத்தியன்.

சபேசன் வீட்டுக்குப் போய் அவனைப் பார்க்கத் துடித்தான்.

தன்னையும் கார்த்திகாவையும் பற்றி பரமநாதன் வீட்டில் தெரியாவிட்டாலும் சதாசிவம் மாஸ்ரருக்கு நன்றாகத் தெரியும்.

என்ன நினைப்பார் என்னைப் பற்றி?

என்னவும் நினைத்து பேசட்டும்.

சபேசன் எப்படியிருக்கிறான் என்று தெரிய வேண்டும்.

ஒரு காலத்தில் உள்ள மகிழ்வுடன் திறந்த 'கேட்டை' தயக்கத்துடன் திறந்தான்.

கோழிகள் முற்றத்தில் கோலம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தன.

பத்து வருடங்களுக்கு முன் நண்டும் சிண்டுமாய் இருந்த குடும்பம். இப்போது வளர்ந்து போய் இருக்கலாம்.

மௌனமாக இருந்தது கொஞ்ச நேரம்.

பின்னர் வீணையொலி கேட்டது வீட்டில் இருந்து. விருந்தையில் போய் நின்றான்.

கதவெல்லாம் பூட்டியிருந்தது.

வீணையொலி மெல்லக் கேட்டுக் கொண்டிருந்தது.



எந்தத் தங்கச்சியாக இருக்கும்? கார்த்திகாவுக்கு மூன்று தங்கைகள் எல்லோரின் முகமும் ஞாபகம் வராது.

தான் வந்திருப்பது தெரியாமலே இருக்கும் என்று தயங்கிக் கொண்டு நின்றபோது வந்தார் சதாசிவம் மாஸ்ரர். வெழுத்த தலைமயிருடன் வித்தியாசமாக இருந்தார்.

''மாஸ்டர்'' என்றான் பரமநாதன்.

அவர் மூக்குக்கண்ணாடிக்குள்ளால் இவனைப் பார்த்தார். ''பரமநாதன்?'' சரியாக அடையாளம் கண்டேனா என்ற நம்பிக்கையில் பெயரையிழுத்தார்.

''ஓம், பரமநாதன்தான்.'' அவன் கீழேயிறங்கி வந்தான்.

பேச்சுக் குரலில் வீணை ஒலி நின்றது.

யன்னலால் ஒரு முகம் எட்டிப் பார்த்தது.

''இருமன்'' அவர் கதிரையைக் காட்டினார். அவன் தயக்கத்துடன் இருந்தான்.

வீடு பழமையுடனும் ஏழ்மையுடனும் இருந்தது.

இந்த லட்சணத்தில் நான்கு பெண்கள்.

''எப்போது வந்தீர்?'' ஏதோ பேச வேண்டும் என்பதற்காகக் கேட்டார் என்பது தெரிந்தது.

ஒரு மாதமாகி விட்டது. இரண்டு நாளில் போகிறேன்.

''இனி லண்டனில் இருப்பதுதான் யோசனையோ?'' அவர் எங்கோ பார்த்துக் கொண்டு கேட்டார்.

அவன் தலையாட்டினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் சாட்டுக்குப் பேசுவது அவர் தொனியில் தெரிந்தது.

அவருக்குத் தெரியாதா அவனைப் பற்றி.

அவன் மனச்சாட்சி குடைந்து கொண்டிருந்தது.

''சபேசன் எங்கே?'' அவன் தன் துடிப்பை மனதில் அடக்கிக் கொண்டு கேட்டான்.

''கொழும்பில்தான் வேலை.'' அவர் சுருக்கமாக முடித்துக் கொண்டார்.

அதாவது யாழ்ப்பாணத்தில் இல்லை. இதுவரைக்கும் கைதாகவும் இல்லை என்பது நிம்மதியாய் இருந்தது.

ஒரு காலத்தில் முற்போக்கு, சோசலிசம் போதித்த வாத்தியார் மௌனமாக இருந்தார் தன் மாணவன் முன்.

இங்கிலாந்தில் வசிப்பவனுக்கு இனி என்ன அக்கறை இருக்கப் போகிறது ஏழைகளின் பிரச்சினை பற்றி என்று நினைத்திருக்கலாம் அவர். அல்லது என் குடும்பத்துடன் விளையாடிவிட்டுப் போனவனுக்கு என்ன மரியாதை கொடுப்பது என்று நினைத்திருக்கலாம். அவரைச் சொல்லி என்ன பிரயோசனம்?

தேத்தண்ணி குடிக்காமல் வெளிக்கிட்டான் அவன்.

யாழ்ப்பாணத்து வெயில் மண்டையை உருக்கிக் கொண்டிருந்தது.

❉ ❉ ❉ ❉

கொழும்பில் கடைசியாகக் கார்த்திகாவைப் பார்க்கும் யோசனையில் போனான். இந்தத் தடவை சத்தியமூர்த்தியும் சேர்ந்து வந்தான்.



சபேசனும் வீட்டில் இருந்தான். யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் கைதானது பற்றி சொன்னான் சபேசனுக்கு.

''உங்கள் சுகம் பாதிக்கப்பட்டிருக்கும் இப்படியான செய்திகளால். ஆனால் எங்களுக்குப் பழகிவிட்டது கேட்டு.''

சபேசனுக்கு எடுத்தெறிந்து பேசாமல் பழகத் தெரியாது.

பரமநாதன் தன் கோபத்தை அடக்கிக் கொண்டான்.

சத்தியமூர்த்தியும் அவனும் சண்டை தொடங்காமல் இருக்க வேண்டுமே என்று தவித்தான்.

சத்தியமூர்த்தி முன்கோபி இல்லை. சபேசனைப் போல் இளைஞனும் இல்லை உணர்ச்சி வசப்பட.

தன் இடதுசாரிக் கொள்கைகளை அவிழ்த்து விட்டு ஏன் தர்க்கத்தில் இறங்க வேண்டும் என்று நினைத்தோ பேசாமல் இருந்தான்.

கார்த்திகாவுடன் தனிமையில் கதைக்க அதிகம் சந்தர்ப்பம் இருக்கவில்லை.

இனி எப்போது காண்பது?

போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டு எழுந்தபோது அவள் வாசல் வரை வந்தாள்.

முதலாம் பாகம் முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் பாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

வானம் பப்பும் மந்தாரமுமாய் இருந்தது விமானம் வெளிக்கிட முதல். வெள்ளவத்தை வீடு காலையில் இருந்து அல்லோலகல்லோலமாய் இருந்தது.

தங்கைகள் இருவரும் ஒன்ருக வருவார்கள் இன்னும் ஒரு மாதத்தில். நின்று கூட்டிக்கொண்டு போகலாம். ஆனல் கொம்பனி விடயமாக நடக்கும் கொன்பரன்சுகள் வரப் போகின்றன. அவன் கட்டாயம் நிற்க வேண்டும் லண்டனில். பண்டாரநாயக்கா விமான நிலையத்துக்கு அவன் குடும்பத் தினர் எல்லாம் வந்திருந்தனர்.

குழந்தைகள் குதூகலத்துடன் மாமாவை வழியனுப்ப வந்திருந்தனர். சத்தியமூர்த்தியுடன் சபேசன் வந்தது ஆச்சரியமாக இருந்தது. பானுமதியின் ஏற்பாடாக இருந்திருக்க வேண்டும். வேடிக்கையாய் இருந்தது அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் தெரியாத மாதிரி காட்டிக் கொண்ட விதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகா:

விமானம் வெளிக்கிட்டு இலங்கைத் தீவு வெறும் பச்சைத் திடலாய்த் தெரிந்தபோது அவளின் நினைவு வந்தது.

இன்னேரம் பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கலாம்.

இந்தப் பிளேனில் நான் போகிறேன் என்று தெரிந்திருக்கலாம். பாடசாலைக்கு மேலால் விமானம் பறக்கும் போது ஜன்னலால் எட்டிப் பார்க்கலாம்.

என் நினைவும் வந்திருக்கலாம்.

அவள் மனத்தில் சிறு நிழலாய் இருந்த லே பாக்கியம் என்று நினைத்தது அவன் மனம்.

இலங்கை கண்களில் மறைந்து விமானம் வெறும் வெளியில் பறந்து கொண்டிருந்தது.

இப்படி வரும்போது எலிஸபெத்தின் உறவு கிடைத்தது ஞாபகம் வந்தது.

இப்போது என்ன செய்வாள் நியுயோர்க்கில்?

லண்டனுக்கு வந்திருக்க மாட்டாளா?

இலங்கைக்கு வந்ததிலிருந்து இதுவரை நடந்ததெல்லாம் கனவாகத் தெரிந்தது.

நம்ப முடியாதவைகளாக இருந்தன சில நிகழ்ச்சிகள்.

இலங்கையில் யாருக்கோ நடக்கிறது என்று நினைத்திருந்த நிகழ்ச்சிகள் எல்லாம் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு நடப்பது கண்டு துடித்தான். அந்தக் கொடிய செயலால் தன் அன்புக்காளான சில ஜீவன்கள் படும் துயர் அவன்



கொள்கைகளை எப்படி மாற்றி விட்டன என்பதை அவனால் சரியாக ஊகிக்க முடியாது இருந்தது.

இலங்கையில் இருந்து வெளிக்கிட்டு ஒன்றிரண்டு மணித்தியாலங்கள் வரை தான் தன் நாட்டைப் பிரிந்து போகிறேன் என்ற உணர்வு தெரிவதை அவன் உணர்ந்து கொள்ளப் பயப்பட்டான்.

ஆனால் தெரிந்தோ தெரியாமலோ உணர்ந்தோ உணராமலோ சில உண்மைகள் அவன் அடிமனத்தில் உறைய மறுக்கவில்லை, தமிழ் இனம் திட்டமிட்டு அழிக்கப்படுகிறது.

அரசாங்க யந்திரத்தை எதிர்க்கும் எந்தக் கருவியும் நசுக்கப்படும் என்று சத்தியமூர்த்தி சொல்கிறான்.

இலங்கையில் தொழிலாளர்கள், விவசாயிகள், தமிழர்கள் எல்லாம் ஒன்று பட்டுப் போராட வேண்டும் இந்த அரசியலமைப்பைத் தூக்கி எறிய என்கிறான்.

நடக்கக் கூடிய காரியமா?

''எங்கு சரண்டல் இல்லை. இனத்தை இனம் சுரண்டுகிறது. பணக்காரன் ஏழையைச் சுரண்டுகிறான். முதலாளி தொழிலாளியைச் சுரண்டுகிறான். வலிமை படைத்தவன் நோஞ்சானைச் சுரண்டுகிறான். இலங்கை இலக்கிய வட்டத்தையே எடுத்துப்பார். ஒரு சில படித்த முற்போக்குக் குஞ்சுகள் முழுக்க முழுக்க தங்கள் கோஷங்களைப் போடாத எந்த எழுத்தாளனையும் மூச்செடுக்க விடுகிறார்கள் இல்லை. கலையும் அரசியலும் வேறு வேறு இல்லை என்று வரட்டு வேதாந்தம் படைக்கிறார்கள். எங்கே சுரண்டல் இல்லை''

இது சபேசனின் வாதம்.

எல்லோர் நினைவும், ஒவ்வொருவர் கொள்கைகளும் ஒவ்வொரு கோணத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் ஒரே மாதிரி நினைத்தால் உலகம் ஏன் இப்படி இருக்கிறது?

விமானம் மொஸ்கோவில் நின்றது.

மனம் அடித்துக் கொண்டது மறுபடியும் மூன்று இரவுகள் அநியாயமாக ஒரு வெறும் சுவருக்குள் முடியக் கூடாதே என்று.

பொழுது போக எலிஸபெத்தும் இல்லை.

எலிஸபெத்.

அவளின் இனிய சுபாவம் மனதில் நிழலாடியது. ஒரு காலத்தில் திருமணமாகி ஒருவனுக்கு அடங்கி ஒன்றிரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி......

எலிஸபெத்தை அப்படிக் 'குடும்ப'ப் பெண்ணாக நினைக்க வேடிக்கையாக இருந்தது.

ஹீத்ரோ எயார் போட் இன்னும் அழுமூஞ்சித்தனத்தில் இருந்தது. சரியான புகார். குறித்த நேரத்தில் விமானம் வந்து இறங்கியதே அபூர்வம்.

கஷ்டம்ஸ் ஒவ்வீஸ் தாண்டத் தெரிந்தது மீராவின் துள்ளும் நடை.

''டாடி'' என்று கத்தினாள்.

எத்தனை செக்கண்டுகள் எடுக்கும் அவளை அணைத்துக் கொள்ள என்று பொறுமையின்றித் தவித்தான் பரமநாதன்.

மனைவி மரியன் கணவனை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள். ''என்ன பார்க்கிறீர்?'' கன்னத்தைத் தட்டி விட்டுக் கேட்டான்.



என் குடும்பம், என் மனைவி. என் மகள்.

''மெலிந்து இருக்கிறீர்கள்'' செல்லமாகச் சொன்னாள் மரியன்.

''உம்முடைய சாப்பாடு ஒரு மாதம் கிடைக்காததால்''

இருவரும் பொருளற்ற விதத்தில் சிரித்துக் கொண்டனர். இவளை டிவோர்ஸ் பண்ணச் சொல்லி கார்த்திகா சொன்னால் செய்வதாகச் சொன்னது ஞாபகம் வந்தது.

உண்மையாகச் செய்வானா?

சந்தர்ப்பங்களில் எங்கள் வாயும் வார்த்தைகளும் எப்படிச் சதி செய்கின்றன?

ஹூட் கிறீனுக்குப் போகும் வரை இருவரும் அதிகம் கதைக்கவில்லை. தாய் தகப்பனைப் பற்றிக் கேட்டாள்.

பானுமதி எப்போது வருகிறாள், கௌரி எப்போது வருகிறாள் என்று கேட்டாள்.

இதெல்லாம் சடிதத்தில் எழுதிய விடயங்கள் அதிகம் சொல்ல ஒன்றுமிருப்பதாகத் தெரியவில்லை அவனுக்கு.

''So, You are going to be a busy man.''

மரியன் சொன்னாள் தங்கைகள் எல்லோரும் வந்து குதிக்கப் போகிறார்கள் என்று கேள்விப் பட்டதும்.

''பிஸியாய் இருப்பது பரவாயில்லை. எப்படி பிஸி என்பது தான் பிரச்சினையாக இருக்கப் போகிறது''

சபேசனை எப்படிக் கூப்பிடுவது,?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை வழிகளில் இங்கிலாந்துக்கு வரலாம் என்று இலங்கை இளைஞர்கள் யோசிக்கும்போது இந்த விசரன் தான் கொடுக்கும் சந்தர்ப்பத்தைத் தூக்கி எறிந்து விட்டுக் கத்துகிறான் இலட்சியம் பற்றி, இலக்கியம் பற்றி, ஈழத் தமிழர் விடுதலை பற்றி!

இவன் போன்றவர்களுக்கு எப்போது புத்தி வரும்?

நேரில் கண்டால் சபேசனின் சிரித்த முகமும் தீட்சண்யமான பார்வையும் எதையும் அடக்கி விடுகிறது.

பானுமதிக்காக மட்டுமல்ல கார்த்திகாவுக்காகவும் சபேசனை எப்படியும் லண்டனுக்குக் கூப்பிட - அல்லது ஜேர்மனி, அமெரிக்கா - பரமநாதனுக்கு தெரியும் எவ்வளவு செலவழியப் போகிறது என்று. அவன் கார்த்திகாவுக்காக எதையும் செய்யத்தயார்.

இலங்கைக்குப் போக முதல் பரமநாதனை முழுக்கப் பற்றியிருந்தது தன் சிறிய வீட்டு நினைவுதான். லண்டனில் எத்தனையோ தமிழ்க் கூட்டங்களும் விழாக்களும் நடந்தும் அவன் அதிகம் போவதில்லை.

தன்பெருமையைக் காட்ட சில தமிழ்ப் பெரிய மனிதர்களின் சுயநலத்தில் உண்டாகும் எந்த விடயங்களிலும் தலையிடாமல் தன்பாட்டில் இருப்பது புத்திசாலித்தனம் என நினைத்தான்.

எப்படியும் சபேசனைக் கூப்பிட வேண்டும் என்ற நினைவு தீவிரமாக இவ்விடம் வந்ததும் இந்தக் கும்பல் ஒன்றில் சேர மாட்டான் என்று, என்ன நிச்சயம் என்று மரியன் கேட்டாள்.

சபேசன் இனவாதியில்லை, பிற்போக்குவாதியில்லை.



ஒரு சோசலிச சமுதாயத்தை உருவாக்க உழைக்கப் போகும் ஒரு இளைஞன் என்பதைப் பரமநாதன் உணரா மல் இல்லை.

ஆனால் சபேசனின் கருத்துக்களும் கொள்கைகளும் இலங்கையில் நடக்கும் கொடுமைகளால் சிதறிப்போய்க் கிடக்கின்றன. இங்கிலாந்துக்கு வந்ததும் இலங்கைப் பிரச்சினையைப் பார்க்கும் விதம் நிச்சயமாக வேறுவிதமாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்று தெரியும்.

லண்டனுக்கு வந்ததும் ஒன்றிரண்டு கிழமை சரியான வேலை. அவன் வேலை செய்யும் ஒயில் கொம்பனியின் பேச்சுவார்த்தை விடயமாக வெளியிடங்களுக்குப் போக வேண்டியிருந்தது, வேலை விடயம், வீட்டு விடயங்களுடன் ஒவ்வொரு சிறு கடிதங்கள் எழுதிப் போட்டான் இலங்கைக்கு.

தன் வீட்டுக்குத் தான் வந்த விடயத்தை எழுதிவிட்டு தங்கைகள் லண்டன் வரும் விடயத்தையும் விபரமாக எழுதச் சொன்னான்.

சபேசனுக்கு நீண்ட கடிதம் எழுத யோசித்தான். வந்ததும் வராததுமாக அவனுக்குப் ''போதகர்'' வேலை பார்க்கத்தயங்கினான்.

கார்த்திகாவுக்கு எழுதி சபேசனை லண்டனுக்கு வரப் பண்ணுவதைத் தவிர வேறு வழி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. இவனின் கடிதம் அவளுக்கு ஆச்சரியத்தையுண்டாக்கியிருக்க வேண்டும் என்று அவள் பதிலில் இருந்து தெரிந்தது.

நான் உங்களைக் கேட்க நீங்கள் என்னை உதவி கேட்கிறீர்களே என்ற தொனியில் எழுதியிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியனுக்கு கணவனின் மனப் போங்கு புரியாமல் இருந்தது. தன்னையும் மீராவையும் தவிர உலகத்தில் எதுவும் தேவையில்லை என்று இருந்தவன் முகத்தில் இலங்கை போய் வந்தபின் உண்டாகியிருக்கும் சிந்தனை ரேகைகளை அவளால் மட்டுக் கட்ட முடியாமல் இருந்தது.

என்ன நடந்திருக்கும் அப்படி என்று அவளால் திட்டமாக எதையும் நினைக்க முடியவில்லை.

தன் அன்புக்கும் அணைப்புக்கும் எந்த நேரமும் பாத்திரமாய் இருப்பவன் குடும்ப வாழ்வில் ஏதோதோ என்று இருப்பதை உணரக் கூடியதாய் இருந்தது அவன் நடத்தைகளினால். கேட்கலாமா அவனிடம் என்று பல தடவை நினைத்துப் பார்த்தாள்.

அவன் எந்தக் கேள்விக்கும் இடம் வைக்காமல் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான்.

நீறுபூத்த நெருப்பாக அவன் அடிமனத்தில் ஏதோ எரிவது அவளுக்குத் தெரிந்தது.

என்னவாக இருக்கும்?

கௌரிக்குத் தனக்குச் சொல்லாமல் கல்யாண எழுத்து வைத்ததா?

அல்லது பானுமதி சாதி குறைந்த உறவு கொண்டாடுகிறாள் சபேசனுடன் என்பதா?

அல்லது......

நான் அலுத்து விட்டேனா?

சில இரவுகள் நித்திரையற்று வெறும் நினைவுக் குவியலுடன் போராட வைத்து விட்டது மரியனை.



காலம் மாற்றும் எனத் தன்னைத் தானே ஏமாத்திக் கொண்டான்.

குளிர் முடிந்து விட்டது.

வைகாசி பிறக்கப் போகிறது.

பூக்கள் கன்னி மலர புது இலை பரப்ப மரங்கள் துளிர்க்கின்றன.

வானம் வெளிச்கிறது.

லண்டன் தெருக்கள் இளம் பெண்களின் இனிய சிரிப்பில் மலர்கின்றன.

'சமர்' வரப்போகிறது.

தான் வந்து அடுத்த கிழமை வரப் போவதாக எண்ணியிருந்த இரு தங்கைகளும் வந்து சேர இரண்டு மாதங்களுக்கு மேலானது.

மகாதேவன், மண்டபம் ஒழுங்கு செய்து பூசாரி பார்த்து கல்யாண ஒழுங்குகளுக்குத் தடபுடலானன்.

தங்கைகள் இருவரும் வீட்டுக்கு வர மீராப் பெட்டையின் செல்லம் கூடியது.

இரண்டு 'அன்ரி'களிலும் மாறிமாறித் தொத்திக்கொண்டாள்.

தானும் தன் கணவனும் மீராவையும் தவிர வேறு யாருடனும் பழகிப் பழக்கமில்லாத மரியன் வீடு நிறைய ''மச்சாள்''களுடன் சமாளித்த விதம் கெட்டித்தனமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தத் தாய் தகப்பனைப் பார்க்கப் போக நாள் குறிப்பிடும் நாகரிக உலகத்தில் அண்ணன் தங்கை பாசம் எப்படி இருக்கிறது என்பதைக் கண்டு அவள் மனம் இளகி விட்டாள்.

இப்படியான அன்பான தங்கைகளைப் பிரிந்து எப்படிப் பத்து வருடம் இருக்க முடிந்தது அவனால் என்று, அவளால் நம்ப முடியவில்லை. சில நேரம், தகப்பனின் எதிர்ப்பு மட்டுமல்ல கார்த்திகாவைப் பார்க்க நேரிடும் என்ற பயமும் தான் அவனை இலங்கைக்குப் போக விடாமல் பண்ணியது என்பது அவளுக்குத் தெரியாது. மகாதேவன் அடிக்கடி வந்து கௌரியைக் கூட்டிக் கொண்டு போனான். நல்ல பிள்ளையாகத் தெரிந்த மகாதேவன் லண்டனுக்கு வந்ததும் தான் பெரிய ஆள்போல நடப்பது சில வேளை எரிச்சலாக இருந்தது பரமநாதனுக்கு.

லண்டனில் எந்தத் தமிழன் தான் மற்றவனுக்குப் பெரிசு என்று காட்ட முயலவில்லை?

நான் மகாதேவனுடன் குடித்தனம் நடத்தப் போகிறேன் என்று மனத்தைத் தேற்றிக் கொண்டான் பரமநாதன்.

ஒருநாள் சொல்லாமல் கொள்ளாமல் சபேசனின் படிப்பு சம்பந்தமான விடயங்கள் சேட்டிபிக்கட்டுகள் பதிவுத் தபாலில் வந்து சேர்ந்தன.

கிட்டத்தட்ட அவன் வரும் தறுவாயில் கொண்டு வந்து விட்டான்.

ஏதும் அட்மிஷன் எடுக்க முடியுமென்றால் உடனடியாக எடுங்கள் என்று கார்த்திகா எழுதியிருந்தாள்.



அந்தக் கடிதம் தந்த சந்தோசம் கடந்த இரண்டு மூன்று மாதமாக யாரும் தரவில்லை என்பதை யாரிடமும் சொல்ல வில்லை.

பானுமதிக்கு ரகசியமாகச் சொல்ல முடியவில்லை. இனிக் கௌரி எதிர்த்து என்ன பிரயோசனம்?

கோவிடனைக் கல்யாணம் முடிப்பதால் கௌரி பானுமதி வீட்டுக்குச் சாப்பிட வராமல் இருந்தால் இருக்கட்டும் லண்டனில் எப்படியும் மனிதர் வாழலாம்.

கௌரி முதலில் நம்பவில்லை.

யாருக்கும் தலைவணங்காத அல்லி ராணி போன்ற பானுமதிக்கும் காதல் வரும் என்று நம்ப மறுத்தாளோ என்னவோ, கௌரி தர்மசங்கடப்பட்டாள்.

அண்ணா ஆங்கிலேயப் பெண்ணைக் கல்யாணம் முடித்தால் ஏன் தங்கை இலங்கைக் கோவியனைச் செய்யக் கூடாது என்று தனக்குத் தானே தர்க்கம் பண்ணிப் பார்த்தாள்.

எனக்கேன் 'யாருடைய' சொந்த விடயத்திலும் தலையீடு என்று விலகி இருக்கத் தீர்மானித்தாள்.

மகாதேவனிடம் மூச்சு விடவில்லை.

ஏனோ தெரியவில்லை தன் தமையனை மகாதேவனுக்குப் பிடிக்கவில்லை என்பதைச் சாடையாக உணர்ந்திருந்தாள்.

இங்கிலிஸ் பெண்ணைத் திருமணம் செய்ததாக இருக்குமோ?

கௌரியின் கல்யாணம் நெருங்கிக் கொண்டு வந்தது. மகாதேவனுடன் சவுத்ஹோலுக்குக் கூறைச் சேலை வாங்கப் போய் இருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுட்கிறின், லண்டனில் அவ்வளவு கறுப்பர்களைக் கொள்ளாத இடம். ஒன்றிரண்டு கறுப்பர்களைக் காண நேரிடும்.

சவுத்ஹோல்!

தலைப்பாகை கட்டிய 'சிங்குகள்,' குஜராத்தி, மராட்டி, பஞ்சாபி எல்லா இந்திய இனத்தையும் சவுத்ஹோலில் காணலாம் போல இருந்தது.

என்ன இந்தியச் சாமானையும் சவுத்ஹோலில் வாங்கலாம் போல இருந்தது. அவள் பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்க்கும் விதத்தில் செல்வம் கொட்டிய இந்தியரின் கடைகளைப் பார்த்ததைக்கண்டு சிரித்தான் மகாதேவன்.

நான் பம்பாய்க்குப் போகவில்லை. போனவர்கள் சொல்கிறார்கள் சவுத்ஹோல் பம்பாயின் ஒருபகுதி தான் என்று என்றான் மகாதேவன்.

இந்தியர்கள் கடுமையான உழைப்பாளிகள். லண்டனில் குளிருக்கும் பனிக்கும் பயப்படாமல் வேலை செய்கிறார்கள். உழைக்கிறார்கள். காசு சேர்க்கிறார்கள். இதைப் பார்த்து சோம்பேறி வெள்ளைக்காரர் எரிச்சல் படுகிறார்கள்.

''எப்படி உம்முடைய அண்ணாவின் வெள்ளைக்கார மனைவி?'' மகாதேவன் கேட்டான். குரலில் ஏதோ நையாண்டி இருப்பதாகப் பட்டது. கௌரி தேவையில்லாமல் ஏதும் சொல்லி அவனுடைய விமர்சனத்தைக் கேட்கத் தயாராயில்லை.

✤ ✤ ✤ ✤



மகாதேவன் லண்டனில் உள்ள தன் சிநேகிதர்கள், உறவினர்கள் எல்லாரையும் கூப்பிட்டிருந்தான் கல்யாணத்துக்கு.

புக் பண்ணிய ஹோல் நிரம்பி வழிந்தது.

ஐயர் மந்திரமோத, அக்கினி சாட்சியாக அம்மி மிதித்து அருந்ததி பார்த்து (மண்டபத்தின் கூரைகளில் பகட்டான எலக்ட்ரிக்லைற்தான் எரிந்து கொண்டிருந்தது) மகாதேவன் கௌரியின் கழுத்தில் தாலி கட்டினான்.

இப்படி ஒன்றுமில்லாமல், வயிற்றில் குழந்தை வந்து விட்டது என்று சொன்னவுடன் விழுந்தடித்து றெஜிஸ்ரார் ஒவ்வீசுக்குப் போய்ப் பதிவுத் திருமணம் செய்து கொண்டது நினைவு வந்தது பரமநாதனுக்கு.

வீட்டாருக்குத் தெரியாது, சிநேகிதர்களுக்குத் தெரியாது, அவனுக்கே நம்ப முடியாமல் இருந்தது தான் ஒரு கல்யாண வலையில் அகப்பட்டு விட்டேன் என்று.

கல்யாண நிலை வர எத்தனையோ காலங்களுக்கு முன்னமேயே, கார்த்திகாவுடன் உள்ள தொடர்பு இல்லாமல் போனாலும் கல்யாணப் பத்திரத்தில் கையெழுத்து வைக்கும் போது கார்த்திகாவின் சலங்கிய கண்கள் ஞாபகம் வந்தன.

பானுமதியின் திருமணம் எப்படி நடக்கப் போகிறது?

தங்கையைத் திரும்பிப் பார்த்தான்.

பானுமதி அதிக கவனத்துடன் தமக்கையின் கல்யாணத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன சிந்தனை ஓடுகின்றன அவள் மனதில்?

எப்படி என் திருமணம் நடக்கப் போகிறது என்று நினைக்கிறாளா?

# 2

''யார் இந்தப் பெண்?'' மரியனின் முகத்தில் என்ன இருக்கிறது? சந்தேகமா?

மனைவியின் முகத்தைப் பார்த்துக் கொண்டு அவள் கையில் இருந்த கடிதத்தை வாங்கினான்.

எலிஸபெத்தின் கடிதம்.

உடைக்க முதல் மனைவியின் முகத்தைப் பார்த்தான். மரியன் அவ்வளவு குறுகிய உணர்ச்சி படைத்த பெண்ணா? அவன் முகத்தில் ஒன்றும் தெரியவில்லை. ''நீயே உடைத்துப்பார்.'' புன்முறுவலுடன் மனைவியின் கையில் கொடுத்தான்.

அவனுக்குத் தெரியாது அவனில் உண்டாகியிருக்கும் மாற்றங்களுக்கு யார் அல்லது எது காரணம் என்று தெரியாமல் தன் மனைவி துடிப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலிஸபெத் கூடிய விரைவில் லண்டனுக்கு வருவதாக வும் பரமநாதன் இப்போது லண்டனுக்கு வந்து விட்டான் என்று நினைத்து எழுதுவதாகவும் எழுதியிருந்தாள்.

மிகுதி தன் தமக்கையைப் பற்றி, தமக்கையை உயிரு டன் காணக் கொடுத்து வைக்காததைப் பற்றி.

அமெரிக்காவில் பிடித்துப் போய் இருக்கிறது. அடுத்த வன் எப்படி வசதியாய் இருக்கிறானோ அப்படியே தானும் இருக்க வேண்டும் என்ற பொருளாசையின் அடிப்படையில் உண்டான வாழ்க்கை அமைப்பு, இதனால் சாதாரண குடும் பங்கள் தாக்குப் பிடிக்க முடியாமற் சிதைகின்றன.

''எனது அக்கா இங்கிலாந்தில் இருக்கும் வரை இப்படி இல்லை. இருப்பது போதும் என்று திருப்திப் பட்டுக்கொண் டிருந்தாள். அவளின் கணவனைக் கண்டு கல்யாணம் செய்து அமெரிக்கா வரும்வரை அவள் கொள்கைகளும் வாழ்க்கை யும் எவ்வளவு நிர்மலமாக இருந்தன என்பதை விளக்கிச் சொல்லமுடியாது. அப்படியானவள் தன் உயிரைத் தானே மாய்த்துக் கொள்ளத் துணிந்ததற்கு எத்தனை வலிமையான மாற்றம் அவள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நினைத்துப் பாருங்கள். ஏன் இதெல்லாம் உங்களுக்குச் சொல்கிறேன் என்று தெரியவில்லை. யாருக்கும் சொல்ல வேண்டும் போல் இருந்தது. உலகம் சுற்ற வெளிக்கிட்டேன் உலகப் பெண்களைப் பார்க்க, அவர்களைப் பற்றி எழுத.

என் உணர்ச்சிகள் என் தமக்கைக்காக உதிரக் கண் ணீர் வடிப்பதை யார் அறிவார்கள்.

கெதியில் லண்டனுக்கு வருகிறேன். மறக்காமல் உங் கள் மனைவியை அறிமுகம் செய்து வையுங்கள்.

'அன்புள்ள லிஸா.' மரியன் வாசித்து விட்டுப் பரமநா தனிடம் கொடுத்தாள். ஆங்கிலேயப் பெண் கறுப்பனான தன்



கணவனிடம் இவ்வளவு சினேகிதமாக எழுதும் அளவுக்கு அவர்கள் உறவு அவ்வளவு இறுக்கமானதா? தான் தேவை யில்லாமல் எதையோ, யாரையோ சந்தேகப்படுவது தெரிந் தது மரியனுக்கு.

தன் சந்தேகங்களுக்குப் பெயராக லீஸா பேக்கர் வந் தது சந்தர்ப்பவசமா என்று அவளால் முடிவு கட்ட முடி யாமல் இருந்தது. பரமநாதன் கடிதத்தை வாசித்து விட்டு மனைவியின் முகத்தைப் பார்த்தான்.

மட்டுக் கட்ட முடியவில்லை. அவள் முகத்தைப் பார்த்து நேரடியாகக் கேட்டான்.

''உமக்கு என்னிலும் லீஸாவிலும் சந்தேகமா?'' பரம நாதனின் குரலில் தெளிவு தெரிந்திருக்க வேண்டும். கண வனை நிமிர்ந்து பார்த்தாள்; கண் கலங்கியது.

''ஐ லவ் யூ டார்லிங்.'' கணவனை இறுக அணைத்துக் கொண்டாள். ''மரியன், டோன்ட் பி ஸிலி.'' பரமநாத னுக்கு எரிச்சல் தந்தது மரியன் அப்படி ஒப்பாரி வைத்தது.

''முன் தலை நரை விழுந்த உமது புருஷன் இல்லை என்று தான் லீஸா பேக்கர் திரிகிறாள் என்று நினைவா உனக்கு? அவள் ஒரு எழுத்தாளி, பலதரப்பட்ட விடயங்க ளைப் பரந்த நோக்குடன் பார்ப்பவள், சினேகிதி என்ற விதத்தில் அல்லாமல் நீ நினைப்பதுபோல் எங்களுக்குள் ஒரு உறவுமில்லை.'' பரமநாதனுக்கு எரிச்சல் வந்தது இப்படி வார்த்தைகளால் தன்னைத் தன் மனைவிக்கு விளங்கப் படுத்த வேண்டியிருப்பதை நினைத்து, இதுதானா கல்யா ணம்?

உள்ளத்தாலும் உடலாலும் இனி வேறுபட்டவர்கள் இல்லை நாங்கள் என்று நினைக்கும்போது, இன்னொருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது இன்னொருத்தனுடன் ஒருதரம் பழகிவிட்டால் ஏன் இப்படி சந்தேகம் வரவேண்டும்?

மரியனில் பரிதாபம் வரவில்லை. எல்லாப் பெண்களும் மரியன் போலத்தான் என்று தன்னைத்தானே தேற்றிக் கொள்ளத் தயாராயில்லை.

வாய் விட்டு வார்த்தைகளால் தான் ஒன்றும் லீஸா வுடன் ''படுத்தெழும்பவில்லை'' என்று சொல்ல வேண்டி யிருந்ததை விட்டு ஆத்திரம் அடைந்தான்.

ரஷ்யாவில் ரூரிஸ்ட் ஹொட்டேலில் லீஸாவைத் தன் படுக்கையறையில் தனிமையான, குளிர் இரவில் கண்ட போது உண்டான மயக்கம், ஞாபகம் வந்தது.

''If I am not married, I will ask you to sleep with me'' என்று லீஸாவிடம் சொன்னதை அவன் மறக்கவில்லை.

அவள் இளமையில், திறமையில், இனிமையான அழ கில் தன்னை மறந்தது அவனுக்குத் தெரியும்.

ஆனால் அவன் அதைவிட லீஸாவின் மென்மையான சினேகிதத்தை விரும்பினான்.

''Liza is not a woman for a one night stand.'' அவன் கத்தினான் மனைவியிடம்.

மரியனுக்குப் பயமாக இருந்தது அவன் கோபத்தைப் பார்த்து. ''ஏன் இப்படிக் கத்துகிறீர்கள்?'' இங்கிலிஸ் உச் சரிப்புகள் அவள் வாயில் அமிழ்ந்து தெளிந்து வந்தன.

பரமநாதனுக்குப் பரிதாபம் வரவில்லை அவள் கண்ணீ ரைப் பார்த்து. பத்து வருட காலமாக மனச்சாட்சியுடன் மாரடித்து விட்டுத், தான் ஏமாற்றியவளைக் கண்டபோது அவள் என்ன சொன்னாள்? கார்த்திகா என்ன சொன்னாள்?



என்னை மன்னித்ததை வார்த்தைகளால் சொல்லவில்லை. எங்கள் உறவில் ஒரு நாளும் ''உடலுறவு இருந்ததில்லை.'' ஆனால் அவள் பார்வையில் நான் இன்னும் ''அவளுடை யவன்.'' இன்னுமொரு பெண்ணிடம் என் உடம்பும் உடைமையும் என் உழைப்பும் மட்டும்தான் இருப்பதாக நினைக்கிறாளா கார்த்திகா? என் இளமை, அதன் இனிய உணர்வுகள், அதன் பாதிப்பில் உண்டான என் அன்பு அதன் வலிமை, அந்த உறவின் பெருமையை அவள் இன் னும் நினைத்தழுகிறாள். அந்த நினைவில் தான் வாழ்கிறாள்.

இங்கிலாந்துக்கு வர முதல் மெல்லிய நிலவொளியில் பம்பலப்பிட்டிக் கடற்கரையில் அணைத்துக் கொண்டிருந் தான். அப்படி அணைப்புகளுக்கு எப்போதும் விலகுபவள் கார்த்திகா, இன்று இதுதான் கடைசி அணைப்பு என்றோ என்னவோ அசையாமல் இருந்தாள்.

இரவில் யாரும் தெரிந்தவர்கள் பார்த்தாலும் என்ற பதட்டம் இல்லை, எப்போதும் அவன் அணைப்புக்கு முணு முணுப்பு சிணுங்கல், ஒரு செல்லம் இருக்கும்.

அன்று, நீர் வழிய இருந்தாள்.

அவளால் ஒன்றும் பேசமுடியவில்லை. பேச ஒன்றும் இருக்கவில்லை. பேசி விளங்கப்படுத்தத் தேவையில்லாத எத் தனையோ உண்மைகளை, உணர்வுகளை அவர்கள் ஆத்மா உணர்ந்து கொள்ளும் என்று அவனுக்குத் தெரியும்.

''கார்த்திகா இரண்டு மூன்று வருடம் தானே?'' அவன் அவள் தலையை வருடி விட்டான்.

''தயவு செய்து ஒன்றும் சொல்லாதீர்கள், கதைக்கா மல் இருங்கள்.'' அவள் தன் மென்மை விரலால் அவன் வாயைப் பொத்தினாள், தொட்ட அவள் விரல்களை முத்த மிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கன்னங்களில் வழிந்த நீர் முத்துக்கள் அவன் இதழ்களில் உப்புக் கரிப்பை உண்டாக்கியது. அவள் துடித்த இதழ்கள்; அவன் இதழில் பதிந்து ஆயிரம் துயரக் கதை சொல்லியது. இருதயத்தின் துடிப்புகள், வேதனைகள், ஆற்றுமை அந்தப் பிடியில், அந்த அணைப்பில், அந்த முத்தங்களில்... மெல்லுடல் அவனில் பரவி மோக நினைவுகளையூட்டி... இதெல்லாம் மறந்து என்னைக் கண்டவுடன் என்ன சொன்னுள்? ''கடந்த காலத்தைப் பற்றிக் கதைக்காதீர்கள்'' என்றுள். என்னுடையனவாய் இருக்க வேண்டியவை இவை என்று ஆற்றுமையுடன் என் கைகளை அணைத்துக் கொண்டாள். சந்தர்ப்ப வசத்திற்குத் தன் தலைவிதியை நொந்து கொண்டாள்.

பத்து வருடப் பிரிவு, என்னில் உண்டான அன்பில் எந்த மாற்றத்தையும் உண்டாக்கவில்லை.

இவள்?

என் மனைவி?

பத்து வருடமாக என் படுக்கையறையைப் பகிர்ந்து கொண்டவள், ஒரு மாத இடைவெளியில் என்னைச் சந்தேகிக்கிறுளா?

நினைவே எரிச்சலாக இருந்தது அவனுக்கு.

''உம்மைச் சொல்லி என்ன பிரயோசனம்?'' அலுப்புடன் முணுமுணுத்தான் பரமநாதன்.

மரியன் காலைச் சாப்பாடு முடிந்த மேசையைத் துப்பரவாக்கிக் கொண்டிருந்தாள்.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்றுள் கோர்ன் பிளாக்ஸ் பெட்டியைத் தூக்கியபடி,



''You are only worried about Sex'' அவன் வார்த்தைகள் அருவருப்பாக இருந்திருக்க வேண்டும்.

கையில் இருந்த கோர்ன் பிளாக்ஸ் எறிபட்டுச் சிதறியது. அவன் எழுந்து சென்றுன் அவளைக் கவனியாமல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

'கொலிஜ் அட்மிஷன்' எடுக்கப் படாத பாடு படவேண்டியிருந்தது. ஒன்றிரண்டு வருடங்களுக்கு முன்னேயே வெளிநாட்டு மாணவர்கள் 'அப்ளை' பண்ணி விடுவார்கள்.

கல்லூரிகளில் கடைசிவரைக்கும் அட்மிஷன் இல்லை என்று கை விரித்து விட்டார்கள். லண்டனில் அட்மிஷன் எடுக்க முடியாவிட்டால் வெளியில் எடுக்க வேண்டும்.

இரண்டரைக் கோடி பேருக்கு வேலையில்லை இங்கிலாந்தில் இந்த லட்சணத்தில் பானுமதிக்கு ஏதும் 'பார்ட்ரைம்' வேலை எடுப்பது எத்தனை கஷ்டம் என்று தெரியும்.

அத்துடன் சபேசன் பார்ட் ரைம் வேலை செய்யாமல் படிப்பதென்பது கனவிலும் நடக்காத காரியம். அவனுக்கு லண்டனில் அட்மிஷன் கிடைத்தால் தவிர பார்ட் ரைம் வேலை கிடைப்பது கஷ்டம்.



ஆவணி மாதம் முடியப் போகிறது. இன்னும் அட்மிஷன் இல்லை. அட்மிஷன் வராவிட்டால் சபேசனைக் கூப்பிட முடியாது.

இலங்கையில் திருமதி பண்டாரநாயக்காவை இனி எலெக்ஸன் கேட்காமல் பண்ண - அரசாங்கம் திருமதியின் ஆட்சியில் நடந்த ஊழல்களை விசாரிப்பதாகச் செய்தி வந்தது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது என்பது ஒரு நாளும் சரியாகத் தெரியாது.

கார்த்திகாவின் கடிதங்கள் கொழும்பில் இருந்து வருவதால் கொழும்பில் என்ன நடக்கிறது என்று தெரியும். சபேசன் தன் அரசியல் விடயம் பற்றி அதிகம் தமக்கையிடம் சொல்ல மாட்டான். அதனால் அதிகம் அவனுக்குத் தெரியாது. சத்தியமூர்த்தியிடமிருந்து அதிக கடிதம் வரவில்லை. இலங்கையில் நடந்த வேலை நிறுத்தம் பற்றி எழுதியிருந்தான். எத்தனை ஆயிரம் பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள் வேலை நிறுத்தம் செய்த குற்றத்துக்காக என்பதைப் படித்தபோது நம்ப முடியாமல் இருந்தது.

தொழிற்சங்க ஆக்கத்துக் காரணமாய் இருந்த தலைவர்கள் எங்கே? முதுகுடையும் தொழிலாளி எதிர்த்துப் பேசினால் தண்டனை வேலையை பறிப்பதா? பரமநாதனால் நம்ப முடியவில்லை இலங்கையில் இப்படி நடக்கிறது என்பதை.

"என்ன நடந்து விட்டது எங்கள் தலைவர்களுக்கும் என்று கேட்காதே. நீ சொன்னது போல் ஒக்ஸ்போட்டிலிருந்தும் கேம்பிறிட்ஜிலிருந்தும் இறக்குமதி செய்த சோசலிசம் இங்கு இறந்து விட்டது. தங்கள் சுய நலத்துக்காகத் தொழிலாளர்களின் உரிமைப் போராட்டங்களுக்கு வலிமையும் ஒத்துழைப்பும் கொடுக்காத தலைவர்களால் இலங்கையில் சோசலிசம் செத்துக்கொண்டிருக்கிறது. சிங்களப் பகுதிகளில் மட்டுமல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தொழிலாளத் தலைவர்களும் தங்கள் கடமையை சரியாகச் செய்கிறார்கள் இல்லை.''

சத்தியமூர்த்தியின் கடிதம் பரமநாதனை வேதனைப் படுத்தியது.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் கொடுமையைப் பற்றி எழுதியிருந்தான் சத்தியமூர்த்தி. தான் கார்த்திகா வீட்டுக்குப் போனதாகவும் சபேசனுடன் கதைத்தாகவும் இலங்கையில் இருந்தால் எப்போதோ ஒருநாள் தன் தலை போகும் என்று சபேசன் உணர்ந்து விட்டான் என்றும் எழுதியிருந்தான் சத்தியமூர்த்தி.

பானுமதி சத்தியமூர்த்தியின் கடிதத்தைக் கண்டு அழத் தொடங்கி விட்டாள்.

''அவருக்கு என்ன நடக்கிறதோ'' என விம்மத் தொடங்கி விட்டாள். கொஞ்ச நாட்களாக பரமநாதனுடன் சரியாகக்கதைக்கவில்லை மரியன். அத்துடன் பானுமதியின் விம்மல் இன்னும் எரிச்சலையுண்டாக்கியிருக்க வேண்டும்.

பத்து வருடம் இல்லாதிருந்த எல்லாக் குடும்பப் பொறுப்பும் தன் கணவனின் தலையில் விழுந்ததாற்தான் தன்னிலும் எரிந்து விழுகிறான் என்று மனத்தைத் தேற்றிக் கொண்டாள் மரியன்.

எப்படித்தான் இருந்தாலும் தன்னை இப்படி அற்பம் போல் நடத்தியதை அவளால் மன்னிக்க முடியவில்லை.

பானுமதியின் கல்யாணம் முடிந்து அவள் சபேசனுடன் போனவுடன் கணவன் தன் பாட்டுக்குத் தன்னிடம் மன்னிப்புக் கேட்பான் என்று நினைத்தாள்.

எப்போது சபேசன் வருவான் என்று பானுமதி மட்டுமல்லாது மரியனும் யோசித்தாள்.



படாத பாடு பட்டு லண்டன் கல்லூரி ஒன்றில் இடம் எடுத்திருந்தான் பரமநாதன்.

பானுமதிக்காகவா?

அட்மிஷன் கடிதம் கிடைக்கும்போது கார்த்திகாவின் முகம் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்தான். கண் கலங்கக் கடிதம் படித்திருப்பாள். நம்பிக்கை அவள் முகத்தில் ரேகையாய் நெளிந்தோடியிருக்கும்.

தன் மூன்று தங்கைகளுக்கும் ஒரு விடிவு காலம் கெதியில் வரும் என்று பிரார்த்திப்பாள். அவனுக்கு?

தூரத்தில் தேம்ஸ் நதியில் ஆயிரக் கணக்கான படகுகள் மிதந்து கொண்டிருந்தன. 'சமர்க்' காலம் முடிந்து இலையுதிர்காலம் தொடங்கி விட்டது. தேம்ஸ் நதிக்கரை நிர்வாணமான மரங்களால் அணைக்கப்பட்டிருந்தது. தன் பத்தாம் மாடிக் கட்டிடக் காரியாலத்திலிருந்து வெறியில் பார்த்தான்.

காரியாலயத்தில் ஒருவரும் இல்லை. அவசரமான றிப்போட் எழுதுவதற்காக அவன் இருக்கிறான்.

பிரமாண்டமான கட்டிடம் அதைச் சுற்றியுள்ள இடம் பூதாகாரமாய்த் தெரிகிறது.

பத்து மாடிகளுக்குக் கீழ் லண்டன் உயிரோடு உலவும் இவ்விடம் ஒரு சந்தடியுமில்லை, வெறும் அமைதி.

பிந்தி வருவேன் என்று மரியனுக்குச் சொல்லவும் இல்லை. தேவையில்லாத விடயங்களுக்கெல்லாம் சந்தேகப் படுகிறாள். இப்போது தன்னை மதித்து நடக்கவில்லை என்று மூஞ்சியை நீட்டப் போகிறாள். எழுதிய றிப்போட்டை அவசரமாக முடித்து விட்டுக் கீழே வந்தான். லிப்டில் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு யாரும் இல்லை. நீண்ட வராந்தாக்கள் நிராதரவாய்க் கிடந்தன.

கார் கொண்டு வரவில்லை. சேர்விசுக்கு விட்டு விட்டான். அண்டக் கிரவுண்டுக்குப் போவதற்காக இறங்கியவன் ''ஹலோ'' குரலில் திடுக்கிட்டான்.

விக்டோரியா ஸ்ரேசனில் அவசரத்தில் மூடிக் கொண்டிருக்கும் மக்களின் மத்தியில் அவள் நின்ருள். கடைசியாக அரை குறை வெறியில் தெகிவலையில் கண்ட எலிஸபெத் லண்டனில் விக்டோரியா ஸ்ரேசனில் தன் மூக்குக் கண்ணுடியைத் துடைத்துக்கொண்டு நிற்கிருள்.

தன் சந்தோஷத்தை எப்படி மறைப்பது என்று தெரியவில்லை அவனுக்கு. ''ஹலோ எலிஸபெத்'' என்ருன்.

''லிஸா என்று கூப்பிடலாம் என்று எத்தனைதரம் சொல்வது?'' அவள் முணுமுணுத்தாள்.

அவளைக் கண்டதும் எவ்வளவோ சொல்ல வேண்டும் போல் இருந்தது. மரியனைப்பற்றி, கார்த்திகாவைப்பற்றி, பானுமதியைப் பற்றி, சபேசனைப்பற்றி, கௌரி, மகாதேவன்......

''லிஸா அவசரமாக எங்கேயாவது போகிருயா?'' அவன் குரலில் இருந்த உற்சாகம் அவளை ஆச்சரியப் படவைத்திருக்க வேண்டும். ஏற இறங்கப் பார்த்தாள். இல்லை என்பதுபோல் தலையாட்டிக் கொண்டு ''நான் ஒன்றும் குடித்திருக்கவில்லை'' என்ருன் சிரித்துக்கொண்டு. ''லண்டனிலும்நியூயோர்க்கிலும் மனிதர்கள் பழகும்விதம் அவர்கள் குடித்திருக்கிருர்களோ நிதானமாய் இருக்கிருர்களோ என்பதை மட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறது.''

இருவரும் சிரித்தார்கள்.



இருவருக்கும் தெரியும் என்ன கருத்தில் அவள் சம்பாஷணை அமைந்திருந்தது என்று.

உலகம் எதையும் நிதானமாகப் பார்க்க, நினைக்க, சிந்திக்க மறுப்பதாற்தான் இவ்வளவு பிரச்சினையா?

''நியூயோர்க் எப்படி'' என்ருன். இருவரும் வெஸ்ட் மினிஸ்டர் நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

''நியுயோர்க் எப்படி என்ருல்'' அவன் அவள் கேள்விக் குறியுடன் பார்த்தாள்.

''இருக்கிறது, எலெக்ஷன் கொண்டாட்டத்தில், எல்லோரும் சொல்கிருர்கள் றீகன்தான் பிரஸிடென்டாக வருவார் என்று, ஒரு விதத்தில் இப்படி முட்டாள்த்தனமான காரியம் செய்வது தவிர்க்க முடியாத பிழையாக இருக்கலாம் அமெரிக்க மக்களைப் பொறுத்தவரை. கார்ட்டரில் உள்ள நம்பிக்கை கடந்த நாலு வருடத்தில் தவிடு பொடியாகி விட்டது. அதற்கு எதிராக யார் எலெக்ஷன் கேட்டாலும் வோட் போடும் நிலையில் இருக்கிறது சாதாரண சனங்களின் மனநிலை. Any body but Carter என்றுதான் பெரும்பாலானவர்கள் சொன்ஞர்கள். யார் வந்தாலும் என்ன? என்ன சொல்லி விட்டு வோட் எடுத்தாலும் என்ன? வைற் ஹவுசுக்கு வரும் வரைதான் வாய். பின்னர் உண்மையான அதிகாரம் காங்கிரஸ்காரரில் தான் இருக்கிறது. பயப்படாதீர்கள் றெனல்ட் றீகன் பட்டினை அமத்தி மூன்ரும் உலக யுத்தம் கட்டாயம் வரும். அக்ஸிடென்டாக யாரோ பட்டனை அமத்துவதால் வரும். போன வருடம் இரண்டு மூன்று தரம் ''அக்ஸிடென்டாக'' அபாய ஒலி கேட்டது. இனி ஒலி கேட்காது உலகம் சுக்கு நூருக உடையலாம்.''

எலிஸபெத் பேசிக்கொண்டே வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்ட இரவில் வெஸ்ட்மினிஸ்டர் அபேயும், பக்கத்தில் பாராளுமன்றமும் இவள் சத்தியத்தில் பயந்து போய் நிற்பது போல் சலனமற்றுத் தெரிந்தன.

கோடிக்கணக்கான வெளிச்சங்கள் - ஆயிரக்கணக்கான கார்கள் வித விதமான படகுகள் தேம்ஸ் நதியில்.

இருவரும் நடந்து கொண்டிருந்தார்கள் வெஸ்ட் மினிஸ்டர் பாலத்தில்.

''எங்கே கூட்டிக் கொண்டு போகிறீர்கள்?'' கோட்டுப் பைகளில் கைகளை விட்டுக் கொண்டு கேட்டாள்.

திரும்பிப் பாத்தவனுக்கு அவள் நின்ற விதம் இனிமையான நினைவுகளை ஞாபகப் படுத்தியது.

தேம்ஸ் நதியின் பின்னணியில் அவளின் இளமையான தோற்றம் ஒருகாலத்தில் கார்த்திகாவுடன் பேராதனைப் பூங்காவில் தொங்கு பாலத்தில் செல்லம் பண்ணிப் போனதை ஞாபகமூட்டியது.

அடுத்த கணம் லண்டன் யூனிவர்சிற்றியும் மரியனும் அவர்களின் காதல் நாட்களையும் ஞாபகமூட்டின.

அவன் தன்னை அப்படிப் பார்ப்பது தர்ம சங்கடத்தையும் வெட்கத்தையும் உண்டாக்கியிருக்க வேண்டும்.

''காதலிகளும் மனைவிகளும் இல்லாத உலகத்திற்கு கூட்டிக் கொண்டு போகிறேன்.'' பாலத்தில் சாய்ந்து நின்று கொண்டு சொன்னான். அவள் கொஞ்ச நேரம் பதில் சொல்லவில்லை. ''பசி வயிற்றைப் பிடுங்குகிறது.'' அவள் வயிற்றைத் தடவினாள். ''விக்டோரியாவிலிருந்து இதுவரை எத்தனை மைல்? அவள் திரும்பிப் பார்த்து வந்த வழியை அளவிட்டாள்.



''இரண்டு மைல்கள்.'' அவன் சாதாரணமாகப் பதில் சொன்னான். ''இனியும் நடக்கச் சொன்னால் இருந்து விடுவேன் இந்தப் பாலத்தில்.'' அவள் செல்லம் பண்ணினாள்.

அவன் ரக்ஸியை மறிக்க இருவரும் ஏறிக் கொண்டார்கள். ''எங்கே ஹூட் கிறீனுக்கா கூட்டிக் கொண்டு போகிறீர்கள்?'' அவளின் களங்கமற்ற கேள்வி அவன் மனத்தைச் சுண்டியது.

இவள் இப்படிக் களங்கமில்லாமல் பழகுகுறாள் ஏன் மரியன் இப்படிச் சந்தேகிக்கிறாள்?

கூட்டிக் கொண்டு போய் அறிமுகம் செய்யலாமா? பானுமதிக்கு முன்னால் நாடகம் நடக்காது என்று என்ன நிச்சயம்?

பானுமதி என்ன நினைப்பாள் என்னைப் பற்றி?

கார்த்திகா, மரியன், எலிஸபெத், இன்னும் எத்தனை பேர் என்று நினைக்க மாட்டாளா?

நான் காசினேவா என்று என் தங்கையும் குடும்பம் நினைக்க வேண்டுமா?

ரக்ஸி பிக்கடெலிப் பக்கம் ஓடிக் கொண்டிருந்தது.

இந்தியன் றெஸ்ரோறன்ரில் இறங்கிக் கொண்டார்கள்.

''ஏன் உங்கள் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போகவில்லை?'' எலிசபெத் வியப்புடன் கேட்டாள்.

மறுமொழி சொல்லாமல், பக்கத்தில் வந்து நின்ற வெயிட்டரிடம் பிரெஞ்சு வைனுக்கு ஓடர் பண்ணி விட்டு அவளைப் பார்த்தான். இவளுக்கு எப்போதாவது ஒரு நாள் சொல்லித்தானே தீரவேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எலிஸபெத்...'' அவன் தயங்கினான்.

''லீஸா என்று கூப்பிடுங்கள்.'' அவள் குத்திக் காட்டினாள். ''சரி, லீஸா என்று கூப்பிடுகிறேன்.'' அவன் இன்னும் மௌனமாய் இருந்தான்.

வெயிட்டர் கொண்டு வந்த வைற் பிரெஞ் வைன் கொதிக்கும் மனத்திற்கு இதமான குளிராக இருந்தது. ''லீஸா என் மனைவிக்கும் எனக்கும் உறவு சரியில்லை.'' அவன் ஏனோ லீஸாவின் பெயரைத் தன் குடும்ப சிக்கலில் புகுத்த மறுத்தான்.

''சொறி பரமநாதன்.'' அவள் குரல் பரிதாபமாக ஒலித்தது.

''தயவு செய்து யாரும் எனக்காகப் பரிதாபப் பட வேண்டாம். Dont feel sorry for me.'' குரல் உயர்ந்திருந்தது.

விக்டோரியா ஸ்ரேசனில் தான் முன்னால் நிற்பதைக் கூடப் பொருட் படுத்தாமல் அவன் ஏதோ யோசனையில் வந்ததை நினைத்துப் பார்த்தாள்.

ரஷ்யன் விமானத்தில் நிதானமும், கவர்ச்சியுமாய் இருந்தவனா இந்த சோர்ந்த மனிதன்?

''நான் ஏதும் உதவி செய்யலாமா?'' அவள் கேட்டாள். அவள் முகம் வாடியிருந்தது. பசியாலா, அவனின் துக்கக் கதையாலா தெரியவில்லை.

''எனக்கேதும் உதவியா? அவன் வைன் கிளாசை மூக்கில் தேய்த்துக் கொண்டு அவளை விநோதமாகப் பார்த்தான்.



அவளுக்குத் தெரியும் அவன் என்ன கேட்பான் என்று, கார்த்திகாவுக்கு என்ன நடந்தது என்று கேள்விப்பட்ட போது தெஹிவளைக் கடற்கரையில் துடித்து அழுது, Please be my friend என்று கெஞ்சியது ஞாபகம் வந்தது.

சிநேகிதம்!

எந்த அடிப்படையில்?

எப்படித்தான் மானஸீகமாகத் தொடங்கினாலும் அது எங்கே போய் முடியும்?

சிக்கலான சிநேகிதங்களுக்குள் தன்னை அவள் சிறைப் படுத்த விரும்பவில்லை. அது அவளின் சித்தாந்தமும் இல்லை. பரமநாதன் நினைக்கும் சாதாரண சிநேகிதம் என்ற வார்த்தையின் கருத்து கட்டிலில் போய் முடிவதை அவள் வெறுத்தாள்.

''நான் கட்டுரைகள் எழுதுவதை விட்டு விட்டு இப்போது பேப்பரில் வேலை செய்யத் தொடங்கி விட்டேன்.''

உணவு விடுதியின் மெல்லிய விளக்கொளியில் அவள் இமை பவுத்திரமான ஓவியம் ஒன்றை ஞாபகப் படுத்தியது.

அவள் என்ன சொல்கிறாள் என்றும் தெரியும்.

''She doesn't want to be his casual sex object'' அவன் மனத்துக்குள் சொல்லிக் கொண்டான்.

அவள் முட்டாள் இல்லை. அவன் துடிப்பு, வேதனைகள், பிரச்சினைகளுக்கு அவள் என்னென்ன விதத்தில் ''உதவி'' செய்ய வேண்டும் என்று தெரியும். மரியனுடன் சிநேகித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகி அவர்களை ஒன்றுபடுத்தலாமா என்பதுதான் அவள் யோசனை.

மரியனின் கோபத்தின் உண்மையான காரணம் எலிஸ பெத்துக்குத் தெரிந்தால்......

''Full time வேலையா?'' அவன் 'தாண்டோரிச் சிக்கனை' எடுத்துக் கோப்பையில் வைத்துக் கொண்டு சொன்னான்.

''இல்லை Free lance journalist.'' ஏதோ விதத்தில் தெரிந்தது பரமநாதனுக்கு லிஸாவின் முகபாவமும் யோசனை களும் மாறிக் கொண்டு போகின்றன என்று.

தன்னையும் தன் குடும்பத்தையும் பற்றிக் கதைத்து அவளுக்குத் தர்மசங்கடம் கொடுக்காமல் வேறு ஏதும் கதைக்க விரும்பினான்.

''சபேசன் வருகிறான் கெதியில்.''

அவன் எதிர்பாராத விதமாக அறிவித்தது அவளுக்கு யாரைப்பற்றிக் கதைக்கிறான் என்பதை யோசிக்க வைத்தது.

''ஞாபகமிருக்கிறதா தெகிவளைக் கடற்கரையில் என்னு டன் இலங்கை அரசியலைப் பற்றிச் சண்டை போட்ட இளை ஞன்''

அவன் சபேசனின் ஞாபகத்தை அவள் மனத்தில் கொண்டு வர முயற்சித்தான்.

''ஓ யெஸ், நீங்கள் எல்லாம் சந்தர்ப்ப வாதிகள், தன் னல வாதிகள், அதுதான் தப்பினோம் பிழைத்தோம் என்று அயல் நாடுகளுக்கு ஓடிவிட்டீர்கள் என்று சண்டை போட் டாரே அவரா?'' லிஸாவுக்கு ஞாபகம் வந்தது சபேசன் யாரென்று. பரமநாதனை ஒரு போத்தல் வொட்கா குடிக்கப் பண்ணியவன்.



அவனுக்கு இவனின் உதவியா?

அவள் விளங்காமல் பரமநாதனைப் பார்த்தாள்.

''தானும் தன்னலவாதியாக வெளி நாட்டுக்குப் போகப் போகிறாரா?'' குத்தலுடன் கேட்டாள். தான் தான் சபேசன் என்கிற மாதிரி இருந்தது அவள் குரல்.

''லிஸா நானும் இலங்கையில் இருந்தால் சபேசன் மாதிரித்தான் நினைப்பேன், நடப்பேன். உலகத்தில் எந்த சரித்திரமும் இல்லை எந்தக் கொடுமையையும் எதிர்க்காமல் விட்டதாய். இலங்கையில் தமிழர் நிலை உமக்கு முழுக்க விளங் காது. சபேசன் போன்றவர்களின் போராட்டம் அவர்களை அடக்கும் அரசாங்கத்தை மட்டும் எதிர்ப்பதாக நான் நினைக் கவில்லை. தமிழ் மக்களை இவ்வளவு தூரம் தவறுதலான வழியில் நடத்திச் சென்ற தலைவர்கள், கண்டும் காணாத மாதிரி, தமிழர் பிரச்சினை ஒரு இனத்தின் பாரிய பிரச்சினை என்பதைக் காட்டிக் கொள்ளாத இடதுசாரிகள் என்பவர் களுக்கு எதிராகவும் தான் என்பது, என் அபிப்பிராயம். ஆனால், அவர்களின் இளமையுணர்ச்சி தவறுதலாக வழி நடத்தப் படுவதையோ, தவறுதலான முறையில் தனிப்பட்ட பயங்கரவாதங்களில் ஈடுபடுவதையோ நான் விரும்ப வில்லை. உலகத்தின் எந்த மூலைக்கு ஓடினாலும் ஒரு நாளைக்குத் தமிழர் இலங்கைக்குத் திரும்பித்தான் போக வேண்டும். இருக்குமிடத்தைப் பாதுகாக்க, தேசம் மொழியைப் பாது காக்க சபேசன் போன்ற இளைஞர்கள் போராடுகிறார்கள். அவர்களின் போராட்டம் பல விதத்திலும் நசுக்கப் படுகிறது. தங்கள் பட்டம், பதவி, காட்டிக் கொடுக்கும் துரோகத் தனம் என்பன நிறைந்த வசதியான மனிதர்களின் கொடுமை ஒருபக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றுத் தவளைகளாய் இருந்து கொண்டு ஒரு பாரிய இனத்தின் பிரச்சினையை அவர்கள் திட்டமிட்டு நசுக்கப் படுவதை எதிர்க்கப் பலமற்று அதற்காகப் போராடுபவர் களையும் இனவாதிகள் என்று பெயரிட்டுத் தங்களை சோச லிசக் குஞ்சுகளாய்ப் பிரகடனப் படுத்தும் இடதுசாரிகளின் வசைமாரி ஒரு பக்கம், அரசாங்கத்துக்குக் கூலிக்கு மார டிக்கும் பத்திரிகையாளர் ஒரு பக்கம். இவை எல்லாவற் றிற்கும் எதிர்த்துப் போராடுவது சிறிய காரியமல்ல.

பரமநாதன் இலங்கைப் பிரச்சினையைப் பற்றி இவ்வ ளவு தூரம் தெளிவாகப் பேசியது இதுதான் முதற் தடவை. இப்போது தெரிந்தது ஏன் தன் தங்கையின் காதலன் சபே சன் ஆபத்தில் மாட்டிக் கொள்ளாமல் இருக்க உதவி செய்கிருன் என்று.

# 4

லிஸாவுடன் கதைத்து விட்டு வர நடுச்சாமம் ஆகிவிட் டது.

மரியன் வீட்டில் இல்லை!

பானுமதி சொன்ஞள் சினேகிதியுடன் "லெஸ்ட் எண்ட்"டுக்குப் படம் பார்க்கப் போனதாக. மரியன் தான் காலையில் வேலைக்கு வெளிக்கிட முதல் இது பற்றி ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. தன் அனுமதியும் கேட்கவில்லை.

தான் கேட்டா இவ்வளவு நேரமும் லிஸாவுடன் இருந்து விட்டு வருகிருன்?

இருவரும் ஒருவருக்கொருவர் சொல்லிச் சொள்ளாமல் நீண்ட பாதைகளிற் திரும்பிப் போவதாகத் தெரிந்தது.

பானுமதியின் முகம் சந்தோசமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபேசனிடமிருந்து தந்தி வந்திருந்தது. நாளைக்குப் பிளேன் எடுக்கிறுனும்.

தங்கையின் முகத்தைப் பார்க்க அவன் துன்பம் எல்லாம் எங்கேயோ பறந்தது. பண்டாரநாயக்கா விமான நிலையத்தில் தம்பியை ஏற்றிவிட வரும்போது கார்த்திகாவின் முகமும், இப்படி மலருமா?

கார்த்திகாவுக்காக இதெல்லாம் செய்கிறேன் என்ற நினைவு வந்தவுடன் மரியன் வீட்டில் இல்லை என்பது பெரிதாகத் தெரியவில்லை.

''நாளைக்கு லீவு எடுக்கிறேன். உங்கள் இருவருக்கும் ஏதும் மலிவான இடம் பார்க்க வேண்டும்.'' தமையன் சொல்வதை வெட்கத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள் பானுமதி.

ஆனாலும் தாய்க்குத் தெரியாமல், சபேசனின் குடும்பத்துக்குத் தெரியாமல் தங்களுக்குக் கல்யாணம் ஆவது சரியில்லாத காரியமாகப் பட்டது பானுமதிக்கு.

தங்கையின் முகம் பல யோசனைகளைத் தாங்கித் தவிப்பதைப் பார்த்தான் பரமநாதன்.

''பானுமதி, சபேசன் வீட்டில் யாருக்குத் தெரிய வேண்டுமோ அவர்களுக்குத் தெரியும் என்ன நடக்கிறது என்று''

பானுமதி தமயனைப் பார்த்தபடி பதில் சொல்லாமல் நின்றாள். என்ன கேள்வி கேட்பது என்ன மறுமொழி சொல்வது என்று தெரியவில்லை.

ஆனால் அவன் வருவது அவளின் மனத்தில் என்ன மாதிரியான சந்தோஷத்தையுண்டாக்கி இருக்கிறது என்று முகத்தில் தெரிந்தது.



அன்று இரவு மரியன் வீட்டுக்கு வரும்போது இரவு இரண்டு மணியாகி விட்டது.

அவன் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தான்.

இவ்வளவு நாளும் நடந்து கொண்ட விதத்துக்கு அவளிடம் மன்னிப்புக் கேட்க விரும்பினான்.

அதனால் அவள் இவ்வளவு நேரமும் வெளியில் நின்றுவிட்டு வந்ததைப் பற்றி எதுவும் கேட்கவில்லை.

மரியன் கணவன் நித்திரையின்றி இருப்பதைப் பற்றி ஒரு துளியும் கவலைப் படாமல் தன் பாட்டுக்கு உடுப்பு மாத்திக் கொண்டிருந்தாள். அவள் அப்படி அலட்சியம் பண்ணியது அவனுக்குத் தூக்கி எறிந்து நடத்தியதுபோல் இருந்தது.

''மரியன்'' என்றான் தன் குரலில் கோபத்தைக் காட்டாமல். அவள் மெல்லிய நைட்றெசுக்குள் தன்னைப் புதைத்துக்கொண்டிருந்தாள்.

இலங்கையால் வந்து இத்தனை மாதமும் அவர்கள் சரியாகத் தம்பதிகளாய் இருக்கவில்லை என்பது நினைவுக்கு வந்தது. ஒரு கட்டிலில் பல மாதங்கள் அன்னியர்கள் போல் படுத்தது அவர்களா?

ஒரு காலத்தில் ஒரு நிமிடமும் பிரியாமல் திரிந்த காதற் பறவைகளா இவர்கள்? இவ்வளவு தூரம் கல்யாணச் சீவியம் பிளவு பட்டுப் போய் விட்டதா?

''மரியன்!'' அவன் திரும்பவும் கூப்பிட்டான். அவள் திரும்பிப் பார்த்தாள், மெலிந்திருக்கிறாள் போலத் தெரிந்தது. முகம் சோகமாகத் தெரிந்தது.

என்ன வேண்டும் என்பது போல் இவனைப் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சொல்ல வேண்டியவை தொண்டையில் நொண்டித்தனம் காட்டி விட்டது.

அவள் இவனின் பார்வையின் தர்ம சங்கடத்தைப் புரிந்து கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கட்டிலின் அடுத்த பக்கத்தால் வந்து கம்பளிக்குள் புகுந்து கொண்டாள். தன் உறவை, தங்கள் தாம்பத்தியத்தைப் புதைத்துக் கொள்வதாக இருந்தது அவள் நடந்து கொண்ட விதம்.

அவள் லைட்டை ஒவ் பண்ணி விட்டுத் திரும்பிப் படுத்தாள்.

''நான் கொஞ்சம் கதைக்கலாமா?'' அவனுக்கு எரிச்சலாக இருந்தது அப்படி அவளிடம் கெஞ்சுவது.

அவள் மௌனமாய் இருந்தாள். இருட்டில் அவள் முகத்தைப் பார்க்க முடியவில்லை,

''நான் இவ்வளவு காலமும் நடந்து கொண்ட விதத்துக்கு மன்னிப்புக் கேட்கிறேன்.''

அவன் தனக்குத் தானே சொல்வதுபோல் சொல்லிக் கொண்டான். அவள் ஒன்றுமே பேசவில்லை.

எதுவும் பேச இல்லை என்று அவள் நினைக்கிறாளா? அவளின் உதாசீனம் அவனுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது.

பொருளற்ற சில பொருமையுணர்ச்சிகளால் தன் குடும்ப வாழ்க்கையை அவள் குலைப்பதை அவன் அனுமதிக்கத் தயாராயில்லை. இருளின் அமைதியில் அவன் மனம் என்னவெல்லாமோ எண்ணியது.



மீராவுக்கு ஏழு வயது. இனியும் குழந்தையில்லை. தாயும் தகப்பனும் சரியாகக் கதைத்துக் கொள்ளாமல் இருப்பதை மீரா உணர அதிக நாள் எடுக்காது, பானுமதி விரைவில் போய் விடுவாள். அதன் பின் தாய் - தகப்பனின் உறவு எப்படி இருக்கிறது என்பதை மீரா உணர்ந்து வேதனைப்படமுதல் என்னென்ன சேதங்கள் நடந்ததோ அதையெல்லாம் சீர்ப்படுத்த நினைத்தான்.

மீராவுக்காகத்தானே திருமணமே செய்து கொண்டான்?

''மரியன், எத்தனை நாளைக்கு அந்நியர்கள்போல் நடப்பதாக யோசனை?'' அவனின் கேள்விக்கு எந்தவிதமான அசைவும் இல்லை.

அவனுக்கு ஆத்திரம் வந்தது. எழும்பி லைட்டைப் போட்டான். அவள் அழுது கொண்டிருப்பது தெரிந்தது. அவள் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''மரியன்! மரியன்!'' அவன் மனைவியை அணைத்துக் கொண்டான். அவள் அவன் பிடியை உதறிவிட்டுக் குப்புறப் படுத்து அழுதாள்.

''என்னவும் கதைக்க இருந்தால் தயவுசெய்து கதையும்.''

அவன் குரலையுயர்த்திக் கத்த அவள் எழும்பியிருந்தாள். கன்னங்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது.

''நான் அந்நியர்போல் நடக்கவில்லை, நீங்கள்தான் நடத்துகிறீர்கள்.'' அவள் குற்றம் சாட்டினாள்.

''மரியன், இலங்கைக்குப் போய் வந்த நாளிலிருந்து எத்தனையோ பிரச்சினை, உமக்குத் தெரியும் எத்தனை கரைச்சல்கள் என்று.'' அவன் குரலில் அவளைச் சமாதானப்படுத்தும் யோசனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''நீங்கள் இலங்கைக்குப் போய் வந்த நாளிலிருந்து சாதாரணமாய் இல்லை.'' அவள் குற்றம் சாட்டவில்லை, உண்மையைச் சொன்னாள்.

இவளுக்கு என்னவென்று சொல்வது? இனி என் மனம் ஒரு நாளும் சாதாரணமாக இருக்காது என்று.

இவளுக்கு எப்படிச் சொல்வது லண்டனில் பத்து வருடங்களாக மறந்து போன, மாந்து போனதாக நினைத்துக் கொண்ட எத்தனையோ மனிதர்கள் - மனிதர்களா? ஒரே ஒரு மனிதப்பிறவி கார்த்திகா என் மனதில் எந்த நேரமும் தோன்றி என் மனதைக் குடைகிறாள் என்று சொல்லவா? என் மனதில் இனி நிம்மதி வராது என்பதையும் சொன்னால் விளங்கிக்கொள்ளப் போகிறாயா?

''என்னில் உண்மையான அன்பில்லாமல் மீராவுக்காகத் தானே கல்யாணம் செய்தீர்கள்.'' அவள் குறுக்கு விசாரணை செய்தாள்.

அன்பை எத்தனை விதத்திலும் அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம், ஆனால் உண்மையில் மீராவுக்காகத்தான் கல்யாணம் செய்து கொண்டான் என்றாலும் மரியனில் ஒரு சொட்டும் அன்பில்லாமலா செய்தான்?

''மரியன் என்னென்லாம் நடந்ததோ அதை எல்லாம் மறந்து விடு. தயவு செய்து பழையபடி வாழப் பார்ப்போம்.'' அவன் கெஞ்சினான்.

அவள் திரும்பிப் பார்த்தாள். ஏதோ முக்கிய விடயம் சொல்ல நினைக்கிறாள் போல் இருந்தது.



''நான் பேர்மிங்காம் போகிறேன் கெதியில்.'' அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள். அவள் பிறந்த ஊர் பேர்மிங்காம்.

''எதற்காக?'' தன் அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளவில்லை, ''தாய் தகப்பனைப் பார்க்கப்போகிறாயா?''

''இவ்வளவு காலமும் என் படிப்பையும் பட்டத்தையும் குடும்பப் பொறுப்புகளுக்காகச் சுருட்டி வைத்தேன். மீரா குழந்தையில்லை. முழுநேரப் படிப்புத் தொடங்கப் போகிறேன். இனியும் நான் வீட்டில் இருக்க வேண்டும் என என்ன இருக்கிறது. ஆசிரியை வேலைக்கு எழுதிப் போட்டேன், பேர்மிங்காமில் கிடைத்திருக்கிறது. விரைவில் போகிறேன்.'' அமைதியாகச் சொன்னாள். அவன் திடுக்கிட்டு சிலைபோல் இருந்தான்.

தனக்கும் அவளுக்குமுள்ள உறவு இப்படி பிளவு பட்டுப் போகும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. அவளுக்குத் தெரியும் அவன் லண்டனை விட்டுப் போக முடியாதென்று; உயர்ந்த வேலை அவனுக்கு லண்டன் கெமிக்கல் கொம்பனி ஒன்றில்.

பேர்மிங்காமில் போய் இருக்கப் போகிறாளாம்!

''மரியன், மீராவின் கெதி என்ன?'' அவன் பதறினான்.

''உங்களுக்கு நல்ல வருமானம் வருகிறது. பிரைவேட் ஸ்கூலில் விடலாம். நான் ஒன்றும் உங்களிடம் ஒரு சதமும் கேட்கவில்லை.''

எல்லாம் திட்டம் போட்டுச் செய்கிறாயா?

விவாகரத்துக் கேட்கிறாயா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியாகப் போய் இருக்கிறேன் என்றால் கருத்தென்ன?

இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் போய் உலகத்துக்காகத் தம்பதிகளாய்ச் சீவிப்பது அவனுக்குச் சரிவராது. அவன் கைநிறைய உழைக்கிறான்.

அவன் மனைவியின் உழைப்பு அவனுக்கு வேண்டாம்.

அவனுக்குத் தேவையானது களைத்து வீட்டுக்கு வரும்போது அன்பான மனைவியும் அருமை மகளின் சிரிப்பும்.

அவனுக்கு அலறவேண்டும்போல் இருந்தது. அவனுக்குத் தெரியும் கொஞ்சக் காலமாய் 'மூடி'யாய் இருக்கிறான் என்று. பிரச்சினைகள் தவிர்க்க முடியாமல் இருந்தன.

அதற்காக குடும்பத்தையே பிரித்துக் கொண்டுபோவதா?

அன்று இரவு நீண்ட இரவாக முடிந்தது நித்திரையின்றி. காலையில் எழும்பி மரியனின் முகத்தைக் கூடப் பார்க்கவில்லை, அவனுக்குத் தெரியும் எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறது என்று.

பானுமதி அதிகாலையிலேயே எழுந்து விட்டாள். தமயன் சொன்னான் அறை தேடப் போகவேண்டும் என்று.

அவனுக்கு அது அவசரமாகத் தெரியவில்லை. மரியன் வீட்டை விட்டுப் போகிறாளாம், ஏன் பானுமதியும் சபேசனும் தன்னுடன் இருக்கக்கூடாது.

பானுமதியின் உழைப்பில் சபேசன் படிக்க வேண்டும். கொலிஜ் பீஸ் எக்கச் சக்கம். இந்த லட்சணத்தில் அவன் உழைத்துப் படித்து மிச்சம் பிடித்து வீட்டுக்கு அனுப்பி தமக்கைகளை எப்படிக் கரை ஏத்துவது?



யாழ்ப்பாணத்தில் மாப்பிள்ளைகளின் விலை சரியாக ஏறி விட்டதாம். வேலை கிடைக்காத தமிழ் இளைஞர்கள் வெளி நாட்டுக்குப் போய் உழைத்து பணம் சேர்ப்பதால் மாப்பிள்ளைமாரின் விலையும் உயர்ந்து விட்டதாம்.

என்ன கேவலம்!

தன்னைத் தானே விற்றுக்கொள்வது! வாழ்க்கை முழுக்க ஒரு பெண்ணுக்கு உழைத்துக் கொடுப்பது உண்மைதான். ஆனால் ஒரு பெண் வாழ்க்கை முழுக்க ஒரு ஆணுக்கு உழைத்துக் கொடுப்பதற்கு என்ன விலை?

தன் உடலைக் கொடுத்து, தன் உழைப்பைக் கொடுத்து ஒரு மனிதனுடன் வாழ ஒரு பெண் ஆணை வாங்கவேண்டுமா?

கேவலமான தமிழர்கள்! தமிழ் ஆண்கள், தமிழ் இளைஞர்கள். ரோமன் காலத்தில் பெண்கள் அடிமைகளை விலை கொடுத்து வாங்குவார்களாம் தங்கள் ''எல்லாத்'' தேவைகளையும் பூர்த்தி செய்ய.

அந்தப் பண்டைக்கால ரோமன் பெண்களுக்கும் தற்போதைய படித்த நாகரீகமான தமிழ்ப் பெண்களுக்கும் என்ன வித்தியாசம்.

இருவரும் வாங்குகிறார்கள், தங்கள் எல்லாத் தேவைகளுக்கும்.

இந்தச் சீதனக் கொடுமையை எதிர்க்க ஏன் எங்கள் படித்த பெண்கள் முன் வருகிறார்கள் இல்லை? ஏன் தமிழ்ப் பெண்கள் எல்லோரும் பானுமதி மாதிரி இருக்கவில்லை.

பரமநாதன் வேலைக்குப் போகும்போது யோசித்துக் கொண்டு போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சத்தியமூர்த்தி தொழிலாள விவசாயிகளின் உரிமைக்கும் வெற்றிக்கும் பாடுபடுகிறான், சபேசன் தமிழ் இனத்தின் உரிமைக்கும் வெற்றிக்கும் பாடுபடுகிறான்.

இவர்கள் எல்லாம் முதலில் எதிர்த்துப் போராட வேண்டியது சீதனக் கொடுமையை, பெண் அடிமைத்தனத்தை. பெண்கள் உரிமைக்கும் போராடத் தயங்குபவன் என்ன இலட்சியவாதி? முற்போக்காளர் எதை எல்லாமோ தூக்கிப் பிடிக்கிறார்கள் ஏன் ஒரு ஆண் தான் ஒரு 'ஆண்' என்பதற்காகத் தனக்கு விலைபேசி ஏழைப் பெண்களைக் கொள்ளையடிப்பதை எதிர்க்கக் கூடாது? பானுமதியை ஹீத்ரோவுக்குக் கூட்டிக்கொண்டு போகும்போது கேட்டான் பரமநாதன்.

தூரத்தில் பல தரப்பட்ட விமானங்கள் ஏறி இறங்கிக் கொண்டிருந்தன. குழந்தை மீரா ஆவலுடன் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

மரியன் வரவில்லை. தனக்கு வேலையிருப்பதாக பானுமதிக்கு சொன்னான்.

பானுமதிக்குத் தெரியும் தமயனுக்கும் மரியனுக்கும் உறவு சரியில்லை என்று. ஆனால் அதைப் பற்றிக் கேட்க விரும்பவில்லை. மரியன் அடிக்கடி வெளியில் போவதும் பானுமதிக்கும் சபேசனுக்கும் வேறு அறையெடுக்கத் தேவையில்லை தற்போதைக்கு என்று பரமநாதன் சொன்னதும் அவளுக்கும் பல யோசனைகளைக் கொடுத்தன.

தமயனைத் தனிமையில் காணும்போது கேட்கலாமா என்று நினைத்தாள்.

இப்போது சபேசனைக் கூப்பிட வரும்போது மரியன் வராதது ஒரு விதத்தில் சரியாக இருந்தது. தான் நினைத்ததைக் கேட்கலாம் என்று நினைத்தாள்.



அவன் சீதனக் கொடுமையை எதிர்த்துக் கதைத்துக் கொண்டிருந்தான்.

''அண்ணா பத்து வருடம் லண்டனில் இருந்து விட்டுக் கதைப்பது சுகம், இலங்கையில் இருந்தால் நீங்களும் சீதனம் கேட்டுத்தான் இருப்பீர்கள். குறும்புடன் சொன்னாள் பானுமதி.

தங்கையைத் திரும்பிப் பார்த்தான்.

இலங்கையில் இருந்தால் நானும் என்னை விற்றுக் கொண்டிருப்பேனா? இவளுக்குத் தெரியாதா கார்த்திகாவையும் என்னையும் பற்றி அல்லது என்னை எடைபோடக் கேட்கிறாளா?

ரேமினல் 3க்குக் கார் போய்க் கொண்டிருந்தது.

தங்கையின் கேள்வி மனத்தைக் குடைந்து கொண்டிருந்தது. லண்டனுக்கு வந்து மறந்த நான், இலங்கையில் இருந்திருந்தாலும் எப்படியோ மாறித்தான் போய் இருப்பேன் என்று நினைக்கிறாள்.

அப்படித்தான் கார்த்திகாவும் நினைத்திருப்பாள்?

யார் மறுமொழி சொல்வது? ஒருவரும் சொல்லி விளங்கப்படுத்த முடியாத வேதனையுடன் சபேசனைக் கூப்பிட கஸ்ரம்ஸ் பக்கம் போனான்.

விமானம் வந்து இறங்கி மூன்று மணித்தியாலமாகியும் சபேசன் வெளியில் வரவில்லை. கறுப்பர்களைப் கண்டால் நாயோ பேயோ மாதிரி நடத்தும் இங்கிலிஸ்காரர் யார் தயவிலோ படிக்க வரும் சபேசனிடம் என்னென்ன கேள்விகள் கேட்பார்கள் என்று யார் கண்டார்கள்? பானுமதியின் முகத்தில் பொறுமையில்லை. தேவையான பத்திரங்களுடன் வராததால் அல்லது கஸ்ரம்ஸ் ஒவ்வீஸ்காரருக்குத் திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திதராத முறையில் நடந்து கொண்டதால் எத்தனையோ பேர் திருப்பியனுப்பப் பட்டதைத் தமையன் சொல்லி இருந்தான். நேரம் போகப் போக அவள் கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது.

கடைசியாக விமான நிலைய அறிவிப்பாளர் பரமநாதனை உடனடியாகத் தொடர்பு கொள்ளச் சொல்லி அறிவித்தார். பானுமதி என்னவாய் இருக்கும் என்று பதறி விட்டாள்.

''பயப்படாதே ஏதும் பத்திரங்கள், சேர்ட்டிபிக்கற் செக் பண்ணுவார்கள்'' என்று சொல்லி விட்டுப் போனான். இன்னும் இரண்டு மணிநேரங்கள் பானுமதி துடித்திருக்க சபேசன் பரமநாதனுடன் வந்து சேர்ந்தான்.

சோர்ந்து, தளர்ந்து, நொந்துபோய் வரும் சபேசனைக் கண்டதும் பானுமதி தன் கண்ணீரைக் கட்டுப் படுத்திக் கொண்டாள். இதெல்லாம் கனவு போல் இருந்தது அவளுக்கு.

இன்னும் கல்யாணம் ஆகவில்லை. ஆகியபின் இருக்கிறது எத்தனை கஷ்டம் வரும், எத்தனை கஷ்டத்தையுண்டாக்கப் போகிறார்கள் எரிச்சலும் பொறாமையும் பிடித்தவர்கள் என்று, இப்போதே அழுது சபேசனையும் வேதனைப் படுத்த விரும்பவில்லை அவள்.

கடந்த மூன்று மாதங்களாக அவள் பட்ட யோசனைகள் இப்போது சபேசனைக் கண்டவுடன் கண்ணீராக வழிந்தோடியது. இருவருக்கும் நம்ப முடியவில்லை, லண்டனில் ஒன்றாய் வாழப்போகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் அவர்களை ஒன்றாய்ச் சேர காலங்கள் சமுதாயம் விட்டிருக்காது: பானுமதியின் தாய் தமக்கை விட்டிருக்க மாட்டார்கள்.



இங்கு? தமையனின் ஒத்துழைப்பில் ஒன்றாகிவிட்டார்கள். சபேசனின் பெட்டிகள் பிரயாணச் சாமான்களைக் கொண்டு வந்து வைத்தார்கள். பானுமதி வீட்டாருக்குத் தெரியாது சபேசன் லண்டனுக்கு வந்தது. பானுமதி வீட்டில் இருந்து ஒன்றும் வந்திருக்காது; கையில் ஒன்றிரண்டு ட்ரவலிங் பைகளுடன் வந்து சேர்ந்தான். பானுமதியிடம் அக்கா தந்ததாகக் கொடுத்தான். என்னவென்று கேட்டாள், எனக்குத் தெரியாது என்றான்.

காரில் வந்து இருந்தபோது உடைத்துப் பார்த்தாள்.

கூறைச்சேலை! பானுமதி அழத் தொடங்கி விட்டாள்.

பாவம் கார்த்திகா என்றாள். இன்னொரு பார்ஸலை பரமநாதனிடம் கொடுத்தான். கார்த்திகா கொடுத்ததாகச் சொல்லவில்லை, வார்த்தைகளால் விளங்கப்படுத்தத் தேவையில்லை. பரமநாதன் உடைத்துப் பார்த்தான். திருக்குறள் புத்தகம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

எல்லோரும் வாய் பேசாது இருந்தார்கள். மாகாதேவன் நல்ல வெறியில் கத்திக்கொண்டிருந்தான். கௌரி மூலையில் நின்று கொண்டிருந்தாள், கணவனுடன் கதைத்து எந்தப் பிரயோசனமும் இல்லை என்னிடம் எதையும் சொல்லாதீர்கள் என்பது போல் இருந்தது அவள் தோற்றம். சபேசனும் பானுமதியும் மேல் மாடியில்.

பரமநாதனும் மரியனும் ஆளுக்கொரு பக்கம் உட்கார்ந்திருந்தார்கள்.

''கோவிய மாப்பிள்ளைக்குப் பெண் கொடுக்கவோ இவ்வளவு பொய் சொல்லிக் கூட்டிக் கொண்டுவந்தீர் பானுமதியை?'' நேரடியாகப் பரமநாதனிடம் கேட்டான். பரமநாதன் பொங்கும் ஆத்திரத்தைக் காட்டாமல் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தான்.



இப்படிக் கேவலமாக நடப்பான் என்று தெரிந்திருந்தால் உள்ளுக்கு விட்டிருக்க மாட்டேன்.

பானுமதிக்கும் சபேசனுக்கும் பதிவுத் திருமணம் நடத்த இருப்பதை யார் சொல்லியிருப்பார்கள் என்று தெரியும். பானுமதி கௌரிக்குச் சொல்லியிருப்பாள்.

கௌரிக்குத் தெரிந்திருக்காது கணவன் இப்படித் துள்ளுவான் என்று. ஏன் லண்டனில் இருந்து கொண்டு இப்படி ஒருத்தருக்கு ஒருத்தர் சண்டை பிடிக்கவேண்டும் பனுமதியின் ''கல்யாணத்துக்கு'' வரச் சொல்லியிருப்பாள்.

கௌரியின் நிலை பார்க்கப் பாவமாக இருந்தது. ஒரு சொட்டு உரிமையும் இல்லாத சேவகன் போல் மூலையில் நின்று தன் கணவனின் வெறி மொழிகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். எவ்வளவு விலை கொடுத்து வாங்கியவன் இப்படியா என் தங்கையை நடத்துவது?

பரமநாதனுக்கு, அடுத்த கணம் என்ன நடந்தது என்று தெரியவில்லை; மகாதேவன் கன்னங்கள் பழுத்தன. கௌரி அலறத் தொடங்கினாள் தமையன் புருஷனை அடிப்பதைப் பார்த்து. மரியன் பாய்ந்தடித்துக் கொண்டு கணவனை விலக்கினாள். குழந்தை மீரா மேலே ஓடிப்போனாள் பயத்தில். சபேசன் பானுமதி எல்லோரும் ஓடிவந்தனர்.

மகாதேவன் உடைந்த மூக்கால் ஓடும் இரத்தத்தைத் துடைத்தபடி பயங்கரமாய் பரமநாதனைப் பார்த்தான்.

''நீர் அங்கே போய் அவன் தமக்கையுடன் ஆடியது போதாது என்று இங்கே வேற சண்டித்தனமோ''?

முழுக்க முழுக்க ஆங்கிலத்தில் சொன்னபடியால் மரியனுக்கு விளங்கியது மகாதேவன் என்ன சொல்கிறுன் என்று.

பம்பலப்பிட்டிக் கடற்கரையில் கருமிருட்டில் யாரும் காணமாட்டார்கள் என்று நினைத்து அவளுடன் கதைக்கப் போனதை எத்தனை பேர் கண்டிருப்பார்கள்? எத்தனை கேவலமாக மதிப்பிடுகிறுர்கள்?

மகாதேவனின் குற்றச்சாட்டு பரமநாதனை மிருகமாக்க முதல் மரியன் சொன்னுள் ''கெட் அவுட்.''

மகாதேவன் உறுமினுன். துப்பாக்கி கையில் இருந்தால் எல்லோரையும் சுட்டுத் தள்ளியிருப்பான் என்று தெரிந்தது.

வெளியில் விடாத மழை. மின்னலும் இடியும் வேறு. இல்லை என்றுல் இவர்கள் போட்ட சத்தத்தில் குத்துவேன், கொல்லுவேன் என்ற கூக்குரலுக்கு யாரும் பொலிசுக்குப் போன் பண்ணியிருப்பார்கள். மகாதேவன் மழையில் நனைந்து, சேற்றில் மிதித்து, பூமரங்களை ஒடித்துத் தள்ளாடித் தடுமாறிப் போய்க் கொண்டிருந்தான்.

''ஒரு தங்கைக்குக் கோவிய மாப்பிள்ளை, மற்றத் தங்கச்சிக்கு ஒரு பள்ளனைப் பறையனைப்பார்.'' கார் பத்தாயிரம் கோணத்தில் திரும்பிப் போனது.

கௌரி கணவனைப் பின் தொடராமல் பயத்துடன் ஓட்டிப் போய் இருந்தாள்.

மரியனுக்கு இந்த நாடகம் புதினமாக இருந்தது.

கணவனிடம் கேட்கும் நிலையில் இல்லை. கணவன் அவளுக்குச் சொல்லும் நிலையிலும் இல்லை.

பதிவுத் திருமணத்துக்குப் போக பானுமதியும் சபேசனும் வெளிக்கிட்டிருந்தார்கள். கௌரியைக் கேட்டான் விருப்பமென்றுல் வரச்சொல்லி. கண்களைத் துடைத்துக் கொண்டு தங்கையுடன் போய்க் காரில் ஏறினுள்.



எல்லோரும் காரில் ஏறிய பின் மரியன் வருவாளா என்று பார்த்தான். வரும்பாடாயில்லை. மீராவை அனுப்பினுன் தாயை கூட்டிக் கொண்டு வரச் சொல்லி.

''அம்மாவுக்குத் தலையிடியாம்.'' குழந்தை சொல்லி விட்டு ''ஆன்ரி''களின் மடியில் ஏறிக் கொண்டது.

பானுமதிக்குக் கண்களில் நீர் வழிந்தது. தாய்க்குச் சமமாய் இருந்து கல்யாணம் நடத்த வேண்டிய மைத்துனி நடந்து கொள்ளும் விதம் மனதை நோசப் பண்ணியது.

கார்த்திகா அனுப்பியிருந்த சேலையை அணிந்திருந்தாள். கண்ணீர் முத்துக்கள் அதில தோய்ந்தன.

கொஞ்ச நேரம் இருந்து பார்த்துவிட்டு பெருமூச்சுடன் காரை ஸ்ரார்ட் பண்ணினுன்.

கொஞ்சம் நஞ்சம் மறைத்து வைத்த ரகசியமும் வெளியாகி விட்டது. இனி என்ன மறைக்க இருக்கிறது. அவர்கள் குழந்தைகள் இல்லை எதையும் தெரியாமல் இருக்கிறுர்கள் என்று கணிப்பிட.

றெஜிஸ்ரார்ஸ் ஒவ்விஸ் போகும்வரை ஒருவரும் அதிகம் கதைக்கவில்லை. கௌரியும் பரமநாதனும் சாட்சிகளாகக் கையெழுத்து வைக்க சபேசனும் பானுமதியும் கல்யாணப் பதிவு செய்து கொண்டார்கள். சகோதரிகள் இருவரும் அழுது கொண்டார்கள். இருவருக்கும் வேறு வேறு விதமான யோசனைகள் மனதில் ஓடியிருக்கலாம்.

ஆறுமாதப் பிள்ளைத்தாச்சியாக மரியனைத் தான் கல்யாணப் பதிவு செய்தது ஞாபகம் வந்தது. மீராவை அணைத்தான் பாசத்துடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை விடாமல் பெய்து கொண்டிருந்தது.

திருமணப் பதிவு முடிய சென்ரல் லண்டனுக்குக் கூட்டிக் கொண்டு போனான் தம்பதிகளை விருந்து கொடுக்க.

விலையுயர்ந்த கிரேக்க ரெஸ்ரோறண்ட். "புது மணப்" பெண்ணின் நாணம் எதுவுமின்றி பானுமதி இருந்ததைப் பகிடி பண்ணினான் தமயன்.

பெரியக்காவுக்கு எழுதச் சொன்னாள் கௌரி, கல்யாணம் நடந்த விடயம் பற்றி. "ஏன் நீயும் உனது கணவருடன் சேர்ந்து வசைபாடியிருக்கலாமே?" கௌரியைச் சீண்டினான் சபேசன். "லண்டனில் எனக்கென்று இவள் ஒருத்தி தானே இருக்கப்போகிறாள். அவளின் கல்யாணத்துக்கு நான் வராவிட்டால் அவள் கதைக்கவும் மாட்டாளே?" கௌரி கல்யாணம் முடித்துப் போகும் தம்பதிகள் முன்னால் மூக்கை நீட்டிக் கொண்டிருக்கத் தயாரில்லை என்பது தெரிந்தது சம்பாஷணையில்.

தனது கல்யாணப் பரிசாக அவர்களின் "தேனிலவு" ஹொட்டேலைத் தன் செலவில் "புக்" பண்ணியிருந்தான் பரமநாதன். சாப்பாடு முடிய அது பற்றிச் சொன்னான்.

பானுமதியிடம் அது பற்றி எப்போதோ ரகசியமாய்ச் சொல்லிய படியால் ஹொட்டேலில் தங்கத் தேவையான உடுப்புக்களும் சாமானும் எடுத்துக் கார் டிக்கியில் வைத்திருந்தாள்.

சபேசனுக்குத் தன் எதிர்பாராத திகைப்பை எப்படிக் காட்டிக் கொள்வது என்று தெரியவில்லை.

இன்றைக்கு இந்த நாள் அடிபிடியில் தொடங்கி எதிர்பாராத விருந்துடன் தொடர்ந்து திருமண அன்பளிப்பாகத் "தேனிலவு" கழிக்க ஹொட்டேலாம்!



"மூன்று நாளைக்கு புக் பண்ணியிருக்கிறேன்" என்றான் பரமநாதன். தெகிவளைக் கடற்கரையில் சண்டை பிடித்த போது இப்படி எல்லாம் நடப்பான் என்று எதிர் பார்த்தானா? தங்கை பானுமதிக்காகவா அல்லது...

பரமநாதனை அவன் ஒன்றும் கேட்கவில்லை.

பானுமதியையும் சபேசனையும் "கென்ட்" பக்கத்தில் உள்ள ஹொட்டேல் ஒன்றில் கொண்டுவந்து விட்டுவிட்டுத் திரும்பும் போது இரவு பத்து மணிக்கு மேல் ஆகி விட்டது. கௌரியைக் கூட்டிக் கொண்டு விட விம்பிள்டனுக்குப் போய்க் கொண்டிருந்தான்.

"உனக்கு வீட்டுக்குப் போகப் பயமென்றால் என்னுடன் வரலாம் கௌரி." தமயன் இப்படிச் சொன்னது அவளுக்குப் பிடிக்கவில்லை.

"அண்ணா உலகம் எப்படித்தான் மாறிவிட்டாலும் இலங்கையில் எங்களை இப்படித்தான் வாழவேண்டும் என்று பழக்கி வைத்திருக்கிறார்கள். எந்தத் துன்பத்தையும் தாங்கப் பழக்கி வைத்திருக்கிறார்கள். கணவர் ஒரு தரம் பேசி விட்டால் வீட்டைவிட்டு ஓடுவது அழகல்ல. பிரச்சினைகளைக் கண்டு பின்வாங்கிவிடப் போவதில்லை. அவர் கோபம் எத்தனை நாளுக்கு நிற்கும்?" கௌரி ஒரு தமிழ்ப் பெண் என்பதை ஞாபகமூட்டினாள்.

பரமநாதனுக்குத் தெரியும் மரியனைக் குத்திக் காட்டிப் பேசுகிறாள் என்று. மரியன் தன்னைத் தன் தங்கச்சிகளுக்கு முன்னால் அவமானம் செய்தது தாங்கமுடியாத ஆத்திரத்தைத் தந்தது.

விம்பிள்டனுக்குப் போகும்போது நடுச்சாமம் இருக்கும். வீடு இருண்டு கிடந்தது. பரமநாதன் மணியடித்தான். கதவு திறக்கவில்லை. கௌரி கைப்பையைத் தடவி திறப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தாள். இருவரும் தட்டுத்தடுமாறி மேலே போய்க் கதவைத் திறக்க மகாதேவன் வெறியில் படுத்துக்கிடப்பது தெரிந்தது.

கௌரி பதறிப் போய் மகாதேவனின் முகத்தைத் தண்ணீரால் கழுவினாள். அவன் அரைகுறையாய் விழித்து பரமநாதனைக் கண்டதும் பிதற்றத் தொடங்கினான். கௌரிக்கும் கோபம் வந்தது. ''இன்னும் இந்த மனிதன் வெறியில் கத்துவதற்கு காது கொடுக்கிறீர்களே'' என்று கடிந்து கொண்டாள். ''இவன் உனது உடம்பில் கை வைத்தால்...'' பரமநாதன் வெடித்தான்.

''அண்ணா உங்களுக்கும் அவருக்குமிடையில் ஏதும் தகராறு இருந்தால் தனிப்பட்ட விதத்தில் தீர்த்துக் கொள்ளுங்கள். ஆனால் தயவுசெய்து எங்கள் குடும்ப விடயத்தில் தலையிடாதீர்கள்.'' பரமநாதனுக்கு ஆச்சரியமில்லை கௌரி சொன்னது.

எல்லாம் உங்கள் தலைவிதி என்றுதானே யோசிக்கப் பழக்கி இருக்கிறார்கள்.

பெருமூச்சுடன் மாடிப் படியால் இறங்கி வரும்போது மகாதேவனின் கூப்பாடு கேட்டது.

''எந்த நாயும் என்ர வீட்டுக்கு வரத்தேவையில்லை இறப்புக்கும் வேண்டாம் பிறப்புக்கும் வேண்டாம்.''

ஒரு நிமிட நேரம் தன் அருமை மைத்துனரின் பொன் மொழிகளைக் கேட்டு விட்டுக் கதவைச் சாத்திவிட்டுப் போனான்.

காரில் குழந்தை மீரா நல்ல நித்திரை. இப்போதே நடுச்சாமத்துக்கு மேல், வீட்டில் மரியன் காத்துக் கொண்டிருப்பாள் என்று நினைத்ததும், ''நன்றாகக் காத்திருக்கட்டும்'' என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டான்.



அவளைச் சொல்லி என்ன? மேலை நாட்டு நாகரீகமே அது. எப்பொழுது ஒரு சாட்டு வருகிறது இன்னொரு கல்யாணத்துக்கு ஆயத்தம் செய்ய என்றிருக்கிறார்கள். அந்தப் பண்பாட்டில் வளர்ந்தவளை வேறு எப்படி எதிர்பார்க்க முடியும். இவ்வளவு காலமும் நிறம் வேறுபட்டது தவிர பெரும்பாலும் ஒரேவிதமான கொள்கைகள், பழக்க வழக்கங்கள் என்பன இருவருக்கும் இருந்தன.

அவன் ஒரு நாளும் கோபித்தும் கொள்ளவில்லை வெள்ளைக்காரச் சாப்பாட்டைப் பற்றி, அவள் ஒருநாளும் முணுமுணுத்ததில்லை இலங்கைச் சாப்பாட்டைப் பற்றி.

சாப்பாடு மட்டுமா? இசை, நடனம், டெலிவிஷன் நிகழ்ச்சி என்பன கூட இருவரும் நன்றாய் இருந்து ரசித்த காலம் எங்கே போய்விட்டது?

இப்போது அவன் கீழ் மாடியில் இருந்தால் அவள் மேல் மாடியில் இருக்கிறாள், அவன் எங்கேயும் போவோமா என்று கேட்டால் எப்போதும் ஒரு நொண்டிச் சாட்டிருக்கிறது சொல்லித் தப்ப. அவ்வளவு தூரம் கசந்து விட்டேனா அவளுக்கு?

ஏனோ தானோ என்று குடும்பம் நடத்தத்தான் வேண்டுமா? மீரா எத்தனைகாலம் குழந்தையாய் இருக்கப் போகிறாள்? ஒருகாலத்தில் அவளுக்குத் தெரியத்தான் போகிறது. அப்போது என்ன நினைப்பாள் எங்கள் செயற்கைத் திருமணத்தைப் பற்றி?

தனக்காகத் தகப்பன் தாயைக் கல்யாணம் செய்தார் என்று தெரியவந்தால் என்னில் பரிதாபப் படுவாளா?

அவன் சிந்தனைகள் அவனுக்கு எரிச்சலையுண்டாக்கின. யார் பரிவும் எனக்கு வேண்டாம். எனக்கு ஏன் யாரும் பரிதாபம் காட்ட வேண்டும்? உலகத்தில் எத்தனையோ பேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிதாபமான சீவியம் நடத்துகிறுர்கள், எனக்கப்படி என்ன நடந்து விட்டது?

வாழ்க்கையில் கார்த்திகா, கால் ஊனமான சத்திய மூர்த்தி, மனம் பேதலித்துப் போய் இருக்கும் சத்தியமூர்த் தியின் தாய், இவர்கள் எல்லாம் பரிதாபத்துக்குரியவர்கள் இல்லை என்ருல் யார் பரிதாபத்துக்குரியவர்கள்?

என் போன்றவர்களுக்கு வாழ்க்கையில் எல்லாம் இருந் தும் ஏதோ இல்லை என்று நினைப்பதில் சந்தோசம் அடை கிறோம். அப்படி நினைப்பதில் ஒரு இனம் தெரியாத திருப் தியா? இல்லாமையின் முழு அர்த்தமும் தெரியாதவாகளா நாங்கள்?

லண்டன் தூங்கிப் போய் விட்டது கிட்டத் தட்ட. வெச்ஸ்ஹோல் பாலத்தால் வரும்போது எலிஸபெத்தின் ஞாபகம் வந்தது. ட்ளீட் ஸ்ரீட் ஒரு நேரமும் தூங்காது, தன் அறையில் ஏதும் செய்தி டைப் பண்ணிக் கொண்டி ருப்பாள்.

கதவைத் தட்டலாமா?

நேரம் அவன் யோசனைக்குத் தடைப்பட்டது. அன்றய நாள் முழுக்க ஏற்பட்ட களைப்பில் தலைசுற்றிக் கொண்டு வந்தது.

லண்டன் தெருக்கள் சில குடிகாரர்களையும், ஸ்கின் ஹெட்சுகளையும், தவிர யாருமில்லாமல் வெளிச்சென்று கிடந்தது. இலையுதிர் காலம் என்ற படியால் மரங்கள் திரௌபதைகளாய், சேலையற்று நின்றன.

அவனுக்கு இலையுதிர் காலம் பிடிக்காது. உலகமெல் லாம் சோக மயமாக இருப்பது போல் தோன்றும். தெருக் கள் இலையும் குழையுமாய், கட்டிடங்கள் இருட்டடித்து, வானம் எந்த நேரமும் கறுத்து இலையுதிர் காலம் அவனுக் குச் சோகமாய்த்தான் தோன்றும்.



குழந்தை மீரா ஒரு துக்கமுமின்றி பின்னுல் நித்திரை.

மத்திய லண்டனின் நெருக்கங்கள் தாண்டி கார் வுட்கிறீன் பக்கம் போய்க் கொண்டிருந்தது.

வீடு இருளாய்த் தெரிந்தது. மரியன் எப்போதும் முன் ஹோல் லைட்டைப் போட்டு வைப்பது வழக்கம், ஆனுல் இன்று உலகமே இருண்டு கிடப்பது போல் இருந்தது.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு இருட்டில் தடவிக் கொண்டு போய்க் கதவைத் திறந்து முன்ஹோல் கதவைத் திறக்க வீடு வெறுமையாய்க் கிடப்பது பளிச்சென்று தெரிந்தது.

ஏதோ பொருட்கள் இல்லாதது போன்ற உணர்ச்சி. மீராவை செற்றியில் கிடத்தி விட்டு விழுந்தடித்துக் கொண்டு மேலே போனுன்.

மத்தியானம் மகாதேவன் நடத்திய நாடகத்தில் மரி யன் குழம்பிப் போய் இருந்தது தெரியும். மகாதேவன் கார்த்திகாவைப் பற்றிச் சொல்லியது மரியனுக்கு விளங் காமல் விட்டிருக்காது. கணவன் இலங்கையால் வந்த நாளி லிருந்து ஏன் இப்படி மாறிப்போய் இருக்கிறுன் என்பது இன்று பரிபூரணமாகத் தெரிந்திருக்கும்.

அவன் எண்ணம் எல்லாத் திசையிலும் தறிகெட்டோட, ஓடிப்போய் படுக்கையறையைத் திறந்தான்.

வெறுமை!

அழகிய நீலக் கட்டில் விரிப்பில் ஸ்டைலாக ஒரு கடிதம் கிடந்தது. அவன் மனதில் ஈரம் வற்றிய உணர்ச்சி. நீலக் கடலில் ஒரு சிறு படகு மிதப்பது போல் இருந்தது அந்தக் கடிதம் கிடந்த விதம். மரியனே அப்படிச் சிறிய துண்டாய்க் கிடப்பது போல் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதத்தை எடுத்துக் கொண்டு கீழே வந்தான். குழந்தையின் முகம் நிர்மலமாக இருந்தது. உலகத்தில் நடக்கும் நாடகங்கள் ஒன்றும் தெரியாமல்.

ஏதோ மனதில் பிசைய கடிதத்தையுடைத்தான். மாரியன் தான் ஏன் வீட்டை விட்டுப் போனேன் என்பதை விளக்க அந்தக் கடிதம் எழுதியிருந்தாள். எப்போதோ தான் கணவனிடம் சொல்லியிருந்தாள் தான் பேர்மிங்காம் போகப் போவதாக.

இன்னும் வேலை பற்றிய முடிவு வரவில்லை. ஆனல் இனியும் தான் வெறும் பெயருக்காக ஒன்ருய் வாழமுடியவில்லையாம்.

தன் கணவனுக்கு ஏதோ நடந்து விட்டது. யாரோ தன் கணவனின் மனத்தை மாற்றி விட்டார்கள் என்ற தன் சந்தேகத்தை இன்று மகாதேவன் தீர்த்து விட்டானும்.

அது உண்மையாக இருக்கவில்லையோ என்பதைப் பற்றித் தான் யோசித்துக் கவலைப்படப் போவதில்லையாம்.

வெறும் சம்பிரதாயங்களுக்காகத் தாங்கள் தம்பதிகளாய்ச் சீவிக்க வேண்டும் என்ற நியதி தனக்கில்லையாம். குடும்பச் சண்டையில் இழுபறி பட்டுக் குழந்தையின் வாழ்க்கை பாழாகக் கூடாதாம். தனக்குத் தெரியுமாம் உலகத்தில் எதை இழந்தாலும் பரமநாதன் குழந்தை மீராவை இழக்கத் தயாரில்லை என்று. எனவே தன்னிடம் மீரா விடுதலைகளில் மட்டும் வர பரமநாதன் அனுமதி கொடுத்தால் போதுமாம். ஆனல் தான் வேண்டிய நேரம் மீராவை வந்து பார்க்க உரிமையிருக்கிறது என்பதைப் பரமநாதன் மறக்கக் கூடாதாம். உடமைகள்? தனக்குத் தேவையான எல்லாவற்றையும் தான் எடுத்துக் கொண்டதை அவன் பிழையாக எடுக்க மாட்டான் என்று தான் நினைக்கிருளாம் ஏன் சொல்லாமல் கொள்ளாமல்போகிருள் என்ருல்



தான் யாரிடமும் பிரியாவிடை பெறும் மனேநிலையில் இல்லையாம். 'ஸ்பெசலி'மீராவிடம் தான் எப்படிச் சொல்வதாம் போய் வருகிறேன் என்று.

கடைசியாக, கிறுக்கலாக Good - bye my husband என்று முடித்திருந்தாள். கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும் போய் விட்டது.

அவன் கொஞ்ச நேரம். அப்படியே சிலையாக இருந்தான். ஒரு மாத விடுமுறையில் இலங்கைக்குப் போக முதல் இருந்த தங்கள் உறவை நினைத்துக் கொண்டான். எவ்வளவு நெருக்கம்? எவ்வளவு அன்பு!

இதெல்லாம் ஒரு பிரச்சினைக்கு முன் இப்படியாக வேண்டுமா? பைத்தியம் பிடிக்குமாப்போல் இருந்தது.

இன்று சபேசனின் கல்யாணத்தையிட்டுக் கார்த்திகா சந்தோசப் படுவாள் என்று மனதில் சந்தோசம் அடைய, தன் வாழ்க்கை......?

அவனுக்கு உடனே இலங்கைக்குப் போக வேண்டும் போல இருந்தது. இலங்கையில் நின்றபோது ஒவ்வொரு தரம் பிரச்சினைக்கும் தன் இனிய குடும்பத்திடம் ஓடி வர வேண்டும் என்று நினைத்த தன் பேதமையை நினைத்தான்.

தன் எதிர்காலம் எப்படியிருக்கப் போகிறது?

குழந்தை மீராவுக்கு எப்படி விளங்கப் படுத்தப் போகிருன்? என்ன சொன்னலும் சரியாக விளங்கிக் கொள்ள மாட்டாள் இப்போது?

வீட்டின் வெறுமை அவனுக்குப் பைத்தியத்தை உண்டாக்கும் போல் இருந்தது. யாருடனவது கதைக்காவிட்டால் தலை வெடிக்கும்போல் இருந்தது. கல்யாணம் பிளவு பட்டபோது வெடிக்காத தலை எப்போது வெடித்தால் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசரன் போல் எலிசபெத்தின் நம்பரை டையல் பண்ணினான். இரவு இரண்டு மணி!

அவள் அரைகுறை நித்திரையில் "ஹலோ" சொல்வது கேட்டது. எரிச்சலும் தூக்கமும் குரலில் தொனித்தன.

"ஹலோ எலிசபெத்!" அவன் குரலை ஏலுமான மட்டும் சாதாரணமாக வைத்திருக்கத் தெண்டித்தான். அவள் கத்தினாள், "இந்த நடுச் சாமத்தில் என்ன வேண்டும்?" ஆச்சரியமில்லை கோபம் வருவது. "உம்மைப் பார்க்க வேண்டும்." அவன் சாதாரணமாகச் சொன்னான். அடுத்த பக்கத்தில் டெலிபோன் டப் என்று வைத்தது கேட்டது.

# 6

ஹீத்ரோ விமான நிலையம் பனியில் மூழ்கிப் போய்க் கிடக்கிறது. புகார் மறைத்த விமானங்கள் கனவுகளில் வரும் பொம்மைகள் போல் தெரிந்தும் தெரியாமலும் தென்படுகின்றன.

பனி கொட்டி விமானங்கள் மேலெழும்ப முடியாமல் வழிகளை அடைத்து விட்டது. சில மணித்தியாலங்கள் எடுக்கலாம் நிலைமை சீரடைய என்று அறிவித்திருந்தார்கள்.

எலிஸபெத் கம்பளிக் கோர்ட்டுக்குள் பதுங்கிய படி சுருண்டு போய் உட்கார்ந்திருந்தாள்.

பரமநாதன் எலிஸபெத் முன் உட்கார்ந்திருந்தான். அவள் போன வருடம் வெளிக்கிட்டதுபோல் இந்த வருடம் இந்தியாவுக்கு போக வெளிக்கிட்டு விட்டாள்.

உலகத்துப் பெண்களின் வாழ்க்கை முறையை அறிந்து எழுதப் புறப்பட்டு விட்டாள். ஏன் இந்தியாவிலும் இன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் பல முன்னேறாத நாடுகளிலும் பெண்களின் வாழ்க்கை முறை இப்படிப் பரிதாபகரமாக இருக்கிறது என்று நேரடியாகப் பார்த்து எழுதப் போகிறாளாம்.

என்ன 'பரிதாபத்தை'க் கண்டு விட்டாள் என்று அலுத்துக் கொள்கிறான் பரமநாதன்.

எங்கள் நாட்டுப் பெண்கள் பரிதாபத்திற்குரியவர்களாக இருப்பதிற்தான் ஒருவித திருப்தியடைகிறார்கள் என்று சொல்ல வேண்டும் போல இருந்தது.

தங்கை கௌரியின் ஞாபகமும் மகாதேவன் அவளை நடத்தும் விதமும் மனத்தில் நிழலாடியது. பானுமதி சபேசனைக் கல்யாணம் செய்த குற்றத்திற்காக இவர்களுடன் ஒரு தொடர்பும் வைத்திருக்கக் கூடாது என்று சொல்லி விட்டானும்.

இவளும் கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன் என்று கண்ணகி விரதம் பிடிக்கப்போகிறாளாம்.

பானுமதிக்குத் துக்கம், தன்னால் கௌரிக்குப் பேச்சு விழுகிறதென்று. ''என்ன யோசிக்கிறீர்கள்'' என்று கேட்டாள லிஸா. இப்போதெல்லாம் இவன் இருந்தாற்போல் 'ஏதோ உலகத்துக்குப் போய் விடுகிறான்.

மனம் விட்டுக் கதைக்கப் பயப்படுகிறான் என்பது தெரிந்தது.

அது அவன் பலவீனம். ஒரு சில சந்தர்ப்பங்களில் அவன் குழந்தைத் தனமாக நடந்து கொள்வதாகத் தான் தெரிகிறது அவளுக்கு.

கடந்த சில கிழமைகளாக - அவன் மனைவி விட்டுப் போன நாளிலிருந்து அவளின் உறவும் துணையும் அவனுக்கு இன்றியமையாததாகப் படுகின்றது. ஆனால் அதே வேளை



யில் அவன் டெலிபோன் பண்ணும் நேரமெல்லாம் ஓடிப் போக அவள் வேலை இடம் கொடுக்கவில்லை.

Fleet Street பேப்பர்க் கப்பெனி ஒன்றில் வேலை செய்கிறாள். வேலைக்குப் போனது தொடக்கம் பின்னேரம் ஐந்து மணிக்கு அண்டர்க் கிரவுண்டுக்கு ஓடும்வரைக்கும் அவசரத்தில் ஓடிக் கொண்டிருக்கும் உலகத்தின் ஆரவாரங்களை மறந்து போய் எழுத்துடன் ஒன்றி விடுகிறாள்.

அவனின் டெலிபோன் பெரும்பாலும் ''இன்று பின்னேரம் சந்திப்பாயா என்பதாகத் தான் இருக்கும்.

ஒக்ஸ்போர்ட் றெஸ்ரோறண்ட் ஒன்றில் சாப்பிட்டு விட்டு கால்போன போக்கில் நடந்து சிலவேளை மைல்க் கணக்கான தூரத்துக்கப்பால் போய் அண்டர்க் கிரவுண்ட் ரெயின் எடுத்து கார் விட்ட இடத்துக்குத் திரும்பிவரும் வரை கதைத்துக் கொண்டே போவார்கள்.

அவன் பேச்சுக்கள் விரக்தியாய் இருக்கும். கொஞ்சம் 'வைன்' போய் இருந்தால் கார்த்திகா பற்றிப் பேச்சு வரும். அவள் அவன் மனம்திறந்து அலட்டத் தொடங்கும் நேரத்தில் மௌனமாகி விடுகிறாள்.

காதலி கார்த்திகாவின் இடத்திலோ அல்லது ஓடிப் போன மனைவி மரியனின் இடத்திலோ தன்னை வைத்து நிரப்ப அவன் ஏதும் யோசனை வைத்திருந்தால் அது நடைமுறைச் சாத்தியம் இல்லை எனச் சொல்லாமல் சொல்லிவிடுகிறாள்.

நீண்ட சம்பாஷணைகளுக்குப் பின் சிலவேளை அவனுடன் வீட்டுக்கு வருகிறாள். பல சந்தர்ப்பங்களில் அவனுடன். 'ஏதோ ஒரு விதத்தில்' இரவைக் கழிக்க இல்லை என்பது இருவருக்கும் விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அந்த அளவுக்குக் குறுகிய விதத்தில் அவள் உறவைப் 'பாவித்து' முடிக்கத் தயாரில்லை. அவள் உறவு மிக இனிமையானது. ஒரு கிழமைத் துன்பமெல்லாம் ஒரு வெள்ளிக்கிழமை அவளுடன் கழித்தால் மறந்து போய் விடுகிறது.

ஏதும் ஒழிவு மறைவின்றிச் சொல்லியழ யாரோ இருக்கிறார்கள் என்ற இதமான உணர்ச்சியே அவள் வரவைச் சந்தோசத்துடன் எதிர்பார்க்கப் பண்ணும்.

ஆனாலும் சில வேளைகளில் எந்தக் கட்டுப்பாடுகளையும் மீறி அவளின் துணை தனக்குத் தேவை என்பதை மறைமுகமாகச் சொல்லி விடுகிறான்.

அன்று பின்னேரம் 'ஸாரிங்குறேஸின்' பின் பக்கம் தேம்ஸ் நதிக்கரை றேட்டால் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

தூரத்தில்... 'வாட்டலூ' பாலம் தெரிந்தது.

லண்டனுக்கு வந்து முதல் நத்தார்த் 'திருவிழாவின்' போது மரியனை அந்தப் பாலத்தில் அழைத்துப் போனது ஞாபகம் வந்தது. நினைவுகள் கசந்தன.

பத்து வருடங்களுக்கு முன் எவை நிரந்தரம், சுகமானவை என்று கணக்கிட்டு உறவுகளை வளர்த்துக் கொண்டானோ அவை எல்லாம் இன்று இறந்துபோன காலத்தின் மிச்சசொச்சங்களாய் இருதயத்தைக் குடைவதாக இருந்தன.

அதைப்பற்றிப் பேசும் போது — மரியனையும் தன்னையும் பற்றி ஞாபகப் படுத்தும்போது இவள் சொன்னாள், ''இன்னொருதரம் அப்படியான மயக்கங்களில் ஊறிப்போய் இன்னொரு உறவைத் தேட மாட்டீர்கள் என்று என்ன நிச்சயம்?''



அவன் தர்ம சங்கடப் படுகிறான் அவளின் நேரடியான கேள்விகளால். அவனுக்குத் தெரியும் அவள் தன்னை உணர்ந்து விட்டாள் என்று.

''என்னைக் கல்யாணம் முடிப்பாயா என்று நீங்கள் கேட்டாலும் ஆச்சரியம் இல்லை'' என்கிறாள் திடீரென்று.

உண்மை. அவன் மறுக்க முடியாத உண்மை.

அவன் அவளிடம் கேட்கத்தான் இருந்தான் ஒரு காலத்தில் சந்தர்ப்பம் சரியாய் வந்தால். ஆனால் அவள் அந்த உறவுகளுக்குள் தன்னைப் பிணைத்துக் கொள்ளத் தயாராய் இல்லை என்பதைச் சொல்லாமல் சொல்லி விட்டாள்.

''உலகத்தில் எத்தனையோ பெண்கள் கல்யாணம் செய்து பிள்ளை குட்டி கண்டு குடும்பத்தோடு சீவிப்பதுதான் பிறந்ததன் கடமை என்று நினைக்கிறார்கள். நான் அப்படி நினைக்கவில்லை. வெறும் கட்டாயங்களுக்காக ஒரு பொறுப்பைச் சுமக்க, என்னை நான் நிர்ப்பந்தம் செய்து கொள்ளத் தயாராயில்லை. காதலித்து - கல்யாணம் செய்து குழந்தைகள் காணுவதை விடப் பிரயோசனமாக வேறு ஏதோ கூடச் செய்யலாம். அப்படி ஒரு குடும்ப வாழ்க்கைக்கு நான் தயாராகும் வரை சுதந்திரமாகத் திரியப் போகிறேன்.''

இவள் இப்படிச் சொல்ல அவன் வாயடைத்துப் போகிறான். சில வேளைகளில் தனிமையான இரவுகளில் இவளை ரஷ்யாவில் ருறிஸ்ட் ஹொட்டேல் வாசலில் கண்டவுடன் உண்டான மனக் கிளர்ச்சி ஞாபகம் வருகிறது.

அந்த எலிஸபெத்தும் இப்போது ஓரளவு இவனைப் புரிந்து கொண்ட எலிஸபெத்தும் வேறு விதமான பெண்களாகத் தெரிகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளின் உறவு இல்லாமற் போகப் போகிறது என்பது அவனால் தாங்க முடியாததாக இருக்கிறது.

அதற்காக அவளைப் பிடித்து வைக்க முடியாது என்றும் தெரிகிறது.

''வீட்டையும் காரையும் வைத்துக் கொண்டு அந்த வசதிகளை அனுபவிக்க ஒரு வீட்டு நிர்வாகியைத் தேடுகிறீர்களா'' என்றாள் ஒரு நாள்.

இவன் அப்படி ஒன்றும் சொல்லவில்லை. லிஸா விரும்பினால் தன் வீட்டில் வந்து இருக்கலாம் என்று சொன்னான். பானுமதியும் சபேசனும் வேறு இடம் பார்த்துக் கொண்டு திரிந்தார்கள்.

லிஸாவுக்கு அவன் அப்படி 'அப்பட்டமான' அழைப்புக் கொடுத்தது பிடிக்கவில்லை. ''லண்டனில் காதலர்கள் கிடைப்பது சுகம். சினேகிதர்கள் கிடைப்பது மிகக் கடினம். ஒன்றாய் இருந்தால் எங்கள் 'சினேகிதம்' கெட்டுவிடும்'' என்றாள்.

அவன் திடுக்கிட்டு விட்டான். அவள் தன்னில் இருந்து அறுபட்டுப் போகத் துடிக்கிறாள் என்று தெரிந்தது.

Don't love me! என்று சொல்லாமல் சொல்கிறாள்.

காரணம் தன் வாழ்க்கை எல்லாம் புரிந்து கொண்டதாக இருக்குமோ?

அல்லது இவன் தன்னைக் கார்த்திகாவாகவும் மரியனாகவும் பாவிக்கப் பார்க்கிறான் என்ற எரிச்சலாக இருக்கலாம். அவனுக்கு விளங்கவில்லை.

இருந்தாலும் என்ன? அவள் போகப் போகிறாள். அவனை விட்டு ஓடப் போகிறாள். அவனால் பிடித்து நிறுத்த முடியாது. சுதந்திரமாக வாழ்ந்து அலுத்த பின் ஒரு நாள் திரும்பி வரலாம்.



அவள் அடுத்த நிமிடம் என்ன செய்வாள் என்று தெரியாது. கல்யாணம் முடிப்போம் என்று கையைப் பிடித்து அழைத்தாலும் ஆச்சரியமில்லை.

அன்று கிட்டத்தட்ட அரை நாள் ஹீத்ரோ எயார் போட்டில் கழிந்தது.

கடைசியாகப் பின்னேரம் மூன்று மணிக்கு விமானம் புறப்படத் தொடங்குவதாக அறிவிப்பில் சொன்னார்கள். அவள் கம்பளிக் கையுறைகளைப் போட்டுக் கொண்டு எழுந்தாள். இருவரும் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை.

இவன் அவளைப் பார்த்தான்.

இனி எங்கே காணுவது? முடியுமட்டும் அவளைத் தன் நினைவில் பதித்துக் கொள்ளும் துடிப்பு அவன் பார்வையில் இருந்திருக்க வேண்டும்.

அந்தப் பார்வையின் தாபத்தைத் தாங்க முடியாமல் ஓடி வந்து இறுகப் பிடித்துக்கொண்டாள்.

இவன் தோளில் முகம் பதித்து அழுதாள். அவன் எதிர் பார்க்கவில்லை. கார்த்திகாவும் பம்பலப்பிட்டிக் கடற்கரையும் ஞாபகம் வந்தன.

மரியனும் வார்டர் லூ பாலமும் ஞாபகம் வந்தன. இவள் அந்த இருவரையும் விட வித்தியாசமானவள் என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டான். இருவரும் துடிப்பது மறைக்க முடியாதிருந்தது.

''உங்கள் பிரச்சினைகளுக்கு மற்றவர்களிடம் உதவிக்குப் போகாதீர்கள். உங்கள் அளவில் தீர்த்துக் கொள்ளப் பாருங்கள்.'' அவள் அப்படித்தான் சொன்னதாக ஞாபகம் இவளைப் பிரிந்தபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள்?

எல்லோரும் மற்றவர்களா?

மீரா தகப்பனைக் கட்டிக் கொண்டு சொன்னாள், "அம்மா இனி வராவிட்டால் என்ன, நான் உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்."

அருமை மகளை அணைத்துக் கொண்டான். இவள் மட்டும் லிஸா சொன்னதுபோல் மற்றவர்களாகாமல் எத்தனை வருடம் இருக்கப்போகிறாள்?

இன்னும் பதினைந்து வருடங்களில் யாரோ ஒருத்தனுடன் வந்து இவன்தான் என் எதிர்காலக் கணவன் என்று எல்லா இங்கிலிஸ் பெட்டைகளையும் போலச் சொல்லப் போகிறாள், இன்னும் பதினைந்து வருடங்கள்!

எப்படி வளரப் போகிறாள்?

கார்த்திகா போல் தனக்குரியவனாக இருக்க வேண்டியவற்றைப் பறிகொடுத்து விட்டு விதியில் பழியைப் போட்டு விட்டு அழுவாளா? லிஸாபோல் எதையும் இணைத்துக் கொள்ளாமல் எதிலும் ஒட்டிக்கொள்ளாமல் வேதாந்திபோல் ஒடித் திரியப் போகிறாளா?

மரியன் திரும்பி வரவில்லை. குழந்தையை மட்டும் வாரக் கடைசியில் இவன் கூட்டிக் கொண்டுபோய் பேர்மிங்காமில் விட்டான்.

இருவரும் ஒரு கொஞ்சக் காலத்துக்கு முன் வரை கணவன் மனைவியாய் இருந்தவர்கள் இப்போது யாரோ போல் ஹலோவும் குட்மோர்ணிங், குட் ஈவினிங் சொல்வதும் வேடிக்கையாக இருந்தது.

ஒரு நாள் தன்னுடன் இருந்த இளைஞனை இவர் எனது 'நண்பர்' என்று அறிமுகம் செய்து வைத்தாள்.



இன்னும் சட்டப்படி தன் மனைவியாக இருப்பவள் என்னென்று நண்பர் ஒருவரை வைத்திருக்க முடியும் என்று அவன் யோசிப்பது யதார்த்தமாக இருக்கவில்லை.

கொஞ்ச நாளுக்கு முன்தான் லிஸாவிடம் கிட்டத்தட்ட I love you liza என்று சொல்லத் துடித்தான். அதைத் தன் மனைவி மட்டும் இவனுக்குச் சொன்னால் ஏன் கோபம் வரவேண்டும் என்று தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டான்.

இருவர் பகுதி வழக்கறிஞர்களிடமிருந்தும் விவாகரத்துக்கான விபரங்கள் வந்திருந்தன.

தாங்கள் ஒன்றாக வாழ்ந்து விட்டு யாரிடமோ உதவிக்குப் போய் 'பிரிந்து' கொள்வதை நினைக்க ஒரு விதத்தில் வேடிக்கையாக இருந்தது.

என்ன இருக்கிறது விவாகரத்தில் சொல்லி சண்டை பிடிக்க?

மரியனின் வழக்கறிஞர்படி உள்ள ஸ்ரேற்மென்ரில் இவன் சரியான கணவனாக இருக்கவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

மனைவி வீட்டில் காத்திருக்க கணவன் நீண்ட இரவுகளை வெளியில் கழிப்பது மேல் நாட்டுச் சட்டப்படி பெரிய குற்றம், மனைவியை அவமானம் செய்வதுபோல்.

மரியன் இவனை விவாகரத்துச் செய்யப் போகும் காரணங்களில் அதுவும் ஒன்று.

இவனுக்குச் சிரிப்பு வந்தது.

நீண்ட பின்னேரங்களில் தேம்ஸ் நதிக் கரைகளில் லிஸாவுடன் நடந்து தன் பழைய காதலியைப் பற்றி, அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனத்தில் உண்டான துயர்களைப் பற்றி ஒப்பாரி வைத்தேன் என்று மரியனுக்குச் சொன்னால், எப்படி இருக்கும்?

என்ன சொல்லியும் யாரைத் திருப்திப் படுத்தியும் என்ன நடக்கப் போகிறது?

விவாகரத்தின்படி குழந்தை மீரா மரியனுடன் விடுதலை நாட்களைக் கழிக்க வேண்டும் எனப்பட்டது. குழந்தையை போர்டிங் ஸ்கூலில் சேர்க்கும் வேலையில் ஈடுபட்டான்.

பானுமதியும் சபேசனும் புது இடம் தேடிக்கொண்டு திரிந்தார்கள்.

சபேசன் லண்டனில் உள்ள மாணவர் இயக்கங்களுடன் சேர்ந்து திரிவதாகக் கேள்விப்பட்டான் பரமநாதன்.

பானுமதி அதுபற்றித் தமயனிடம் சொன்னாள். புது வருடத்தை ஒட்டி லண்டனில் நடைபெறப் போகும் தமிழர் கலை விழாவில் நாடகம் ஒன்று தயாரிப்பதாகப் பானுமதி சொன்னாள்.

படிக்க என்று வந்து இப்படியான காரியங்களில் ஈடுபட்டுப் படிப்பைக் குழப்பிக் குடும்பத்தைக் கவலைக்குள்ளாக்கும் எத்தனையோ வாலிபர்களைத் தெரியும் அவனுக்கு. இங்கு இருக்கும் சில படித்த மனிதர்கள் தங்கள் செல்வாக்கைப் பாவித்து மாணவர்களை இப்படி இயக்கங்களில் சேர்ப்பதும் தெரியும்.

பானுமதி அதுபற்றி சபேசனிடம் கதைக்கச் சொன்னாள்.

என்ன கதைப்பது?

இளமையின் துடிப்பில் இவன் ஏதோ முட்டாள்தனமாகச் செய்து கொண்டிருக்கிறான் என்று கதைக்க வெளிக்கிட்டால் இருவருக்கும் 'அடிபிடி' தான் வரும்.



இவர்களையும் சொல்லி என்ன பிழை?

இதுவரை இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு எங்கள் தமிழர்கள் என்ன செய்து விட்டார்கள்?

சத்தியாக்கிரகத்தின் மூலம் - முத்திரை விற்பதன் மூலம், கவிதை எழுதுவதன் மூலம் ஒரு தேசியப் பிரச்சினையைத் தீர்க்க வெளிக்கிட்ட எங்கள் தலைவர்கள் என்ற முதலாளித்துவ மூளைகளிடம், இவர்களுக்கு வெறுப்பு இருப்பதில் என்ன ஆச்சரியம்.

அவர்களை விட்டால் இடதுசாரிகள் - சத்தியநாதன் போன்றவர்கள்தான் என்ன செய்து விட்டார்கள்?

சத்தியமூர்த்தி போன்றோர் வழிபடும் - அல்லது வழிபட்ட இடதுசாரித் தலைவர்கள் தெற்கில் ஒன்றும் வடக்கில் ஒன்றுமாகத் திருகுதாளக் கதை போட்டவர்கள்தானே? சுதந்திரம் கிடைத்து இத்தனை வருடமாகியும் தேசிய ஒற்றுமைக்கு என்ன செய்து விட்டார்கள்?

இரண்டு இனக்கலவரத்தைக் கண்டு — தமிழர்களின் அடிப்படை — மனித உரிமைகளும் பறிபோனதுதானே மிச்சம்? சிங்களவர்களும் தமிழர்களும் இனி ஒரு நாளும் ஒன்றாய் இருக்க முடியாது என்று இருக்கும் போதும் இன்றும் தேசிய ஒற்றுமை பேசும் இடதுசாரிகளை என்னவென்று நம்புவார்கள் தமிழர்கள்?

உலகமெல்லாம் ஒடுக்கு முறைக்கு எதிராக முற்போக்கு சக்திகள் ஆர்ப்பரித்து எழும்போது இந்த இடதுசாரிகள் மட்டும் ஏன் திட்டம் போட்டு ஒரு இனத்தை அழிக்கும் ஏகாதிபத்திய மனப்பான்மை கொண்ட அரசாங்கத் திட்டங்களை எதிர்க்காமல், இருக்க முடியும்?

பரமநாதன், சபேசன் போன்ற இளைஞர்களின் துடிப்பை உணராமல் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் துடிப்பு இனி இழக்க ஒன்றுமில்லை என்று எல்லாம் இழந்த ஒரு ஒதுக்கப்பட்ட இனத்தின் துடிப்பு.

யாராலோ தூண்டி விடப்பட்டதல்ல. உண்மைகளையும் சத்தியத்தையும் நம்பிய போராட்டம். அடிப்படை மனித உரிமைகளுக்குப் போராடும் ஒரு தன்மான யுத்தம். வாழ்க்கைக்குத் தேவையான சத்திய யுத்தம்.

பிரச்சினைகள் - சுரண்டல்கள் வர்க்க ரீதியாக - இன ரீதியாக - தேசிய ரீதியாக இருக்கலாம். இந்தக் கொடுமைகளுக்குக் குரல் எழுப்பாதவன் என்னவென்று முற்போக்குக் கொள்கைகளை நம்புவனாக இருக்க முடியும்?

சத்தியமூர்த்தியின் கடிதங்கள் இப்படியான யோசனைகளைத்தான் உண்டாக்குகின்றன. சத்தியமூர்த்தி போன்ற இடதுசாரிகள் வெறும் போலிப் புரட்சிவாதிகள் என்று சபேசன் சத்தம் போடுவது பிழையில்லை என்று தெரிகிறது.

சத்தியமூர்த்தி கார்த்திகாவை அடிக்கடி சந்தித்தாகவும் எழுதியிருந்தான். அதுவும் பிடிக்கவில்லை சபேசனுக்கு. இந்த முற்போக்குவாதிகள் சும்மா இருக்கும் பெண்களுக்கு ''பேர்'' எடுத்துக் கொடுக்க வேண்டாம் என்றான் சபேசன்.

# 7

பானுமதி தமையனை கெஞ்சியிருந்தாள் கணவனுக்குப் புத்தி சொல்லச் சொல்லி.

ஹைட்பார்க் வழக்கம் போல் நெருக்கடியாக இருந்தது. பனித்திட்டுக்கள் அங்குமிங்கும் படர்ந்து கிடந்தன. பானுமதி குழந்தை மீராவை அழைத்துக் கொண்டு சென்றாள். தூரத்தில் ''பாண்ட்'' முழங்கிக் கொண்டிருந்தது.

அதற்குப் போட்டியாக ஒரு ''பங்க்'' (Punk) கூட்டம் காதுகளிலும் கழுத்திலும் ஊசிகளைக் கோர்த்துக் கொண்டும் கூயோ மாயோ என்று கத்திக் கொண்டும் போய்க் கொண்டிருந்தார்கள்.

குழந்தை மீரா மாமியைப் பயத்துடன் கட்டிப் பிடித்தாள். குழந்தையின் மிரட்சியில் தெரிந்தது இப்படியான சமுதாயம் எப்படிப் பயங்கரமாக உருவாகப் போகிறது என்று.

பானுமதி ஹைட்பார்க்கு சபேசனை வரச் சொன்னது அவனுக்குப் பிடிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நாடகம் தயாரிப்பதில் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தான். இவள் இப்படி இழுத்தடிப்பது சரியில்லை என்று முணு முணுத்து விட்டு வந்திருந்தான்.

'மார்பிள் ஆர்ச்' பக்கம் 'ஸ்பீக்கர்ஸ் கோணர்'ப் பக்கம் நடந்து கொண்டு போனார்கள்.

வழக்கம் போல், ''பேச்சாளர்கள்'' மரப்பெட்டிகளில் ஏறி நின்று 'வெளுத்து வாங்கிக்' கொண்டிருந்தார்கள். ஒருவன் மத்திய கிழக்குப் பிரச்சினை பற்றி மண்டை வெடிக்கக் கத்திக் கொண்டிருந்தான். இன்னொருவன் 'நியுக்கிளியர்' யுத்தம் பற்றி ஓலம் வைத்துக் கொண்டிருந்தான்.

சபேசன் முதற் தரம் பார்ப்பதால் இவர்களை ஊன்றிக் கவனித்தான்.

ஏன் நீரும் ஏறி நின்று முழங்கப் போகிறீரோ என்று கேட்க நினைத்தான் பரமநாதன். தனது வேடிக்கை சபேசனைக் கோபப் படவைத்தாலும் என்று பேசாமல் இருந்தான்.

''என்ன நாடகம் எழுதுகிறீர்'' என்று கேட்டான் பரமநாதன். இவன் கேள்வியை அசட்டை செய்வதுபோல் ஒரு தரம் தோள்களைக் குலுக்கிக் கொண்டவன் ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் திரும்பி மைத்துனரைப் பார்த்தான்.

''என்ன மாதிரி நாடகம் எழுதுவேன் என்று எதிர் பார்க்கிறீர்கள்'' என்று கேட்டான் சபேசன்.

பரமநாதனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. அவனுக்கு இலக்கியத்தைப் பற்றி அதிகம் தெரியாது.

கொழும்பில் யூனிவர்சிற்றியில் இருந்த காலத்தில் ஓரளவுக்கு வாசித்திருந்தான். இந்திய எழுத்தாளரில் அபிமானமும் இருந்தது ஒன்றிரண்டு பேரில்.



அவர்கள் பெயர்கூட மறந்துவிட்டது. லண்டனுக்கு வந்து மேலைநாட்டு இலக்கியத்திலும் பெரிய நாட்டமில்லை. தெரிந்ததும் செய்ததும் என்ன?

சபேசன் ஹைட்பார்க் லேக்கில் தவழ்ந்த வாத்துக்களுக்குப் பாணைப் பிய்த்துப் போட்டுக் கொண்டிருந்தான். வாவி நிறைய, குளிர் காலத்தையும் பொருட்படுத்தாத உல்லாசப் பிரயாணிகள் படகு படகுகளாய் ஓட்டிக் கொண்டிருந்தனர்.

தூரத்தில் பானுமதியும் மீராவும் குதிரைகள் ஓடுவதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர்.

இவனுக்குப் புத்தி சொல்லச் சொல்லித் தங்கை கூட்டிக் கொண்டு வந்தாள்.

அதை விட்டு என்ன யோசிக்கிறேன் என்று எண்ணம் படர்ந்தது பரமநாதன் மனதில். என்ன அடிப்படையில் கதையைத் தொடங்குவது?

என்ன செய்து விட்டேன் இங்கிலாந்தில் காதலித்ததைத் தவிர? காதலித்தும் என்ன பிரயோசனம்?

(எல்லோருந்தான் ஓடி விட்டார்களே!) பெருமூச்சு தன் பாட்டுக்கு வந்தது.

ஏதோ கேட்டேன் மறிமொழியில்லை என்பதுபோல் பரமநாதனைத் திரும்பிப் பார்த்தான் சபேசன்.

''நான் எதிர்பார்ப்பதையோ, யாரும் எதிர்பார்ப்பதையா நீர் எழுதவேண்டும்? உமக்கு எது கலையாகப் படுகிறதோ அதை எழுதும். ஆனால் உணர்ச்சி வசப்பட்டு எழுதுவதெல்லாம் கலையாகி விடாது. வெறும்' பிதற்றலாகவும் ஆகிவிடும்.'' பரமநாதன் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலை?" குரலில் அலட்சியமோ கேள்விக்குறியோ ஏதோ ஒன்றுடன் சபேசன் இழுத்தான். பரமநாதனுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது.

"சபேசன் பானுமதியுடன் லண்டனுக்கு வந்திருக்கிறீர், படிப்பும் வாழ்க்கையும் லண்டனில் இலேசான காரியம் என்று நினைக்காதேயும். உம்மை நம்பி பானுமதி மட்டுமல்ல உமது சகோதரிகளும் இருக்கிறார்கள்." சபேசன் மைத்துனரை ஏற இறங்கப் பார்த்தான். முகத்தில் சோகமும் விரக்தியும் படர்ந்தன.

"சகோதரிகள்!" சபேசன் ஒரு வார்த்தையுடன் நின்றான். அவன் குரலிலிருந்த சோகம் பரமநாதனை நெகிழப் பண்ணியது.

சோகம் கவிழ்ந்த கார்த்திகாவின் முகம் ஞாபகம் வந்தது. தம்பி ஒருத்தன் கார்த்திகாவின் வாழ்க்கை அதிர்ந்து போனதைப் பற்றித் துடிப்பது இயற்கை. ஆனால் அதற்காக......

"சபேசன் இங்கிருக்கும் பெரிய மனிதர்கள் எவ்வளவு தூரம் தமிழரின் பிரச்சினைக்கு முழு மனத்துடன் போராடுகிறார்கள் என்று எனக்குத் தெரியாது. எந்த விதமான தொடர்பும் இல்லை. இவர்களுக்குப் பின்னால் திரிந்து வாழ்க்கையை அநியாயமாக்கிக் கொள்வாயோ என்று பயமாக இருக்கிறது." பரமநாதன் உண்மையான வாஞ்சையுடன் சொன்னான்.

"உங்களுக்குத் தெரியாமல் இருப்பது ஒரு விதத்தில் நல்லது. உங்களைப் போல சுயநலவாதிகளுக்கு எங்களைப் போல ஒதுக்கப்பட்ட இளைஞர்களின் துடிப்பு புரியாது. சௌகரியமான வாழ்க்கையில் தமிழர்களுக்கு இலங்கையில் என்ன பிரச்சினை என்று கேட்கிறவர்கள் நீங்கள். உங்களை யார் கேட்டார்கள்? இங்கிருக்கும் தமிழ்த் தலைவர்களை நாங்கள் நம்பியிருக்கவில்லை. இங்கிலாந்து, கேம்பிறிட்ஜ்,



ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலைத் 'தங்கமுளைகளை' நம்பி இடது சாரிகள் போயிருக்கும் போக்கு எங்களுக்குத் இலங்கை தெரியும். அப்படியும் இடதுசாரிகள், இன்னும் எங்களை நம்பச் சொல்கிறார்கள். குறிப்பாகத் தமிழ் இடதுசாரிகள் இதுவரை சந்தர்ப்பவாதிகளாயும் திரிபுவாதிகளாயுமிருந்த தங்கள் தென்னிலங்கைத் தலைவர்களுக்கு, இன்றும் வால் பிடித்துத் தமிழர் பிரச்சினை ஒரு தேசிய இனப் பிரச்சினை என்பதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

எடுத்ததெற்கெல்லாம் மார்க்சியமும் லெனினின் மேற்கோளும் காட்டுபவர்கள் ஏன் சில உண்மைகளைத் திரித்தும் மறுத்தும் பேசுகிறார்கள் என்றால் அவர்களால் உண்மையை உணரத் தெரியவில்லை என்றுதான் நினைக்கிறேன்." பரமநாதன் ஏதோ கேட்க சபேசன் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான் என்று பட்டது பரமநாதனுக்கு.

"நான் நீர் என்ன எழுதுகிறீர் என்று கேட்டேன்" என்றான் பரமநாதன்.

"என்ன எழுதுகிறேன் என்றால் உண்மைகளைச் சாதாரண மக்களுக்குச் சாதாரண தமிழில் விளங்குமாறு எழுதுகிறேன். இடதுசாரிகள் எங்கள் இளைஞர்களைத் தங்கள் திரிபுவாத இலக்கியத்தால் அவர்களைக் குழப்பாமல் இருப்பதற்கு, என்னாலான வரைக்கும் எழுதப் பார்க்கிறேன்." சபேசன் வெடித்தான்.

"சபேசன், ஆழம் தெரியாமல் கால் வைக்காதே. அவர்கள் அரசாங்கத்துக்கு வால் பிடிப்பவர்கள்; பிடித்தவர்கள்; அதனால் வசதியாயும் வாழ்பவர்கள். மலையுடன் மோதிய எலிக்குத்தான் நட்டம்."

பரமநாதன் இப்படிச் சொல்ல சபேசன் விழுந்து விழுந்து சிரித்தான். விரக்தி, வேதனையான சிரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்தப் போலிப் புரட்சிவாதிகளின் வேஷம் கன நாளைக்கு நிற்காது. சிலரைச் சிலநாள் ஏமாற்றலாம், பலரைப் பலநாள் ஏமாற்ற முடியாது. இவர்களின் உண்மையான வேஷம் வெளிவராமற் போகாது. எங்கள் இனத்துக்கு இழப்பதற்கு இனி ஒன்றுமில்லை என்று வந்து விட்டது. போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை. அந்தப் போராட்டத் தீயில் எரியப் போவது இதுவரை எங்களைத் தங்கள் ஆதிபத்திய வெறியால் இன்னல படுத்திய ஆட்சி அதிகாரம் மட்டுமல்ல ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைக்கு அவர்களின் போராட்டத்துக்கு ஏனோ தானோ என்றும் - இது ஒரு இனப் பிரச்சனை - தேசியப் பிரச்சனை இல்லை என்று மூடி மறைத்த இடதுசாரிகள் - தமிழ் இடதுசாரிகள் - அவர்கள் இலக்கியங்களும் தான்! சபேசனின் குரல் அதிர்ந்தது.

பரமநாதன் மௌனமாக நின்றான். பானுமதிக்காகச் சபேசனிடம் ஒன்றும் சொல்லிப் பிரயோசனமில்லை. அவனின் உணர்ச்சி, துடிப்பு - போராட்டம் உலகத்தில் ஒதுக்கப்பட்ட எந்த வர்க்கத்திலும் இனத்திலும் உண்டாகும் கொதிப்பு என்று தெரிந்தது பரமநாதனுக்கு.

இந்த சத்திய யுத்தம் ஒரு சிலரைக் கொண்டது. பல்லாயிரம் எதிரிகளை எதிர்க்கப் போவது.

தர்மரும் சகோதரர்களும் தொகையில் குறைந்தவர். துரியோதனனும் படையும் பல்லாயிரக்கணக்கில் அதுவும் ஒரு சத்திய யுத்தந்தானே. ஏதேதோ பழைய கதைகள் நினைவுக்கு வந்தன.

இருவரும் ஹைட்பார்க்கிலிருந்து வரும்போது சபேசன் சொன்னான், ''ஒரே வீட்டில் இருந்தால் பெரிய கஷ்டங்கள் வந்திருக்கும். எங்களுக்குள் ஒரே தர்க்கங்கள் வந்திருக்கும்.'' பரமநாதனுக்கு அது உண்மை என்று பட்டது.

❈ ❈ ❈ ❈



ஆனால் அடுத்த இரண்டு நாட்கள் பிந்தி பானுமதி அழுத குரலுடன் போன் பண்ணினாள்.

நாடக ஒத்திகை முடிந்து வரும்போது சபேசன் யாரோ இனம் தெரியாத பேர் வழிகளால் தாக்கப்பட்டு மூக்கு முகம் உடைந்துபோய் வீட்டுக்கு வந்திருப்பதாக அழுதாள். லண்டனில் இரவில் வெளிக்கிட்டுத் திரிவது எவ்வளவோ பயங்கரமான காரியமாகி விட்டது என்பது நம்பமுடியாமல் இருந்தது. லிசா கூட ஒருதரம் சொன்னார் ''நியூயோர்க்கை விட மோசமாகி விட்டது லண்டனில் சில பகுதிகளை'' உண்மை என்று இப்போது தெரிகிறது.

அங்குபோனபோது சபேசன் மூக்குடைந்து பல் உடைந்து முகமெல்லாம் இரத்தக் காயத்துடன் முனகிக் கொண்டிருந்தான்.

''இலங்கையில் மட்டுந்தான் தமிழனுக்கு அடி என்றால் இங்கிலாந்தில் விட்டு வைக்கிறார்களா'' என்றாள் பானுமதி அழுது கொண்டு.

''இங்கிலாந்தின் வேலையில்லாப் பிரச்சினைக்கு - பொருளாதாரப் பிரச்சினைக்குக் கறுப்பரின் வரவும் ஒரு காரணம் என்று நினைக்கிறார்கள்'' என்றான் பரமநாதன்.

சபேசனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் டொக்ரரிடம் காட்டி 'எக்ஸ்றே' எடுத்து முடிய நடுச்சாமத்துக்கு மேலாகி விட்டது.

சபேசனுக்குச் சுகம் வரும்வரை தன்னுடன் இருக்கச் சொன்னான். இருவரையும் கூட்டிக் கொண்டு வந்தான். மீரா எங்கே என்று கேட்டாள் பானுமதி.

நத்தார் விடுமுறைக்குத் தாயிடம் போய் விட்டதாகச் சொன்னான் தமையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் லண்டனுக்கு வரும்போது கல கலவென்றிருந்த தமையனின் வீடு இபபோது வெறிச் சென்றிருப்பதைப் பார்க்க ஏதோ செய்தது பானுமதிக்கு.

தான் தகப்பனுக்குச் சுகமில்லை என்று எழுதியதும், தமையன் யாழ்ப்பாணம் வந்ததும் அங்கு நடந்தவையும் அதனுல் அவன் மாறிய விதமும் அவனது வாழ்க்கை இப் போது மாறிக் கிடக்கும் விதமும், அவளுக்கு வேதனையைக் கொடுத்தது.

அவளின் பெருமூச்சை அவன் அடையாளம் கண்டும் காணுதமாதிரிப் போனுன். அடுத்த நாள் கௌரியும் மகா தேவனும் சபேசனைப் பார்க்க வந்தார்கள்.

''செத்த வீட்டுக்கும் இந்தக் கோவியனின் கண்ணில் முழிக்க மாட்டேன்'' என்று குதித்த மகாதேவன் சபேசனைப் பார்க்க வந்தது பானுமதிக்கு மட்டுமல்ல பரமநாதனுக்கும் ஆச்சரியமாவிருந்தது. ஒருவிதத்தில் பார்த்தால் இதில் ஒன் றும் ஆச்சரியமில்லை. இங்கிலாந்தில் மகாதேவன் போன்ற எத்தனையோ புல்லுருவிகள் காசு வாங்காத செய்தி நிறுவ னமாகச் செயல்படுவதாகக் கேள்வி. பரிதாபத்திலா சபேச னைப் பார்க்க வந்திருப்பான்? பல் உடைபட்டதைப் பார்த் துச் சிரிக்க வந்திருப்பான்.

விண்ணுணம் பார்த்து விஷயம் அறிய வந்திருப்பாள். அவனின் நரிக் குணத்தை நினைக்க ஆத்திரம் வந்தது பரம நாதனுக்கு. பானுமதயின் கல்யாணத்தன்று மகாதேவன் போட்ட நாடகமும் அதனுல் மரியன் வீட்டை விட்டுப் போனதும் மறக்கவில்லை.

எப்படி இந்த மனிதர்களால் மற்றவர்களின் வாழ்க்கை யைக் குலைத்து விட்டு நிம்மதியாக இருக்க முடிகிறது?

பரமநாதனுக்கு நினைக்க நினைக்க ஆத்திரம் வந்தது. மகாதேவனை, 'Son of a biteh' என மனதில் திட்டிக் கொண்டான்.



பானுமதியும் கௌரியும் இவனுக்குத் தெரியாமல் ஏதோ ரகசியம் கதைத்தார்கள். தன்னைப் பற்றித்தான் ஏதோ கதைக்கிருர்கள் என்று தெரிந்தது. என்ன கதைக்க இருக்கிறது?

இவனை விட்டு அவள் ஓடி விட்டாள் என்ற கதை தெரிந்தவர்களுக்கெல்லாம் போய் இருக்கும். மகாதேவன் தன் பெருமையான பணியைச் செய்திருப்பான். அம்மா கேட்டெழுதியிருப்பாளா?

''என்ன காதைக் காதைக் கடிக்கிறீர்கள்?'' தங்கைகளை வினவினுன் பரமநாதன்.

இருவரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்தனர். கௌரி மெல்லமாகச் சொன்னுள் 'பானுமதியின் கல்யாண விடயம் பற்றி அம்மா மிகத் துக்கமாக இருப்பதாகப் பெரிய அக்கா எழுதியிருப்பதாக தன் செத்த வீட்டுக்கும் இவள் வரக் கூடாதாம்!'

எதிர்பார்த்த கடிதம் தான். அம்மா அப்படித்தான் சொல்வாள். அதற்கென்ன? மாற்றங்கள் இப்படித்தான் வரும். சமுதாய மாற்றம் எல்லோருக்கும் சந்தோஷத்தைத் தராது என்ற தத்துவத்தை அம்மா விளங்கிக் கொள்ளாத தால் என்ன குடிமுழுகிப்போய் விட்டது? பானுமதி சந் தோஷமாக இருப்பது போதும்,

அடுத்த சில நாட்கள் சபேசனைப் பார்க்க அவன் சினே கிதர்கள் வந்தபடி இருந்தார்கள், லண்டனுக்கு வந்து ஒரு சில மாதங்களில் இவ்வளவு சினேகிதர்கள் எப்படி இருக்க முடியும் என்று யோசித்தான் பரமநாதன். எல்லோரும் கிட்டத்தட்ட ஒருவிதத்தில் ஒரே மாதிரியானவர்கள் என்று தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் இலங்கைப் பிரச்சினையில் அக்கறையுள்ளவர்கள். அவர்கள் அரங்கேற்றப் போகும் நாடகம் அடக்குமுறையை எதிர்க்கும் கதை.

இவனைப்பார்த்துச் சொன்னார்கள் உங்களுக்கு நாங்கள் உணர்ச்சி வசப்பட்டவர்களாய் தெரிவது ஆச்சரியமில்லை. ஏன் என்றால் நாங்கள் நினைக்கவில்லை உங்களால் எங்கள் பிரச்சினையை உணர்ந்து கொள்ள முடியும் என்று. ஒரு ஆக்கிரமிக்கப்பட்ட அரசாங்கப் படை நடுவில் ஒரு செயலுமற்ற சிறைக்கைதிகள்போல இருந்த அனுபவம் உங்களுக்கு இருக்காது. எங்களுக்கு எதிர்காலம் மலர் குலுங்கும் பூந்தோட்டமாக இருக்க வேண்டாம். மனம் நிறைந்த குடிசையாகவும் இல்லை, எல்லாம் பறிபோகிறது. அதை எதிர்த்துப் போராடுவது - எம் உரிமைக்குப் போராடுவது எந்தப் பிழையும் இல்லை என்று நினைக்கிறோம்.''

பரமநாதன் பதில் பேசவில்லை.

இங்கிலாந்தில் கறுப்பர் இருக்கவே முடியாத நிலைகெதியில் வரலாம் என்று தெரியாமல் இல்லை. ரொடீஷியாவின் வெற்றி தென் ஆபிரிக்காவில் எதிரொலிக்கப் போகிறது. வெள்ளையர்கள் அவ்விடமிருந்தெல்லாம் திரும்பி வரப் போகிறார்கள். இன வெறியுடன் வந்து இங்கிருக்கும் வெறியருடன் சேரப் போகிறார்கள்.

அப்போது கறுப்பர்களுக்குக் கண்ட இடத்தில் - இப்போது இரவில் மட்டும் விழுவதுபோல் இல்லாமல் பகலிலும் விழலாம். உலகத்தில் அடுத்த நாள் என்ன நடக்கிறது என்று நம்ப முடியாமல் அசுரவேகத்தில் மாறிக்கொண்டிருக்கிறது. நாங்கள் திரும்பிப் போகத்தான் வேண்டும்.



லிஸா கிறிஸ்மஸ் கார்ட் போட்டிருந்தாள், வட இந்தியாவில் ஒரு கிராமத்தின் விலாசம், லண்டனில் பனி கொட்டிக்கொண்டிருந்தது. இந்தியாவின் சூடுபற்றி எழுதியிருந்தாள்.

அவள் எழுத்துக்கள் அவளின் நினைவுகளைக் கிண்டிவிட்டன. இந்தக் கடிதம் எழுதும்போது எப்படி அவள் முகம் இருந்திருக்கும், எப்படித் தன்னை நினைத்துப் பார்த்திருப்பாள் என்று அவள் முகபாவத்தை மனதில் படம்பிடிக்கப் பார்த்தான்.

ரஷ்யா போகும் விமானத்தில் தன் தோளில் துவண்டு விழுந்த அவளின் சோர்ந்த முகம் நினைவுக்கு வந்தது, பெருமூச்சுடன் கடிதத்தை மடித்து வைத்தான், போனமுறை கலகலப்பாக இருந்த கிறிஸ்மஸ் இப்போது பானுமதியும் சபேசன் மட்டும் இருப்பதால் அதிகம் கலகலப்பாக இல்லை.

கௌரியும் மகாதேவனும் வந்தார்கள். புதுவருடத்துடன் மகாதேவன் நைஜீரியாவுக்குப் போவதாகச் சொன்னான்.

''எல்லோரும் ஓடியுழைத்து வசதியாய் வாழ்ந்துவிட்டு ஒருகாலத்தில் இலங்கைக்கு வரத்தானே போகிறீர்கள்? எங்கள் தாரவழி அடிபட்டு உதைபட்டு அரைகுறை மரணத்துடன் போராடி உரிமை என்ற பேரில் ஏதோ வாங்கி வைட்போம் உங்கள் தரவழிகள் பெரிய மனிதர் போர்வையில் வருவீர்கள் பங்குபோட, இடதுசாரிகளுக்கு மட்டுமில்லை அடிவிழப் போவது, உங்களைப் போன்ற சுயநலவாதிகள் பலருக்கும்தான்.'' சபேசன் முணுமுணுத்தான் உடைந்த பல்லுடன்.

கௌரி பயப்பட்டாள் இன்னொருதரம் பரமநாதன் வீட்டில் கணவன் சண்டை தொடங்காமல் இருக்க வேண்டுமே என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பரமநாதன் தங்கைகள் இருவரின் மனநிலையையும் அறிந்து மைத்துனர்கள் இருவரையும் பிரிந்து விட்டான் கைகலப்புத் தொடங்குமுதல்.

❈ ❈ ❈ ❈

லண்டன் திருவிழாக் கோலமாய் இருந்தது நத்தார் அன்று. லண்டனுக்கு வந்த முதல் நத்தார் ஞாபகம் வந்தது அவனுக்கு.

கிறிஸ்மஸ் பார்ட்டி, பெண்கள், இனிமையான (?) இரவுகள் அதன்பின் கார்த்திகாவை நினைத்துப்பட்ட துன்பங்கள் ஞாபகம் வந்தன.

கார்த்திகா!

அவளுக்கு இப்போது தெரியவராமலா இருக்கும் தன் திருமண வாழ்க்கை பற்றி? என்ன சொல்ல மறந்தாலும் இது மாதிரி விடயங்கள் சொல்லவா மறப்பார்கள்?

என்ன நினைப்பாள்?

என்னை ஏமாற்றியவன் இப்படித்தான் கடவுளால் ஏமாற்றப் படுவான் என்று நினைத்திருப்பாளா? கார்த்திகா அப்படி உயிர் போனாலும் நினைக்க மாட்டாள்.

எதையும் விதியிலும் தலை எழுத்திலும் பழிபோடுபவள் 'எனது வாழ்க்கைக்காகத் துக்கப் பட்டிருப்பாளா?' அவனால் முடிவு கட்டத் தெரியவில்லை. அவளுக்கு எத்தனையோ தரம் எழுத நினைத்தான்.

எப்படி எழுதுவது என்று தெரியவில்லை. அல்லது இப்போது எழுதுவது சரியில்லை என்று நினைத்தான். மனம் வேதனையோடு துடித்துக் கொண்டிருக்கும் போது உணர்ச்சிகளைக் கொட்டி அவளைத் துக்கப்படுத்த விரும்பவில்லை.



அத்துடன் எதையும் 'மற்றவர்களிடம்' சொல்லி முறையிடுவதாக லிஸா ஒரு தரம் சொல்லியிருந்தாள். கார்த்திகா அவனுக்கு 'மற்றவர்களாக' ஒரு நாளும் இருந்ததாக அவனால் கற்பனை செய்ய முடியாமல் இருந்தது. ஆனாலும் அவளுக்கு இதை எழுதி அவளிடம் பிரதிபலனாகப் பரிதாப-அனுதாபக் கடிதத்தை எதிர்பார்க்க அவன் தயாராகவில்லை.

அதைவிட அவளிடம் என்ன எதிர்பார்க்க முடியும் என்றும் தெரியவில்லை. ஆனால் இலங்கைக்குப் போய் அவளைச் சந்தித்து வந்தவுடன் தன் வாழ்க்கை இப்படிப் போனதையிட்டு அவள் தெரியக் கூடாதென்றே விரும்பினான்.

ஆனால் அவன் எதிர்பாராத விதமாக அந்தக் கடிதம் வந்தது. நத்தார் முடிந்து விட்டது. லண்டனின் ஆரவாரம் இப்போது புத்தாண்டுக் கொண்டாட்டத்திலும் கடைகளில் நடக்கப் போகும் 'Saleல்' ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

மலிவு விற்பனைக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஆயிரம் - இலட்சமாகச் சனங்கள் வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். அந்த அமர்க்களம் பிடித்த தெருக்களில் கார் ஓட்டிய களைப்பில் வீட்டைத் திறந்த போது எத்தனையோ புத்தாண்டுக் கடிதங்களுக்கிடையில் அந்த நீல எயார் மெயில் கடிதம் கிடந்தது.

சத்தியமூர்த்தியின் கடிதம். அவன் அதிகம் எழுதவில்லை. வழக்கம்போல் அரசியல் ஒன்றுமில்லை. தனிப்பட்ட விடயம். அவன் கார்த்திகாவைப் பதிவுத் திருமணம் செய்து கொண்ட விஷயம் பரமநாதனுக்குச் சந்தோஷம் தரும் என்று அவன் நினைப்பதாக எழுதியிருந்தான். பரமநாதனிற்கு ஒரு நிமிடம் சுய உணர்வு இல்லாமல் போனது போல் இருந்தது.

கார்த்திகாவுக்குக் கல்யாணம்.

என்னுடையவளாய் இருக்க வேண்டியவை என்று இவன் கைகளைப் பிடித்து அழுதவளுக்குக் கல்யாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகாவுக்கு கல்யாணம் என்ற விடயம் மிகவும் சந்தோஷப்பட வேண்டிய விடயம் (!) என்று தன்னைத் தானே திருப்திப் படுத்திக் கொண்டான்.

அதன் பின்னால் அந்த தவிர்க்க முடியாத, அவனால் தாங்க முடியாத சமாதானத்தின் பின்னால் அவன் இருதயத்தின் ஏதோ ஒரு பாகம் தவிடு பொடியாக உடைவது போல் இருந்தது.

கார்த்திகா இத்தனை காலமும் இல்லாமல் திடீரென்று சத்தியமூர்த்தியைத் திருமணம் செய்தது தன்னுடைய கதை கேள்விப்பட்டது ஒரு காரணமாக இருக்கலாம் என்று பட்டது.

ஏன்?

ஏன் செய்தாள்!

இந்தக் கேள்விக்கு அவனுக்கு மறுமொழி தெரியவில்லை.

தெரியத் தேவையில்லை என்று பட்டது.

ஏதோ எல்லோரும் செய்கிறார்கள். கார்த்திகாவும் கல்யாணம் செய்து விட்டாள்.

அதில் என்ன ஆச்சரியம்?

சுபேசன் தன்னை இழந்தும் தன் இனத்துக்கு பாடுபடுகிறான். லிஸா தன் சொந்த நலன்களைப் பாராமல் உலகத்தில் ஒடுக்கப்படும் பெண்களின் பிரச்சினைகளுக்குப் பின்னால், திரிகிறாள்.

மரியன் நேர்மையுடன், பொய் உறவுகளுடன் வாழப் பிடிக்காமல் போய் விட்டாள்.

நான் என்ன செய்கிறேன்?



என் உணர்வும் செயல்களும்தான் வாழ்க்கையின் மூலதனம் என்றால் அவை படுமோசமான நிலையில் முதலீடு செய்யப் பட்டு விட்டனவா?

அவன் குழம்பிப் போனான். தனிமை, டெலிவிஷன் - ரேடியோ, கபினெட் நிறைந்த குடிவகைகள்.

மீராவைக் கூட்டிக் கொண்டு வர வேண்டும் போல ஒரு வெறி.

ஏதோ செய்து இந்தத் தனிமையை அழிக்க வேண்டும் என்ற வெறி. எழுந்தான். நடை தள்ளாடியது.

M1 motor way பனியில் அமிழ்ந்துபோய்க் கிடந்தது. பனி இன்னும் கொட்டிக் கொண்டிருந்தது.

பாதைகளில் தோன்றி மறையும் வெளிச்சங்கள் தெகிவளையில் கண்ட கண்ணீர் பனிச்சிட்ட கார்த்திகாவின் கண்களை ஞாபகப் படுத்தின.

கார்த்திகா. நல்லூரர்த் திருவிழா. கொழும்பு யூனிவர்சிட்டி, பம்பலப்பிட்டிக் கடற்கரை. கார்த்திகா - கார்த்திகா அவன் நினைவுகள் தடுமாறின. கார் நிலை தடுமாறி ஓடிக் கொண்டிருந்தது. motor way police siron ஊதிக் கொண்டு பறந்தது.

யார் கண்டார்கள் பானுமதியோ, கௌரியோ, மனைவி மரியனோ அவனின் சிதைந்த உடலை நாளைக்கு அடையாளம் கண்டு பிடிக்கலாம்.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏனைய அலை வெளியீடுகள்

1. அம்பா – மு. புஷ்பராஜன் ரூபா 2-00
   மீனவர் பாடல்கள் பற்றிய கட்டுரைகள்.
   (ஐப்பசி, 1976)

2. கோடுகளும் கோலங்களும் ரூபா 4-50
   குப்பிழான் ஐ. சண்முகன்
   பதினொரு சிறுகதைகளின் தொகுப்பு.
   (மார்கழி, 1976)

3. மார்க்சீயவாதிகளும்
   தேசிய இனப் பிரச்சினையும்
   எமக்கல் லோவி
   தமிழில்: ஏ. ஜே. கனகரட்ண (கைவசமில்லை)
   (கார்த்திகை, 1978)

4. மார்க்சியமும் இலக்கியமும் -
   சில நோக்குகள் ரூபா 10-00
   அலன் ஸ்விஞ்வுட், கேரி சோல் மொர்சன்,
   றெஜி சிறிவர்த்தன, ஏ. ஜே. கனகரட்ண
   ஆகியோரது நான்கு கட்டுரைகளின்
   தொகுப்பு
   (ஆவணி, 1981)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கரைப்பற்று 'கோளாவில்' கிராமத்தைச் சேர்ந்த ராஜேஸ்வரி 1967லிருந்து ஏராளமான சிறுகதைகளையும், நான்கு நாவல்களையும் எழுதியுள்ளார். சிறு முகிற் கூட்டங்கள், உலகமெல்லாம் வியாபாரிகள், தேம்ஸ் நதிக் கரையில் என்பன ஏனைய நாவல்களாகும். சமூக அக்கறையும், கலைத்துவமும் இவரது படைப்புகளில் இணைந்து வெளிப்படுகின்றன.

இலங்கைத் தேசிய இனப் பிரச்சினை இவரது சமீபத்தைய படைப்புகளில் முனைப்பாக்கம் பெறுகின்றது. தற்போது லண்டனில் வசித்துவரும் ராஜேஸ்வரியின் படைப்புகளிலொன்று முதற்றடவையாக, இப்பொழுதே நூலுருப் பெறுகின்றது. தொடர்ந்து சிறுகதைத் தொகுப்பொன்று வெளிவரவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org